
# தாயுமானவர்

பேராசிரியர் ந. சுப்புரெட்டியார்

85



# தாயுமானவர்

'தமிழ்ச்செம்மல்' 'கலைமாமணி' பேராசிரியர்
டாக்டர் **ந. சுப்புரெட்டியார்**
M.A., B.Sc., L.T., Vidwan., Ph.D., D.Lit.,
இயக்குநர், தெற்கு தென்கிழக்கு ஆசிய நாடுகளின்
மரபுவழிப் பண்பாட்டு நிறுவனம்
சென்னைப் பல்கலைக் கழகம்

**கலைஞன் பதிப்பகம்**
19 கண்ணதாசன் சாலை,
தியாகராய நகர் சென்னை - 600 017.

**Rs. 85-00**

**THAYUMANAVAR**

© **Dr.N. SUBBU REDDIAR**

Pages: xix + 285 = 304

Fist Edition : 2001

Published by
**KALAIGNAAN PATHIPAGAM**
19 Kannadhasan Salai
T.Nagar, Chennai - 600 017.

Typeset:
**Oviyam**
Chennai - 600 020.

Printed at:
**Sakthi Printers**
Chennai - 600 021.



அருள்தந்தை ஜெரோம் டிசௌஸா அவர்கள்

மாணாக்கர்பால்
அன்பும் பாசமும் நேசமும் கொண்ட
அருளுருவாய
அருள்தந்தை **ஜெரோம் டி' சௌஸா** அவர்கள்
திருவடிகட்கு

## அன்புப் படையல்

சட்டத்தை மாற்றி அறத்தினைப் புரக்கும்
சால்பினர்; வேதியியல் படிப்பை
இட்டமொ டெனக்கு வழங்கிய சீலர்;
இணையிலா கிறித்தவத் தொண்டர்;
சிட்டரா தலினால் சமயங்கள் கடந்த
சீரிய அந்தணர்; புனிதர்;
மட்டறு புகழ்சால் ஜெரோம்'டி சௌஸா
மாண்படிக் குரியதிந் நூலே.

# அணிந்துரை

## (புலவர் த. இராமலிங்கம் எம்.ஏ., எம்.எட்.,)*

தமிழ்கூறும் நல்லுலகம் நன்கறிந்த முதுபெரும் பேராசிரியர் முனைவர் ந.சுப்புரெட்டியார் அவர்கள் தமிழ் நூற்கடலை நிலை கண்டுணர்ந்த வித்தகர். சாத்திர தோத்திர நூல்களில் ஆய்வும் தோய்வும் உடைய தமிழ் மூதறிஞர். 125க்கு மேற்பட்ட இறவாத புகழுடைய நூல்களை எழுதிக் குவித்த பெருமை இவருக்கு உண்டு. எழுதாத நாளெல்லாம் பிறவா நாளே என்று எண்ணுபவர். அருள் நலம் கனிந்த சமயச் சான்றோர்களிடம் கொண்ட ஈடுபாட்டால் தேவாரம் பாடிய மூவரைப் பற்றியும், திருவாசகம் தந்த மாணிக்க வாசகரைப் பற்றியும், ஆழ்வார்களைப் பற்றியும் நூல்கள் எழுதிப் பேரும் புகழும் பெற்ற ஆன்மிகச் செல்வர். திரு.வி.க. விருது போன்ற பல விருதுகளையும் பாராட்டுகளையும் பெற்ற பெருமைக் குரியவர். இத்தகைய சீரும் சிறப்பும் வாய்ந்த பேராசிரியர் அவர்கள் ஞானச் செல்வராகிய தாயுமான அடிகளாரைப் பற்றிப் பக்திச் சுவை நனி சொட்டச் சொட்ட அருமையான ஒரு நூலை எழுதியுள்ளார்.

இந்நூலைப் படித்தபொழுது தாயுமான அடிகளார் சைவ உல கிற்குக் கிடைத்த மெய்ஞ்ஞானச் செல்வர் என்பதையும், அவர் அருளிய தெய்வமணம் கமழும் பாடல்கள் உயிர் வளர்க்கும் ஞானப் பாடல்கள் என்பதையும் அறிய முடிந்தது.

குருவருளும் திருவருளும் பெற்ற தாயுமான அடிகளாரைப் பற்றி இந்நூலாசிரியர் எழுதியுள்ள நூல் இரண்டு பகுதிகளாக அமைந்துள்ளது. முதல் பகுதிக்கு 'அடிகளார் வாழ்வு' என்னும் தலைப்பையும், இரண்டாம் பகுதிக்கு 'அருளிச் செயல்கள் இயல்பு கள்' என்னும் தலைப்பையும் தந்துள்ளார். 13 இயல்களாகப் பகுத்துக் கொண்டு தாயுமான அடிகளாரின் சமயக் கருத்துகளை - தத்துவங்களைப படிப்பவர்கள் எளிதில் புரிந்து கொள்ளும் வண்ணம் எளிமைப்படுத்திப் பழகு தமிழில் விளக்கியுள்ளார்.

* தலைமையாசிரியர் (ஓய்வு) தேசிய நல்லாசிரிய விருது பெற்றவர்; துணைத் தலைவர், அண்ணா நகர், தமிழ்ச் சங்கம்.

அடிகளாரின் வாழ்வையும் வாக்கையும் பல கோணங்களில் சிந்தித்து, அச்சிந்தனைகளை இந்த நூலில் வெளிப்படுத்தியுள்ளார். நூலாசிரியரின் ஆழ்ந்தகன்ற சமய அறிவிலும் அநுபவ முதிர்ச்சியிலும் விளைந்த இந்நூல், தாயுமான அடிகளாரைப்பற்றி அறிய விரும்புகிறவர்களுக்கு வழிகாட்டும் ஒளிவிளக்காகத் திகழ்கிறது.

'அடிகளார் வாழ்வு' என்னும் பகுதியில் தாயுமானவரின் வாழ்க்கை வரலாற்றினைத் தோற்றம் முதல் சமாதி நிலை அடைந்த வரை மூன்று இயல்களில் நிரல்படச் சொல்லோவியமாகத் தீட்டிக் காட்டியுள்ளார்.

'அருளிச் செயல்கள் இயல்புகள்' என்னும் பகுதியில் வேதாந்த சிந்தாந்த சமரச நன்னிலை கண்ட அடிகளாரின் பாடல்களை ஆய்வு நோக்கிலும் போக்கிலும் ஆய்வு செய்து சிந்தைக்கினிய செவிக்கினிய கருத்துகளை ஆசிரியர் தந்துள்ளார்.

அடிகளாரின் பாடல்கள் பல தலைப்புகளில் காணப்படுகின்றன. பெரும்பான்மையான பாடல்கள், பாடல்களின் முடிவையே தலைப்பாகவும் (சுகவாரி - தேசோமயானந்தம்) மற்ற பாடல்கள் பாடல்களின் தொடக்கத்தையே தலைப்பாகக் கொண்டு அமைந்திருப்பதையும் (ஆகாரபுவனம், எடுத்த தேகம்) நுணுகி ஆராய்ந்து வகைப்படுத்தி இருப்பது ஆசிரியரின் ஆய்வுப் புலமையைக் காட்டுகிறது.

அடிகளாரின் பாடல்களில் காணப்படும் உருவகங்கள் (பாச இருள் - ஞானஒளி) உவமைகள் (தாயிலாச் சேய்போல - எள்ளுக்குள் எண்ணெய் போல) பொருள் நிறைந்த தொடர்கள் (அவனன்றி ஓரணுவும் அசையாது) ஆகியவற்றை அரிதில் முயன்று கண்டறிந்து கூறி இருப்பது போற்றுதற்குரியது.

'இறைவனின் திருக்குணங்கள்' என்னும் இயலில் இறைவன் பார்க்குமிடமெங்கும் நீக்கமற நிறைந்துள்ளான் என்பதையும் தோற்றமும் இறுதியும் இல்லாதவன் என்பதையும் அடிகளாரின் பாடல்களைக் கொண்டு மிகத் தெளிவாக ஆசிரியர் விளக்கியுள்ளார். 'ஆன்மாவின் அருங்குணங்கள்' என்னும் தலைப்பில் உயிர்கள் பாசத்தால் பிணிக்கப்பட்டுள்ளதையும், சார்ந்ததன் வண்ணம் இயங்கும் இயல்புடையது என்பதையும் எடுத்துக்காட்டியுள்ளார்.

'தத்துவக் குறிப்புகள்' என்ற இயலில் 'சைவ சித்தாந்தத்தின் முடிந்த முடிபாகக் கொள்ளப்படும் பதி, பசு, பாசம் பற்றியும், முப்பத்தாறு தத்துவங்கள்பற்றியும் விரிவாக எடுத்து விளக்கியிருப் பதிலிருந்து நூலாசிரியரின் சைவ சித்தாந்தப் புலமையை அறிய முடிகிறது.

'மனத்தின் பண்புகள்' என்ற இயலில் ஆன்ம தத்துவம் பற்றி யும், சாத்துவிகம், இராசசம், தாமசம் என்ற முக்குணங்கள் பற்றியும் அகங்காரம் பற்றியும் ஆசிரியர் மிகத் தெளிவாக விளக்கியுள்ளார்.

'வாழ்வில் வினையின் பங்கு' என்ற இயலில் உயிர்கள் நல்வினையால் இன்பத்தையும் தீ வினையால் துன்பத்தையும் அநுப விக்கின்றன என்பதையும், சஞ்சிதம், பிராரத்தம், ஆகாமியம் பற்றி யும் விளக்கம் தந்துள்ளார். பராபரக் கண்ணியில் வரும் இருவினை என்பதற்கு, நல்வினை, தீவினை என்று பொருள் கொள்வதைவிட 'மூவினை' என்று பொருள் கொள்வது முற்றிலும் பொருந்துகின்றது என்று ஆசிரியர் குறிப்பிட்டிருப்பது சிந்தனைக்குரியது.

'சித்தர்களின் பெருமைகள்' என்ற இயலில் (பக்கம் 215) சித்தி பெற்றவர் சித்தர் என்று ஆசிரியர் விளக்கம் தந்துள்ளார். உருவ சித்தி, அருவுருவ சித்தி, அருவ சித்தி ஆகியவற்றைத் தேவார ஆசிரியர்கள் மூவரின் வழியாக விளக்கியிருப்பது அருமையினும் அருமை. விராலிமலையில் அடிகளார் சித்தர்களைச் சந்தித்த காலத் தில் 'சித்தர்கணம்' என்ற பதிகம் பாடியிருக்கலாம் என்ற ஒரு குறிப்பையும் ஆசிரியர் தந்துள்ளார்.

''புனிதமெனும் அத்துவிதம்'' என்ற இயலில் இறைவனுக்கு உலகத்தோடு உள்ள தொடர்பை விளக்குவதற்கு அடிகளார் 'அத்து விதம்' என்ற சொல்லை எடுத்தாண்டுள்ளார் என்று குறிப்பிட்டு மிக விரிவாக விளக்கம் தந்துள்ளார். அத்துவிதம் என்பதற்கு மெய்கண்டார் கூறும் விளக்கத்தை ஆசிரியர் எடுத்துக்காட்டியிருப் பது பொருத்தமாக உள்ளது.

'வழிபாட்டு முறைகள்' என்ற இயலில் (பக்கம் 247) நூலாசிரி யர் வழிபாட்டின் இன்றியமையாமையையும், வழிபடும் போது மனம் அடையும் மகிழ்ச்சியையும், மெய்ப்பாடுகளையும், கற்றதன் பயன் வாலறிவன் நற்றாள் தொழுதலே என்பதையும் உருக்கமாகக்

குறிப்பிட்டிருப்பதிலிருந்து ஆசிரியருக்கு வழிபாட்டின் மீதுள்ள ஈடுபாட்டைக் காண முடிகிறது. அகப்பூசை செய்தல் இறைவனுக்கு மிகவும் உகந்தது என்பதை 'நெஞ்சமே கோயில்' என்ற பாடல் வழியாக விளக்கி இருப்பது சிறப்பாக உள்ளது.

பராபரக் கண்ணியில் வரும் 'பராபரம்' என்பதற்கு ஆசிரியர் நுட்பமாக விளக்கம் தந்துள்ளார் (பக்கம் 28). பராபரம் என்பது பரம், அபரம் என்னும் இரு சொறகளாலாகிய சொற்றொடர். பரம் மேலானது, அபரம் கீழானது. மேலானதும், கீழானதும் ஆகிய எவற்றினும் கலந்துள்ள முதல்வனைப் பராபரம் என்று அடிகள் குறிப்பிட்டுள்ளார் என விளக்கம் தந்திருப்பது ஆசிரியரின் சொற்களுக்கு நுண்பொருள் காணும் புலமையை வெளிப்படுத்துகிறது.

தெய்விகம் பற்றி விளக்கும்போது (பக்கம் 195) சிக்கி முக்கிக் கல்லில் தீ மறைந்திருப்பது போல் தெய்விகம் மனிதனிடம் மறைந்துள்ளது என்று குறிப்பிட்டு அரிய பொருளை எளிதில் புரிந்து கொள்ளும் வகையில் ஆசிரியர் விளக்கியுள்ளார்.

'கருணாகரக் கடவுள்' என்னும் பதிகத்தில் (பக்கம் 78) கூத்தப்பெருமான் வடிவம் பறறித் தாயுமான அடிகளார் வியந்து கூறியுள்ள அருமை பெருமைகளை எல்லாம் ஆசிரியர் நெஞ்சம் நெகிழும் வண்ணம் பக்திச் சுவை ததும்ப எடுத்துரைத்துள்ளார்.

பேராசிரியர் சுப்பு ரெட்டியார் அவர்கள் தாயுமான அடிகளாரின் பாடல்களில் மூழ்கித் திளைத்து, அவருடைய பெரு வாழ்வையும் வாக்கையும் அழகு தமிழில் தேனாய் இன்னமுதமுமாய்த் தித்திக்கும் வகையில் நூலாகத் தந்துள்ளார். இந்நூல் ஒரு தத்துவப் பேழை! ஆன்மிகக் களஞ்சியம்!

'நல்லாரைக் காண்பதுவும் நன்றே, நலமிக்க நல்லார் சொல் கேட்பதுவும் நன்றே'' என்ற நிலையில் 20 ஆண்டுகளாக இப்பெருந்தகையாருடன் நெருங்கிப் பழகி இவருடைய பயனார்ந்த அநுபவ உரைகளைக் கேட்டு வருபவன். பேராசிரியர் அவர்கள் அறிவிலும் அநுபவத்திலும் இமயமாய் உயர்ந்து நிற்பவர். இருப்பினும் இப்பெருந்தகையார் அவர்கள் என்மீது வைத்துள்ள அன்பால் ஞானக் கருவூலமாக விளங்கும் இந்நூலுக்கு அணிந்துரை தர வேண்டுமென்று அன்புக் கட்டளை இட்டார். பேராசிரியரின் கட்டளையை

மீற முடியுமா? தாய் தன் குழந்தையைப் பாடச் சொல்லிக் கேட்டு மகிழ்வதைப்போல தாயுள்ளம் கொண்ட இப்பெரியார் அடியவனை அணிந்துரை எழுதச் செய்துள்ளார் என்றே கருதுகிறேன். சைவ மணம் கமழும் இந்நூலில் பொதிந்துள்ள பயன் நிறைந்த செய்திக ளைக் கோடிட்டுக் காட்டியுள்ளேன்.

கற்கண்டுக் கட்டியை எப்பக்கம் சுவைத்தாலும் இனிக்கும். அதுபோல ஆன்மிகத் தேன் நிறைந்த இந்நூலில் எந்தப் பகுதியைப் படித்தாலும் இனிக்கும்.

தாயுமான அடிகளாரை அறிய விரும்புவோர்க்கு அவர் அரு ளிய பாடல்களை ஆய்வு செய்ய விழைவோர்க்கு இந்நூல் கலங்கரை விளக்காகத் திகழும் என்பதில் ஐயமில்லை.

'தமிழுக்குத் தொண்டு செய்வோன் சாவதில்லை' என்பார் பாவேந்தர் பாரதிதாசன். 'என் கடன் பணி செய்து கிடப்பதே' என்ற தொண்டுள்ளத்துடன் தமிழுக்குத் தொண்டு செய்யும் இப்பெரும் பேராசிரியர் மேலும் பல நூல்களைத் தமிழுலகிற்கு வழங்கவும், பல்லாண்டுகள் உடல்நலத்துடன் இனிது வாழவும் அருள் பாலிக்கு மாறு கந்தகோட்டத்துள் எழுந்தருளி இருக்கும் முருகப் பெருமானை இறைஞ்சுகின்றேன்.

**— த. இராமலிங்கம்**

2-55, அண்ணாநகர்,
சென்னை - 600 040.
26.11.2001

# நூல் முகம்

எடுத்த தேகம் பொருள்ஆவி மூன்றும்நீ;
'எனக்கொன்று இல்லை' எனமோன நன்னெறி
கொடுத்த போதுகொ டுத்துஅன் றோன்?பின்னும்
குளறி நான்என்று கூத்தாட மாயையை
விடுத்த வாறும்,கண் ணீரொடு கம்பலை
விலகு மாறும்,என் வேட்கைப்ர வாகத்தைத்
தடுத்த வாறும் புகலாய்; சிரகிரித்
தாயு மான தயாபர மூர்த்தியே![1]

— **தாயுமான அடிகள்**

நான் திருச்சியில் புனித சூசையப்பர் கல்லூரியில் பயின்ற போது (1934-36) மலைக்கோட்டைக்கருகிலுள்ள காசியப்பா ராவுத்தர் ஸ்டோர்ஸ் எடுத்த விடுதியில் தங்கியிருந்தபோது வாரம் ஒரு முறை ஞாயிறன்று தாயுமானவர் திருக்கோவில் பெருமானை யும், உச்சிப் பிள்ளையாரையும் தவறாது வழிபட்டு வந்ததுண்டு. அப்போது என் தமிழறிவு சுமார்தான். தாயுமானவர் பாடல்களில் பராபரக் கண்ணி முதலான கண்ணிகள்தாம் என் மனத்தைக் கவர்ந் தன. என் அறையில் (வனப்பட்டறைத் தெருவிலுள்ள என் அறை யில் (1937-39)

*அன்பர்பணி செய்யஎனை ஆளாக்கி விட்டுவிட்டால்*
*இன்பநிலை தானேவந்து எய்தும் பராபரமே![2]*

என்ற பாடலை எழுதி வைத்திருந்தது நினைவிற்கு வருகிறது. அங்ஙனமே நான் மாலை நேரங்களில் சில சமயம் காவிரிக் கரையிலுள்ள நீராகார மடத்துச் சாமியாரை (எங்கள் ஊரைச் சார்ந்தவர்) பார்த்து அளவளாவச் செல்வதுண்டு. அந்த மடத்து வெளிப்புறத்து வாயிலின் சுவர்மீது வருகிறவர் கண்ணில் படுமாறு

1. எடுத்ததேகம் - 1
2. பராபரக்கண்ணி - 155

*கொல்லா விரதம் குவலயம்எல் லாம்ஓங்க*
*எல்லார்க்கும் சொல்லுவதுஎன் இச்சை பராபரமே*[3]

என்ற பாடலையும், உட்புறச் சுவரில் இரண்டு இடங்களில்,

*கொல்லா விரதம்ஒன்று கொண்டவரே நல்லோர்மற்று*
*அல்லாதார் யாரோ அறியேன் பராபரமே*[4]

*எல்லாரும் இன்புற்று இருக்க நினைப்பதுவே*
*அல்லாமல் வேறொன்று அறியேன் பராபரமே*[5]

என்ற பாடல்களையும் எழுதி வைத்து பலரை மகிழ்வித்ததையும் நினைவுகூர முடிகின்றது. அதன்பிறகு வேறு பல அலுவல்களால் தாயுமானவர் பற்றிய சிந்தனையே இல்லாது போய்விட்டது.

திருப்பதியில் பணியாற்றியபோது தாயுமானவர் பற்றி ஒரு பிஎச்.டி. ஆய்வு மாணவருக்கு வழிகாட்டியாக இருக்கும் பொறுப்பு வந்தது (1972-75). அப்போது அடிகளின் பாடல்களைப் படித்து நன்கு அநுபவித்தேன்; அவ்வநுபவம் என் மனநிலையை அதிகமாக மாற்றியது. அடிகளின் படைப்புக்களைப் பற்றி ஒரு விளக்க நூல் எழுத வேண்டும் என்ற எண்ணம் என் ஆழ்மனத்தில் இருந்து வந்தது. 1984-85இல் அப்பணியில் இறங்கி சில இயல்கள் எழுதினேன். அவையும் அறைகுறைதான்.

இந்நிலையில் 'நீர்வழிப்படும் புனைபோல்' திருப்பதியில் மூன்று திங்கள் பணியும் அடுத்து தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகம் - காஞ்சித் தத்துவ மையத்தில் 18 மாதப் பணியும் வந்தன என். கவனம் திசை திரும்பியது. மீண்டும் வைணவத்தில் ஆழங்கால்பட நேர்ந்தது. 1200 பக்கத்தில் 'வைணவச் செல்வம்' என்ற நூல் உருவாயிற்று. அடுத்து சென்னைப் பல்கலைக் கழகத்தில் இலக்கியத் துறையில் வாழ்நாள் மதிப்பியல் பேராசிரியர் பணியும் (ஆகஸ்டு 1990), அடுத்து தெற்கு தென்கிழக்கு ஆசிய நாடுகளின் மரபுவழிப் பண்பாட்டு நிறுவநன மதிப்பியல் இயக்குநர் பணியும் (பிப்ரவரி 1996) வந்தன. புதிய துறைகளாதலால் மூச்சுமுட்டும் வேலை; இங்ஙனம் மூன்றாண்டுகள் கழிந்தன.

3. பராபரம் - 54
4. மேலது - 192
5. மேலது - 221

இடையில் சிறிது ஓய்வு இருந்தது; தாயுமானவர், மீது கவனம் சென்றது. மிகக் கடுமையாக உழைத்து 13 இயல்களில் தாயுமானவர் (விளக்க நூல்) நிறைவு பெற்றது!

முறைவழிப்படும் ஆருயிர் ஆதலால் எதிர்பாராத விதமாக கலைஞன் பதிப்பகத்திலிருந்து திரு. **முத்துக்குமாரசுவாமி** அவர்கள் என்னைச் சந்தித்துத் தம்மை அறிமுகம் செய்து கொண்டு[6] தாயுமான வர் கைப்படியையும் பெற்றுச் சென்று நூலை அச்சேற்றி விட்டார். அவருக்கு மிக்க நன்றி.

இந்த நூல் அச்சாகுங்கால் மூலப் படியுடன் பார்வைப் படிவங் களை ஒப்பிட்டுச் சரிபார்த்து அச்சிட உதவிய என் அபிமான புத்திரி டாக்டர் மு.ப.சியாமளாவுக்கு என் இதயங்கலந்த ஆசியுடன் கூடிய நன்றி என்றும் உரியது.

இந்நூலுக்கு **அணிந்துரை** வழங்கியவர் என் நீண்டநாள் அருமை நண்பர் புலவர் **த.இராமலிங்கம்** (ஓய்வு பெற்ற தலைமை யாசிரியர் குருசாமி முதலியார் மேனிலைப் பள்ளி, சென்னை). புலவர் பட்டத்துடன் நின்று விடாது தமிழ் எம்.ஏ., எம்.எட். பட்டம் பெற்று புலமையை வளர்த்துக் கொண்டவர். தமிழாசிரியராகப் பணியேற்று மேனிலைப் பள்ளித் தலைமையாசிரியராக உயர்ந்து பல்லோர் வியக்கப் பணியாற்றியவர். சைவத்திலும் ஆழ்ந்த புலமை யுடன் திகழ்பவர். பல்கலைக் கழகத்தில் இருக்க வேண்டியவர் 'முறைவழிப்படாது' பின் தங்கிவிட்டார். ஆசிரியப் பண்பு பிறவிப் பண்பாகப் பெற்றவர். இப்பண்பு மாநில மைய அரசுகளால் நல்லாசி ரியர் என்ற முத்திரையிட்டுச் சிறப்பிக்கப் பெற்றது. பல்வேறு பொதுத் தொண்டுகளில் பங்கு கொண்டிருப்பவர். பல்வேறு விருது கள் வரிசை வரிசையாக வந்து தம்மைச் சிறப்பித்துக் கொண்டன. நேர்மை இவர்தம் உயிர் நாடி. இன்முகத்துடன் பழகும் பெற்றியர். சுவைபடப் பேசும் சொல்லின் செல்வர். மலேசியா சைவ மாநாட்டில்

6. **நான் முசிறி உயர்நிலைப் பள்ளியில் படித்தபோது என்னுடன் நெருங்கிய வகுப்புத் தோழர்கள் சிலர். அவர்களுள் ஒருவர் மணல்மேடு என்ற ஊரைச் சேர்ந்த தங்கவேல் என்பவர் ஒருவர். அவர்தம் சகோதரியின் மகன்தான் திரு. முத்துக்குமார சுவாமி என்பவர். இவர் மூலம் என் பல நூல்கள் வெளிவர உள்ளன.**

கலந்து கொண்டு ஆய்வுக் கட்டுரை வழங்கியவர். பல நற்பண்புகளுடனும் நல்ல புலமையுடனும் திகழும் இந்த இனிய நண்பரின் அணிந்துரை பெற்றது இந்த நூலின் பேறு. ஏன்? என் பேறுங்கூட. இப்பெருமகனாருக்கு என் இதயம் கலந்த நன்றி என்றும் உரியது.

1934-39 திருச்சியில் புனித சூசையப்பர் கல்லூரியில் பயின்ற போது என் ஆங்கிலப் பேராசிரியர் **அருள் தந்தை ஜெரோம் டி சௌஸா** அவர்கள். கல்லூரி முதல்வரும் அவரே. மாணாக்கர்கள் பால் தந்தையனைய பாசம் காட்டுபவர். 1936இல் இயற்பியலில் B.Sc., (Hon) சேர்ந்து ப்டித்து உடல்நிலை கேடுற்றமையால் படிப்பு நின்றது; ஓராண்டு வீணாயிற்று. இடைநிலை வகுப்பு முடிந்து நாலாண்டுகளில் B.Sc., (Hon.) முடிக்கவேண்டும் என்ற விதி இருந்தமையாலும், ஓராண்டு கொன்னே கழிந்தமையாலும் மீண்டும் ஒருகால் உடல்நிலை கெட்டால் வாழ்வே கெடும் என்று கூறி மறுக்கப் பெற்று வேதியியல் B.Sc., படிப்புக்கு இடம் தந்தார். முதல் வகுப்பில் முதல்நிலையில் தேர்ச்சி பெற்று கல்லூரிக்கு நற்பெயரும் என் வாழ்வுக்கு நந்நிலையுமாக அமைந்தது.

அருள்தந்தை மாணாக்கர்பால் மிக்க அக்கறை கொண்டவர் என்பதற்கு இரண்டு நிகழ்ச்சிகள் சான்றுகளாக அமைகின்றன.

(1) நான் நன்மாணாக்கன் என்ற பேர் பெற்றவன். என் போன்ற ஐவருடன் கல்லூரிக்கு அருகிலுள்ள ஓர் விடுதியில் தங்கியிருந்தேன். அவ்விடுதி ஓய்வு பெற்ற ஒரு கல்லூரிப் பேராசிரியருக்குச் சொந்தமானது. சில நாட்களில் மாலை நேரங்களில் தாழ்வாரத்தில் அமர்ந்து கொண்டு அரட்டை அரங்கம் நடத்தும்போது மகிழ்ச்சி ஒலி ஏற்படுவதுண்டு. விடுதி உரிமையாளர் வகுப்பு ஆசிரியர்போல் எங்களை அடக்க முயன்றார. 'நாங்கள் நன்மாணாக்கர்கள். உங்கள் வகுப்பு ஆதிக்க முறையை எங்களிடம் காட்ட வேண்டா?' என்று மரியாதையாகத்தான் கூறினோம். இதனைப் பொறுக்க மாட்டாத அப் '**பெருமகனார்**' தேர்வு 15 நாள் இருக்கும்போது அறைகளைக் காலி செய்ய வேண்டும் என்று வக்கீல் அறிவிப்பைப் பதிவு அஞ்சலில் அனுப்பச் செய்தார். எங்களுக்கு ஒரே கவலை - தேர்வு நெருங்கி வரும் நிலையில் இங்ஙனம் நேரிட்டதென்று. நான் அருள் தந்தை ஜெரோம் டி சௌஸாவுக்கு அன்புக்குரியவனாதலால் என்னை அத்தந்தையாரிடம் சொல்லி இந்த இக்கட்டு நிலைக்குக்

கழுவாய் காணுமாறு வேண்டினர் நண்பர்கள். நான் தந்தையாரிடம் இதனை விண்ணப்பிக்கவே, அவர் மிக்கச் சினங்கொண்டு பதில் அறிவிப்பு அனுப்புமாறு தம் கல்லூரி வக்கீல் P.S. கிருஷ்ணமூர்த்தி அய்யருக்கு ஒரு குறிப்பு அனுப்ப, அவரும் கல்லூரி சார்பில் எங்கட்காக ஒரு பதில் அறிக்கை அனுப்பினார். விடுதி உரிமையாளர் வாயடைத்துப் போனார். எங்கள் கவலை ஒழிந்தது.

(2) படிப்பை முடித்துக் கொண்டு பணியிலமர்ந்து பல ஆண்டுகட்குப் பின்னரும் தேவைப்படுங்கால் இயன்ற அளவு உதவிய பெருமை அருள் தந்தை ஜெரோம் அவர்கட்கு உண்டு. மூன்று ஆண்டு ஆசிரியப் பணியின் அநுபவம் பெற்றவர்கள் தனிமையாக மேல்படிப்புக்கான தேர்வு எழுதி பட்டம் பெறும் சலுகை இருந்தது. பி.எஸ்சி., எல்.டி. பட்டம் பெறற யான் மூன்றாண்டு தலைமையாசிரியர் அநுபவத்துடன் தமிழ் எம்.ஏ. தேர்வு எழுத விழைவு கொண்டேன் (1944). அதற்கான விண்ணப்பம் உரிய கட்டணத்துடன் சென்னைப் பல்கலைக் கழகத்திற்கு அனுப்பினேன். பி.எஸ்சி., பட்டதாரி எம்.எஸ்சி., தேர்வு எழுதலாமேயன்றி (சோதனைச் சாலை அநுபவத்தைத் தகுதியாக்கிக் கொண்டு) எம்.ஏ., பட்டத் தேர்வுக்கு அநுமதி இல்லை என்று (பி.எஸ்சி., பட்டப் படிப்பில் பகுதி-2 தமிழ் படிக்கும் வாய்ப்பு இல்லாததால்) பல்கலைக் கழகம் மறுத்தது. என்னை இடைநிலைத் தேர்வு பெற்ற ஆசிரியனாகக் கருதி பி.ஏ. தேர்வு எழுத அனுமதிக்குமாறு விண்ணப்பித்தேன். எந்தப் பட்டமும் இல்லாதாருக்குத்தான் இச்சலுகை உள்ளதேயன்றி ஒரு பட்டம் உள்ளவருக்கு அனுமதிக்கும் மரபு இல்லை என்று பல்கலைக் கழகம் மறுத்துவிட்டது. இம்மரபு ஆசிரியரின் அடிப்படை உரிமையை மறுத்ததாகும். இஃது அறிவியல் சிந்தனையிலடிப்படையில் அமைந்ததன்று என்று பன்முறை வாதாடி எழுதியும் பல்கலைக கழகம் தன் கொள்கையில் விடாப்பிடியாக இருந்தது.

அருள் தந்தையிடம் இந்த நேர்மையற்ற கொடிய நிலையை எடுத்துக் கூறி இதற்குக் கழுவாய் காண வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தேன். இதனைச் செவிமடுத்த அருள் தந்தையார் பக்குவமாகப் பல நிலைகளை எடுத்துக்காட்டி (1944) மூன்றாண்டுகள் முயன்று (1944-47) ஆட்சிக் குழுவின் மூலம் புது விதியைப் பிறப்பிக்கச் செய்தார். நானும் 1947இல் பி.ஏ. தேர்வு (பகுதி-1

ஆங்கிலம், பகுதி 2 தமிழ்) எழுதி தமிழில் முதல் வகுப்பு மாநிலத்தில் முதல் நிலையில் தேர்ச்சி பெற்றேன். பல்வேறு பணி நெருக்கடி நிலைகளால் 1951இல் தான் தமிழ் எம்.ஏ. தேர்வு எழுதி வெற்றி பெற முடிந்தது. 1950 முதல் காரைக்குடி பணி (1960 வரை).

(3) திருச்சியில் பயின்றபோது (1938 என்பதாக நினைவு) ஒருமுறை இரத்தினவேலு தேவர் மன்றத்தில் டாக்டர் சி.ஆர். ரெட்டிக்கும் (ஆந்திரப் பல்கலைக் கழகத் துணை வேந்தராக இருந்தவர்) அருள்தந்தை ஜெரோம் அவர்கட்கும் **Religions Examined** என்ற தலைப்பில் ஒரு சொற்போர் **(Debate)** நடைபெற்றது. இரண்டு சொல் சிங்கங்கள் மோதிக் கொண்ட காட்சியைக் காண முடிந்தது. ஆங்கிலச் செழுமையை அறிய முடியாவிடினும் கருத்து வளத்தைக் காணும் மதிநுட்பம் என்பால் இருந்தது. அருள் தந்தை யாரின் சமயப் பொறையையும் கிறித்தவ சமயமே உலகிலே முதன் முறையாக மனித சமுதாயத்தின்மீது மிக்க அக்கறை கொண்டு (1) கல்வி, (2) மருத்துவம் ஆகிய இரண்டு திசைகளில் தொண்டாற்றி சமுதாயத்தில் ஒரு விழிப்புணர்ச்சியை உணடாக்கியது என்பதை அற்புதமாக விளக்கினார். இக்கருத்து என் உள்ளத்தில் ஆழப்பதிந் தது.

(4) தாயுமான அடிகளின் கம்பீரமான கவிதைச் சொற் பெருக் கும் அருள் தந்தை ஜெரோம் அவர்களின் கம்பீரமான ஆங்கிலச் சொற்பெருக்கும் ஒற்றுமையுடன் திகழ்வதாக அறிய முடிந்தது. இரண்டும் என் உள்ளத்தை நெகிழ்விப்பதாக இருந்தன. இக்கார ணங்களால் **'தாயுமானவர்'** என்ற ஆய்வு விளக்க நூலை அருள் தந்தையாரின் இணைத்தாமரை அடிகளில் வைத்து வணங்கி வீட்டுல கில் வாழும் அவரது ஆசியைப் பெற்றுவிட்டதாக மனநிறைவு பெற்று உடல் புளகாங்கிதம் அடைகிறேன்.

இந்நூலைத் தொடர்ந்து (1) பட்டினத்தடிகள், (2) அருட்பிர காச இராமலிங்க வள்ளல், (3) இராமாநுசர், 94) காஞ்சி பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசாரிய சுவாமிகள் ஆகியோரைப்பற்றியும் எழுத எண்ணியுள்ளேன். இவற்றை நிறைவேற்றும் வரையில் உடல்

நலத்துடனும் மனவளத்துடனும் நான் வாழ்வேன் என்ற மனவுறுதி என்பால் உண்டு. இதற்குத் திருவருள் துணை இருக்கும் என்ற திடமான நம்பிக்கையும் கொண்டுள்ளேன்.

இத்தகைய சமய இலக்கியப் பணியில் ஈடுபாடும் அதனை நிறைவேற்றும் மனஉறுதியும் தந்து உதவும் பரம்பொருளை வாழ்த்தி வணங்கி அமைகின்றேன்.

*அருளாளே எவையும் பார்என்றான் - அத்தை*
*அறியாதே சுட்டிஎன் அறிவாலே பார்த்தேன்*
*இருளான பொருள்கண்டது அல்லால் - கண்ட*
*என்னையும் கண்டிலன் என்னேடி தோழீ*

*என்னையும் தன்னையும் வேறா - உள்ளத்து*
*எண்ணாற்ற வண்ணம் இரண்டுஅற நிற்கச்*
*சொன்னது மோஒரு சொல்லே - அந்தச்*
*சொல்லால் விளைந்த சுகத்தை என்சொல்வேன்*

**— தாயுமானவர்**

வேங்கடம்'
AD-13 அண்ணாநகர்
சென்னை - 600 040
விசயதசமி
26.11.2001

**ந. சுப்பு ரெட்டியார்**

7. ஆனந்தக் களிப்பு - 13,14.

பக்கம்

அன்புப்படையல் v

அணிந்துரை vi

நூல்முகம் xi

பகுதி - 1: அடிகளார் வாழ்வு

இயல்

1. பிறப்பும் வளர்ப்பும் 1
2. குருவருள் பெற்றமை 7
3. வாழ்வில் திசைதிருப்பம் 13

பகுதி - 2: அருளிச்செயல்கள் இயல்புகள்

4. அருளிச்செயல்களின் போக்கு 28
5. இறைவனின் திருக்குணங்கள் 44
6. ஆன்மாவின் அருங்குணங்கள் 87
7. தத்துவக் குறிப்புகள் 112
8. மனத்தின் இயல்புகள் 123
9. வாழ்வில் வினையின் பங்கு 160
10. புனிதமெனும் அத்துவிதம் 180
11. சித்தர் பெருமக்கள் 214
12. ஆசாரியனின் அருமை 229
13. வழிபாட்டு முறைகள் 247

பின்னிணைப்பு

பயன்பட்ட நூல்கள் 281

பேராசிரியர் ரெட்டியாரின் நூல்கள் 283

பகுதி - 1:

# அடிகளார் வாழ்வு

# 1. பிறப்பும் வளர்ப்பும்

தமிழகத்தில் ஒவ்வொரு காலத்தில் ஒவ்வொரு சான்றோர் தோன்றி உலகிற்குப் பெரு நன்மை விளைவித்துள்ளனர். சங்ககாலச் சான்றோர்கள், பின்னர் தோன்றிய பொய்யா மொழியின் ஆசிரியர் வள்ளுவர், பெருந்தகை 'மொழிக்கு மொழி தித்திக்கும்' தேவாரம் அருளிய மூவர் முதலிகள், கல்லையும் கனிவிக்கும் திருவாசகம் அருளிய மணிவாசகர், ஆரா அமுதமாய் இனிக்கும் அருளிச் செயல்களை வழங்கிய ஆழ்வார் பெருமக்கள், ஓடும் செம்பொனும் ஒக்கவே நோக்கும்' திருத்தொண்டர் களின் வரலாற்றை அளித்த சேக்கிழார் பெருமான், கற்றோர் இதயத்தைக் களிப்பிக்கும் (இராமன் திருக்கதையைக்) காவியமாக்கித் தந்த கம்பநாடன் முதலியோர் நம் நினைவிற்கு வருவர். இங்ஙனமே சமயத்துறையில் மிக்க ஈடுபாடு கொண்டு இன்சுவை ததும்பும் அமுதப் பாடல்களை அருளிய தாயுமான அடிகள் என்னும் சிவாநுபூதிப் பெருஞ்செல்வரும் இத்தகைய சான்றோர்களில் ஒருவராகத் திகழ்கின்றார். இவர் எவ்வுயிரையும் தம்முயிர்போல் எண்ணி இரங்கும் அருள் ஒழுக்கத்தை உலகோர்க்குரைப்பதில் ஒப்பற்ற ஆர்வமுடையவர். தாழ்வெனும் தலைமையில் தலை சான்றவர். உலகினர் யாவரும் மெய்ந்நெறியைக் கடைப்பிடித்து அகண்டாகாரச் சிவத்தைத் துய்க்கும் வண்ணம் கூவும் கருணை முகிலனைய பேரறிவாளர். இவர்தம் வாழ்க்கை வரலாறும், இவர் வழங்கியுள்ள அருளிச் செயல்களின் இயல்பும் இச்சிறு நூலில் நுவலப் பெறுகின்றன.

பெற்றோர்கள்: சோழநாட்டில 'வேதாரண்யம்' என வழங்கும் 'திருமறைக்காடு' என்பது ஒரு சிறந்த திருத்தலம். வேதங்கள் பூசித்து மூடிவிட்டுப் போயிருந்த கதவுகளை அப்பர் பெருமான் தமது அருந்தமிழால் திறந்தும், காழிவேந்தர் தமது நற்றமிழால் அடைத்தும் முன்னைய நிலைமையை உண்டாக்கிய அற்புதம் நிகழ்ந்த தலம். தமிழ் மொழியிலுள்ள பாகனைய தேவாரம் வடமொழி வேதத்திற்குச் சிறிதும் தாழ்ந்த

தல்ல என்பதைக் கட்புலனாக உலகுக்கு அறிவித்ததே இந்த அற்புதம்.

சற்றேறக்குறைய 400 ஆண்டுகட்குமுன் இத்திருத்தலத்தில் உழுவித்துண்ணும் வேளாளர் மரபில் வந்தவர் கேடிலியப்பப் பிள்ளை என்ற பெரியார். இவர்தம் மரபிற்கேற்பவும் தம் இயல்பிற்கேற்பவும் சிவபக்தி சிவனடியார் பக்தி முதலிய சிவநெறி ஒழுக்கங்களில் சிறந்து விளங்கிய 'கஜவல்லி அம்மையார்' என்பவரை தம் வாழ்க்கைத் துணைவியாக ஏற்று இல்லறம் என்னும் நல்லறத்தை நடத்தி வந்தார். 'கேடிலியை நாடும் அவர் கேடிலாரே' என்ற அப்பர் பெருமானின் கீழ்வேளூர் தேவாரத்தினால் (6.67) 'கேடிலி' என்பது சிவபெருமானின் பெயர் என்பது இனிது புலனாகும். 'கேடிலியப்பன்' என்ற பெயர் தனித் தமிழாயிருப்பதும், இக்காலத்தில் இத்தகைய பெயர்கள் அருகி வருவதும் சிந்திக்கத்தக்கவை. கேடிலியப்பப் பிள்ளைக்கு 'வேதாரண்ய பிள்ளை' என்ற தமையனார் ஒருவர் இருந்தார்.

கேடிலியப்பப் பிள்ளையவர்களின் சிவபக்தி, பண்பாடு, நல்லொழுக்கம் முதலியவற்றைக் கண்ட சைவ ஆதீனத்தார் இவரைத் திருமறைக்காட்டுத் திருக்கோயில் முக்கிய அறத் தலைவராக நியமித்தனர். இந்த அலுவலை மிகவும் சிறப்புடன் புரிந்து பொதுமக்களின் பாராட்டுதலைப் பெற்றார். மறைக்காட்டு மணாளரின் திருவருளால் பக்தி நெறியில் வழுவாத கேடிலியப்பப் பிள்ளைக்கு ஓர் ஆண் மகப் பேறு கிடைத்தது. இந்தப் பிள்ளைக்குச் 'சிவசிதம்பரம்' என்ற திருநாமம் சூட்டி நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்த்து வந்தார்.

**கேடிலியப்பரின் பதவி மாற்றம்:** அந்நாளில் திருச்சிராப்பள்ளியை ஆண்டு வந்தவர் நாயக்கர் வழியில் எட்டாவது தலைமுறை அரசராகிய முத்துக்கிருட்டிண நாயக்கர் என்பவர். இவர் திருத்தல வழிபாட்டின் நிமித்தம் திருமறைக்காடு வந்தார். அவர் வந்தபொழுது கேடிலியப்பப் பிள்ளையவர்கள் அரசரை நன்கு வரவேற்று இறைவனைச் சேவித்தல் முதலியவைகளை முன்னிருந்து சிறப்புறச் செய்வித்தார். இவற்றைக்

கூர்மையாகக் கவனித்த மன்னர் பிள்ளையவர்களின் செயல் திறன், பக்தி, பண்பாடு முதலியவற்றைக் கண்டு, அவரது கணக்கு வல்லமையையும் அறிந்து தெளிந்து அவரைத் தமது அரசின் பெருங்கணக்கர் என்னும் உயர் பதவியில் இருத்தினார். இப்பதவி அக்காலத்தில் 'பெரிய சம்பிரதி' என்ற பெயரால் வழங்கி வந்தது. இந்தப் பெரிய பொறுப்பின் காரணமாகக் கேடிலியப்பப் பிள்ளை திருமறைக்காட்டை விட்டு நீங்கி திருச்சிராப்பள்ளி சென்று வாழ வேண்டிய நிலை ஏற்பட்டது.

திருச்சிராப்பள்ளியில் வாழ்ந்து வருங்கால் தமது தமையனார் வேதாரண்யப் பிள்ளை மகப்பேறின்றி வருந்துவதைக் கண்ட கேடிலியப்பப் பிள்ளையவர்கள் தமது ஒரே மகன் சிவசிதம்பரத்தை அவருக்குத் தெத்தாகக் (சுவீகார புத்திரனாகக்) கொடுத்துவிட்டுத் தமக்கு ஒரு பிள்ளையை அருளும்படி 'சிராப்பள்ளிக் குன்றுடையானை' தம் மனைவியரோடும் அன்போடு வணங்கி வேண்டி வந்தார். வேண்டுவார் வேண்டுவதையே ஈவானாகிய சிராப்பள்ளி மேயசெல்வனார் திருவருளால் சில ஆண்டுகளில் அவர்கட்கு நல்லதொரு நாளில் நல்லோரையில் ஆண் மகவு ஒன்று பிறந்தது. இப்பிள்ளை பிறந்த இடம் மறைக்காடு என்று கொள்வாரும் உளர். பெற்றோர் அந்த அருமந்த பிள்ளைக்குத் திருச்சிராப்பள்ளிச் செல்வனாரின் திருப்பெயராகிய 'தாயுமானவன்' என்ற திருநாமம் சூட்டி, சடங்குகள் பலவும் சிறப்புறச் செய்து அன்புடன் வளர்த்து வரலாயினர். இச்சிறுவனே நம் தாயுமான அடிகள்.

**கல்வி:** தாயுமானவரும் இளம்பிறை போல் இனிது வளர்ந்து வந்தார். பெற்றோர்கள் அவருக்கு உரிய காலத்தில் கல்வியைத் தொடங்கினர்.

*"ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு*
*எழுமையும் ஏமாப்பு உடைத்து"*[1]

என்ற வள்ளுவர்க் கருத்தின்படி முற்பிறப்பின் வாசனையால் தென்மொழி வடமொழி இரு மொழிகளிலும் உள்ள இலக்

1. குறள் - 398

கியம், இலக்கணம், தருக்கம் முதலாய நூல்களைப் பழுதற ஓதிக் கற்றுத் துறைபோய வித்தகரானார். தமக்கு முன்னே சிறப்புற்றுத் திகழ்ந்த சான்றோர்களாகிய தேவார முதலிகள், மாணிக்கவாசகர், அருணகிரியார் போன்ற சமயச் சான்றோர்களின் நூல்களையெல் லாம் நுகர்ந்து அவர்தம் பாடல்களில் திளைத்துத் திகழ்ந்தார்.

'கற்றபின் நிற்க அதற்குத் தக'[2] என்பது வள்ளுவர் வாக்கு. கற்றதன் பயனை,

*''கற்றதனால் ஆய பயனென்கொல் வாலறிவன்*
*நற்றாள் தொழாஅர் எனின்''*[3]

என்று உணர்த்திய பெருந்தகை இப்பெருமான். இவற்றை நன்குணர்ந்த தாயுமானவரின் கல்வி வெறும் உலக வாழ்வின் அளவிலே மட்டும் நின்று விடவில்லை. இந்த உலக வாழ் வின் உச்சியில் திகழும் உண்மை நாட்டம், மெய்யுணர்வின் நாட்டம், அவரை ஈர்த்தன. வாலறிவன் நற்றாள் தொழுது வாழ்க்கையின் பயனை அடைய அவர் மனம் அவாவி நின்றது.

*''கற்றும் என்பலன்? கற்றிடும் நூல்முறை*
*சொற்ற சொற்கள் சுகாரம்ப மோநெறி*
*நிற்றல் வேண்டும்; நிருவிகற் பச்சுகம்*
*பெற்ற பேர்பெற்ற பேசாப் பெருமையே''*[4]

என்ற பாடல் அவர்தம் ஆவலையும் ஆர்வத்தையும் புலப்ப டுத்தி நிற்கின்றது. இவர் கற்ற கல்வியெல்லாம் 'ஆன்ம இலாபத்தை அடைதல் எவ்வாறு?' என்று அதனையே விரும் பும் பெருவேட்கை எழுவதற்கே உதவுவனவாயின.

*''சந்ததமும் நின்கருணை சாற்றுவதல் லால்வேறு*
*சிந்தை யறியேனுன் சித்தம் பராபரமே*[5]

*மண்ணொடு விண்காட்டி மறைந்துமறை யாவருளைக்*
*கண்ணொடுகண் ணாகஎன்று காண்பேன்? பராபரமே''*[6]

2. மேலது - 391 3. மேலது - 2

4. பொன்னை மாதரை-36 5. பராபரம்-255 6. மேலது-82

என்பவற்றால் திருவருட்பெற்றியோர்ந்து அதனை எப்போதும் பாடியும் தேடியும் பயன்பெறும் பேரவாவினைக் கண்டு தெளியலாம்.

அலுவலில் அமர்தல்: இந்நிலையில் திருச்சிராப்பள்ளி அரசர் குடும்பத்தில் இரண்டு தலைமுறைகள் கழிந்தன. அதாவது, முத்துக்கிருட்டிண நாயக்கரும், முத்து வீரப்ப நாயக்கரும் மறைந்து விசயரங்க சொக்கநாத நாயக்கர் ஆட்சிக்கு வந்தார். இவரது ஆட்சிக் காலத்தில்தான் கேடிலியப்பப் பிள்ளை சிவப்பேறு எய்தினார். அரசர் தாயுமானவரை வரவழைத்து அவர்தம் ஆற்றலைப் பரிசோதனையாலறிந்து மிக வியந்து தந்தை வகித்து வந்த பதவியை மைந்தருக்கு நல்கினார்.

உலகியலில் தமக்கு வழிமுறையாக வந்த அலுவலைத் தாயுமானவர் ஏற்று அரசாங்கக் கடமையைச் செவ்விதின் இயற்றி வருவராயினர். எனினும் உலக நிலையாமையை உணர்ந்து, சிவ நுகர்ச்சிப் பேரின்பப் பேற்றினையே பெரிதும் நாடலாயினர்; ஆன்ம இலாபத்தைப் பெறுவதிலேயே நாட்டமிக்கவராக, அஃது என்ஞான்று தமக்குக் கிட்டுமோ என்று கவலையுறுவாராயினர்.

*"மோக மாதிதரு பாச மானதை*
*அறிந்து விட்டுனையும் எனையுமே*
*முழுது ணர்ந்துபர மான இன்பவெள்ளம்*
*மூழ்க வேண்டும்; இதுவின்றியே*

*தேக மோநழுவி நானு மோநழுவின்*
*பின்னை உய்யும்வகை உள்ளதோ?"*[7]

என்பதிலும்,

*இறப்பொடு பிறப்பை யுள்ளே*
*எண்ணினால் நெஞ்சது பகீரெனும்; துயலுறா(து)*
*இருவிழியும்; இரவு பகலாய்ச்*

*செந்தழலின் மெழுகானது அங்கம்;இவை என்கொலோ*[8]

என்பதிலும் இக்கவலை தட்டுப்படுதலைக் காணலாம்.

7. சிரசகோதய விலாசம் - 5 8. சின்மயானந்த குரு - 5

எனவே, பெரியார்களை எதிர்ப்படும் போதெல்லாம் தாயுமானவர் தத்துவ ஆராய்ச்சி பற்றியே அளவளாவி வந்தார். ஞானதாகம் உடையவராய் இருந்து வந்தமை,

*"தாகமறிந் தின்பநிட்டை தாராயேல் ஆகெடுவேன்*
*தேகம் விழுந்திடினென் செய்வேன் பராபரமே"*[9]

என்பதனாலும்,

*"பாராயோ என்னைமுகம் பார்த்தொருகால் என்கவலை*
*தீராயோ வாய்திறந்து செப்பாய் பராபரமே"*[10]

என்பதனாலும் தெளியப்படும்.

அருளையே வடிவாகவுடைய அடிகள் இறைவன் தம்மை இளமையிலேயே பேரின்பப் பித்துக் கொள்ளும்படி செய்துவிட்டார் என்கின்றார். இதனை,

*"அன்பின்வழி அறியாத என்னைத் தொடர்ந்தென்னை*
*அறியாத பக்கு வத்தே*
*ஆசைப் பெருக்கைப் பெருக்கிக் கொடுத்துநான்*
*அற்றேன் அலந்தேன் என*

*என்புலன் மயங்கவே பித்தேற்றி விட்டாய்"*[11]

என்ற பாடற்பகுதியால் அறியலாம்.

9. பராபரம் - 24
10. மேலது - 28
11. சுகவாரி - 2

# 2. குருவருள் பெற்றமை

ஒரு சாதாரண உண்மையைப் பற்றி நாம் சிந்திக்க வேண்டும். பிறவியிலேயே ஒருவனுக்குக் கண்ணில்லை. மணிமந்திர ஔடதங்களால், அறுவை சிகிச்சையால், அவனுக்குக் கண் கிடைக்கின்றது என்று வைத்துக் கொள்வோம். பொருள்களைக் காணும் நிலை அவனுக்கு ஏற்பட்டு விடுகின்றது. ஆனால், அவன் காணும் பொருள்களை இன்னவை என்று இனங்கண்டு உணர்ந்து கொள்ளும் ஆற்றல் அவனிடம் இல்லை. பிறவியிலேயே கண்ணுடையான் ஒருவன் பொருள்களை அவனுக்கு 'இஃது இன்னது, இஃது இன்னது' என்று அறிவித்தால்தான் அவனால் பொருள்களை இனங்கண்டு பாகுபாடு செய்து அறிந்து கொள்ள முடிகின்றது. இவைபோலவே ஆணவ மலம்[1] பரிபாகமாகிச் சத்தி நிபாதம்[2] வருமாயின் தவம் புரியும் நிலை வாய்க்குமே யன்றித் தவமும் ஞானமும் கிடைத்துவிட வாய்ப்பில்லை. குருவருளால்தான் அவை கிடைக்க வேண்டும். இதற்கு இறைவன் திருவருளும் வேண்டும்.

சமயக்குரவர்களின் வாழ்க்கையைக் கூர்ந்து நோக்குங்கால் அவர்கட்குக் குருவருள் திருவருளால் கிடைத்தமை கண்டு தெளியலாம். அப்பர், சம்பந்தர், சுந்தரர் இவர்கட்கு இறைவன் திருவருளே நேரில் கிடைத்தது. அப்பருக்கு நல்லூர்ப் பெருமான் திருவடி தீட்சை நல்கினார். நினைந்துருகும் அடியாரை (*6.14*) என்ற முதற் குறிப்புடைய திருத்தாண்டகத்தில் 'திருவடி என் தலைமேல் வைத்தார்' என்று பாடல் தோறும் வரும் சொற்றொடரால் இஃது அறியப்படும். சம்பந்தருக்கு சிவஞானம் அம்பிகையின் முலைப்பால் உண்டதால்

1. ஆணவ மலம்: மும்மலங்களாகிய ஆணவம், கன்மம், மாயை என்பவற்றின் தலையாயது
2. சத்தி நிபாதம்: திரோதான சக்தி அருட்சக்தியாக மாறி ஆன்மாவினிடத்தில் பதிதலே சத்தி நிபாதம் என்பது

கிடைத்தது. சுந்தரரை இறைவனே தடுத்தாட் கொண்டார். மாணிக்கவாசகரைத் திருப்பெருந்துறை இறைவன் குருந்த மரத்தடியில் சிவனடியார்களாகிய மாணாக்கர்கட்கு நடுவே ஆசாரியனாக இருந்து ஆட்கொண்டதாக வரலாறு கூறுகின் றது. திருவெண்ணெய் நல்லூரில் 'சுவேதவனப் பெருமாள்' என்ற பிள்ளைத் திருநாமத்துடன் எழுந்தருளியிருந்த மெய் கண்டாருக்கு வான்வழியாகச் சென்ற பரஞ்சோதி மாமுனிகள் உபதேசித்துச் சென்றார் என்பதை அறிகின்றோம்.

குரு தரிசனம்: தாயுமான அடிகள் எத்தனையோ நாட்கள் குருவை நாடி அலைந்தவண்ணம் இருந்தார்.

*"எந்தநாள் கருணைக் குரித்தாகு நாளெனவும்*
*என்னிதயம் எனைவாட்டுதே"*[3]

என்பதனாலும்,

*"தேடினேன் திக்கனைத்தும் தென்டனிட்டேன்;*
*சிந்தைநைந்து*
*வாடினேன் என்மயக்கம் மாற்றாய்; பராபரமே"*[4]

என்பதனாலும் இதனை அறியலாம்.

திருச்சிராப்பள்ளிக் குன்றின் படிவழிப் பாங்கரில் 'சாரமா முனிவர் மடாலயம்' என்ற பெயரில் ஒரு மடாலயம் உண்டு. இந்தச் சாரமா முனிவர் யார்? இவர் நந்திதேவரின் மாணாக்க ராய்க் கயிலையினின்றும் தமிழ்நாடு போந்து தங்கியருளிய திருமூல நாயனாரது மரபில் வந்தவர். இவர் திருச்சிராப்பள்ளி யில் அமர்ந்து ஞான ஒளி பரப்பி வந்த இடம்தான் இவர் பெயரில் வழங்கும் மடாலயம். இந்தப் பெரியவர் சமாதி கூடிப் பரிபூரணம் எய்திய இடத்தில் ஆறுமுகக் கடவுள் திருக்கோயில் ஒன்று நிறுவப் பெற்றுள்ளது. இதனை இன் றும் காணலாம்.

இம்முனிவருக்குப் பின் வழிவழியாகப் பல முனிவர்கள் இத்திருமடத்தில் எழுந்தருளியிருந்து பக்குவிகள் பலருக்கு

3. சுகவாரி - 11 4. பராபரம் - 200

ஞான உபதேசம் செய்து வந்தனர். தாயுமானவர் வாழ்ந்த காலத்தில் அவ்வகையில் தருமபுர ஆதீனத்தில் உபதேசம் பெற்ற மௌனகுரு தேசிகர் என்னும் சிவயோகியார் சிதம்பரத்தினின்றும் புறப்பட்டுப் பல திருத்தலங்களையும் சேவித்துக் கொண்டு திருச்சிராப்பள்ளியில் சாரமாமுனிவர் திருமடத்தில் தங்கியிருந்தார். இங்கு அவர் பலருக்கு மெய்ந்நூல் அறிவுறுத்தினமையால் இவ்விடம் 'மௌனகுரு மடம்' என்ற பெயரும் வழங்கலாயிற்று. இவரே 17-வது பட்டமாக எழுந்தருளியிருந்த மௌனகுரு சுவாமிகள்.

பின்னர் 17-வது பட்டம் மௌன குருசுவாமிகள் தருமையாதீனத்திற்குச் சென்று அந்த மௌன மடத்தின் பரிபாலனத்தை தருமையாதீன மடாலயத்தின் நிர்வாகத்தில் ஒப்படைத்துவிட்டுப் பூரிபூர்ணம் அடைந்தார். அன்றிருந்து தருமையாதீனத்திலிருந்த முனிவர் குழாத்துள் ஒருவரே திருச்சிராப்பள்ளி மௌன மடத்துக்குக் கட்டளை விசாரணைத் தம்பிரானாக அமர்த்தப் பெற்றனர். அன்று முதல் சற்றேறக் குறைய நானூறு ஆண்டுகளாக திருச்சி மலைக்கோட்டை மௌன மடம் தருமையாதீனத்தின் பரிபாலனத்துக்கு உட்பட்டதாய் இருந்து வருகின்றது.

குருவருள்: மௌனகுரு சுவாமிகள் இங்ஙனமே அங்கிருக்கும் நாளில் ஒருநாள் தாயுமானவர் தாம் மேற்கொண்ட வழக்கப்படி சிராப்பள்ளி மேயானை வழிபட்ட பின்னர் சாரமாமுனிவர் மடத்தருகேயுள்ள குமாரக் கடவுளை வணங்கி மீளும்போது மௌன குரு சுவாமிகள் எதிர்ப்பட்டனர். சுவாமிகளைக் கண்டவுடன் உள்ளங் கவரப்பெற்று அவர் திருவடிகளில் வீழ்ந்து வணங்கினர். தாயுமானவரின் உயர்ந்த பக்குவ நிலையை அறிந்த மௌனகுரு சுவாமிகள் அவரைத் தம் அடியவராக ஏற்று விசேட தீக்கை செய்வித்து சிவபூசை எழுந்தருள்வித்துக் கொடுத்தருளினர். அதன் பின்னர் கல்வியின் கரைகண்ட தாயுமானவர் வேதாந்த நூல்களிலும் பிற சமய நூல்களிலும் தமக்கிருந்த ஐயங்களைக் குருமூர்த்தி மூலம் தக்க சுருதி யுக்தி, அநுபவங்களால் போக்கிக் கொண்டார். பின்னர் சுவாமிகள் அவருக்கு யோகஞான முறைகளையும் உபதேசித்தனர்.

சுவாமிகள் அப்பொழுது தமது திருக்கையில் சிவஞான சித்தியார்[5] என்ற நூலை வைத்திருந்தனர் எனவும், அதன் எட்டாம் சூத்திரம் முப்பதாம் பாடலின் முற்பாதியைத் தாயுமான வர்க்கு ஓதி அவருக்கு மெய்ந்நூல் தெளிவினை அருளினர் எனவும் செவிவழிச் செய்தி ஒன்று வழங்கி வருகின்றது. இச்செய்தியை அரண் செய்வதுபோல்,

*''பாதிவிருத் தத்தால்இப் பார்விருத்த மாகஉண்மை*
*சாதித்தார் பொன்னடியைத் தான்பணிவ தெந்நாளோ?''*[6]

என்ற பாடலும் அமைந்துள்ளது.

மாணிக்கவாசகருக்குப் பக்குவம் அடைந்த நிலையில் இறைவன் குருந்த மரத்தடியில் குருவாக நின்று ஆட்கொண்டது போல், இறைவனும் பெரியோரை அதிட்டித்து ஆசானாய் அருள் புரிவான் ஆதலின், அவன் மௌனகுரு வாயிலாகத் தாயுமானவருக்கு உயர்ந்த ஞானத்தை நல்கினன் என்று கருதலாம். அக்காலத்தில் தருமையாதீனத்தில் யோகப் பயிற்சி சிறப்புற்று விளங்கியது. இதனை அவ்விடத்தில் யோகம் செய்வார்க்கென வகுத்திருந்த பதினாறு அறைகளின் அமைப்பால் தெளியலாம்.

கி.பி.1685 முதல் திருச்சியிலுள்ள 'சாரமாமுனிவர் மடம்' தருமையாதீனத்தைச் சார்ந்ததென்பது தெளிவு. ஆதி மௌன குருவுக்குச் 'சிதம்பரநாதத் தம்பிரான்' என்ற பெயர் அமைந்திருந்தது. இஃது அம்மடத்து ஆதிப் பட்டயங்களால் உறுதிப்படுகின்றது. இன்றும் அங்கே வதியும் தருமையாதீனத் தம்பிரான்மார்கள் 'மௌனம்' என்ற அடைமொழியோடுதான் தங்கள் திருப்பெயரைச் சேர்த்தே கையெழுத்திடுகின்றனர். 'மூலன் மரபு' என்பது, சாரமாமுனிவர் திருமூலர் மரபில் வந்தவரென்றோ, எவற்றிற்கும் மூலமாகிய தென்முகத்தெய்வப் பரமாச்சாரியர் மரபென்றோ குறிப்பதாகக் கொள்ளலாம்.

5. மெய்கண்ட சாத்திரங்கள் பதினான்கில் ஒன்று. சிவஞானபோதத்தின் விரிவு இது.
6. எந்நாட்கண்ணி - 16

அடிகள் எந்நாட்கண்ணி 'குரு மரபின் வணக்க'த்துள் கயிலாய பரம்பரை மெய்கண்டார் சந்தானத்தை விதந்தோதிக் குறித்த பதிகத்தின் பிற்பகுதியில் மௌனகுரு வணக்கத்தை ஆறு கண்ணிகளில்[7] கூறினமையும் திருமூலரைக் குரு மரபிற் கூறாமையும் காணலாம். 'மூலன்' என்ற சொல் இறைவனைக் குறிப்பதற்குத் திருமூலரால் வழங்கப் பெற்றுள்ளது. 'மூலனை நாடினோம்' என்ற வாக்கினால் இது தெளியப்படும்.

தாயுமானவர் யோகஞான முறைகளைக் கேட்ட அன்று முதல் சித்தாந்த நூல்களைக் கேட்டல், சிந்தித்தல், தெளிதல், நிட்டை கூடல் என்னும் நான்கினையும் மேற்கொண்டு கல்லால் அடிக்கீழ் வைகும் முதல்வன் திரு முன்பு ஒன்றுபடுதலாகிய நிட்டைப் பயிற்சி செய்து வருவாராயினர். இக்காலத்தில் தான் திருவருள் விலாசப் 'பரசிவ வணக்கம்', 'பொருள் வணக்கம்', பரிபூரணானந்தம்' என்ற தலைப்பில் பாடல்களைப் பாடினார். 'சின்மயானந்த குரு' என்ற தலைப்பில் உள்ள பாடல்கள் கல்லால் நிழற் கடவுள்மீது அருளப் பெற்றவை. தமது குருநாதரின் பெருமையை 'மௌனகுரு வணக்கம்' என்னும் திருப்பதிகத்தில் வியந்து போற்றினர். இதன் ஒவ்வொரு பாடலும்,

*''மந்த்ரகுரு வே!யோக தந்த்ரகுரு வே!மூலன்*
*மருபில்வரு மௌனகுருவே!''*

என்ற தொடரால் முடிகின்றது. இப்பாடல்கள் யாவற்றையும் தாயுமானவரின் சிற்றன்னையின் புதல்வரான 'அருளையபிள்ளை' என்பார் எழுதிப் பாதுகாத்துப் பிறருக்கும் உரைத்தனர் என்பது வரலாறு.

இந்நிலையில் திருச்சி நாயக்கர் மன்னர் தாயுமானவரிடம் பல திருவருட் புதுமைகளையெல்லாம் அறிகின்றார். மன்னருக்கு அச்சமும் வியப்பும் ஏற்படுகின்றன. ஒருநாள் அவர் தாயுமானவரை வணங்கி, ''ஐயன்நீர், இதுவரை தங்கள் பெருமையை அடியேன் உணர்ந்திலேன்; அடியேனால்

7. கண்ணிகள் - (1-6)

வேண்டுவனவற்றைச் செய்வித்துக் கொண்டு தங்கள் நிட்டை நிலைக்கு இடையூறின்றி இனிது வைகி அருள்க' என்று கூறி அவருக்கு வேண்டிய பலவற்றையும் செய்து வந்தார். ஆயினும் தாயுமானவர் அரசு அலுவலைப் பார்த்துக் கொண்டே ஞானநெறியில் ஒழுகி வந்தார். இக்காலத்தில்தான் திருவானைக்கா அகிலாண்ட நாயகிமீது சந்தவிருத்தம் பாடப் பெற்றது என்பர். இதற்கிடையில் தாயுமானவர் தம் குருநாதரை வணங்கித் தமக்கு நிருவாணதீக்கை செய்து துறவு நிலையை அளிக்குமாறு வேண்டினார். ஆயினும், 'சிறிதுகாலம் இல்லறத்தில் இருந்து மீண்ட பின்பே ஆஃது உனக்கு வாய்க்கும்' என்ற குருநாதரின் அருள்வாக்குப் பிறந்தது; அதனால் தாயுமானவர் யாதும் சொல்லாது அமைதியுற்றனர்.

# 3. வாழ்வில் திசைதிருப்பம்

**1625**இல் திரிசிபுர மன்னர் விசயரங்க சொக்கநாத நாயக்கர் உலக வாழ்வை நீத்தார். அவர் ஆட்சி அவர் துணைவி மீனாட்சியின் பொறுப்பிற்கு வந்தது. அரசமாதேவி தாயுமானவரை அழைத்துப் பெரிய கணக்கு வேலையைப் பார்க்க வேண்டும் என்று குறையிரந்தனர். தாயுமானவரும் ஒருவாறு இணக்கமுற்றனர். அரசமாதேவி தாயுமானவரின் கட்டழகினால் ஈர்ப்புற்று ஒருநாள் தம் தகாத செயலுக்கு உட்படுமாறு வற்புறுத்தினர். தாயுமானவர் அதற்கு இணங்காது அவருக்கு அறிவுரை பல பகர்ந்து அவரை இருக்கச் செய்தார்.

அரசியார் தகாத செயலுக்குத் தம்மை ஆட்படுத்த நினைத்த நிகழ்ச்சி அடிகள்தம் மனத்தில் உறுத்திக் கொண்டிருந்ததால், அவர் மகளிரை இழித்துப் பேச வாய்ப்பு ஏற்பட்டது போலும் என்று கருதலாம்.

*“முத்தனைய மூரலும் பவளவாய் இன்சொலும்*
*முகத்துஇலகு பசுமஞ்சளும்*
*மூர்ச்சிக்க விரகசன் னதம்ஏற்ற இருகும்பம்*
*முலையின்மணி மாலைநால*

*வைத்துஎமை மயக்கிஇழு கண்வலையை வீசியே*
*மாயா விலாசமோக*
*வாரிதியில் ஆழ்த்திடும் பாழான சிற்றிடை*
*மடந்தையாகள் சிற்றின்பமோ*

*புத்தமிர்த போகம் புசித்துவிழி இமையாத*
*பொன்நாட்டும் வந்தது என்றால்,*
*போராட்டம் அல்லவோ பேரின்ப முக்திஇப்*
*பூமியில் இருந்துகாண.*

*எத்தனை விகாரம்வரும் என்றுசுகர் சென்றநெறி*
*இவ்வுலகம் அறியாததோ*

— *சச்சி...சிவம்-10*

*இப்பிறவி என்னும்ஓர் இருட்கடலில் மூழ்கிநான்*
*என்னும் ஒரு மகரவாய்ப்பட்டு*
*இருவினை எனும்திரையின் எற்றுண்டு புற்புதம்*
*எனக்கொங்கை வரிசைகாட்டும்*

*துப்புஇதழ் மடந்தையர் மயல்கண்ட மாருதச்*
*சுழல்வந்து வந்துஅடிப்பச்*
*சோராத ஆசையாம் கான்ஆறு வான்நதி*
*சுரந்ததுஎன மேலும் ஆர்ப்பக்*

*கைப்பரிசு காரர்போல் அறிவுஆன வங்கமும்*
*கைவிட்டு மதிமயங்கிக்*
*கள்ளவங் கக்காலர் வருவர்என்று அஞ்சியே*
*கண்கருவி காட்டும் எளியேன்*
*— தேசோமயானந்தம் - 2*

*மின்போலுந் இடைஒடியும் ஒடியும்என மொழிதல்போல்*
*மென்சிலம்பு ஒலிகள் ஆர்ப்ப*
*வீங்கிப் புடைந்துவிழு சுமைஅன்ன கொங்கைமட*
*மின்னார்கள் பின்ஆவலாய்*

*என்போல்அலைந்தவர்கள் கற்றார்கள் கல்லார்கள்*
*இருவர்களில் ஒருவர் உண்டோ*
*— மேலது 10*

என்பன போன்ற பாடல் தம் அநுபவத்தின் விளைவு எனக் கருதலாம்.[1]

மற்றும் 'எந்நாட் கண்ணியில்' 'மாதர்மயக்கு அறுத்தல்' என்ற தலைப்பிலுள்ள பதினைந்து கண்ணிகளும் இக்காரணத்தால்தான் எழுந்தனவோ என்று கருதவும் இடம் உண்டு.

*மெய்வீசும் நாற்றம்எலாம் மிக்கமஞ்ச ளால்மறைத்துப்*
*பொய்வீசும் வாயார் புலைஒழிவது எந்நாளோ (1)*

*காமனைவா என்றுஇருண்ட கண்வலையை வீசும்மின்னார்*
*நாமம் மறந்துஅருளை நண்ணுநாள் எந்நாளோ (4)*

1. அடிகளின் வாழ்க்கையில் இப்படி ஒன்றும் நேரிடவில்லை. இது நைச்சியானந்தமாகக் கூறியது

*வீங்கித் தளர்ந்து விழும்முலையார் மேல்விழுந்து*
*தூங்கும்மதன் சோம்பைத் துடைக்குநாள் எந்நாளோ (6)*

*உந்திச் சுழியால் உளத்தைக் கழித்தகன*
*தந்தி ஸ்தனத்தார் தமைமறப்பது எந்நாளோ(9)*

*தட்டுவைத்த சேலைப்பூங் கொய்சகத்தில் சிந்தைஎல்லாம்*
*கட்டிவைக்கும் மாயம்மின்னார் கட்டுஅழிவது எந்நாளோ (10)*

என்ற கண்ணிகளில் இதனை ஓர்ந்து உணரலாம்.

**வெளியேற்றம்:** இனி திரிசிரபுரத்திலிருந்தால் அரசியின் தொந்தரவு அடிக்கடி நேரிடும் என்று கருதிய தாயுமானவர் அன்றிரவே தம் சிறிய தாயார் மகனான அருளையரோடு திரிசிரபுரத்திலிருந்தே வெளியேறினார். இருவருமாகத் தென் றிசை நோக்கிச் சென்றனர். வழியில் நல்லூர் என்ற சிற்றூரினை அடைந்தபொழுது தாயுமானவர் தம் சிவபூசைப் பெட்ட கத்தை எடுத்துவரத் தவறினமையை உணர்ந்தார். உடனே அதனை எடுத்து வருமாறு அருளையரை அனுப்பி வைத்தார். பின்னர் தாயுமானவர் அயர்வுற்று அமர்ந்திருந்தபொழுது நல்லூரினர் அவரைப் பாலுணவு கொள்ளுமாறு வேண்டினர். அப்போது தாம் பாடிக் கொண்டிருந்த 'கருணாகரக் கடவுள்' என்னும் பதிகத்தில் ஐந்து பாடல்கள் நிறைவுற்றிருந்ததென் பதும், 'பண்ணேன் உனக்கானபூசை' எனத் தொடங்கும் ஆறாவது பாடலைப் பாடியருளித் தமது பசியை ஒரு சிறிது போக்கிக் கொண்டார் என்பதும் செவிவழிச் செய்தி.

இந்நிலையில் திரிசிரபுரத்தில் தாயுமானவரைக் காணாமை யால் அரசி மிகவும் சினமுற்றாள். தன் காம உணர்ச்சியைத் தணிக்காதவர்மீது எவ்வளவு சினமுற்றிருக்க வேண்டும் என் பதை நாம் ஊகித்துதான் அறிய வேண்டும். மந்திரத் தொழில் வல்லார் ஒருவனை அவரைத் தேடிச் சென்று, கண்டறிந்து, வசியம் செய்து திரும்பக் கொணருமாறு பணித்தாள். சூர்ப்ப ணகைக் காமமல்லவா? அது சும்மா விடுமா? எப்படியோ அவன் தாயுமானவர் நல்லூரில் இருப்பதை அறிந்து கொண் டான். அவ்வூரையடைந்து நிட்டையிலிருந்த அவருக்குப் பின்னிருந்து வசிய மந்திரத்தை ஓதிய பொழுது தாயுமானவர்

அவனைத் திரும்பிப் பார்த்தவுடன் அவன் மனநிலை கலங்கி யது. உடனே அவர்தம் திருவடியில் வீழ்ந்து வணங்கித் தன்னை மன்னித்தருளுமாறு வேண்டிக் கொண்டு தான் வந்த வழியே மீண்டான்.

பின்னர் தாயுமானவர் இராமேசுரம் செல்லும் நோக்கு டன் அருளையரோடு புறப்பட்டார். இருவரும் விராலி மலையை அடைந்தனர். அங்கே வசித்து வந்த சைவன் வேளாள வள்ளல் ஒருவரது கனவில் இறையருளால் ஒரு துறவி தோன்றி, ''என் பிள்ளைகள் இருவர் பட்டினியால் இவண் போந்துள்ளனர். அவர்கட்கு சோறு நல்கி வேண்டு வன செய்க'' என்று ஏவினார். அந்த வள்ளல் அவர்கள் இருவரையும் தேடிக் கண்டறிந்து உணவு நல்கினார். இதன் சிறந்த பயனாக மகப்பேறு இன்றியிருந்த அவருக்கு மைந்தன் பிறந்தான். அந்தப் பிள்ளைக்குத் தாயுமானவன் என்றே திருநா மம் சூட்டினார். இன்றும் அந்த வேளாளர் மரபில் வந்தவர் கள் தங்கள் பெயருக்கு முன்னர் 'தாயுமான்' என்ற அடைமொ ழியைச் சேர்த்துக் கொள்ளும் வழக்கத்தை மேற்கொண்டு வருகின்றனர்.

வேளாள வள்ளல் ஆதரவில் சில நாட்கள் தாயுமானவர் தங்கியிருந்த பொழுது சித்தர் ஒருவர் இவர்தம் உயர்ந்த மனநிலையைக் கண்டு இவரை சித்தர்கள் பலர் தங்கியிருந்த ஓர் இடத்திற்கு அழைத்துச் சென்றார். தாயுமானவர் சித்தர்க ளுடன் பல நாட்கள் அளவளாவியிருந்தனர். இக்காலத்தில் தான் சித்தர்கணம் என்ற பதிகம் பாடப் பெற்றதாகக் கருத லாம். உடல் சித்தியும் உயிர் முத்தியும் ஒருங்கெய்த வேண்டு மென்ற கருத்து சித்தர்களின் சூழ்நிலையில் தாயுமானவரிடம் தோன்றியிருத்தல் கூடும் என்று கருதலாம். 'ஆனந்த மானபரம்' முதலிய திருப்பதிகங்களும் விராலிமலையில் தங்கியிருந்த பொழுதுதான் பாடப் பெற்றன. பின்னர் தாயுமானவர் புதுக் கோட்டைக்கு அருகிலுள்ள கபிலை மாநகர் என்னும் திருக்கோ கரணம் என்ற ஊரையடைந்து அங்கு எழுந்தருளியிருக்கும் பெரிய நாயகியார்மீது காற்றைப் பிடித்து என்ற திருப்பாடலை அருளிச் செய்தார்.

*"நாற்றைப் பதித்ததென ஞானமாம், பயிரதனை*
*நாட்டிப் புலப்பட்டியும்*
*நமனான தீப்பூடும் அணுகாமல் முன்னின்று,*
*நாடுசிவ போகமான*

*பேற்றைப் பகுத்தருளி எனையாளவில்லையே?*
*பெரியஅகி லாண்டகோடி*
*பெரியநா யகி!பெரிய கலைமா நகர்மருவு*
*பெரியநா யகிஅம்மையே"*[2]

என்ற பாடற் பகுதியில் தம்மிடம் மோனமாம் பயிரதனை நாட்டுமாறு வேண்டுகின்றார்.

பின்னர் தாயுமானவர் அருளைய பிள்ளையுடன் இராமே சுரம் சென்றார். இராமநாதனை வணங்கினார்.

*"மாது காதலி பங்கனை, அபங்கனை*
*மாடமா ளிகைசூழும்*
*சேது மேவிய இராமநா யகன்றனைச்*
*சிந்தைசெய்! மடநெஞ்சே!"*[3]

என்பதைக் காணலாம். இராமேசுரம் வந்த இராமபிரான் சிவ பூசை செய்ய காசியிலிருந்து ஓர் இலிங்கம் கொணருமாறு சிறிய திருவடியை அனுப்பினார். அவர் காலந்தாழ்த்தும் வர வில்லை. சீதாப்பிராட்டி மணலைப் பிடித்து இலிங்கமாக்க அதை இராமபிரான் வழிபட்டனர். அந்த இலிங்கமே இராம லிங்கம்; கருவறையிலிருப்பது. ஆஞ்சனேயர் தாமதித்துக் கொணர்ந்த காசிலிங்கம் இராமலிங்கர் சந்நிதியின் வடக்கில் சில அடி தூரத்துள் நிறுவப்பெற்றுள்ளது.

இராமேசுரத்தில் அருளும் அழகும் நிறைந்த இறைவியின் மீது பாடிய பதிகம் மலைவளர் காதலி என்பது. எட்டுப் பாடல்களைக் கொண்டது. இறைவியின் பெயர் மலைவளர் காதலி. பர்வதவர்த்தினி என்பது வட மொழிப் பெயர். இந்த அன்னையை,

2. பெரிய நாயகி - 1 3. ஆசையெனும் - 11

*"நதியுண்ட கடலெனச் சமயத்தை யுண்டபர*
*ஞானஆ னந்தவொளியே!*
*நாதாந்த ரூபமே! வேதாந்த மோனமே!*
*நானெனும் அகந்தைத்தீர்த்தென்*

*மதியுண்ட மதியான மதிவதனவல்லியே!*
*மதுகு தனன்தங்கையே!*
*வனராச னுக்கிருகண் மணியாய் உதித்தமலை*
*வளர்காத லிப்பெணுமையே!"*[4]

*என்று இன்னும் பலவிதமாகவும் விளித்து 'உன்இருதாள், மட்டிலே மனது செல நினதருளும் அருள்வையோ?' என்று வேண்டுகின்றார். இப்பதிகத்தில் செல்வர்க்குக் குற்றேவல் செய்யும் இழிவான வாழ்க்கையை,*

*"மிடியிட்ட வாழ்க்கையால் உப்பிட்ட கலமெனவும்*
*மெய்யெலாம் உள்ளுடைந்து*
*வீறிட்ட செல்வர்தம் தலைவாயில் வாசமாய்*
*வேதனைகள் உறவேதனும்*

*துடியிட்ட வெவ்வினையை ஏவினான்; பாவிநான்*
*தொடரிட்ட தொழில்களெல்லாம்*
*துண்டிட்ட சாண்கும்பி யின்பொருட்டாயதுன்*
*தொண்டர்பணி செய்வதென்றோ?"*[5]

என்ற பகுதியால் வெறுத்துக் கூறுவர். தாயுமானவர் இராமேசுவரத்தில் இருந்தபோது மழை இல்லாதிருந்தது. அடிகள் ஒரு வெண்பாவைப் பாடியருள, நல்ல மழை பெய்து அப்பகுதி செழிப்புற்றதாகச் செப்புவர்.

இராமேசுரத்தில் சிலகாலம் தங்கியிருந்த பின்னர் தாயுமானவரும் அருளையாவும், வடதிசை நோக்கிச் சென்றனர். அப்போது தாயுமானவர்பால் நிகழ்ந்த நிகழ்ச்சிகளை

4. மலைவளர் காதலி - 1 5. மேலது - 4

யெல்லாம் கேள்வியுற்ற தமையனார் சிவசிதம்பரம் பிள்ளை யும் அவரைச் சார்ந்த சிலரும் இராமேசுரத்தை நோக்கி வந்து கொண்டிருந்தனர். தாயுமானவர் அவர்களை வழியில் சந்தித்த னர். தம் தமையனார் கருதியபடி இருவரும் திரிசிரபுரம் சென்றுவிட்டுப் பொருள்களை எடுத்துக் கொண்டும் அன் னையாரை அழைத்துக் கொண்டும் திருமறைக் காட்டிற்கு வந்து சேர்ந்தனர். தாயுமானவர் அங்குத் தங்கயிருந்தபொ ழுது அவரது தமையனாரும் அன்னையாரும் அவருக்குத் திருமணம் நிகழ்த்த வேண்டும் என்று வற்புறுத்தினர். தாயுமா னவர் பலவாறு மறுத்துரைத்தும் அவர்கள் இணங்காமையா லும், அதுவே குருவாணையாக இருந்தமையாலும், இறுதி யில் திருமணத்திற்கு இசைய வேண்டியதாயிற்று. 'மட்டுவார் குழலி' என்ற திருப்பெயரையுடைய அம்மையாரை மணந்து கொண்டார்.

*"பக்தி யாய்நெடிது நம்பும் என்னையொரு*
*மையல்தந் தகில மாயையைப்*
*பாரு பார்என நடத்த வந்ததென?*
*பாரதத் தினுமி துள்ளதோ?*

*சுத்த நித்தஇயல் பாகுமோ;உனது*
*விசுவ மாயைநடு வாகவே*
*சொல்ல வேண்டும்வகை; நல்ல காதிகதை*[6]
*சொல்லும் மாயையினும் இல்லைஎன*

*சித்தம் இப்படி மயங்குமோ? அருளை*
*நம்பி னோர்கள்பெறு பேறிதோ?"*[7]

தாம் மௌனகுருவின்பால் அறிவுரை பெற்ற பின்னரும் இல்லறத்தில் இறைவன் தம்மைச் செலுத்தியது, தமக்கு வெறுப்பும் விருப்பும் தருவதாகும் என்று கூறுவது இப் பாடற் பகுதி.

6. காதி கதை என்பது உலகம் என்பது மனத்தின் கற்பனையன்றி உண்மையில் இல்லை என்பதற்கு ஞானவாசிட்டம் கூறும் கதை.

7. சிறசுகோதய விலாசம் - 9

சிலகாலம் தாயுமானவர் இல்லறம் நடத்தினார். ஓர் ஆண் குழவி பிறந்த பின்னர் துணைவியார் சிவபதம் எய்தினார். பிள்ளைக்குக் கனகசபாபதி என்ற திருநாமம் சாத்தப்பட்டது. இல்லறத்திலிருந்தபோதுதான் கண்ணிகள் பலவும் பாடினதாகக் கருத முடிகின்றது. அன்னையார் காலகதி அடையும் வரை தாயுமானவர் திருமறைக்காட்டில் இருந்தார். அதன் பின்னர் தமது செல்வத்தையும் செல்வமைந்தனையும் தமையனாரிடம் ஒப்படைத்து விட்டுத் தாம் கடுந்துறவு பூண அவாவுற்றுத் தாயுமானவர் தாயுமான அடிகள் ஆனார். கோவண ஆடையோடு இல்லத்தைவிட்டு வெளியேறினார். அருளைய பிள்ளையும் அடிகளைப் பின்தொடர்ந்தார். அடிகள் இறைவன் தமக்குச் செய்த உதவியை ஒரு பாடலில் விதந்தோதுவர். “அலைகடல் போன்ற பெருஞ்செல்வம் அல்லல் விளைக்கும். ஆகவே, அதனை நல்காது ஒருவர் பின் கைகட்டிச் சென்று வருந்தாமலும் இல்லையென்று யாசிப்போருக்கு இல்லை என்று சொல்லாமலும் பகுத்துண்டு பல்லுயிரோம்பி வாழ்வதற்கு வேண்டும் செல்வம் அளித்து நோயற்ற நல் வாழ்க்கை அளித்து, யோக ஞான நெறி நிற்கும் நிலையும் உள்ளின்று உணர்த்தியதுடன் மௌன குருவாக நிலமிசைத் தோன்றி அருள்புரிந்த நின் சிறந்த கருணையை ஐய! என்னென்று புகல்வேன். இவன் சிறியன்; அறிவிலியாயினும் நமது அடிமை என்ற கருத்து நின் திருவுள்ளத்திலிருந்தது போலும்”[8] என்று கூறினார்.

மோனநிலையை அவாவி நிற்றல்: தாயுமான அடிகளின் மனம் மோன நிலையை நாடி நின்றது. திருவருள் தமக்குப் பல நலங்கள் தந்தது போலவே, இடைவிடா மோன நிட்டையுடன் நல்க வேண்டும் என்பார். “வருவன வந்தெய்துக; வாராதன ஒழிந்து போக” என்று பதிலும் விடுத்து மனச்சான்றிற்கு மாறின்றியொழுகும் நிலை தந்ததும் வேதாந்த சித்தாந்த உண்மைக் கருத்தொருமையை முற்றிலும் உணர அறிவு உதவியதும், உடல்நிலையாமையுணர்ந்து ஞானநெறி நிற்றலையளித்ததும் என்றும் நிலைத்த பேரின்ப நுகர்ச்சியே

8. மேலது - 7

வீடென்று தெளிந்து புனல்போல உள்ளம் உருக அன்பு தந்ததும் நின்னுடைய பேரருளே. இன்னும் நின்னையே துணை என்ற என்னையே காக்க ஓர் எண்ணம் நினக்கு உண்டெனின், உலகம் முதலிய அசத்துத் தோன்றாது சிவ சத்தே தோன்றும் மோன நிலையே பற்றாக நிற்க அருள்வாய்''[9] என்று வேண்டுகின்றார்.

அடிகள் இறைவனுக்கே தம்மைக் கொடுத்து விட்டாராதலின், ''தந்தது உன் தன்னைக் கொண்டது என் தன்னை''[10] என்று மணிவாசகப் பெருமான் கூறியதுபோலவே,

*''தன்னைத்தந் தென்னைத் தடுத்தாண்ட நின்கருணைக்கு*
*என்னைக்கொண் டென்னபலன் எந்தாய் பராபரமே''*[11]

என்றும்,

*''சிந்தை மயக்கமறச் சின்மயமாம் நின்றஉன்னைத்*
*தந்தஉனக் கென்னையும்நான் தந்தேன் பராபரமே''*[12]

என்றும் அருளிச் செய்தனர். பிறிதோறிடத்தில்,

*''தன்னது என்றுரை சாற்று வனவெலாம்*
*நின்னதுஎன்தனை நின்னிடத்தே தந்தேன்''*[13]

என்று மீண்டும் எடுத்துக்காட்டுவர்.

மெய்யுணர்வு ஏற்பட்ட பிறகும் இடையிடையே வாசனாமலம் தோன்றுவதைக் கண்டு, அதனை அறவே ஒழிக்க விரும்பும் அடிகள், ''இந்த நிலை ஏசற்றிருக்கவென்றால், மடமை இதசத்துருவாகத் தோன்றிச் சிந்தையில் குடிகொள்கின்றதே; மலம் மாயை கன்மம் மீண்டும் திரும்பித் தொடுவமுக்காய்ச் சென்மம் ஏற்படுமோ? என மனம் யோசிக்கின்றது.'' என்று கூறி ''சிரத்தையெனும் வாள் உதவிப் பந்தமற மெய்ஞ்ஞானதீரம் தந்து என்னைப் பாதுகாத்தருளுவாய்''[14] என்று இறைவனை வேண்டுகின்றார்.

9. பரிபூரணானந்தம் - 8 10. திருவா. கோயில் திருப்.10
11. பராபரம் - 127 12. மேலது - 329 13. பொன்னை மாதரை - 2
14. பரிபூரணானந்தம் - 5

மோன நிலையை எய்துமுன் தன்னிலைமை எவ்வாறு இருந்ததென்பதை அடிகள்,

*"ஒன்றைப்*
*பெற்றவனும் அல்லேன்; பெறாதவனும் அல்லேன்;*
*பெருக்கத் தவித்துளறியே*
*பெண்நீர்மை யென்னஇரு கண்ணீர் இறைத்துநான்*
*பேய்போல் இருக்கஉலகம்*

*சுற்றிநகை செய்யவே உலையவிட் டாயெனிற்*
*சொல்லஇனி வாயுமுண்டோ?"*[15]

என்றும்,

*"கருத்தினுட் கருத்தாய் இருந்துநீ உணர்த்தும்*
*காரணம் கண்டுசும் மாதான்*
*வருத்தமற் றிருந்து சுகம்பெறா வண்ணம்*
*வருந்தினேன்"*[16]

என்றும் கூறுவர். இறைவன் மெய்யன்பையும் இன்பநிட்டையையும் தாராவிடின்,

*"நீராய் உருகஉள் ளன்புதந்*
*தே,சுக நிட்டையைநீ*
*தாரா விடின்என் பெருமூச்சுத்*
*தான்அத் தனஞ்சயனே"*[17]

என்று உயிர் துறப்பதாகக் கூறுவர். தனஞ்செயன் என்பது உயிர் உடலை நீத்தபின் உடலின்கண் நின்று புறம்போகும் ஒருவகை வாயுவாகும்.

மோன நிட்டையிற் பழகிய பின்னர் அடிகள் தன் நிலையை,

*"நடக்கினும் ஓடினும் நிற்கினும்*
*வேறொரு நாட்டமின்றிக்*
*கிடக்கினும், செவ்விது இருக்கினும்,*
*நல்லருட் கேள்வியிலே*

*15. சுகவாரி - 6 16. ஆரணம் - 6 17. பாயப்புலி - 20*

*தொடக்கும் என்நெஞ்சம்; மனமற்ற*
*பூரணத் தொட்டிக்குளே*
*முடக்குவன் யான்;பர மானந்த*
*நித்திரை மூடிடுமே"[18]*

என்ற பாடலில் உணர்த்துவார். இறைவனது பூரணம் தன்னை விழுங்கியவிடத்து ஒன்றுகூற வொண்ணாது. இதனை,

*"நானென் றொருமுதல் உண்டென்ற*
*நான்தலை நாண,என்னுள்*
*தானெற் றொருமுதல் பூரண*
*மாகத் தலைப்பட் டொப்பில்*
*ஆனந்தம் தந்தென் அறிவையெல்*
*லாம்உண்டு அவசம்நல்கி*
*மோனந் தனைவிளைத் தால்இனி*
*யாது மொழிகுவதே?"[19]*

என்று காட்டுவர். மேலும், மோன நிலை பூரணத்துவம் எய்திய நிலையில்,

*"ஆனந்த மோனகுரு வாம்எனவே, என்அறிவில்*
*மோனந் தனக்கிசைய முற்றியதால்; - தேனுந்து*
*சொல்லெல்லாம் மோனம்; தொழிலா தியும்மோனம்;*
*எல்லாம்நன் மோனவடி வே!"[20]*

எனவும்,

*"மோன குருஅளித்த மோனமே ஆனந்தம்;*
*ஞானம் அருளும்அது; நானும்அது; - வானாதி*
*நின்ற நிலையும்அது; நெஞ்சப் பிறப்பும்அது*
*என்றறிந்தேன்; ஆனந்த மே."[21]*

எனவும் கூறுவர். மோன நிலையைக் காட்டிய குருமூர்த்தியின் பெருமையை,

18. மேலது-12 19. மேலது - 13
20. உடல் பொய்யுறவு - 73 21. மேலது - 75

*"ஞானநெறிக் கேற்றகுரு; நண்ணரிய சித்திமுத்தி*
*தானம் தருமம் தழைத்தகுரு; - மானமொடு*
*தாயெனவும் வந்தென்னைத் தந்தகுரு; என்சிந்தை*
*கோயிலென வாழுங் குரு"*[22]

என்று மொழிவர். மோனநிலையை,

*"வாரிக் கொண்டெனை வாய்மடுத் தின்பமாய்ப்*
*பாரிற் கண்டவை யாவும் பருகினை;*
*ஓரிற் கண்டிடும் ஊமன் கனவென*
*யாருக் குஞ்சொல வாயிலை ஐயனே"*[23]

என்று மேலும் கூறுவர். நம்மாழ்வார் திருக்காட்கரைத் திருவாய்மொழியின்

*"வாரிக் கொண்டு உன்னை*
*விழுங்குவன் காணில்என்று*
*ஆர்வுற்ற என்னைஒழிய*
*என்னில் முன்னம்*
*பாரித்துத் தான்என்னை*
*முற்றப் பருகினான்;*
*கார்ஒக்கும் காட்கரை*
*அப்பன் கடியனே"*[24]

என்ற பாசுரத்தில் இறைவன் தன்னைப் பருகியதாகக் கூறும் நிகழ்ச்சி ஈண்டு ஒப்புநோக்கி உணரத்தக்கது.

திரிசிபுரம் வருகை: அடிகள் துறவு நிலையை ஏற்ற பின்னர் திரிசிரபுரம் மௌன குரு மடத்தை அடைந்து தமது குருநாதரை வணங்கிச் சிலகாலம் தங்கியிருந்தார். குருநாதரும் தாயுமானவரின் பரிபக்குவ நிலையைக் கண்டு, அவருக்கு நிருவாண தீக்கை செய்து வைத்து துறவு நிலையை வழங்கினார். அதனால், தாயுமானவர் பெருநிதியம் கிடைத்த வெறுமிடியன் மகிழ்வடைவதைப் போன்று மகிழ்வுற்றார். பின்னர்

22. மேலது - 82
23. பொன்னை மாதரை - 30 24. திருவாய் 9.6:10

குருவின் அடி நிழலிலேயே இருந்து ஞானநிட்டையைப் பயின்று வந்தார். அக்காலத்தில் சிரகிரிப் பெருமான் திருக்கோயிலில் எழுந்தருளியிருக்கும் தென்முகக் கடவுள் திருமுன்பும் அவர் ஞானநிட்டை பயிலும் இடமாகக் கொண்டார். தமது குருவிற்குப் பின்னர் 1644ஆம் ஆண்டு தொடங்கிச் சின்னாள் அவரது திருமடத்துத் தலைவராயும் திகழ்ந்தார்.

பல நாட்களுக்குப் பின்னர் தாயுமான அடிகள் சிவத்தலப் பயணம் செய்ய விரும்பினார். தம் இளவலோடு தென்றிசையில் பல திருத்தலங்களை வழிபட்டு இறைவனைச் சேவித்து, இராமநாதபுரத்தை அடைந்தார். அந்நகரின் கீழ்பால் 'காட்டூரணி' என்னும் இடத்தில் புளியமரம்[25] ஒன்றன் நிழலில் தங்கி நிட்டை கூடியிருந்தார். இக்காலத்தில்தான் தம்மை அகலாதிருந்த அருளையருக்கும் கோடிக்கரை ஞானியார் முதலிய பக்குவிகட்கும் அடிகள் ஞானோபதேசம் செய்தருளினார்.

அடிகள் தங்கியிருந்த இடத்தில் அவருக்கு வசதி செய்யக் கருதிய அம்மையார் ஒருவர் குளமொன்று தொட்டுப் பூங்காவொன்று அமைத்து அவ்விடத்தில் அடிகளை வைகும்படி வேண்டினாள். அந்த இடம் இப்பொழுது இலட்சுமிபுரம் என்று வழங்கி வருகின்றது.

இறையடிகூடல்: அடிகள் பல நாள் நிட்டையில் இருந்த பொழுது, அவர் திருமேனி உயிர்நீத்த உடல்போல் தோன்றினமையால், அவர் தேகவியோகம் ஆனதாகக் கருதி அவர்தம் உடலுக்கு எரியூட்டினர் என்றும், தீப்பற்றியபொழுது, அடிகள் கண்விழித்துப் பார்த்து நிகழ்ந்ததை உணர்ந்து அங்ஙனமே இறைவனோடு இரண்டறக் கலந்தார் என்றும் ஒரு செவிவழிச் செய்தி வழங்கி வருகின்றது. இதன் உண்மை தெளிவாக அறியக்கூடவில்லை. எவ்வாறாயினும் அடிகள் இறைவன் திருவடி நிழலை அடைந்தது சாலிவாகன சகாப்தம்

25. நம்மாழ்வாரும், திருப்புளியாழ்வாரின் கீழ் தங்கியிருந்தது ஈண்டு நினைக்கத் தக்கது. 'உலக வாழ்க்கை புளித்துப் போகட்டும்' என்று கருதி இருவரும் புளியமரத்தடியில் தங்கினர் போலும்!

1581க்குச் சரியான சுபகிருது ஆண்டு (கி.பி.1659) தைத் திங்கள் சோமவாரம் விசாக நட்சத்திரம் பௌர்ணமி கூடிய நாள் என்பது அவர்தம் சீடர் கோடிக்கரை ஞானியார் பாடலால் நன்கு விளங்குகின்றது.

*"துகளறு சாலி வருடம்ஆ யிரத்தைஞ்*
*நூற்றொடெண் பத்தொன்று தொடரும்*
*மிகுசுப கிருதாம் வருடம்தை மாதம்*
*வெண்மதி வாரநாள் விசாகம்*
*மகிமைசேர் பூரணத் திதியினில் அருத்த*
*மண்டல சமயத்திற் கங்கை*
*திகழ்சனி யதனில் தாயுமா னவர்தாம்*
*சிவத்தினிற் கலந்த நற்றினமே."*

இந்தப் பாடல் அடிகள் சமாதியான இடத்தில் எழுப்பப் பெற்றுள்ள திருக்கோயிலில் உள்ள கல்வெட்டில் காணப்படு கின்றது.

அருளையர் என்பவர் அடிகள்தம் திருமகனார் கனகசபா பதி பிள்ளைக்கு மெய்ஞ்ஞானம் உணர்த்தினர். அவர் தஞ் சைக்குக் கீழ்பால் உள்ள அன்னம்பேட்டையில் தங்கியிருந் தார். அவருக்குப் பின்னர் அவர் செல்வர் அட்சய லிங்கம் பிள்ளை என்பவர் ஆண்டுள்ள மடத்தலைவராய் எழுந்தருளி யிருந்தனர். அவருக்குப் பின் வழிவழியாகப்பல துறவிகள் ஆசாரியப் பரம்பரையைப் பாதுகாத்து வந்துள்ளனர். அரு ளைய அடிகள் தாயுமான அடிகள்மீது பாடிய 'அருள்வாக்கிய அகவல்' சொல்லழகும் பொருள் நயமும் வாய்ந்ததாகத் திகழ் கின்றது.

பகுதி - 2:

# அருளிச் செயல்கள் இயல்புகள்

# 4. அருளிச் செயல்களின் போக்கு

**தா**யுமான அடிகள் அருளிச் செய்த திருப்பாடல்கள் 1452. இவை பல்வேறு வகை அமைப்பில் பலபல தலைப்பு களுடன் காணப்படுகின்றன. பெரும்பான்மையான தலைப்பு கள் முடிபினை வைத்தும் தொடக்கத்தை வைத்தும் பெயர் பெற்றுள்ளன. பரிபூரணானந்தம், மௌனகுரு வணக்கம், கருணாகரக் கடவுள், சித்தர் கணம் ஆனந்தமானபரம், சுக வாரி, எங்கும் நிறைகின்ற பொருள், சச்சிதானந்த சிவம், தேசோ மயானந்தம், சிற்சுகோத விலாசம், பராபரக் கண்ணி, பைங்கிளிக் கண்ணி, எந்நாட்கண்ணி, காண்பேனோவென் கண்ணி, ஆகாதோவென் கண்ணி, இல்லையோவென் கண்ணி, வேண்டாவோவென் கண்ணி, நல்லறிவேயென் கண்ணி, மலைவளர் காதலி, அகிலாண்டநாயகி, பெரிய நாயகி இவையாவும் முடிபினை வைத்துப் பெயர் பெற்றவை. இவற்றுள் 'பராபரம்' என்பது பரம், அபரம் என்ற இரு சொற்களாலாய சொற்றொடர். மேலானதும் கீழானதுமாய எவற்றினும் கலந்துள்ள முதல்வனை அடிகளார் பராபரம் என்றார். ஏனையவற்றின் பொருள் வெளிப்படை.

அடுத்து, ஆகார புவனம், தேன் முகம், பன்மாலை, நினைவொன்று, பொன்னை மாதரை, ஆரணம், சொல்லற்க ரிய, வம்பனேன், சிவன் செயல், தன்னையொருவர், ஆசை யெனும், எனக்கெண்செயல், மண்டலத்தின், பாயப்புலி, உடல் பொய்யுறவு, ஏசற்ற நிலை, காடும் கரையும், எடுத்த தேகம், முகமெலாம், திடமுறவே, தன்னை ஆக்குவை, கற் புறு சிந்தை, தந்தை தாய், பெற்றவட்கே, கல்லாலின், நின்ற நிலை, பாடுகின்ற பனுவல் - இவையாவும் 'தொடக்க'த்தை வைத்துப் பெயர் பெற்றுள்ளன. இவற்றுள் ஆகாரபுவனம் என்பது, இறைவனுருவாய் புவனம் என்ற பொருள் படும். ஆகாரம் - வடிவம்; ஏனையவற்றின் பொருள் வெளிப்படை.

அடிகள் காலத்தே வடமொழிப் பயிற்சி மிக்கிருந்ததென்பது, அவரது பாடல்களில் வழங்கிவரும் வடசொற்களின் மிகுதிப்பாட்டால் இனிது புலனாகும். அடிகள் வடமொழியில் உபநிடதங்களையே நன்கு பயின்றனர் என்பது தெளிவு. தார்க்கீகர் கூறும் முறையில் 'சுத்தாத்துவிதம்' என்பதற்குப் பொருள் கொள்ளாது நேராக அதனைத் தமிழிலே மொழி பெயர்த்துப் புனித மெனும் அத்துவிதம்[1] என்பர். அடிகளின் பாடல்களில் வடமொழிகள் மிகப் பயின்றுவரினும், அவை செந்தமிழ்ச் சுவையில் சிறிதும் குறைவு பட்டில என்பதைக் காணலாம். எ-டு:

*"மந்த்ரகுரு வே!யோக தந்த்ரகுரு வே!மூல*
*மரபில்வரு மௌனகுருவே!*

*கருதரிய சிற்சபையில் ஆனந்த நிர்த்தமிடு*
*கருணாகரக் கடவுளே!*

*வேதாந்த சித்தாந்த சமரசநன் னிலைபெற்ற*
*வித்தகச் சித்தர்கணமே!*

*அண்டபகி ரண்டமும் அடங்கஒரு நிறைவாகி*
*ஆனந்த மானபரமே!"*

என்பன காண்க. மேலும்,

*"கண்டன எலாம்மோன உருவெளிய தாகவும்*
*கருதிஅஞ் சலிசெய்குவாம்*

*பேர்அனந் தம்பேசி மறைஅனந் தம்சொலும்*
*பெரியமவு னத்தின்வைப்பைப்*
*பேசரும் அனந்தபத ஞானஅ னந்தமாம்*
*பெரியபொரு ளைப்பணிகுவாம்*

1. கடவுளும், உலகமும் பொருள் தன்மையினால் வேறாயினும் கலப்பால் வேற்றுமை தோன்றாவாறு கடவுள் உலகத்தோடு கலந்திருக்கும் நிலை

*சித்தம்அறி யாதபடி சித்தத்தின் நின்றிலகு*
*திவ்யதே சோமயத்தைச்*
*சிற்பர வெளிக்குள்வளர் தற்பரம தானபர*
*தேவதையை அஞ்சலி செய்குவாம்''*

என்பவை காண்க. இன்னும்,

*''நித்தியமாய் நின்மலமாய், நிட்களமாய்*
*நிராமயமாய் நிறைவாய் நீங்காச்*
*சுத்தமுமாய்த், தூரமுமாய்ச், சமீபமுமாய்த்*
*துரியநிறை சுடராய்....*

*தேசுபெற நீவைத்த சின்முத்தி ராங்குசச்*
*செங்கைக்கு ளேயடக்கிச்*
*சின்மயா னந்தசுக வெள்ளம் படிந்துநின்,*
*திருவருட் பூர்த்தியான''*

இவை போன்ற எத்தனையோ உள்ளன.

இவை தவிர, துரிய வடிவு, தத்துவ சொரூபம், சாலம்பர கிதம், சாசுவத புட்கலம், நிட்ப்ரபஞ்சப் பொருள், நிரஞ்சன நிராமயம், அந்தகாரம், அண்ட பகிரண்டம், மாயா விகாரம், தீதில் பராபரம், சுகபரிபூரணம், நிராலம்பகோசரம், சின்முத்தி ராங்குசம், நிர்க்குண! நிராமய! நிரஞ்சன! இத்யாதிகள்; கிரீட பதி, உக்ரமிகு சக்ரதரன், புத்தமிர்த போகம், தொந்தரூபம், நியமலட்சணம், இயம லட்சணம், அத்துவித அநுபவம், பூரணானந்தவாழ்வு, போத பூரணவெளி, மகாமந்த்ர ரூபி, முத்தாந்த வித்து, அகண்டிதம், சக்ரவர்த்தி தவராச யோகி, அகண்டிதானந்தம் - இப்படி எண்ணற்ற சிறுசிறு வடமொழித் தொடர்கள் பாடல்களுள் பதிந்து கிடப்பதையும் காணலாம். இவை யாவும் பாடலின் போக்கைக் கெடுக்காமல் அவை ஆற்றொழுக்காய், பொன்னும் மணியும் கலந்த வெள்ள மாய்ச் செல்லுகின்றன.

உருவகங்கள்: உறைந்த உவமைகளே (condensed simile) உருவகங்களாம் என்பர் ஆங்கிலத் திறனாய்வாளர். அடிக ளாரின் திருப்பாடல்களில் எண்ணற்ற உருவகங்கள்

அமைந்து படிப்போர் மனத்திரையில் படிமங்களை (imagery) உண்டாக்கிப் பாவின் சுவையை மிகுவிக்கின்றன. எ.டு: கருதரிய ஆனந்த மழை, பிரியாத பேரொளி, சோற்றுத் துருத்தி, பார்க்கும் இடம் எங்கும் ஒரு நீக்கமற நிறைகின்ற பரிபூரணானந்தம், பாசக்கடல், கோதில் அமுதூற்று, அகம கிழ வரும்தேன், அருமறையின் சிரப்பொருள், சதானந்தமான பெருந்தகை, சித்தாந்த முத்திமுதல், ஆக்கையெனும் இடி கரை, கவ்வுமலமாகின்ற நாகபாசம், ஞானசஞ்சீவி, ஆணவக் கருவறை, ஞான அனல், பாச இருள், சின்மயானந்த வெள் ளம், சமரச சிவானுபூதி, ஞான கருணாகரமுகம், அமிர்த தாரை, ஆங்காரமான குலவேடர், அமுதப் பிழம்பு, காராரும் ஆணவக்காடு, சுகாரம்பம், கல்நெஞ்சம், ஆனந்த மழை, ஆனந்த வெள்ளம், பேய் மனம், குரங்கு மனம், வேட்கை மரம், அமிர்தப் பிரவாகம், கன்ம பந்தம், இருட்கடல், புத்த மிர்த போகம், சுத்தபரிபூரண அகண்டம், காமவேள் நடன சாலை, அருள்பழுத்த பழச் சுவை, அருட்கருணை, அகண்ட வாழ்வு, செம்பொன்மேனி, வஞ்சனை அழுக்காறாதி வைத்தி டும் பாண்டம், ஞானவாரிதி, வினையைக் கரைக்கும் பரம இன்ப வெள்ளப் பெருக்கு, அருளைப் பொழியும் குணமு கில், கரையிலா இன்ப வெள்ளம் காட்டிடும் முகில், செக்கர் மேனிக் கற்பகம், புன்புலால் இறைச்சிச் சடம், அம்பொன் மாமலர்ப் பதம், ஆனந்த சாகரம், தரள்புனை, அகண்டாகார சிவபோகம் எனும் பேரின்ப வெள்ளம், இதயத்தே ஊறித் தித்திக்கும் ஆனந்தத்தேன், பேய்க்குரங்கு, மின்னும் ஆனந்த விளக்கு, ஞானமத யானை, முக்கட் கரும்பு — இப்படி எண்ணற்ற உருவகங்கள் இவர்தம் பாடல்களில் பதிந்து கிடக்கின்றன; படிப்போரைப் பாடநுபவத்தைப் பெறச் செய் வதுடன் பவக்கடலைக் கடக்க வழியாகவும் அமைகின்றன.

**உவமைகள்:** உவமையணிதான் பல அணிகளுக்கும் அடிப்படையாக உள்ளது. இது கருதிதான் தொல்காப்பியர் ‘உவமஇயல்’ என்ற ஒன்றை மட்டிலும் தம் நூலில் கூறியுள் ளார். உவமையிலிருந்தே ஏனைய அணிகள் தோன்றின என்பதை,

*“உவமை என்னும் தவலரும் கூத்தி*
*பல்வகைக் கோலம், பாங்குறப் புனைந்து*
*காப்பிய அரங்கிற் கவினுறத் தோன்றி*
*யாப்பறி புலவர் இதயம்*
*நீப்பறு மகிழ்ச்சி பூப்ப நடிக்குமே”*[2]

என்ற வடமொழி ஆப்பைய தீட்சிதரின் சித்திர மீமாம்சைக் கூற்றினாலும் அறியலாம்.

தாயுமான அடிகளின் அருளிச் செயல்களில் உள்ள உவமைகள் சுவை மிக்கன. அநுபவபூர்வமாவன. எ.டு: எம்மை அடிமைக்கா வளர்த்தெடுத்த அன்னை போல, ஆக்கை நீர்மேல் அமர்கின்ற குமிழியென, காரிட்ட ஆணவக் கருவறையில் அறிவற்ற கண்ணிலாக் குழவியைப்போல், கருமருவு குகையனைய காயத்தின், மின்னனைய பொய்யுடல், போகை மிருக்கின்ற சாலையிடை வேண்டுவ புசித்தற் கிருக்குமதுபோல், பற்றுவெகு விதமாகி ஒன்றைவிட் டொன் றனைப் பற்றி உழல் கிருமிபோல, சிறுவீடு கட்டியதில் அடுசோற்றை உண்டுண்டு. தேக்கு சிறியார்கள்போல, ஊசி காந்தத்தினைக் கண்டணுகல் போல, மடல் அவிழு மலர னைய கைவிரித்து, சிங்கத்தை ஒத்தெனைப் பாயவருவினை, கடல்மடை திறந்தனைய, திக்கொடு திகந்தமும் மன வேகம் என்னவே, பதும நிதி சங்க நிதி இருபாரிசத்திலும் பணிவு செய்யும் தொழிலாளர் போல் கேட்டது கொடுத்துவர, நீரில் உறை வண்டாய்த் துவண்டு, மேருவென அசையாமல் நிற்க வல்லீர், ஆடிய கறங்குபோல, இன்னமுது கனிபாகு கற் கண்டு சீனித்தேன் என ருசித்திட, எந்நாளும் உடலிலே உயிராம் உனைப்போல் இருக்க இலையோ, கைத்தலம் விளங்குமொரு நெல்லிக் கனியென, ஆடாமல் ஓய்ந்திட்ட பம்பரம்போல் அடங்கி மனம் வீழ, மின்போலும் இடை, உள்ளங்கையில் நெல்லிக்கனி போலக் காட்சியாக, ஒருவன வன் யானை கெடக் குடத்துட் செய்கை ஓட்டுதல் போல், திரையில்லாக் கடல் போலச் சலனம் தீர்ந்து, தாயிலாச்

2. செந்தமிழ் - தொகுதி-7, பக்.144

சேய்போல், ஆசையெனும் பெருங்காற்றூடு இலவம் பஞ்செனவும் மனம் அலையும் காலம், காட்டையிற் பம்பர சாலம் போல், திரையிலா நீர்போல், காந்தமதை எதிரகாணிற் கருந்தாது செல்லும், தீயுண்டிருந்த மெழுகு, சூல் கொண்ட மேகம் என, ஊசற் சுழல்போல் உலகநெறி, விண்ணாறு வெற்பின் விழுந்தாங்கென மார்பிற் கண்ணாறு பாய்ச்சிடும் காதல் வெள்ளம், நதியுண்ட கடலெனச் சமயத்தையுடைய ஞான ஆனந்த ஒளி, சேலொத்த விழி, பாலொத்த மொழி, கன்றினுக்குச் சேதா கனிந்திரங் கல்போல எனக்கென்றிரங்குவாய், அன்னையிலாச் சேய்போல அலக்கண் உற்றேன், சொல்லாடா ஊமரைப் போல் சொல்லிறந்து, அப்பும் உப்பும் போன்ற அயிக்ய பரானந்தர், சூதாடுவார்போல் துவண்டு துவண்டு மனம் வாதாடின், நித்திய மொன்றில்லாத நீர்க்குமிழி போன்ற உடல், நூலேணி விண்ணேற நூற்குப் பருத்திவைப்பார் போலே, கருவி நன்னூற் போதம், கேட்டதையே சொல்லும் கிளி போல, நின்னருளில் வாட்டமின்றி வாய்பேசல், ஆடி ஓய் பம்பரம்போல் ஆசையுடன் எங்கும் உனைத்தேடி ஓய்கின்றேன், சித்த நிருவிகற்பம் சேர்ந்தார் உடல் தீபம் வைத்த கர்ப்பூரம் போல் வயங்கும், உன்னுமனம் கர்ப்பூர உண்டைபோலே கரைய, உண்டுபோல் இன்றாம் உலகு, தாயிருந்தும் பிள்ளை தளர்ந்தாற்போல், எவ்விடத்தும் நீயிருந்தும் நான் தளர்ந்தேன், காய்ச்சச் சுடர் விடும் கட்டிபோல், பட்டப் பகல்போல பாழ்த்த சிந்தை மாளின், காந்தம் இரும்பைக் கவர்ந்திழுத்தால் என்ன அருள்வேந்தன் எமை இழுத்து, நீர்க்குமிழி போன்ற உடல் நிற்கையிலே, சித்தம் எனும் பௌவத் திரைக்கடலில் வாழ்த்துரும்பாய், எள்ளுக்குள் எண்ணெய்போல் எங்கும் வியாபகமாய் உள்ள ஒன்றை, கானற்சலம் போன்ற கட்டுமலைப் பொய்தீர, தக்க ரவி கண்ட சரோருகம் போல் என் இதயம் மிக்க அருள் கண்டு, வான் முகில் கண்ட மயூரபட்சிபோல ஐயன் ஞானநடங் கண்டு, சந்திரனை நாடும் சகோர பட்சி போல் அறிவில் வந்த பரஞ்சோதியை, கல்கண்டால் ஓடுகின்ற காக்கைபோல், பொய்மாயச் சொற்கண்டால் ஓடும் அன்பர், செங்கதிரின் முன் மதியம் தேசடங்கி நின்றிடல் போல், பாலொடு நீர்போல்

கலந்து, வாலற்ற பட்டமென மாயா மனப்படலம் காலற்று விழ, சாட்டையிலாப் பம்பரம் போல் ஆடும், சட்டையொத்த இவ்வுடல், பள்ளங்கள்தோறும் பரந்த புனல்போல், காலால் வழிதடவும் காலத்தே கண் முளைத்தாற்போல, அன்னை போல் அருள்மிகுந்து - இப்படி எண்ணற்ற உவமைகளால் அடிகளின் கருத்துகள் விளக்கம் அடைகின்றன. இவற்றால் அவர்தம் பெரும்புலமையும் தெளிவாகின்றது.

அருமையான தொடர்கள்: எத்தனையோ தொடர்கள் படிப்பவர் நெஞ்சைப் பிணித்து அவற்றிலுள்ள கருத்துகளை ஆழப் பதிக்கின்றன. அழகான தொடர்கள், ஆழம் உள்ள தொடர்கள், பழமொழிகள்போல் வழங்கும் தொடர்கள், ஒரு முறை படித்தாலே நெஞ்சிலே நிலைத்து வாழும் தொடர்கள் பலப்பல உள்ளன இவர்தம் பாடல்களில். இறைவனைப்பற்றிப் பாடுகின்ற பாடல்களில் இத்தகைய தொடர்கள் யாவும் படித்துப் படித்து அநுபவிக்க வேண்டியவை.

*''பொய்வளரும் நெஞ்சினர்கள்*
*காணாத காட்சியே''*[3]

இஃது இறைவனைப்பற்றிய ஒரு தொடர். பொய்வளரும் நெஞ்சினர்கள் காண முடியாத காட்சிதான் இறைவன் என்கின்றார் இதில். இந்த இறைவன் எப்படிப்பட்டவன்? அவன் இருக்கும் இடம் எது?

*''பார்க்கும்இடம் எங்கும்ஒரு*
*நீக்கமற நிறைகின்ற*
*பரிபூர ணானந்தமே''*[4]

என்பதில் அந்த இறைவனின் தன்மையையும் அவன் எங்கும் இருப்பதையும் காட்டுகின்றார்.

இவர்தம் பாடலிலிருந்து பல தொடர்கள் 'பழமொழிகள்' போல் தமிழர்களிடையே வழங்கி வருகின்றன.

3. சின்மயானந்தகுரு - 4
4. பரிபூரணானந்தம் - பதிகத்தின் பாடல்தோறும் உள்ள இறுதியடி

*"ஆசைக்கோர் அளவில்லை"*[5]

*"கல்லாத பேர்களே நல்லவர்கள் நல்லவர்கள்"*[6]

என்பன அவர் பாடல்களின் தொடர்கள்.

*"வல்லான் வகுத்ததே வாய்க்கால்"*[7]

*"அவனன்றி ஓர்அணுவும் அசையாது"*[8]

இவையாவும் தாயுமான அடிகள் நமக்கு அருளிய தொடர்கள்.

*"எல்லாம் அறிந்தவரும் ஏதும்அறி யாதவரும்*
*இல்லையெனும் இவ்வுலகம்"*[9]

இதுவும் மக்களிடையே வழங்கிவரும் தொடர்; தாயுமான அடிகளின் கொடை.

*"சிந்தையை அடக்கியே சும்மா இருக்கின்ற*
*திறம் அரிது"*[10]

என்பது தாயுமான அடிகளின் அநுபவ வாக்கு.

பாடல்களின் பழைய யாப்பு: பழைய யாப்பு வழிப்பட்ட விருத்தங்கள், நீண்ட விருத்தங்கள் முதலியவை பாடியுள்ளார்.

*"சாதி,குலம், பிறப்பிறப்புப், பந்தம்,முத்தி*
*அருவுருவத் தன்மை நாமம்*
*ஏதுமின்றி எப்பொருட்கும் எவ்விடத்தும்*
*பிரிவறநின் றியக்கம் செய்யும்*
*சோதியை;மாத் தூவெளியை மனதவிழ*
*நிறைவான துரிய வாழ்வைத்*
*தீதில்பர மாம்பொருளைத் திருவருளே*
*நினைவாகச் சிந்தை செய்வாம்"*[11]

5. மேது - 10 6. சித்தர்கணம் - 10
7. சுகவாரி - 3 8. எங்கும் நிறைகின்ற பொருள் - 1
9. தேசோமயானந்தம் - 9
10. மேலது - 8 11. பொருள் வணக்கம் - 5

இஃது ஒருவகை அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம். இதில் இறைவனைத் தீதில்பொருளாகக் காண்கின்றார்.

*"பந்தமறும் மெய்ஞ்ஞான மான மோனப்*
*பண்பொன்றை அருளி,அந்தப் பண்புக் கேதான்*
*சிந்தைஇல்லை; நானென்னும் பான்மை இல்லை;*
*தேகம்இல்லை; காலம்இல்லை; திக்கும் இல்லை;*
*தொந்தம்இல்லை; நீக்கம்இல்லை; பிறிதும் இல்லை;*
*சொல்லும்இல்லை; இராப்பகலாய்த் தோற்றம் இல்லை;*
*அந்தம்இல்லை; ஆதிஇல்லை; நடுவும் இல்லை;*
*அகமும்இல்லை; புறமும்இல்லை; அனைத்தும்*
*இல்லை"*[12]

என்பது எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம். மெய்ப்பொருள் இயல்பு இன்னதெனக் காட்டுவது.

*"மறைமுழக் கொலிப்பத், தானே*
*வரதமோ டபயக் கைகள்*
*முறைமையின் ஓங்க, நாதம்*
*முரசெனக் கறங்க, எங்கும்*
*குறைவிலா வணம்நி றைந்து*
*கோதிலா நடனம் செய்வான்*
*இறையவன் எனலாம், யார்க்கும்*
*இதயசம் மதம்;ஈ தல்லால்"*[13]

என்பது ஒருவகை அறுசீர் ஆசிரிய விருத்தம். தில்லையில் திருநடனம் புரியும் கூத்தப்பெருமானே முதல்வன் என விளக்கும் முறையில் அமைந்தது.

*"விதியை யும்விதித் தென்னை விதித்திட்ட*
*மதியை யும்விதித் தம்மதி மாயையில்*
*பதிய வைத்த பசுபதி! நின்அருட்*
*கதியை எப்படிக் கண்டு களிப்பதே?"*[14]

என்பது கலிவிருத்தம். எல்லாவற்றையும் வைத்தவன் இறைவனே என்று கூறுவது.

12. ஆகாரபுவனம் - 20 13. தேன்முகம் - 5
14. பொன்னைமாதரை - 63

*"உள்ளமே நீங்கா என்னை'வா வா'வென்*
*றுலப்பிலா ஆனந்த மான*
*வெள்ளமே பொழியும் கருணைவான் முகிலே!*
*வெப்பிலாத் தண்ணருள் விளக்கே!*
*கள்ளமே துரக்குந் தூவெளிப் பரப்பே!*
*கருவெனக் கிடந்தபாழ் மாயப்*
*பள்ளமே வீழா தெனைக்கரை யேற்றிப்*
*பாலிப்ப துன்னருட் பரமே!"*[15]

இஃது எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம். 'என்னைக் கரை ஏற்றும்' என்று இறைவனை வேண்டுவது.

*"கொழுந்து திகழ்வெண் பிறைச்சடிலக்*
*கோவே! மன்றிற் கூத்தாடற்*
*கெழுந்த சுடரே! இமையவரை*
*என்தாய் கண்ணுக் கினியானே!*
*தொழுந்தெய் வமும்நீ; குருவும்நீ;*
*துணைநீ; தந்தை தாயும்நீ!*
*அழுந்தும் பவம்நீ; நன்மையும்நீ;*
*ஆவி, யாக்கை நீதானே"*[16]

இஃது மற்றொரு வகை அறுசீர் ஆசிரிய விருத்தம். 'எல்லாம் நீயே' என்று இறைவனைக் காட்டுவது.

*"கொடுக்கின் றோர்கள்பாற் குறைவையா*
*தியானெனும் குதர்க்கம்*
*விடுக்கின் றோர்கள்பாற பிரிகிலா*
*துள்ளன்பு விடாதே*
*அடுக்கின் றோர்களுக் கிரங்கிடும்;*
*தண்டமிழ் அலங்கல்*
*தொடுக்கின் றோர்களைச் சோதியா*
*தததுபரஞ் சோதி"*[17]

இது கலிநிலைத்துறை. பரஞ்சோதி எது என்பதை எடுத்துக் கூறுவது.

15. ஆரணம்-4 16. சொல்லற்கரிய-5 17. ஆசையெனும் - 6

*"ஒன்ற தாய்ப்பல வாய்,உயிர்த்*
*திரட்கெலாம் உறுதி*
*என்ற தாய்என்று, முள்ளதாய்*
*எவற்றினும் இசைய*
*நின்ற தாய்நிலை, நின்றிடும்*
*அறிஞ!என் நெஞ்சம்*
*மன்ற தாய்!இன்ப வுருக்கொடு*
*நடித்திடின் வாழ்வேன்"*[18]

என்பது கலிநிலைத் துறை. இது 'மனம் மன்றம் ஆகுக' என்று வேண்டுவது.

*"சும்மா விருக்கச் சுகம்சுகம்*
*என்று சுருதியெல்லாம்*
*அம்மா! நிரந்தரம் சொல்லவும்*
*கேட்டும், அறிவின்றியே*
*பெம்மான் மௌனி மொழியையும்*
*தப்பிஎன் பேதைமையால்*
*வெம்மாயக் காட்டில் அலைந்தேன்;*
*அந்தோ!என் விதிவசமே"*[19]

இது கட்டளைக் கலித்துறை. எல்லாம் வதிவசப்படுகின்றன என்று இயம்புவது.

*"உலக மாயையி லேஎளி யேன்றனை*
*உழல விட்டனை யே;உடை யாய்அருள்*
*இலகு பேரின்ப வீட்டினில் என்னையும்*
*இருத்தி வைப்பதெக் காலம்?சொ லாய்;எழில்*
*திலக வானுதற் பைந்தொடி கண்ணிணை*
*தேக்க நாடகம் செய்தடி யார்க்கெல்லாம்*
*அலகி லாவினை தீர்க்கத் துசங்கட்டும்*
*அப்ப னே;அரு ளானந்தச் சோதியே"*[20]

இஃது எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம். 'எனக்கு வீடு பேறு தருவது எக்காலம்?' என்று இறைவனை வேண்டுவது.

18. எனக்கென் செயல் - 12
19. பாயப்புலி - 36 20. ஆசையெனும் - 7

*"துன்பக் கடலில் துளைந்ததெலாம் தீய்ந்ததே!*
*இன்பக் கடலில் இரும்என்ன - அன்பிற்*
*கரைந்து கரைந்துருகிக் கண்ணருவிகாட்ட*
*விரைந்துவரும் ஆனந்த மே"*[21]

இது நேரிசை வெண்பா. 'அழுதால் ஆனந்தம் பெறலாம்' என்று கூறுவது.

*"வாழாது வாழஉனை வந்தடைந்தோர் எல்லாரும்*
*ஆழாழி யென்னஅரு ளானார்; அழுக்காற்றோடு*
*ஏழாய் எனஉலகம் ஏசும்இனி நான்ஒருவன்*
*பாழாகா வாறுமுகம் பார்!நீ பராபரமே!"*[22]

இது கொச்சகக் கலிப்பா. 'ஒரு கால் வாராயோ?' என்று வேண்டுவது.

இனி, நீண்ட விருத்தங்கள் சிலவற்றைக் காண்போம்.

*"ஊர்அனந் தம்;பெற்ற பேர்அனந் தம்;சுற்றும்*
*உறவனந் தம்;வினையினால்*
*உடல்அனந் தம்;செயும் வினைஅனந் தம்;கருத்*
*தோஅனந் தம்;பெற்றபேர்*

*சீர்அனந் தம்;சொர்க்க நரகமும் அனந்தம்;நல்*
*தெய்வமும் அனந்தம்;பேதம்!*
*திகழ்கின்ற சமயமும் அனந்தம்;அத னான்ஞான*
*சிற்சத்தி யால்உணர்ந்து,*

*கார்அனந் தம்கோடி வருடித்த தெனஅன்பர்*
*கண்ணுவிண் ணுந்தேக்கவே*
*கருதரிய ஆனந்த மழைபொழியும் முகிலை,நம்*
*கடவுளை, துரியவடிவை*

*பேர்அனந் தம்பேசி மறைஅனந் தம்சொலும்*
*பெரியமவு னத்தின்வைப்பைப்*
*பேசரும் அனந்தபத ஞானஆ னந்தமாம்*
*பெரியபொரு ளைப்பணிகுவாம்"*[23]

21. உடல் பொய்யுறவு - 38 22. திடமுறவே - 3
23. திருவருள் விலாசப் பரசிவ வணக்கம் - 2

இது பன்னிருசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம். திருவருட் பெருமையைப் பேசுவது. பரிபூரணானந்தம் சின்மயானந்த குரு, மௌனகுரு வணக்கம், மலைவளர்க் காதலி முதலிய வற்றிலுள்ள பாடல்கள் யாவும் இவ்வகை நீண்ட விருத்தத் தால் அமைந்தவை.

> *"காற்றைப் பிடித்துமட் கரகத் தடைத்தபடி*
> *கன்மப் புனற்குள்ஊறும்*
> *கடைகெட்ட நவவாயில் பெற்றபசு மட்கலக்*
> *காயத்துள் எனைஇருத்திச்*
>
> *சோற்றைச் சுமத்திநீ பந்தித்து வைக்கத்*
> *துருத்திக்குள் மதுவென்னவே*
> *துள்ளித் துடித்தென்ன பேறுபெற் றேன்?அருள்*
> *தோயம்நீ பாய்ச்சல்செய்து*
>
> *நாற்றைப் பதித்ததென மோனமாம் பயிரதனை*
> *நாட்டிப், புலப்பட்டியும்*
> *நமனான தீப்பூடும் அணுகாமல், முன்னின்று,*
> *நாடுசிவ போகமான*
>
> *பேற்றைப் பகுத்தருளி எனைஆள வில்லையோ?*
> *பெரியஅகி லாண்டகோடி*
> *பெரியநா யகி!பெரிய கபிலைமா நகர்மருவு*
> *பெரியநா யகிஅம்மையே"*[24]

என்பது சந்த விருத்தம். சிவபோக விளைவைத் தெளிவாகக் காட்டுவது. அகிலாண்ட நாயகி பற்றிய திருப்பாடலும் அந்த விருத்தமே.

> *"திகையாதோ? எந்நாளும் பேரா னந்தத்*
> *தெள்ளமுதம் உதவாமல் திவலைகாட்டி,*
> *வகையாக அலக்கழித்தாய்உண் டுடுத்து*
> *வாழ்ந்தேன்நான் இரண்டுகால் மாடுபோலே"*[25]

24. பெரியநாயகி - 1 25. பெற்றவட்கே - 8

என்பது தாழிசை போல் அமைந்தது! தம்மை இரண்டுகால் மாடாக இனப்படுத்துகின்றார். 'தந்தை தாய்', 'கல்லாலின்' என்ற தலைப்பில் உள்ளவையும் இவ்வகையினவே.

நாட்டுப்புறப் பாடல் யாப்பு முறைகள்: பழம்புலவர்கள் போற்றுகின்ற யாப்பு வழிப்பட்ட பாடல்களில் சிறப்பாகத் திகழ்ந்த அடிகளார் மக்கள் பாடும் நாட்டுப் புறப் பாடல்களின் வடிவங்களையும் எடுத்துக் கொண்டு பல ஆழ்ந்த, உயர்ந்த கருத்துகளை அவற்றில் அமைத்து வழங்குகின்றார். கண்ணிகள், ஆனந்தக் களிப்பு ஆகியவை இப்போக்குகளைக் கொண்டவை.

சிறுசிறு கண்ணிகளில் பெரியவிலங்குகளையும், கண்ணி வைத்துப் பிடிக்கும் வேடர்போல் மிக உயர்ந்த மெய்யுணர்வுக் கருத்துகளை கண்ணிகளில் அமைத்துப் பாடியுள்ளார். இந்தக் கண்ணிகளை இளமையில் மனப்பாடம் செய்யத் தவறியவர்கள்கூட நாற்பது ஐம்பது அகவையைத் தாண்டியவர்களும்கூட இரண்டு மூன்று முறை படித்துப் போற்றினால் அவை அவர்கள் மனத்தில் நிலையான வாழ்வைப் பெற்றுவிடும்.

*''அன்பர்பணி செய்யஎனை ஆளாக்கி விட்டுவிட்டால்*
*இன்பநிலை தானேவந்து எய்தும் பராபரமே.*

*வல்லமையே காட்டுகின்ற மாமாயை நான்ஒருவன்*
*இல்லையெனில எங்கே இருக்கும் பராபரமே.*

*சினம்இறக்கக் கற்றாலும் சித்தியெல்லாம் பெற்றாலும்*
*மனம்இறக்கக் கல்லார்க்கு வாய்ஏன்? பராபரமே.*

*கொல்லா விரதம்ஒன்று கொண்டவரே நல்லோர்;மற்(று)*
*அல்லாதார் யாரோ அறியேன் பராபரமே.*

*எல்லாரும் இன்புற்று இருக்க நினைப்பதுவே*
*அல்லாமல் வேறொன்று அறியேன் பராபரமே''*[26]

26. பராபரம் - 155, 165, 169, 192, 221 - 5 பாடல்கள்

இன்பத் தமிழின் எளிமையை அதன் எல்லையைக் கண்டவர் போல், இனிமையாக எளிய சொற்களில் ஆழ்ந்த கருத்து களை வடித்துக் காட்டும் அழகு சொல்லுந்தரமன்று. பைங்கி ளிக் கண்ணி, எந்நாட் கண்ணி போன்றவைகள் யாவும் இந்த எளிமைப் போக்கில் அமைந்தவை.

*"அருளால் எவையும் பார்என்றான் - அத்தை*
*அறியாதே சுட்டிஎன் அறிவாலே பார்த்தேன்;*
*இருளான பொருள்கண்ட தல்லால் - கண்ட*
*என்னையும் கண்டிலன் என்னேடி? தோழி!"*[27]

என்பது ஆனந்தக் களிப்பு. ஆழ்ந்த கருத்தினை ஆனந்தப்ப டுத்திக் காட்டுவது அற்புதம், அற்புதம்.

*"நலமேதும் அறியாத என்னைச் - சுத்த*
*நாதாந்த மோனமாம் நாட்டம்தந் தேசஞ்*
*சலமேதும் இல்லாமல் எல்லாம் - வல்லான்*
*தாளால்என் தலைமீது தாக்கினான்; தோழி!"*[28]

இறைவன் தனக்கு திருவடி தீட்சை செய்து வைத்ததை இதில் காட்டி மகிழ்கின்றார். 'வண்ணம்' என்ற தலைப்பில் உள் ளவை 'திருப்புகழ்' பாங்கில் அமைந்துள்ளன. கற்றுணர்ந்து அடங்கிய சான்றோராதலால், கல்விச் செருக்கின் வெறி தணிந்த நிலையில் இவர் கூறும் கருத்துகள் கங்கையாறு அடித்துச் செல்வது போலன்றி யமுனையின் வெள்ளம் போல் அமைதியான பாங்கில் படிப்போர் மனத்தில் ஆழப் பதிகின்றன. எ-டு:

*"கல்லாத பேர்களே நல்லவர்கள்! நல்லவர்கள்*
*கற்றும்அறி வில்லாதஎன்*
*கன்மத்தை என்சொல்வேன்? மதியை என்சொல்லுகேன்?*
*கைவல்ய ஞானநீதி*

27. ஆனந்தக் களிப்பு - 13
28. மேலது - 17

*நல்லோர் உரைக்கிலோ கன்மம்முக் கியமென்று*
*நாட்டுவேன்; கன்மம் ஒருவன்*
*நாட்டினாலோ பழைய ஞானமுக் கியம்என்று*
*நவிலுவேன்; வடமொழியிலே*

*வல்லான் ஒருத்தன்வர வும்தரா விடத்திலே*
*வந்தவா விவகரிப்பேன்;*
*வல்லதமிழ் அறிஞர்வரின் அங்ஙனே! வடமொழியின்*
*வசனங்கள் சிறிதுபுகல்வேன்;*

*வெல்லாமல் எவரையும் மருட்டிவிட வகைவந்த*
*வித்தைதன் முத்திதருமோ?*
*வேதாந்த சித்தாந்த சமரசநன் னிலைபெற்ற*
*வித்தகச் சித்தர்கணமே"*[29]

இத்தகைய சிறப்புடன் திகழ்ந்த பெருமான் சமயச் சான்றோர் வரிசையில் நிலையான இடத்தைப் பெற்று விடுகிறார்.

*"என்றும் இருக்க உளம்கொண்டாய்!*
*இன்பத் தமிழுக் கிலக்கியமாய்*
*இன்றும் இருத்தல் செய்கின்றாய்!*
*இறவாய் தமிழோ டிருப்பாய்நீ!*
*ஒன்று பொருள்ஃதின் பமென*
*உணர்ந்தாய் தாயு மானவனே!*
*நின்ற பரத்து மாத்திரமோ!*
*நில்லா இகத்தும் நிற்பாய்நீ!"*[30]

என்பது பாட்டரசர் பாரதியாரின் மங்காளாசாசனம்.

29. சித்தர்கணம் - 10

30. பா.பா. தனிப்பாடல்கள் - தாயுமானவர் வாழ்த்து

# 5. இறைவனின் திருக்குணங்கள்

தாயுமான அடிகளின் பாடல்களைப் படித்து அநுபவிக்கும்போது அவற்றில் எங்கும் சைவசித்தாந்தக் கருத்துகள் சிதறிக் கிடப்பதைக் காணலாம். சைவ சித்தாந்தம் முடிந்த முடிபாகக் கொள்ளப்படும் பொருள்கள் மூன்று. அவை பதி, பசு, பாசம் என்று வழங்கப்பெறும். பதி என்பது இறைவன்; கடவுள். பசு என்பது ஆன்மா; உயிர் 'சீவான்மா' எனப்படுவதும் இதுவே. பாசம் என்பது தளை; அஃதாவது உயிரைப் பிணித்துள்ள கட்டு. இந்த மூன்றும் தனித்தனிப் பொருள்களாகும். இந்த மூன்றிற்கும் எந்நாளிலும் தோற்றமும் இல்லாத முடிவும் இல்லை. தோற்றமும் முடிவு அற்ற பொருள் 'அநாதி' யாகும். அஃதாவது 'ஆதி' இல்லை. ஆதி இல்லையாதலின் அந்தமும் இல்லை. இதனை,

> *"பதிபசு பாசம் எனப்பகர் மூன்றின்*
> *பதியினைப் போற்பசு பாசம் அநாதி"*[1]

என்று தெளிவுபடுத்துவர் திருமூலர். எனவே, 'பதியாகிய கடவுள் என்று உண்டோ அன்றே பசுவாகிய உயிரும் உண்டு; அன்றே அவ்வுயிர்களைப் பிணித்துள்ள பாசமும் உண்டு' என்பது சைவ சிந்தாந்தத்தின் முடிந்த முடிபாகும்.

ஈண்டு, பதி எனப்படும் இறைவன் இயல்புகளைப் பற்றி தாயுமான அடிகள் குறிப்பிடும் கருத்துகளை ஆராய்வோம். புராணங்களில் கூறப்பெறும் கடவுளின் அருட்செயல்களை அடிகள் அதிகமாகக் கூறாமல், அவரது பொதுவாகிய பெருந் தன்மைகளை அதிகமாக எடுத்து விளக்குவதைக் காணலாம். இப்போக்கில் இவர் இணையற்றவராகத் திகழ்கின்றார்.

உயிர் ஐம்பொறிகட்கும் மனத்திற்கும் புலனாகின்ற உலகத்தையே அறியும். காணப்படும் உலகமெல்லாம் சடமாகிய

1. திருமக். முதல் தந். உபதேசம் - 3

தத்துவங்களாலாகியது. தோன்றுகின்ற பொருள்கள் யாவும் அழிவன. ஆதலால் அறிவுடைப் பொருளாகவும் அழியாப் பொருளாகவும் உள்ள இறைவனை உயிர்கள் தம்முடைய மனம் வாக்கு காயங்களால் அறிய முடியாது. மனம் ஒன்றை உணருங்கால் இடத்தையும் காரணத்தையும் காலத்தையும் பற்றியல்லாது அதனை அறிவதில்லை. காலமும் இடமும் ஆகிய அளவும் பொருட்கட்கு அப்பாற்பட்டவராயும் தாம் எல்லாவற்றிற்கும் காரணராய் தமக்கு ஒரு காரணராயும் உள்ள கடவுளை அறிய முடியாது. எனினும் அடிகளாரின் பாடல்களை அடிப்படையாகக் கொண்டு கடவுளை சில தலைப்புகளில் ஆராய முற்படுவோம்.

(1) எங்கும் நிறைந்திருப்பவன் இறைவன்: இக்கருத்தினைக் குறிப்பிடும் பாடற் பகுதிகள்.

*''அங்குஇங்கு எனாதபடி எங்கும் பிரகாசமாய்*
*ஆனந்த பூர்த்தி ஆகி*
*........... ......*
*அகிலாண்ட கோடியெல்லாம்*
*தங்கும் படிக்குஇச்சை வைத்துஉயிர்க்கு உயிராய்*
*தழைத்ததுஎது? மனம்வாக்கினால்*
*தட்டாமல் நின்றது எது?''*

— பரசிவவணக்கம் - 1

*''சித்தம்அறி யாதபடி சித்தத்தில் நின்று இலகு*
*திவ்வியதே சோமயத்தை''*

— மேலது 3

*''...... மனம்வாக்கு எட்டாச்*
*சித்துஉருவாய் நின்றஒன்றை''*

— பொருள் வணக்கம் - 1

*''யாதுமனம் நினையும் அந்த நினைவுக்கு*
*நினைவுக்கு ஆகி''*

— மேலது - 2

*"அருமறையின் சிரப்பொருளாய் விண்ணவர்மா*
*முனிவர்சித்தர் ஆதி ஆனோர்*
*தெரிவரிய பூரணமாய்; காரணம்கற்*
*பனைகடந்த செல்வம் ஆகி"*

— மேலது - 8

*"போதமாய், ஆதிநடு அந்தமும் இலதாய்ப்,*
*புனிதமாய், அவிகாரமாய்*
*போக்குவரவு இல்லாத இன்பமாய்நின்றநின்*
*பூரணம"*

— சின்மயானந்தகுரு - 10

*"பார்த்தஇடம் எல்லாம் பரவெளியாய்த் தோன்றஒரு*
*வார்த்தைசொல்ல வந்த மனுவே பராபரமே"*

— பராபரம் - 13

*"எங்குஎங்கு பார்த்தாலும் இன்புறுவாய் நீக்கம்இன்றித்*
*தங்கும் தனிப்பொருளைச் சாருநாள் எந்நாளோ"*

— எந்நாட். பொருளியல்பு - 13

என்பன போன்ற பாடற்பகுதிகளில் இக்கருத்து பொதிந்திருப் பதைக் கண்டு மகிழலாம்.

(2) கடவுள் சொல்லிற்கு அடங்காதவர்: சுட்டியறியும் அறிவு சுத்த தத்துவங்களின் தொடர்பால் உண்டாவது. அவ்வறிவிற்கு மூலமே சொல்லிற்கு மூலமாம். சுட்டியறியப் பெறாத கடவுளைச் சொல்லினால் உணர்த்த முடியாது. சமய நூல்கள் எல்லாம் மக்களுக்கு விளங்கும் அளவில் இறைவ னது தன்மையை ஒருவாறு இயம்புவனவாதலாலும் நூலறிவு சொல்லாற் பெறப்படுவ தாலும், சொல் கடவுளையுணர்த்து வதற்குத் தக்க கருவி அன்றாகலானும் அடியிற் கண்ட வாக்குகள் எழுந்தன.

*"சமயகோ டிகள் எலாம்*
*தம்தெய்வம் எம்தெய்வம் என்று*
*எங்கும் தொடர்ந்துஎதிர் வழக்கிடவும் நின்றதெது?"*

— பரசிவ வணக்கம் - 1

*"பகர்வனஎல் லாம்ஆகி அல்லது ஆகிப்
பரம்ஆகிச்; சொல்லரிய பான்மைஆகி"*

— **பொருள் வணக்கம் - 12**

*"வாக்குமனம் அணுகாத பூரணப் பொருள்வந்து
வாய்க்கும் படிக்கு, உபாயம்"*

— **சின்மயாநந்த - 2**

*"வாதம்இடும் சமயநெறிக்கு அரியது ஆகி;
மௌனத்தோர் பால்வெளியாய் வயங்காநின்ற
சோதியை"*

— **பொருள் வணக்கம் - 11**

*"சொல்லற்கரிய பரம்பொருளே;
சுகவா ரிதியே சுடர்க்கொழுந்தே"*

— **சொல்லற்கரிய - 1**

*"சொல்ஆய தொகுதிஎல்லாம் கடந்து நின்ற
சொரூபானந் தச்சுடரே!"*

— **கல்ஆலின் - 10**

*"உரைஇறந்த அன்பர்உளத்து ஓங்குஒளியாய் ஓங்கிக்
கரைஇறந்த இன்பக் கடலே!"*

— **பராபரம் - 6**

*"சொல்இறந்து நின்ற சுகரூபப் பெம்மான்"*

— **பைங்கிளிக்கண்ணி - 24**

என்பவற்றால் இது தெளியப்பெறும்.

(3) இறைவன் புலன்களால் உணரப்படாதவன்: அடியிற் கண்ட அடிகளின் பாடற்பகுதிகள் இதனை விளக்குவனவாக அமைகின்றன.

*"சித்தம்அறி யாதபடி சித்தத்தில் நின்றுஇலகு
திவ்வியதே சோமயத்தை"*

— **பரசிவ வணக்கம் - 3**

*''சாதிகுலப் பிறப்பபிறப்புப் பந்தம்முக்தி;*
*அருவுருவத் தன்மை நாமம்*
*ஏதும்இன்றி''* — பொருள் வணக்கம் - 5

*''குலம்இ லான் குணம், குறிஇலான்,*
*குறைவுஇலான், கொடிதுஆம்,*
*புலம்இ லான்,தனக்கு என்னஓர்*
*பற்றுஇலான், பொருந்தும்*
*இலம்இ லான்மைந்தர் மனைவிலகில்*
*லான்எவன்? அவன்சஞ்*
*சலம்இ லான்,முக்தி தரும்பர*
*சிவன்எனத் தகுமே.''*

— ஆசை எனும் 30

*''ஆர்அறிவார் என்ன அனந்தமறை ஓலமிடும்*
*பேர்அறிவே இன்பப் பெருக்கே பராபரமே.''*
— பராபரக் கண்ணி - 5

*''ஊரும்இலார் பேரும்இலார் உற்றார்பெற் றாருடனே*
*யாரும்இலார் என்னை அறிவாரோ பைங்கிளியே''*
— பைங்கிளிக் கண்ணி - 8

*''அருஎன் பனவும்அன்றி உருவென் பனவும்அன்றி*
*அகமும் புறமும்அன்றி - முறைபிறழாது*
*குறியும் குணமுமின்றி நிறையும் குறைவுமின்றி''*
— வண்ணம் - 1

*''அவனென் பதுவமன்றி அவெனன்பதுவமன்றி*
*அதுவென் பதுவுமன்றி - எழில்கொ டுலாவும்*
*ஆருநிலையறி யாதபடியே''*

— வண்ணம் - 2

(4) கடவுள் காலம் கடந்தவர்: இதுபற்றியும் அடிகளார் வாக்கில் பல இடங்கள்.

*''கங்குல்பகல் அறநின்ற எல்லைஉளது எது?அது*
*கருத்திற் இசைந்தது, அதுவே''*
— பரசிவ வணக்கம் - 1

*"ஆதிஅந்தம் காட்டாத முதலாய்.......*
*........ .......*
*பால்வெளியாய் வயங்கா நின்ற*
*சோதியை"*

— பொருள் வணக்கம் - 11

*"இருளாகி ஒளியாகி நன்மைதீ மையுமாகி*
*இன்றாகி நாளையாகி*
*என்றுமாய் ஒன்றுமாய், பலவுமாய், யாவுமாய்,*
*இவைஅல்ல ஆயநின்னை"*

— ஆனந்தமானபரம் - 2

*"நித்தமும் அநித்தமும்; அஞ்சனநி ரஞ்சனமும்,*
*நிஷ்களமும் நிகழ்சகளமும்,*
*நீதியும் அநீதியும்; ஆதியொடு அநாதியும்;*
*நிர்விஷய விஷயவரும்*
*அத்தனையும் நீஅலதுஎன் அத்தனையும் இல்லையெனின்"*

— மேலது - 5

இறைவனது ஆனந்தம் மனம் காலம் முதலிய தத்துவங்கட்கு அப்பாற்பட்டதாய் - கடந்த நிலையில் - மாசற்றதாய் உள்ளது. இதனை அடிகள்,

*"மனமாதிக்கு எட்டாத*
*பேரின்ப மயமாய்"*

— பொருள் வணக்கம் - 2

*"மனது அவிழ*
*நிறைவான துரிய வாழ்வை"*

— மேலது 5

*"தெள்ளிமறை வடியிட்ட*
*அமுதப் பிழம்பே*

— கருணாகரக் - 8

*"தூவெளிய தாய்அகண்ட*
*ஆனந்த சுகவாரி"*

— கருணாகரக் - 2

என்று அனைத்தையும் உருவகங்கள் இட்டு விளக்குவார். ஒவ்வோர் உருவகத்தையும் சிந்தித்து அசை போட்டு அநுபவிக்க வேண்டும்.

(5) கடவுள் ஒருவரே; பலரல்லர்: இறைவனின் தன்மை நமது அறிவிற்கு அப்பாற்பட்டது. எனினும் அவருடைய திருவருளினால் ஆட்கொள்ளப் பெற்ற அருட்செல்வர்களின் திருமொழிகளை ஆயுமிடத்து அவர் ஒப்பற்ற ஒரு பொருள் என்பது தெளியப்படும். கடவுள் பலராகவும் இருத்தல் முடியாது. பல பொருள்களுள் ஒன்று சிறப்புடையதாக இருக்கும். உலகத்தை ஒழுங்காகப் படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய முத்தொழில்கள் நடைபெறச் செய்வதற்கும் ஒரு தலைவனே இருத்தல் வேண்டும். பலர் இருப்பின், அவருள் வேறுபாடு விளைந்து நடைபெறும் தொழில்களும் முரண்பட்டனவாய் அமைந்துவிடும். எவ்வகையான வேறுபாடும் இல்லையாதலால் பன்மைக் கருத்திற்கு இடம் இல்லை. எனவே, அறிவுடைய பரம்பொருள் ஒன்றே என்பது தெளியப்படும். இக்கருத்தை விளக்குவனபோல,

*''வேதசின் மாத்திரமாய் எம்ம னோர்க்கும்*
*வெளியாக வந்தஒன்றே''*

— **ஆகாரபுவனம் - 4**

*''இமையளவும் உபகாரம் அல்லால் வேறுஒன்று*
*இயங்காநிர்க் குணக்கடலாய் இருந்தஒன்றே''*

— **மேலது - 5**

*''எண்தரும்நல் அகிலாண்ட கோடியைத்தன்*
*அருள்வெளியில் இலக வைத்துக்*
*கொண்டுநின்ற அற்புதத்தை, எவராலும்*
*நிச்சயிக்கக் கூடா ஒன்றை;''*

— **மண்டலத்தின் - 1**

*''கருணைமொழி சிறிதுஇல்லேன், ஈதல் இல்லேன்*
*கண்ணீரகம் பலைஎன்தன் கருத்துக்கு ஏற்க*
*ஒருபொழுதும் பெற்றுஅறியேன், என்னை ஆளும்*
*ஒருவா!''*

— **பன்மாலை - 2**

*"ஒன்றும் தெரிந்திட இல்லை;என்*
*உள்ளத்து ஒருவா!"*

— *பாயப்புலி - 32*

*"குருவடிவு ஆன குறைவிலா நிறைவே*
*நின்ற ஒன்றே நிர்மல வடிவே"*

— *அகவல் - 2,3*

*"மறை ஒன்றென விளம்ப"*

— *வண்ணம் - 1*

*"எவையும் தன்னுள் - ஒருமுதலாகும்"*

— மேலது 3

*"அறிவொன் றெனவிளங்கும்"* — மேலது 3

என்ற திருவாக்குள் அமைந்து இது வற்புறுத்தப் பெற்றமை காணலாம்.

(6) கடவுள் உயிருக்குயிராய் உயிர்தோறும் கலந்து நிற்ப வன்: இக்கருத்தை அடிகளின் பல பாடல்களில் கண்டு தெளியலாம்.

*"இகபரம் இரண்டினினும் உயிருக்கு உயிராக*
*எங்கும் நிறைகின்ற பொருளே"*

'எங்கும் நிறைகின்ற பொருள்' என்ற பதிகத்தில் ஒவ்வொரு பாடலும் இங்ஙனம் இறுகின்றது.

*"சித்தம்உளன் நான்இல்லை நீஅறிவை*
*என்னும் வசனம்"*

— *சச்சிதானந்த சிவம் - 7*

*"ஆதார ஆதேயம் முழுதும்நீ ஆதலால்*
*அகிலமீது என்னைஆட்டி*
*ஆடல்கண் டவனும்நீர்; ஆடுகின்றவனும் நீர்;*
*அருளும்நீ"*

— மேலது - 10

*"சித்தமிசை குடிகொண்ட அறிவான தெய்வமே"*

இங்ஙனம் தேசோமயானந்தம் என்ற பதிகத்தில் ஒவ்வொரு பாடலும் முடிவது.

*"அனந்தபத உயிர்கள்தொறும் உயிராய் என்றும்*
*ஆனந்த நிலையாகி"*

— **ஆகாரபுவனம் - 2**

*"உள்ளமே நீங்கா என்னவா வாஎன்று*
*உலப்பிலா ஆனந்தம் ஆன*
*வெள்ளமே"* — **ஆரணம் 4**

*"பாவியேன் இனிஎன் செய்கேன்*
*பரமனே! பணிந்துஉன் பாதம்*
*சேவியேன்; விழிநீர் மல்கச்*
*'சிவசிவ' என்று தேம்பி*
*ஆவியே, நிறைய வந்த*
*அமுதமே"* — **சிவன்செயல் - 2**

*"அண்டமுமாய்ப் பிண்டமுமாய்*
*அளவி லாத*
*ஆருயிருக்கு ஓர்உயிராய்*
*அமர்ந்தாய் ஆனால்*
*கண்டவர்ஆர்? கேட்டவர்ஆர்?"*

— **ஆசையெனும் - 12**

என்பவை காண்க.

(7) படைத்தல், காத்தல், அழித்தல் முதலியன செய்தல்: இறைவன் படைத்தல் முதலிய ஐந்தொழில்களையும் தன் பொருட்டு செய்பவனல்லன். தன் பொருட்டு செய்பவனாயின் அவன் உலகப் பற்றுடையவனாவன். அஃது அவனது முழுமுதல் தன்மைக்குப் பேரிழுக்கு ஆதலின் அவன் ஐந்தொழில்களையும் இயற்றுவது உயிர்களின்பொருட்டேயாகும். இதனை,

*"திருவருள் ஞானச் சிறந்தருள் கொழிக்கும்*
*குருவடி வான குறைவிலா நிறைவே*

......... .......... ..........

*சீர்மலி தெய்வத் திருஅருள் அதனால்*
*பார்முதல் அண்டப் பரப்புஎலாம் நிறுவி;*
*அண்டசம் முதலாம் எண்தரு நால்வகை*
*ஏழு பிறவியில் தாழாது ஓங்கும்*
*அனந்தயோனியின் இளம்பெற மல்க,*
*அணுமுதல் அசலம் ஆன ஆக்கையும்*
*கணம்முதல் அளவுஇல் கற்ப காலமும்*
*கர்மப் பகுதித் தொன்மைக்கு ஈடா*
*இமைப்பொழு தேனும் தமக்குஎன அறிவுஇலா*
*ஏழை உயிர்த்திரள் வாழ அமைத்தனை;''*

— அகவல் 1-2; 7-16

என்ற பாடற் பகுதியிலும், அடியிற்கண்ட வேறு பல பாடல்க ளிலும் குறிப்பிட்டுள்ளார் அடிகள்.

*''பெருவெளியாய், ஐம்பூதப் பிறப்பு இடமாய்ப்*
*பேசாத பெரிய மோனம்*
*வரும் இடமாய்''*

— பொருள் வணக்கம் - 3

*''ஐவகை எனும்பூதம் ஆதியை உகுத்துஅதனுள்*
*அசரசர பேதம்ஆன*
*யாவையும் வகுத்து,நல் அறிவையும் வகுத்து,மறை*
*ஆதிநூ லையும் வகுத்துச்*

*சைவமுதல் ஆம்அளவில் சமயமும் வகுத்துமேல்*
*சமயம் கடந்தமோன*
*சமரசம் வகுத்தநீ''*

— சின்மயாநந்தகுரு - 4

*''வானே முதலாம் பெரும்பூதம்*
*வகுத்துப் புரந்து மாற்றவல்ல*
*கோனே''*

— சொல்லற்கரிய - 8

*''பொருள் அனைத்தும் தரும்பொருளே*
*........... ...........*
*காலமும் தேசமும் வகுத்துக் கருவிஆதி*
*விரிவினையும் கூடி உயிரத்திரளை ஆட்டும்*
*விழுப்பொருளே''*

— **ஆகாரபுவனம் - 7**

என்ற திருவாக்குகள் இறைவன் முத்தொழில் இயற்றுவதை விளக்குவனவாம்.

இறைவனே மாதொரு பாகனாய் போகத்தையும், கல்லாலின் நிழற்கண் குருவாய் அமர்ந்து வீட்டிற் கேதுவாய் யோகத்தையும் நல்குவான் என்று கூறும் அடிகள்,

*''இல்லாளியாய் உலகோடு உயிரை ஈன்றிட்டு*
*எண்ணரிய யோகினுக்கும் இவனே என்னக்*
*கல்லாலின் கீழிருந்த செக்கர்மேனிக்*
*கற்பகமே;''*

— **ஆசையெனும் 24**

*''உலக மாயையி லேஎளி யேன்தனை*
*உழல விட்டனை யே,உடை யாய்அருள்*
*இலகு பேரின்ப வீட்டினில் என்னையும்*
*இருத்தி வைப்பதுஎக் காலம்?''*

— **மேலது 7**

*''அன்றாலின் கீழிருந்து மோன ஞான*
*அமைத்தசின் முத்திரைக் கடலே அடியரேறே''*

இவற்றால் மறைத்தலும் அருளலும் இறைவனது தொழில் என்பதைக் குறித்தவாறாயிற்று.

*''புகல்அரிய நின்விளையாட்டு என்னே? எந்தாய்!*
*புன்மைஅறிவு உடையஎன்னைப் பொருளாப் பண்ணி*
*இகல்விளைக்கும் மலமாயை கன்மத் தூடே*
*இடர்உறவும் செய்தனையே இரக்கம் ஈதோ''*

— **கல்லாலின் 29**

*"ஏதும் தெரியாது எனைமறைத்த வல்லிருளை*
*நாதநீ நீக்கஒரு ஞானவிளக் கில்லையோ"*

**— இல்லையோ என் கண்ணி - 1**

என்பவையும் இவற்றையே குறிக்கின்றன.

(8) கடவுள் இயல்பாகவே பாசங்களினின்று நீங்கினவன்: இதைப்பற்றியும் அடிகளாரின் பாடல்களில் காணலாம்.

*"நித்தநிர் மலசகித நிஷ்பிரபஞ் சப்பொருளை*
*நிர்விஷய சுத்தம்ஆன*
*நிர்விகாரத்தை"*

**— பரசிவ வணக்கம் 3**

*"நித்தியமாய்; நிர்மலமாய்; நிட்களமாய்*
*நிராமயமாய்"*

**— பொருள் வணக்கம் 1**

*"கோதுஇல் அமுது ஊற்று அரும்பிக்*
*.......... ...........*
*தீதுஇல் பரமான"*

**— மேலது 2**

*"சோதியை;மாத் தூவெளியை..........*
*........... ............*
*தீதுஇல்பரம் ஆம்பொருளை."*

**— மேலது 5**

*"பூரணமாய் நின்றஒன்றே புனிதவாழ்வே"*

**— ஆகாரபுவனம் - 7**

*"ஆசியசற் காரியஊ கத்துக் கேற்ற*
*அமலமாய்"*

**— மேலது 14**

*"சுத்தநிர்க் குணமான பரதெய்வமே பரஞ்சோதியே"*

**— சுகவாரி 1-11**

'சுகவாரி' என்ற பதிகத்தில் வரும் எல்லாப் பாடல்களும் இங்ஙனமே இறுகின்றன. இதுபோன்ற பாடற் பகுதிகள் இறைவன் இயல்பாகவே பற்றற்றவன் என்பதை விளக்கும்.

இறைவனுடைய நிறைவிற்குக் குறைவு எந்நாளும் இல்லையாதலின்,

*"...குறைவிலா நிறைவே*
*நின்ற ஒன்றே நிர்மல வடிவே*
*குன்றாப் பொருளே."*

**— அகவல் 2-4**

என்று குறிப்பிட்டார். ஒன்றை நாடிப் போதலும் மீளுதலும் இல்லாமையான் இறைவன் போக்கு வரவு அற்றவன்.

*"நீக்கப் பிரியா நினைக்கமறக் கக்கூடா*
*போக்குவரவு அற்ற பொருளணைவது எந்நாளோ?"*
**— எந்நாள்... பொருள் இயல்பு - 4**

என்பதால் இது தெளியப்படும்.

(9) இறைவன் இயற்கை அறிவுடையவன்: அவன் உயிர்கள் எல்லாவற்றின் உடைய அறிவிற்கலந்து நின்று அவற்றை அறிவிப்பவன். உயிர்களின் உடம்பிற்குப் பூதங்கள் ஆதாரமாதல்போல அவற்றின் அறிவிற்கு இறைவனது அறிவு தாரகமாயுள்ளது.

*"அறிவினுக்கறிவாகி, ஆனந்தமயம் ஆன ஆதி"*
**— பரசிவ வணக்கம் - 3**

*"பொருளாகக் கண்டபொருள் எவைக்கும்முதல்*
*பொருள்ஆகிப்; போதம் ஆகித்;*
............ ..........
*இருள்தீர விளங்குபொருள்"*

**— பொருள் வணக்கம் - 7**

உயிரின் அறிவு விளக்கொளியும் அகல்போலவும் இறைவன் அறிவு எரியும் சுடர்போலவும் சுடர்க்குரிய விளக்கு

என்னும் பெயரை அகலிற்கு இட்டு வழங்குவது போலச் சீவனைச் சிவன் என்பர் சிலர். இக்கருத்திற்குரிய பாடல்,

*"விளங்குந் தகளியையும் வேறென்னார் நின்னைத்*
*துளக்கமறச் சீவனென்று சொல்வார் பராபரமே"*
*— பராபரக்கண்ணி 103*

இருளிற் கைவிளக்கின் பின்னை போய்ப் பொருளையறி வதுபோல, ஆணவ இருளிற்கிடக்கும் உயிர்கள் தமது தவத் தால் விளங்கும் இறையருளறின் பின் சென்று மெய்யுணர வேண்டும் என்று கருதும் அடிகள்,

*"கைவிளக்கின் பின்னேபோய்க் காண்பார்போல்*
*மெய்ஞ்ஞான*
*மெய்விளக்கின் பின்னேபோய் மெய்காண்பது*
*எந்நாளோ?"*
*— எந்நாட்கண்ணி பொருளியல்பு - 1*

என்று கூறுவார். உயிர், தனது சுட்டறிவினை இறைவனது அகண்டாகாரமான பேரறிவோடு இரண்டறக் கலந்ததாகக் கருதும் அத்துவித பாவனையால் முத்திக்கு உரியதாகும். இதனை,

*"கண்டஅறிவு அகண்டா காரமென மெய்யறிவிற்*
*கொண்டவர்க்கே முக்தி கொடுப்பாய் பராபரமே"*
*— பராபரக் கண்ணி - 374*

என்று கூறுவர். இறைவனது பேரறிவில் உயிர் கலந்து நிற்பதையே விரும்புவர். இதனை,

*"எண்ணறிவுக் குள்ளே யிருந்ததுபோல் ஐயாவே*
*நின்னறிவுள் நின்னுடன்யான் நிற்கவைத்தால் ஆகாதோ?"*
*— ஆகாதோ என் கண்ணி - 10*

என்று தெரிவிப்பர்.

இறைவன் யாதொன்றினும் பற்றிலனாய்த் தனக்கென ஒன்றை வேண்டாதவனாயினும் தான் உயிர் மாட்டு வைத்த பேரருளினாலே, எப்பொருளினும் கலந்து எவற்றிற்கும்

ஆதாரமாய் நிற்கின்றான். எல்லாவற்றிற்கும் தான் முதலாய்த் தனக்கொரு முதல்வன் இல்லாதவன் இறைவன். இதனைப் பல இடங்களில் குறிப்பிடுவர் அடிகள்.

*''அறிவினுக்கு அறிவுஆகி ஆனந்த மயம்ஆன*
*ஆதியை அநாதிஏக ஆகி*
*தத்துவ சொரூபத்தை..... ........*

*......... ......... ......*
*........ நிராலம்ப ஆலம்ப*
*சாந்தபத வியோமநிலையை''*

— பரசிவ வணக்கம் - 3

*''சுகபரிபூ ரணமான நிராலம்ப*
*கோசரத்தை''*

— பொருள் வணக்கம் 4

*''எப்பொருட்கும் எவ்விடத்தும்*
*பிரிவுஅற நின்று இயக்கம் செய்யும்''*

— மேலது 5

*''பொருளாகக் கண்டபொருள் எவைக்கும்முதல்*
*பொருள் ஆகி''* — மேலது 7

*''கருதரிய மலரின்மணம், எள்ளில் எண்ணெய்*
*உடல்உயிர்போல் கலந்து''* — மேலது 8

*''விண்ணாதி பூதம்எல்லாம் தன்அகத்தில்*
*அடக்கிவெறு வெளியாய்''*

— மேலது 9

*''ஆதிஅந்தம் காட்டாத முதலாய்; எம்மை*
*அடிமைக்கா வளர்த்துஎடுத்த அன்னைபோல''*

— மேலது 11

*''அகாவுயிர் எழுத்தனைத்தும் ஆகி வேறாய்*
*அமர்ந்ததென அகிலாண்டம் அனைத்தும் ஆகி''*

— மேலது 12

''ஒன்றாகிப் பலவாகிப் பலவாக் கண்ட
ஒளியாகி வெளியாகி யுருவமாகி
நன்றாகித் தீதாகி மற்று மாகி
நாசமுடன் உற்பத்தி நண்ணா தாகி
இன்றாகி நாளையுமாய் மேலு மான
எந்தையே'' — ஆகாபுவனம் - 6

''தானான தன்மயமே யல்லால் ஒன்றைத்
தலையெடுக்க வொட்டாது''
— மேலது 22

''தானே அகண்ட காரமயம்
தன்னில் எழுந்து பொதுநடஞ்செய்
வானே;'' — சொல்லற்கரிய - 6

''கண்டார் கண்ட காட்சியும்நீ;
காணார் காணாக் கள்வனும்நீ;
பண்டுஆர் உயிரும்நீ; யாக்கையும்நீ;
பலவாஞ் சமயப் பகுதியும்நீ;''
— மேலது 9

''அண்டமுமாய் பிண்டமுமாய் அளவி லாத
ஆருயிருக்கு ஓர்உயிராய் அமர்ந்தாய்''
— ஆசையெனும் 12

'' 'தன்னை
அன்றிஒரு பொருள்இலதாய், எப்பொருட்கும்
தான்முதலாய் அசல மாகி''
— மண்டலத்தின் 2

''ஆதிஅந்தம் இல்லாத ஆதிஅ நாதிஎனும்
சோதி இன்பத்தூடே துளையுநாள் எந்நாளோ''
— எந்நாட் - ஆனந்த இயல்பு - 6

''ஒன்றாய்ப் பலவாய் உலகம் எங்கும் தானேயாய்
நின்றாய்ஐ யாஎனைநீ நீங்கற்கு எளிதாமோ''
— பலவகைக்கண்ணி - 14

*"ஆதியும் அந்தமும் ஆனந்த மயம்ஆம்*
*சோதியே சத்தே தொலைவுஇலா முதலே"*

**— அகவல் 5,6**

*"ஆதி அநாதியும் ஆகி - எனக்கு*
*ஆனந்த மாய்அறி வாய்நின்று இலங்கும்"*

**— ஆனந்தக்களிப்பு - 1**

என்பவற்றில் இதனைக் காணலாம்.

(10) 'அவனன்றி ஓர் அணுவும் அசையாது'. எல்லாப் பொருளும் இறைவன் இயக்கவே இயங்கும் என்ற கருத்தை அடிகள் மிகுதியும் வற்புறுத்துவர்.

*"ஆராயும் வேளையில் பிரமாதி ஆனாலும்*
*ஐய!ஒரு செயலும் இல்லை*
......... ............
*பாசாதி தனில்உள்ள செயல்எலாம் முடிவிலே*
*பார்க்கில்நின் செயல்அல்லவோ?"*

**— பரிபூரணா 3**

*"சந்ததமும் எனதுசெயல் நினதுசெயல், யான்எனும்*
*தன்மைநினை அன்றிலாத்*
*தன்மையால் வேறுஅலேன்;"*

**— மேலது 5**

*"எல்லாம்உன் அடிமையே; எல்லாம்உன் உடைமையே*
*எல்லாம்உன் னுடையசெயலே"*

**— கருணாகரக - 3**

*"அவனன்றி ஓர்அணுவும் அசையாது"*

**— எங்குமநிறைகின்ற - 1**

*"சிவன்செய லாலே யாதும்*
*வரும்எனத் தேரேன்"*

**— சிவன் செயல் - 1**

*"உளவுஅ றிந்துஎலாம் நின்செயல்*
*ஆம்என உணர்ந்தோர்க்கு*
*அளவுஇல் ஆனந்தம் அளித்தனை"*

**— எனக்கு என்செயல் - 2**

என்பன போன்ற திருவாக்குகளால் இதனை அறியலாம்.

*"ஆட்டுவித்தால் யாரொருவர் ஆடாதாரே"*

**— அப்பர் 6.95:3**

என்ற தேவாரத் திருவாக்கின் கருத்தே மேற்காட்டிய பாடல்களின் கருத்து என்பதைத் தெளியலாம்.

*"மாயைமுதல் ஆய்வினைநீ; மன்உயிர்நீ; மன்உயிர்தேர்ந்து*
*ஆயும்அறிவு ஆனதுநீ அன்றோ பராபரமே (111)*

*என்னறிவும் யானும்எனது என்பதுவும் ஆம்இவைகள்*
*நின்னளவையே அன்றோ நிகழ்த்தாய் பராபரமே (112)*

என்றவிடங்களிலும் இக்கருத்தே மிளிர்கின்றது.

உயிர்கள் தமது திறமையால் நடைபெறுகின்ற செயல்களென்று எண்ணுகின்றன என்பதை ஆய்ந்து நோக்கினால் முடிவில் அவை பரம்பொருள்களின் செயல்களே என்பதை, 'அத்வைதவஸ்துவை' (பரி பூரண - 3) என்ற பாடலில் அடிகள் மிக அழகாக வற்புறுத்துவதை அறியலாம்.

கருவியின் செயல் அக்கருவியுடையானது செயலே என்று ஆய்ந்தறிதல் போன்று, உலகில் நிகழும் செயல்களையெல்லாம் ஆராய்ந்து பார்ப்பின் அயன் முதலிய அமரர்களுடைய செயல்களும் சிவன் செயலேயாகும் என்பதைத் தெளியலாம். அவர்களுக்குரிய செயலாக ஒன்றும் இல்லை.

*"அருள்வடிவு ஏழுமூர்த்தம்;*
*அவைகள்சோ பானம்என்றே*
*சுருதிசொல் லியவாற் றாலே*
*தொழும் தெய்வம் எல்லாம் ஒன்றே"*

**— ஆசையெனும் 36**

என்று அடிகள் அருளியவாறு சிவன், சதாசிவன், மகேசுரன், அனந்தர், சீகண்டர், நான்முகன், திருமால் என ஏழு மூர்த்திக ளையும் இறைவன் ஒருவனே எல்லாவற்றையும் இயற்றுத லால் உயிர்களாகிய அயன், அரி, அரன், அனந்தர் என்பவர் கட்குத் தம் தொழில் யாதும் இல்லை என்பது அறியப்படும். இறைவன் தானே சுத்தபுவனங்களிலே சிவன், சதாசிவன், மகேசுரனாய் மூவுருவம் கொள்ளுதலின்,

*"குன்றாத மூவுருவாய் அருவாய், ஞானக்*
*கொழுந்தாகி"*

**— பன்மாலை 8**

என்றனர்.

*"மூன்றுகண்ணா முத்தொழிலா மும்முதலா, மூவுலகும்*
*தோன்றக் கருணைபொழி தோன்றலே"*

**— உடன்பொய்யு - 31**

என்றமையால் இறைவனே பிரகிருதித் தலைவனாய், அயன், அரி, அரன் என்னும் மூவரையும் அதிட்டித்து நடத்துகின் றான் என்பது அறியப்படும். மும்மூர்த்திகளின் நிலையே இவ்வாறு என்றால் ஏனைய அமரர்களின் நிலையும் அத்தகை யதே என்பது சொல்லாமல் போதரும்.

திருவருளே யாண்டும் நின்று அனைத்தையும் நடத்து கின்றது என்பதனை,

*"பின்னும் முன்னுமாய், நடுவுமாய்*
*யாவினும் பெரியது*
*என்னும் தன்மையாய், எவ்வுயிர்த்*
*திரளையும் இயக்கி*
*மன்னுமு தன்னருள் வடிவமே!"*

**— எனக்கெனச் செயல் - 15**

*"அருள்எ லாம்திரண்டு ஓர்வடிவு ஆகிய*
*பொருள்எ லாம்வல்ல பொற்பொது நாத!"*

**— பொன்னைமாதரை - 68**

*"யாதின்பாலும்*
*பிறியாமல் தண்ணருளே கோயில்ஆன*
*பெரிய பரம்பதி"*

**— ஆகாரபுவனம் - 19**

*"அண்டர் அண்டம் யாவும்நீ*
*கொண்டுநின்ற கோலமே"*

**— பாடுகின்ற பனுவல் - 4**

என்ற அடிகளாரின் திருமொழிகள் உணர்த்துகின்றன.

(11) இறைவனது திருவருள்: இறைவனது திருவருளே உயிர்களையும் உலகத்தையும் அவனோடு இயைத்து நிற்பது. அவனது அருள் வெளிக்குள் அகிலாண்ட கோடி எல்லாம் தங்குகின்றன. அவனது அருளினை 'வெளி' என்றது உருவகம். ஐம்பூதங்களுள் மேலாகிய 'வான்' என்பது 'வெளி' (Space) எனப்படும்.

அந்த அற்புதப் பெருவெளி நாற்பூதங்களுக்கும், அவற்றாலாய அனைத்துப் பொருள்கட்கும் தங்குதற்கு இடங்கொடுத்து நிற்கின்றது. ஆகாசம் என்ற வடசொல்லும் இக்கருத்தையே பொருளாகவுடையது. யாவும் தன்னுள் அடங்கும்படி மேற்பட்டு நிற்பது திருவருள் ஆதலால் அது 'வெளி' எனப்பட்டது. உலகங்களும் புவனங்களும் தத்துவங்கள் என்பதனுள் அடங்கும். தத்துவமெல்லாம் சுத்த மாயையின் விரிவாகிய ஐந்து கலைகளுள் அடங்கும். ஐந்து கலைகளும் சிவனது திருவிருட்சத்தின் வியாபகத்துள் அடங்கும். ஆதலால் திருவருள் எல்லாவற்றையும் அடக்கி நிற்கும் என்பது பெறப்படுகின்றது.

*"பாரகமும் விண்ணகமும் பற்றாக நிற்பதுஅருள்*
*தாரகத்தைப் பற்றிஅன்றோ சாற்றாய் பராபரமே (102)*

*பூராயம் ஆகஅருள் பூரணத்தில் அண்டமுதல்*
*பார்ஆதி வைத்த பதியே பராபரமே (168)*

என்ற அடிகளின் திருவாக்குகளாலும் இது தெளியப்படும்.

இறைவன் அறிவுக்கறிவாகி இருந்து உயிரின் நினைப்ப னைத்தையும் தெரிவிக்கின்றார். இதனை அடிகள்,

*"உள்ளத்தின் உள்ளே ஒளித்திருந்து*
*என்கள்ள மெல்லாம் வள்ளல்அறிந்தா லெனக்கு வாயும்*
*உண்டோ பைங்கிளியே"*

**— பைங்கிளி 35**

என்று இயம்புவார்.

இறைவன் திருவருள் சுத்த மாயையின் வடிவான சொல் லிற்கு அப்பாற்பட்டது. ஆகலின் அது சொல்லால் உணர்த் தப் பெறாத வெளி என்பதை 'மோன வெளி' என்கின்றார். இறைவனை அவனது திருவருள் வாயிலாகவேதான் உயிர் கள் காண முடியும். பூதங்கள் முதலான தத்துவங்களால் அவனை அறிய முடியாது. இறைவனைத் தோற்றுவிக்கும் திருவருளை வடிவம் என்றும், உயிருக்குக் கண் என்றும் கூறுவது மரபு.

*"காட்டும் திருவருளே கண்ணாகக் கண்டுபர*
*வீட்டின்ப மெய்ப்பொருளை மேவுநாள் எந்நாளோ?"*

**— எந்நாட்கண்ணி - பொருளியல்பு - 6**

*"மண்ணோடுவிண் காட்டி மறைந்துமறை யாவருளைக்*
*கண்ணோடுகண் ணாகஎன்று காண்பேன் பராபரமே (82)*

*எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்*
*மெய்ப்பொருள் காண்பது அறிவு (குறள் 355)*

என்றவாறு எப்பொருளை நோக்கினாலும் அவற்றிற்கு உள் ளீடாய் அவற்றிற்கு அடிப்படையாய் திருவருள் வெளியை இறைவன் திருவடிவாக நினைத்து வழிபட வேண்டும். இதனை,

*"கண்டன எலாம்மோன உருவெளியது ஆகவும்*
*சுருதிஅஞ் சலிசெய்குவோம்"*

**— பரமசிவ வணக்கம் - 1**

என்று கூறுவர்.

திருவருள் என்பது இறைவனது அறிவாற்றல். ஆதலால் அது சடமாய மாயையின் வேறாய் உள்ளது. எனினும் அதனை உருவகிக்குங்கால் சடப் பொருளுக்குக் கையாளும் மொழிகளை வழங்குவது நுண் மரபாகும்.

*"வித்துஅன்றி யாதும் விளைவதுஉண்டோ நின்அருளாம்*
*சித்துஅன்றி யாங்கள் உண்டோ செப்பாய் பராபரமே (73)*

என்று அடிகள் அருளுவதால் அருள் 'சித்து' என்பது தெளி வாகின்றது.

**நிலம்:** தத்துவம் எல்லாம் கடந்த முதல்வனைச் சார்ந்து நிற்கும் பேரறிவாளர்க்கு ஆதாரமாய் நிற்பது திருவருள். ஆதலின் அதனை ஒரு நிலமாக உருவகித்துக் காட்டுவார் அடிகள்.

*"சீராரும் தெய்வத் திருவருள்ஆம் பூமிமுதல்*
*பார்ஆதி ஆண்ட பதியே பராபரமே (1)*

என்பதில் 'திருவளாம் பூமி' என்ற தொடரில் இந்த உருவகத் தைக் கண்டு மகிழலாம். நிலமாக உருவகித் திருப்பதைச் சிந்திக்கலாம்.

நிலையாத தோற்றமுடையது மாயா உலகம். நிலைத்த தோற்றமுடையது அருள் என்னும் மெய்ஞ்ஞான உலகம். இதனை அடைய விழையும் அடிகள்,

*"பொய்க்காட்சி ஆன புவனத்தை விட்டு அருள்ஆம்*
*மெய்க்காட்சி ஆம்புவனம் மேவுநாள் எந்நாளோ"*

— **எந்நாள் - அருளியல்பு - 2**

என்று பகர்வார்.

**மழை, கடல், ஆறு:** திருவருளைப் பல இடங்களில் மழையாக உருவகித்துக் காட்டுவதைக் கண்டு மகிழலாம்.

*"வெந்துவெடிக் கின்றசிந்தை வெப்புஅகலத் தண்அருளால்*
*வந்துபொழி கின்ற மழைகாண்பது எந்நாளோ"*

— **மேலது - 6**

*''சிந்தித்த எல்லாம்என் சிந்தைஅறிந் தேஉதவ*
*வந்தகருணை மழையே பராபரமே''*

— *பராபரம் - 3*

இன்னும்,

*''பெருகிய கருணை வாரிதியே''* — *சிவன்செயல் - 8*

என்பதால் அருள் கடலாகிறது. மேலும்,

*''தீதில் அருட்கலைச் சேருநாள் எந்நாளோ''*

— *எந்நாள் - அருள்இயல்பு - 3*

என்பதிலும் அருள் கடலாகிறதைக் கண்டு மகிழலாம்.

*''வான்கருணை வெள்ளமாகி''*

— *ஆனந்தமானபரம் - 7*

*'' அடியார் நினைவினிடை*
*ஆறாய்ப் பெருகும் பெருங்கருணை அரசே''*

— *சொல்லற்கரிய - 7*

என்பவற்றில் திருவருள் வெள்ளமாகவும் (ஆறு). ஆறாகவும் உவமிக்கப் பெற்றிருப்பதைக் காணலாம்.

*''கன்றுமன வெப்பக் கலக்கமெலாம் தீரஅருள்*
*தென்றல்வந்து வீசுஒளி சேருநாள் எந்நாளோ?''*

— *எந்நாட் - அருள்இயல்பு 8*

இங்கு அருள் தென்றல் (காற்றும்) ஆயினமையைக் காண்கின் றோம்.

**ஒளி:** திருவருளை ஒளியாகவும் உருவகித்துக் கூறுகின் றார்.

*''ஆதி அந்தம்நடு வேதும் இன்றிஅரு*
*ளாய்நிறைந்து இலகு சோதியே''*

— *சிற்சுகோதயவிலாசம் - 3*

*''முக்கண் அருள்செம்பொன் சோதியே''*

— *பொன்னைமாதரை - 21*

*"சோதியே சுடரே சுகமே"*

— மேலது - 22

*"சொரூபா னந்தச் சுடர்க் கொழுந்தே"*

— சொல்லற்கரிய - 4

*"பரஞான ஆனந்த ஒளியே"*

— மலைவளர்காதலி - 1

என்ற இடங்களில் அருள் ஒளி என்று குறிக்கப் பெற்றிருப்பதைக் காணலாம்.

அருளைக் கதிரவனாகவும் உருவகித்துப் பேசுவார் அடிகள்.

*"தக்கரவி கண்ட சரோருகம்போல் என்இதயம்*
*மிக்கஅருள் கண்டு விகசிப்பது எந்நாளோ"*
(சரோருகம் - தாமரை)

— எந்நாள் - அன்புநிலை - 1

என்பதில் சூரியனைக் கண்ட தாமரை மலர்வதுபோல இறைவனருள் கண்டு தன் இதயத்தாமரை மலர்வதைப் பற்றிப் பேசுவதை இதில் காணலாம்.

(12) இறைவனது திருஉருவம்: அருளே இறைவனுக்குத் திருமேனி. அருளினைச் சார்தல் இறைவனது அகத்துள் உதித்தலாகும். இதனை,

*"இவ்வுடம்பு நீங்குமுனே எந்தாய்கேள் இன்னருளாம்*
*அவ்வுடம்புக்கு உள்ளே அவதரிக்கக் காண்பேனோ"*

— காண்பேனோ - 27

என்று குறிப்பிடுவர். உலக வாழ்வாகிய வெம்மையை நோக்கிக் கொண்டிருந்த துன்பம் நீங்கும்படியாகத் திருவருளின் கண்ணே உறங்க விழையும் பெருமான்,

*"வெய்யபுவி பார்த்து விழிந்து இருந்த அல்லல்அறத்*
*துய்ய அருளில் துயிலுநாள் எந்நாளோ"*

— எந்நாள் - அருளியல்பு - 12

இறைவனைத் தந்தையாகவும், திருவருளைத் தாயாக வும் கூறுவது சமய மரபு. இக்குறிப்பினை அடிகளாரின் வாக்குகளில் காணலாம்.

*''தாயும் தந்தையும் எனக்குஉறவு*
*ஆவதும் சாற்றின்*
*ஆயும் நீயும்நின் அருளும்''*

— ஆசையெனும் - 20

*''எந்த நாளைக்கும் ஈன்றுஅருள் தாய்என*
*வந்த சீர்அருள் வாழ்கஎன்று உன்னுவேன்''*

— பொன்னைமாதரை - 55

*''நற்றுணையே அருள்தாயே இன்பம்ஆன*
*நாதாந்த பரம்பொருளே''*

— பன்மாலை - 7

*''தாயான தண்அருளை நிரம்ப வைத்துத்,*
*தமியேனைப் புரவாமல் தள்ளித்தள்ளிப்*
*போயானது என்கொல் ஐயா?''*

— கல்ஆலின் - 28

என்ற பகுதிகளை நோக்குக.

இறைவன் உயிர்கள் மாட்டு வைத்த பேரருளினால் 'எங்கும் நிறைகின்ற பொருளாக' இருப்பதால் எல்லாம் இறை வன் வடிவமே என்பது அடிகளின் கருத்து. இதனை,

*''எவ்வடிவும் பூரணம்ஆம் எந்தைஉருவு என்றுஇசைந்த*
*அவ்வடிவுக்கு உள்ளே அடங்குநாள் எந்நாளோ''*

— எந்நாள் - நிலைபிரிந்தோர் - 9

இறைவன் எல்லாப் பொருள்களிலும் 'அந்தர்யாமியா கக்' கலந்திருப்பதால், அவனுக்கு யாவும் அருள் வடிவமே,

*''மண்ணோடு ஐந்தும் வழங்கும்உயிர் யாவுமே*
*அண்ண லே!நின் அருள்வடிவு ஆகுமே''*

— பொன்னைமாதரை - 33

என்ற அடிகளின் வாக்கு இக்கருத்துக்கு அரணாக அமைகின்றது.

கண்டனவெல்லாம் இறைவன் திருவடிவமே என்று வழிபடுவதே அகண்டாகாரபூசை.

*"ஆசனமூர்த் தங்கள் அறஅகண்டா காரசிவ*
*பூசைசெய ஆசை பொருந்துநாள் எந்நாளோ"*
**— எந்நாள் - நிலை பிரிந்தோர் - 12**

என்பதனால் இதனை அறியலாம். அடிகள் பெருமான் அத்தகைய வழிபாட்டினராக இருந்தனர்.

*"கண்டவடிவு எல்லாம்நின்*
*காட்சிஎன்றே கைகுவித்துப்*
*பண்டும்இன்றும் நின்றஎன்னைப்*
*பார்த்துஇரங்க வேண்டாவோ"*
**— வேண்டாவோ என்கண்ணி - 1**

என்ற கணணியால் இதனை அறிய முடிகின்றது.

நிலம் முதல் நாதம் முடிவாகவுள்ள எல்லாவற்றிற்கும் அப்பாற்பட்ட திருவருள் ஒளியே இறைவன் திருவுரு என்பது அடிகளாரின் கொள்கை.

*"இருநிலம் ஆதி நாதம் ஈறதுஆம் இவைக டந்த*
*பெருநிலம் ஆய தூய பேரொளிப் பிழம்பாய் நின்றும்;*
*கருதரும் அகண்டா னந்தக் கடவுள்!"*
**— வம்பனேன் - 3**

என்பதில் இதனைக் காணலாம். இங்கே பெருநிலம் என்றது திருவருளை. பேரொளி என்றது இறைஞானத்தை. போதபரிபூரண அகண்டிதாகாரமாகிய பரம்பொருள் உயிர்கட்கு விளங்குந் திருமேனியுடன் தோன்றி அருள் செய்யாதவிடத்து, உயிர்கள் அதனை அறியமாட்டா. அதற்காக இறைவன் தடத்த நிலையில் உருவத் திருமேனிகளை மேற்கொள்ளுகின்றான். இவற்றை அடிகள் பல பாடல்களில் போற்றியுள்ளார்.

*"ஏக மானஉரு வான நீஅருளி
னால்அ நேகஉரு ஆகியே"*

— **சிற்சுகோதய விலாசம் - 5**

என்ற பாடற் பகுதியில் இறைவன் பல அருட்டிருமேனிக ளைக் கொண்டருள்வான் என்பது தெளிவு.

*"சிவமாதி நான்முகக் கோவந்த
மாமறை செப்புகின்ற
நவமாய் இலங்கிய ஒன்றே"*

— **பாயப்புலி - 10**

என்பது ஒன்பது வடிவங்களும் குறிப்பிடப் பெற்றருப்ப தைக் காணலாம்.

**(அ) குரு வடிவம்:** தென்முகக் கடவுள்: இந்நிலவுலகத் தின்கண் இறைவன் கல்லாலமர நிழலின்கீழ் வீற்றிருந்து நால்வர்க்கு உண்மைப் பொருள் விளக்கும் பொருட்டு கொண்ட திருக்கோலத்தைப் பெரிதும் வியந்து போற்றுகின் றார்.

*"கல்ஆலின் கீழிருந்து கற்பித்தான் ஓர்வசனம்
எல்லாரும் ஈடேற வே.*

— **உடல் பொய்யுறவு - 45**

*"நீதியாய்க் கல்ஆலின் நீழலின்கீ ழேஇருந்து
போதியா உண்மைஎல்லாம் போதித்தான்"*

— **மேலது 50**

*"பன்முத் திரைச்சமயம் பால்படக்கல் ஆல்வடிவாழ்
சின்முத் திரைஅரசைச் சேர்ந்தேனோ பைங்கிளியே"*

— **பைங்கிளி - 36**

என்பவற்றில் இவற்றைக் கண்டு மகிழலாம்.

'சின்மயானந்தகுரு' என்னும் பதிகம் முழுவதும் தென்மு கக் கடவுளைப்பற்றிய வாழ்த்தாகவே அமைந்துள்ளது. அத னுள் உயிர்களை இறைவன் பக்குவப் படுத்தி வைக்கின்ற

முறை இரண்டு பாடல்களில் (6,7) தொகுத்துரைக்கப் பெற்றுள்ளது.

ஆறாம் பாடலில் "உயிரின் அறிவையும் மறைத்துத் தன்னையும் மறைக்கும் ஆணவம் என்னும் மலத்தால் பிணிக்கப்பெற்ற தனிநிலை என்னும் இருள் நிறைந்த சிறுவீட்டில் அறிவில்லாத குருட்டுக் குழவிபோலக் கட்டுப்பட்டிருந்த உயிர்களாகிய நம்மை வெளியில் வரச்செய்து, துன்பத்திற்கிடமாகிய உட்கருவிகளாலும் புறக் கருவிகளாலும் ஆகிய உடம்பினைப் பாதுகாப்பாக அமைத்து, தொடர்பற்ற தத்துவங்கட்கேற்ற பெயரை அமைத்து 'மெய்' என்று பேசுகின்ற பொய்யுடல் நிலைத்து வளரும் வண்ணம் நுகர்பொருள்கள் பலவும் அமைத்து, பெரிய உலகத்திலே மேலும் கீழும் அங்கும் இங்கும் போக்குவரவு செய்தலாகிய பிறப்பு - இறப்பு என்னும் பெரிய விளையாட்டையும் அமைத்து, அழகியதாய்த் தான்வகுத்த கட்டளைப்படி நில்லாது நெறிதப்பினோர்களை எமன் வாயிலாகத் துன்புறுத்துவித்து, நெறிநின்ற காலை எவ்வகைத் துன்பங்களையும் ஒழித்து மெய்யுணர்வு நல்கிக் காலம் கடந்த பேரின்ப வீட்டினை நன்கு பொருந்தித் தூங்குக என்ற சிறப்பு நிலைதந்த உலகன்னை வடிவாகிய எந்தையே" என்று உருக்கமாக விளக்குகின்றார்.

இதனால் உயிர்கள் ஆணவத்தோடு மட்டும் பிணிக்கப் பெற்றிருந்த தனிநிலையும் (கேவலநிலை) மாயையாலாகிய தத்துவங்களோடு கலப்புற்றுச் செயும் இருவினைக்கேதுவாக உடம்பெடுத்து உழலும் கலப்பு நிலையும் பிறப்பு இறப்பு அற்றுச் சிவப்பேறு எய்தியபின் உள்ள தூய நிலையும் விளக்கப் பெற்றன.

*"கேவல சகலம் இன்றிக்*
*கீழொடு மேலாய், எங்கும்*
*மேவிய அருளின் கண்ணாய்*
*மேவிட"* — *ஆசையெனும் - 15*

என்று பிறிதோர் இடத்தில் கூறுவதும் இதனையேயாகும்.

ஏழாம் பாடலில் "கருக்கட்டி வைத்து உலோகங்களைப் புடம் போடுவதற்கு அமைத்த 'மூசை' என்னும் சிறுகலம்

போன்ற உடம்பினிடையே களிம்புடைய செம்பு போன்ற யான் ஆணவமலத்தோடு இருக்க, நீ ஞானத்தீயை மூட்டி செம்மைப் பக்குவமாக உருக்குவதுபோல என்னை மலபரி பாகம் செய்வித்து உரிய நேரத்தில் பொன்னாக்கும் குளி கையை உருகும் செம்போடியைத்து அதைப் பொன்னாக்கு வதுபோல நின் திருவருளாகிய குளிகையால் என்னைத் தொட்டு மாசுபோக்கிப் பத்தரைமாற்றுப் பசும்பொன்னாக்கி என்னைப் பணிகொண்ட நின் பேரருளை என்னென்று சொல் லுவேன்'' என்றனர்.

சிற்சுகோதய விலாசம் என்னும் பதிகத்தில் ஒரு பாடலில் (10) ''மெய்நெறியின் வேறாகிய பல்வகைப்பட்ட சமய நெறிகளை உண்டாக்கினவர்களும், யாங்களே கடவுள் என்றி டும் குற்றவாளிகளும், நடுவுநிலையாக உண்மையையாராயா மல் சமயவாதம் செய்யும் ஒருபாற் கொடியவரும், தலைவ ணங்கும்படியாகவும், தன்பால் உயிர்களை வரவழைக்கும் அறத்தலைவனாகிய நமன் எருமை மேய்ப்போனாய்த் தனியே இருக்கவும், கல்லால் நிழலின்கீழ் சனகன் முதலிய முனிவர்கள் நால்வர்க்கும் அவர்களுடைய நூலாராய்ச்சியால் வந்த மயக்கம் தீரும்படியாகவும் அழகிய கையால் சின்முத் திரை காட்டிக் கடவுளறிவினை உணர்த்தித் தூய திண்ணிய அருட்டன்மையுடன் திங்கள் சூடிய அருளாளனாய்த் தென் திசை நோக்கி அமர்ந்த இறைவன் திருக்கோலத்தை எத்திசையி லும் தொழுவேன் என்றமையால் உயிர்களுக்குப் பிறப்ப றுத்து எமதண்டனை வாராது காக்கவும் மெய்யுணர்ச்சி நல்க வும் இறைவன் அருட்குருவாய் வருவன்'' என்பதை அடிகள் அறிவுறுத்தினர்.

*''அந்தணர் நால்வர் காண அருட்குரு ஆகி வந்த*
*எந்தையே!*

**— தேன்முகம் - 10**

என்று பின்னும் கூறியது இந்தத் தென்முகக் கடவுள் வடிவத் தையேயாகும்.

**(ஆ) கூத்த வடிவம்:** இறைவனது குரு வடிவத்தை அடிகள் விதந்து போற்றுவதுபோல அவனது கூத்த வடிவத்தையும் மிகுந்த ஆர்வத்துடன் துதித்துப் போற்றுவதைக் காணலாம். 'கருணாகரக் கடவுள்' என்னும் பதிகம் முழுவதும் இத்திருவுருவத்தின் புகழ் மாலையாகும். பதிகத்தின் ஒவ்வொரு பாடலும்,

*''கருதரிய சிற்சபையின் ஆனந்த நிர்த்தமிடு*
*கருணா கரக்கடவுளே''*

என்ற தொடருடன் இறுவதைக் கண்டு மகிழலாம். கூத்தப்பிரானை எப்படி ஏத்துகின்றார் தெரியுமா?

*''உடல்குழைய என்பெலாம் நெக்குஉருக விழிநீர்கள்*
*ஊற்றுஎன வெதும்பிஊற்ற,*
*ஊசிகாந் தத்தினைக் கண்டுஅணுகல் போலவே*
*ஓர்உறவும் உன்னிஉன்னிப்*

*படபடென நெஞ்சம் பதைத்துஉள் நடுக்குறப்*
*பாடிஆ டிக்குதித்துப்*
*பனிமதி முகத்திலே நிலவுஅணைய புன்னகை*
*பரப்பிஆர்த்து ஆர்த்து எழுந்து*

*மடல்அவிழுமச மலர்அனைய கைவிரித் துக்கூப்பி;*
*வானேஅவ் வானில்இன்ப*
*மழையே மழைத்தாரை வெள்ளமே நீடூழி*
*வாழிஎன வாழ்த்தி''*

என்று ஏத்துகின்றார். இப்பதிகம் முழுவதும் படித்துப் படித்து அநுபவித்து அழவேண்டும். 'அழுதால் உன்னைப் பெறலாம்' என்ற மணிவாசகர் வாக்கை நினைந்து அழவேண்டும். ஞானமயமாகிய பேரவையின்கண் உயிர்கட்குப் பேரின்பம் உண்டாதற் பொருட்டுக் கூத்தியற்றுதல் அவனது கருணைக் கடலினாலாதலாகும் என்பதை இனிது விளக்கியருள்கின்றார்.

*''நீர்பூத்த வேணி நிலவுஎறிப்ப மன்றுஆடும்*
*கார்பூத்த கண்டனையான் காணுநாள் எந்நாளோ''*

— **எந்நாள் - தெய்வ (1)**

என்ற பாடல் மன்றில் ஆடும் பெருமானையே குறிப்பதாகும் என்பது ஓர்ந்து உணரத்தக்கது.

தில்லைமன்றினுள் எச்சமயத்தினரும் தம் சமயக் கருத்து ஆங்கு உண்டென்று கருதி வணங்குதற்குரிய அருள்நிலை உளதென்று உரைப்பர் அடிகள்.

*“ பகர்வுஅரிய தில்லைமன்றுள் பார்த்த போதுஅங்கு*
*என்மார்க்கம் இருக்குதுஎல்லாம் வெளியே என்ன*
*எச்சமயத் தவர்களும்வந்து இறைஞ்சா நிற்பர்”*
***— ஆகாரபுவனம் - 12***

என்பதில் இதனைக் காணலாம்.

தில்லைமன்றிற்குப் 'பொது' என்ற பெயர் இருப்பது இக்கருத்தினை வற்புறுத்துவதற்காகவே என்றும் கருதலாம். தில்லையில் இறைவனுக்கு அருள்வழிபாடு நிகழ்வதால் அதனை மட்டிலும் விரும்புகின்ற சமயத்தாருக்கும் அங்கே இடம் உண்டு. அழகிய திருச்சிற்றம்பலமுடையார் அருவுருவ மாய்ப் பூசனை ஏற்கின்றாராதலின் அருவுருவ வழிபாடுடை யாருக்கும் அங்கே பொருத்தமான வணக்கத்திற்கு இடம் உண்டு. உருவ வழிபாட்டிற்கும் கூத்தப் பெருமான் சிறந்ததா கும். உயிருக்குயிராய் ஐந்தொழில் புரியும் இயல்பினையே கூத்தப் பெருமானின் வடிவம் குறிக்கின்றது. இறைவனைப் படைப்போனாக வழிபடுவோருக்கும் நாத வடிவமாக வழிப டுவோருக்கும் அங்கே இடம் உண்டு என்பது கூத்தப்பெரு மான் திருக்கரம் ஒன்றில் உடுக்கை வைத்திருப்பதால் தெளி யப்படும்.

கூத்தப்பெருமான் உயிர்களை நோக்கி 'அஞ்சேல்' என்று அபயம் காட்டும் திருக்கரம் உடைமையால் அவர் காத்தற் கடவுள் என்பது நன்கு விளங்கும். இறைவன் ஒரு திருக்கரத் தில் நெருப்பு வைத்திருப்பதால் எல்லாவற்றையும் ஒடுக்குப வன் அவனே என்பது ஓர்ந்து உணரப்படும். இருவினைப் பயனை நுகரும்படி ஆருயிர்களைப் போகத்தில் பிணிப்ப தாய மறைத்தல் தொழிலை அவனது ஊன்றிய திருவடி உணர்த்துகின்றது. அவனது தூக்கிய திருவடி பிறப்பிறப்

பற்று முடிவாகப் பெறுதற்குரிய வீட்டின்பத்தைக் குறிப்பதா கும். இறைவனே உயிர்கட்கு நல்வினைக்கு நன்மையும் தீவினைக்குத் தீமையும் விதிப்பவர் என்ற கருத்துடையார்க் கும், அவருடைய திருவடியடைதலே முக்தி என்று கருது வார்க்கும் கூத்தப்பெருமானின் திருவுருவே வழிபடற்குரிய தாகும்.

இறைவனை ஞானமயமாகக் கருதுவார் 'சிதம்பரம்' என்ற சொல்லின் பொருளை நாடி தில்லை மன்றே தாம் வழிபடும் இடம் என்று கொள்வர். அறிவின் நிறைவாய் எப்பொருளும் தன்னுள் அடங்கப்பெறும் அருள் வெளி என்று அது பொருள்படும். சித்-அறிவு; அம்பரம் - ஆகாசம் அல்லது வெளி. இனி இறைவனை எல்லாவற்றையும் ஆட்டுவிக் கின்ற முதல்வனாகக் கருது வார்க்குக் கூத்த வடிவமே அவ்வ ருட் செயலை நினைவுறுத்தும். எல்லார்க்கும் பொதுவாக நடுநிலையில் உள்ள இறைவன் பொதுவில் நடனமாடுகின் றான். ஆதலால் நீதித் தலைவனாக இறைவனைக் கருதுவார்க் கும் தில்லை மன்று பொருத்தமானதே. போகத்தையும் வீடு பேற்றையும் இறைவன் அருளுதலால் இறைவனைப் பெருங் கருணையாளனாகக் கருதுவார்க்கும் சிற்றம்பலம் சிறந்ததோர் இடமே. இக்கருத்து பற்றியே,

*"பொய்வந்து உழலும் சமயநெறி*
*புகுத வேண்டா; முத்திதரும்*
*தெய்வ சபையைக் காண்பதற்குச்*
*சேர வாரும் செகத்தீரே*

**— காடும் கரையும் - 2**

என்று மொழிந்தருளினார்.

(இ) தையல்பாக வடிவம்: இதுவும் அடிகளாரின் பாடல்க ளில் போற்றப்படுகின்றது.

*"மாது காதலி பங்கனை"* **— ஆசையெனும் - 11**

*"இல்லாளி யாய்,உலகோடு உயிரை ஈன்று"*

**— மேலது 24**

*"பச்சைநிற மாய்ச்சிவந்து பாகம் கலந்துலகை*
*இச்சையுடன் ஈன்றாளை"*

**— எந்நாள் தெய்வவண - 7**

என்பவற்றில் இவ்வடிவம் குறிப்பிட்டிருப்பதைக் காணலாம்.

(ஈ) குருலிங்க சங்கம வடிவங்கள்: இறைவனது பிற வடிவங்கள் மிகுதியாக விதந்தோதப் பெறவில்லை. எனினும்,

*"குருலிங்க சங்கமாகக் கொண்ட திருமேனி"*

**— உடல்பொய்யுறவு - 23**

*"குருலிங்க சங்கமமாக் கொண்ட திருமேனி*
*அருள்மயம்என்று அன்புற்று அருள் பெறுவது எந்நாளோ"*

**— எந்நாள் - நிலைபிரிந்தோர் - 16**

என்ற இடங்களில் குருலிங்க சங்கமங்கள் இறைவன் திருமேனிகளாக வருவது காண்க.

(உ) விழையும் வடிவுகள்: அன்பர்கள் விழையும் வடிவங்களை மேற்கொள்வான். இதனை,

*"ஏதுபா வித்திடினும் அதுவாகி வந்தருள்வாய்*
*எந்தைநீ"* **— எங்கும் நிறைகின்ற - 3**

என்பதில் காணலாம்.[2]

இங்ஙனம் இறைவனது பேரருள் திறத்தைக் கண்டு மகிழலாம்.

(13) வீடுபேறு எய்தும் உயிர்கட்கு இறைவன் பேரின்பம் அளித்தல்: உயிர்கள் ஐம்புல நுகர்ச்சியினால் எய்தும் இன்பத்தையே பெரிதும் நாடி நிற்கும். அந்த இன்பம் நிலையற்றதாதலாலும் சடமாகிய மாயையின் தொடர்பால் வருவதாகலானும், அதனைச் சிற்றின்பம் என்பர் பெரியோர். அறிவுடைப்

2. இத்தகைய கருத்து பொய்கையாழ்வார் பாசுரங்களில் காணலாம். **'தமருகந்தது எவ்வுருவம் அவ்வுருவந் தானே'** - முதல். திருவந். 44

பொருளாகிய உயிர்க்கு அறிவில்லாத பொருள் வாயிலாக வரும் இன்பத்திலும் அறிவுடைப் பொருளின் இயைபால் வரும் இன்பம் சிறந்ததாகும். இதுபற்றியே புறப்பற்றினும் அகப்பற்று வலிமிக்கதாகக் கருதுவர். புறப்பற்று பொன். மண், வீடு, வாசல் போன்ற பொருள்களின்பால் உள்ள அவா; அகப்பற்று - மனைவி, மக்கள், உற்றார், உறவினர், நண்பர் முதலியவர்மாட்டு வைக்கும் விருப்பம். இவர்களும் பிறவிதோறும் வேறு வேறாகவே, என்றும் உயிர்க்குயிராக இலங்கும் இறைவனது தொடர்பால் வரும் இன்பமே சாலச் சிறந்ததாகும். இவ்வின்பப் பேற்றின் பொருட்டே உயிர்கள் தவம் செய்து வீடுபேறு அடையக் கருதும்.

உயிரினது அறிவும் விரும்பும் செயலும் இறைவனது அறிவு விருப்புச் செயல்களுக்கு அடங்கி அவற்றின் வயமாய் நிலைப்படும்பொழுது இறைவனது வரம்பிலின்பம் உயிர்க ளால் எஞ்ஞான்றும் நுகரப்படும். அதுவே சிவாநுபவம் எனப் படும். இறைவன்பால் பேரின்பமும் உண்டென்று உயிர்கள் அறியாதவிடத்து அதனைப் பெறுதற்குரிய முயற்சியில் அவை தலைப்பட மாட்டா. ஆதலின் இறைவன் இன்ப வடிவினன் என்பதை அடிகள் பன்முறை தமது திருப்பாட்லக ளில் வற்புறுத்துவாராயினர். எ-டு. சூரியர்கள் சந்திரர்கள் தோன்றாச் சுயம் சோதி (எந்நாள் - அருள் இயல்பு - 7) 'உள்ளத்தின் உள்ளே ஊறும் சிவாநந்தம்' (மேலது - ஆனந்த இயல்பு 10), 'ஆரணமும் காணா அகண்டிதா காரபரிபூரணம்' (மேலது பொருள் இயல்பு - 11) என்பன போன்றவை.

(அ) பேரின்பத்தைப் பெற்றவர்கள் பிறிதோர் இன்பத்தையும் நாடாத வண்ணம் நிறைவான தன்மையுடையவர்கள். (எ-டு):

*"ஆனந்த பூர்த்தியாகி"* (பரசிவ வணக்கம் - 1)

*"ஞான ஆனந்தமாம் பெரிய பொருள்"*

— மேலது - 2

*'ஆனந்தமயமான ஆதி'* (மேலது - 3)

*'அகம்புறம் என்று உன்னாத பூரணஆனந்தம்'*
— பொருள் வணக்கம் - 7

*'சதானந்தம் ஆன பெருந்தகை'* (மேலது - 10)

*'மன்னு பரிபூரணச் சுகவாரி'*
— (சின்மாயனந்தகுரு - 8)

*'போக்குவரவு இல்லாத இன்ப*
*மாய்நின்றபூரணம்'* (மேலது - 10)

*'முடிவுஇலா இன்பமே செய்*
*யும் தானமே'* (சிவன்செயல் - 6)

*'பூரணா னந்தவாழ்வு'* (கற்புறு சிந்தை - 1)

(ஆ) இறைவனது பேரானந்தம் அறிவுமயமாய் அறிவின் கண்ணையே நிலைத்து நிற்பது:

*'ஞான ஆனந்தமாம் பெரிய பொருள்'*
— பரசிவ வணக்கம் - 2

*'ஞானக்*
*கண்ணாரக் கண்டன்பர் கண்ஊடே*
*ஆனந்தக் கடலாய்'* — (பொருள் வணக்கம் - 9)

*'என் அறிவில் ஊறும்*
*ஆனந்த வெள்ளமே'* — (சுகவாரி - 7)

'அறிவு ஆனந்தத் தேன்ஆகி' — பன்மாலை - 5

*'மதியுள் நின்றுஇன்ப வாரி வழங்குமே''*
— பொன்னை மாதரை - 29

*'உரைஉணர்வு இறந்து தம்மை*
*உணர்பவர் உணர்வின் ஊடே*
*கரைஇலா இன்ப வெள்ளம்*
*காட்டிடும் முகிலே* — ஆசையெனும் 14

என்ற பாடற் பகுதிகளில் இறைவனது பேரானந்த நிலையைக் கண்டு மகிழலாம்.

(இ) இறைவனது பேரின்பம் எத்துணைக் காலம் நுகர்ந்தாலும் விருப்பின்மை விளைக்காது.

*"உவட்டாத பேரின்பம் ஆனசுக*
*வாரியினை"*

— சின்மையானந்த குரு - 2

*"ஆனந்த வெள்ளம்*
*சோராது பொழியவே"*

— சுகவாரி - 8

*"என்றும் ஆனந்த நிலையாகி"*

— ஆகார புவனம் - 2

*"பூரண*
*மெய்ய தாம்இன்பம் என்று விளைவதே"*

— பொன்னை மாதரை - 8

*"அகண்டா நந்தனே"*

— மேலது 35

*"கரையில் இன்பக் கடலமுதே!"*

— மேலது 39

*"உவப்பிலா ஆனந்தம் ஆன*
*வெள்ளமே"*

— ஆரணம் 4

*"மாறாத*
*தேன்என ருசித்து"*

— சிவன் செயல் - 10

*"சிந்திக்கும் தோறும் தெவிட்டா அமுதே"*

— **காண்பேனோ கண்ணி - 1**

என்ற பாடற் பகுதிகளில் இறைவனது பேரின்பம் தெவிட்டாத இன்பம் விளைவிப்பதை அறியலாம்.

(ஈ) கடவுள் ஆனந்தம் மனம் காலம் முதலிய தத்துவங்கட்கு அப்பாற்பட்டதாய் மாசற்றதாய் உள்ளது.

*"  மனம் ஆதிக்கு எட்டாத*
*பேரின்ப மயமாய்"* — பொருள் வணக்கம் - 3

*"மனது அவிழ*
*நிறைவான துரிய வாழ்வை"*
— மேலது - 5

*"இரவுபகல் இல்லாத*
*பேரின்ப வீட்டினில்"*
— சின்மையானந்த குரு - 6

*"தூவெளிய தாய்அகண்ட*
*ஆனந்த சுகவாரி"*
— கருணாகரக் கடவுள் - 3

*"  நல் அடியரைத்*
*தோய்க்கும் ஆனந்தத் தூவெளி வெள்ளமே"*
— பொன்னைமாதரை - 42

*"கருதரும் அகண்டா னந்தக் கடவுள்"*— வம்பனேன் - 3

*"மாசுஅற்ற ஆனந்த வாரி"*
— ஏசற்ற அந்நிலை - 1

கடவுள் ஆனந்தம் காலம் முதலியவற்றுக்கு அப்பாற்பட்டதாய் மாசற்றது என்பதை விளக்கும் போக்கில் இவ்வாக்குகள் எழுந்தன.

(உ) அருளினை ஐம்பூதத்திற்கு ஒப்பிட்டதுபோல் ஆனந்தத்தையும் அவற்றிற்கு ஒப்பிட்டு நோக்குதல்:

*"ஆனந்த மழைபொழியும் முகிலை"*
— பரசிவ வணக்கம் - 2

*"வானேஅவ் வானில்இன்ப மழையே"*
— கருணாகரக - 9

*"வானமாய் நின்றுஇன்ப மழையாய் இறங்கிஎனை*
*வாழ்விப்பது உன்பரங்காண"*
— சுகவாரி 3

*''பரமான இன்பவெள்ளம்*
*மூழ்க வேண்டும்''*

— சிற்சுகோதய விலாசம் - 5

*''ஆனந்தமய தெய்வக்குன்றே''*

— ஆகார புவனம் - 1

*''ஆனந்த சாகரத்தை''*

— மண்டலத்தின் 3

*''அமிர்த வெள்ளமே*
*ஆனந்த வெற்பே''*

— உடல் பொய்யுறவு - 44

*''விண்ணூடு இருந்தவெற்பே''*

— பராபரம் - 2

*''ஆனந்தவெள்ளப் பேராறே''* — மேலது 4

என்ற இடங்களில் ஆனந்தம் முகிலாகவும், மழையாகவும், ஆறாகவும், கடலாகவும் புனைந்துரைக்கப் பெற்றமை காணலாம். பிறிதோரிடத்திலும் இவை குறிப்பிடப் பெற்றுள்ளன.

(ஊ) இன்பத்திற்கு உருவகமாக இனிய பொருள்களே வருதல்.

*''அகம்மகிழ வருந்தேனை; முக்கனியைக்*
*கற்கண்டை, அமிர்தை''*

— பொருள் வணக்கம் - 4

*''அன்பர் மிடிதீரப் பருகவந்த*
*செழுந்தேனாகி''* — மேலது - 7

*''தெள்ளிமறை வடியிட்ட அமுதப் பிழம்பே*
*தெளிந்த தேனே சீனியே*
*திவ்வியரசம் யாவும் திரண்டொழுகும் பாகே''*

— கருணாகரக் - 8

*''இன்னமுது கனிபாகு கற்கண்டு சீனிதேன்*
*எனருசித்திட''* — சுகவாரி - 1

*"அருள்பழுத்த பழச்சுவையே கரும்பே தேனே*
*ஆரமுதே"* — ஆகாரபுவனம் - 7

*"தேன்ஆகிப் பாலாகிக் கனியாய்க் கன்னல்*
*செழும்பாகாய்க் கற்கண்டாய்த் திகழ்ந்த ஒன்றே"*
— பன்மாலை - 5

*"கரும்போ தேனோ முக்கனியோ*
*என்ன என்உள் கலந்து நலம்*
*தரும்பேர் இன்பப் பொருளே"*
— என்னை ஒருவர் - 3

என்ற இடங்களில் இத்தகைய உருவகங்களைக் காணலாம்.

(எ) இறைவனோடு அத்துவிதக் கலப்பினால் ஆனந்தம் உண்டாதல்.

*"அத்துவித ஆனந்த சித்தம் உண்டாம்"*
— நினைவு ஒன்று - 7

*"அத்துவித அநுபவத்தை"* — மண்டலத்தின் 7

என்பவற்றில் இதனைக் காணலாம்.

(ஏ) சிவசக்தியின் பெருமை செப்புதல்:

*"ஆனந்த ரூபமயிலே"*
— மலைவளர் காதலி - 5

இங்கு 'ஆனந்தம்' சிவசக்தி என்பதாயிற்று. 'மலைவளர் காதலி' என்னும் பதிகத்தில் உமையம்மையின் பெருமையை அடிகள் அழகுறப் பகர்ந்துள்ளனர். இறைவனின் திருக்கோலத்தை,

*"கொண்டாடி னார்முனம் கூத்து ஆடும்*
*அத்தன்தன் கோலமெல்லாம்*
*விண்டால்அம் மாஒன்றும் காணாது*
*வெட்ட வெளியே"* — பாயப்புலி - 5

என்று கூறியவிடத்து 'வெட்டவெளி' என்று புகன்றது போல, இறைவியைக் கூறுமிடத்து

*''நாதாந்த வெட்டவெளியே''* — மலைவளர் காதலி - 8

என்று பகர்ந்தனர்.

சிவசக்தி சுத்த மாயையிலே தொடர்புடைமையாலும், மந்திரங்களின்மூலம் சுத்தமாயையாதலாலும் நாதவடிவாகிய மகாமந்திர ரூபியே என்றனர். சிவசக்தி மாயையோடு உயிர்களின் பொருட்டுத் தொடர்புற்றாலும் அதன்கண் மயக்கமுற்றுத் துவக்குறாது தன்னியல்பு மாறாது நிற்கும். ஆதலின்,

*'' அகிலாண்ட கோடி ஈன்ற*
*அன்னையே! பின்னையும் கன்னிஎன மறைபேசும்*
*ஆனந்தரூப மயிலே''* — மலைவளர்க்காதலி - 5

என்று கூறினர்.

(ஐ) இறைவன் எங்கும் நிறைகின்ற பொருளாயிருப்பினும் சிலவிடங்களில் தயிரில் நெய்போல் - எள்ளில் எண்ணெய் போல் - அந்தர்யாமியாக விளங்கி அருள் புரிவான். சுகவாரியின் ஒரு பாடலில் (10),

''இறைவனாகிய நீ வீற்றிருப்பது அண்டத்தின் மீதுள்ள சிவலோகத்திலோ, அண்டத்திற்கு வெளியேயுள்ள உருத்திர புவனங்களிலோ, கதிரவன் மண்டலத்தின் நடுவிலோ, ஓமத்தீயின் நடுவிலோ தண்ணமுதத்தாரை பொழியும் அம்புலி மண்டலத்திலோ, அன்பர்கள் உள்ள முருகி மலர்கள் தூவி வணங்கி வழிபடும் திருவுருவங்களிலோ, திசைகளின் முடிவுகளிலோ, வானிலோ, விந்து தத்துவத்திலோ, வேதாந்த நிலையிலோ, சித்தாந்த நிலையிலோ, காணப்படும் பொருள்கள் பலவற்றிலுமோ, காணப்பெறாத சூனியநிலையிலோ, முக்காலத்திலே படைப்பிடம் தன்னிலோ, ஐம்பொறிகள் அடக்கம் உடைய தொண்டர்களிடத்திலோ இவற்றிலே யாண்டென்று அடியேனுக்கு உண்மை பகர்ந்தருள்வாயாக''[3]

என்று வேண்டுகின்றார்.

3. மூலப்பாடலைப் படித்து அநுபவிக்க வேண்டும். அடிகளாரின் வாக்கின் கம்பீரத்தில் அதில் காணலாம். (சுகவாரி - 10)

விளக்கம்: சிவலோகம் எனப்படும் உருத்திரலோகம் அண்டத்தின் முடிவிலுள்ளது. அவ்வுலக முதல்வன் சிவபெருமானோடு இரண்டறக் கலந்த ஞானமூர்த்தியாய்க் கீழுள்ள அயன், அரி முதலிய எல்லா தேவர்கட்கும் தலைவன். அண்டத்திலே இறைவன் திருவருள் செவ்விதின் விளங்கும் இடம் அஃது ஒன்றே. அண்டத்திற்கு வெளியே பத்துத் திசையிலும் நூறு புவனங்கள் உள்ளன. அவற்றின் ஒவ்வொன்றிலும் ஞானம் பெற்ற ஒவ்வொரு உருத்திரர் தலைவராக வீற்றிருப்பர் என்று சிவாகமங்கள் செப்புகின்றன. ஆதலால் அவ்விடங்களில் சிவவிளக்கம் சிறந்திருக்கும்.

கதிரவன் மண்டலம் அதனைச் சூழ்ந்துள்ள உலகங்கட்கு ஒளி கொடுத்து அவை தத்தம் நிலையில் இயங்கு வதற்கு ஏதுவாயிருத்தலால் அம்மண்டலத்தின் நடுவே சிவபெருமானை வழிபடுதல் நமது முன்னோர் வழக்கு. அனல் வளர்த்து அதன் நடுவிலே சிவபெருமானை வழிபடுதல் யாவரும் அறிந்ததே. கதிரவனைச் சிவபெருமானின் இருக்கையாகவும் சிவத்தின் பகுதியாகவும் தண்மைமிக்க திங்களைச் சத்தியின் பகுதியாகவும் கருதுதல் மரபு. அன்பர்கள் மலர் தூவி இறைவனை வழிபடும் வடிவங்களிலே கடவுள் சிறப்பாக அருள் புரிவார் என்பது பல தோத்திர நூல்களால் அறியப்பெறும்.

திக்குகள் என்பது வடக்கு, கிழக்கு, தெற்கு, மேற்கு என்ற நாற்றிசைகளையும், திக்கின் முடிவுகளென்பது வடகிழக்கு தென்கிழக்கு, தென் மேற்கு, வடமேற்கு என்னும் திசைகளையும் குறிக்கும் எனக் கொண்டு எட்டுத் திக்குப் பாலகர்க் கதிபதியாய், உருத்திரர்கள் உள்ளனர் என்னும் கருத்திற்கிணங்க 'திக்குத் திகந்தத்திலோ' இருப்பதென்றார் என்று சொல்லுவதும் உண்டு. பிற பூதங்களுக்கு இடம் கொடுத்து நிற்கும் ஐந்தாம் பூதமாகிய ஆகாசத்திற்குச் சதாசிவ மூர்த்தி தலைவராதலாலும் காணாத அருவினுக்கும் காணும் உருவினுக்கும் நடுவாயுள்ள சதாசிவ வடிவம் சிவாகமங்க

ளால் சிறப்பித்துக் கொண்டாடப் பெறுவதாலும் 'வெளியிலே வீற்றிருப்பது' என்றார்.

(ஒ) முடிவான தத்துவங்கள்: எல்லாத் தத்துவங்கட்கும் முடிவான தத்துவங்கள் சிவன், சக்தி எனப்படும். அவை நாதவிந்து தத்துவங்களாதலின் அவற்றை அடிகள் சிறப்பாக இறைவனின் லயம் என்றார். வேதாந்தமாகிய உபநிடதங்கள் நூற்றெட்டினும் சிறந்த சைவ உபநிடதங்களிலே முடிவாகக் கூறப்படும் வீடும், சிவாகமமாகிய சித்தாந்தத்திற் கூறப்பெறும் சிவப்பேறும் ஒன்றாம். ஆதலின் வேதாந்த சித்தாந்த நிலை தன்னிலே இறைவன் வீற்றிருப்பதென்று அடிகள் வினவினர்.

எல்லாப் பொருளையும் இறைவன் வடிவு என்று நோக்கும் பெரியோர்கட்கு அவர்கள் கண்ட பல பொருள்களும் இறைவன் வைகும் கோயில்களே யாகும். எல்லாச் சடப் பொருள்களும் ஒடுங்கிய இடத்து இறைவன் திருவருளே யன்றி வேறொன்றும் புலனாகாமையின் அவ்விடத்தைப் "பாழ்" என்றும், "சூனியம்" என்றும் கூறுவர். "சுடுகாடு" என்பதும் அதுவே. மணிவாசகப் பெருமான் "கோயில் சுடுகாடு" என்று அருளியதை உற்று நோக்கினால் உண்மை புலனாகும். கால தத்துவமானது செயல்களையெல்லாம் வரையறைப் படுத்துமிடத்து, முதல்வனை நினைவூட்டுவதாய், அவனது ஞானசக்தியால் தொழிற்பட்டு நிற்றலின் அதனையும், எல்லாம் தோற்றுவித்ததற்கு மாயை, மாயையின் கண்ணே இறைவன் ஐந்தொழில் இயற்றுதலால் அவற்றையும் இறைவனது இருக்கை இடங்களாகப் பேசினர். சித்தாகிய உயிர்களில் சிறந்த பேரன்பினராய் தொண்டர்களின் உள்ளத்தை இறைவன் கோயிலாகக் கொண்டமை அருள் நூல்களால் பெரிதும் வற்புறுத்தப் பெறுகின்றது. ஆதலின் அந்த நடமாடும் கோயிலையே இறுதியில் அமைத்து அடிகளார் செய்யுளில் இயம்பினமை பாராட்டத்தக்கது. 'பெரிது பெரிது புவனம் பெரிது' என்று தொடங்கும் ஔவையார் தனிப்பாடல் ஒன்றில்,

*"இறைவரோ தொண்டருள் அடக்கம் தொண்டர்தம்*
*பெருமை சொல்லவும் பெரிதே"*

என வரும் பகுதி நினைவுகூரத்தக்கது.

*"நெஞ்சமே கோயில்" (பராபரம் 151)* என்று சொன்ன அடிகள்,

*"மாசற்ற அன்பர்நெஞ்சே மாறாத பெட்டகமாத்*
*தேசுற்ற மாமணிநின் தேசினையும் காண்பேனோ"*
— காண்பேனோ கண்ணி - 4

என்பதிலும் தொண்டர்கள் உள்ளத்தை இறைவன் கோயிலாகக் கொண்டமையை நினைவுறுத்துகின்றார்.

# 6. ஆன்மாவின் அருங்குணங்கள்

இறைவனைப்பற்றி அடிகள் கூறியவற்றை ஆராய்ந்த நாம் இறைவன் கண்ணுக்குத் தெரியாதவனாகவும் கருத்திற்கு எட்டாதவனாகவும் உள்ளதால் இறை மறுப்புக் கொள்கையும் பிறவும் தோன்றவும் ஏதுவாயிற்று என்பதையும் நினைக்கின்றேன். ஆனால், பசுவாகிய உயிர் அவ்வாறில்லை. அது கண்ணுக்குப் புலனாகாவிடினும் கருத்திற்குப் புலனாவதாக ஏற்றுக் கொள்ளப் பெறும். 'உயிர் உள்ளது; உயிர் போயிற்று; உயிர் வந்தது; உயிர் வாழ்கிறது' என்றாற் போன்ற கூற்றுகளும் 'இஃது உயிர் உள்ள பொருள்; இஃது உயிர் இல்லாத பொருள்' என்ற பாகுபாட்டுப் பேச்சு வழக்குகளும் உயிர் உண்மை என்ற கருத்துக்குச் சான்றுகள்.

தாயுமான அடிகள் உயிர் பற்றித் தம்பாடல்களில் குறிப்பிடும் கருத்துகளை ஈண்டுக் காண்போம்.

(1) உயிரின் குறைகள்: உயிர்கள் பாசத்தால் பிணிக்கப்படுமாதலின் அவை பல்வேறு குறைகளையுடையவை. அருளாசிரியர்கள் குறைவற்றவர்கள், எல்லாக் குறைகளும் தம்மிடம் இருப்பதாகக் கூறுவர். வைணவத்தில் இதனை நைச்சியாநுசந்தானம்' (தன்னைத் தாழ்த்திக் கூறிக் கொள்ளுதல்) என்று குறிப்பிடுவர். தாயுமான அடிகளும் தம்மிடம் எல்லாக் குறைகளும் இருப்பனவாகக் குறிப்பிடுவதை அவர்தம் பாடல்களில் காணலாம்.

*''பண்ணேன் உனக்கான பூசைஒரு வடிவிலே*
*பாவித்து இறைஞ்ச,ஆங்கே*
*பார்க்கின்ற மலரூடு நீயே இருத்தி,அப்*
*பனிமலர் எடுக்கமனமும்*

*நண்ணேன், அல்லாமல்இரு கைதான் குவிக்கஎனின்*
*நாணும்,என் உளம்நிற்றிநீ,*

நான்கும் பிடும்போது அரைக்கும் பிடுஆதலால்
நான்பூசை செய்யல்முறையோ?''

— கருணாகரக் கடவுள் - 6

''ஆணிலே பெண்ணிலே என்போல ஒருபேதை
அகிலத்தின் மிசைஉள்ளதோ?
ஆடிய கறங்குபோல் ஓடிஉழல் சிந்தையை
அடக்கிஒரு கணமேனும்யான்

காணிலேன் திருஅருளை'' — சித்தர்கணம் - 7

''பொய்யினேன் புலையினேன் கொலையிலே நின்அருள்
புலப்பட அறிந்து நிலையாப்
புன்மையேன், கல்லாத தன்மையேன்,நன்மைபோல்
பொருள்அலாப் பொருளைநாடும்

வெய்யனேன், வெகுளியேன், வெறியனேன், சிறியனேன்,
வினையினேன்''

— ஆனந்தமானபரம் - 8

''சித்தமிசை குடிகொண்டது, ஈகையொடு இரக்கம்என்
சென்மத்தும் நான் அறிகிலேன்;
சீலமொடு நவவிரதம் ஒருகனவில் ஆயினும்
தரிசனம் கண்டுஅறியேன்;

பொய்த்தமொழி அல்லால் மருந்துக்கும் மெய்ம்மொழி
புகன்றிடேன்'' — மேலது - 9

''கல்லேனும் ஐயஒரு காலத்தில் உருகும்என்
கல்நெஞ்சம் உருகஇலையே
கருணைக்கு இணங்காத வன்மையையும் நான்முகன்
கற்பிக்க ஒருகடவுளோ?''

— சுகவாரி - 3

''இரும்புநேர் நெஞ்சக் கள்வன்ஆ னாலும்உனை
இடையிட்டு நின்றதுண்டோ?
என்றுநீ அன்றுநான் உன்னடிமை யல்லவோ!''

— சுகவாரி - 7

என்பது 'சுகவாரி'யை நோக்கிப் பேசும் தாயுமானவரின் பேச்சு. 'சுகவாரி' என்பது இன்பத்தை விளைவிக்கும் நன்னீர் எனப் பொருள்படுகின்றது. பரமானந்தம் தெவிட்டிப் போகாத பேரின்பம். இறைவன் 'உவட்டாத சுகவாரி' என்று பேசப்பெறுகின்றான். 'சுகவாரியே, நான் என்றும் உன்னை விட்டுப் பிரிந்ததில்லை. நீ என்று உள்ளாயோ அன்றிருந்து நானும் உன் அடிமையாக இருக்கின்றேன் அன்றோ?' என்று பேசுகின்றார் அடிகள். இதே கருத்தை அடிகள்,

*"என்றுளைநீ அன்றுளம்யாம்"*

***— கல்லாலின் 17***

என்று பிறிதோரிடத்திலும் கூறுவதைக் காணலாம். இதனால் பசுவாகிய உயிர் பதியாகிய இறைவனுக்கு என்றும் அடிமை யாக உள்ளது என்ற சித்தாந்தக் கருத்தை அடிகள் வெளியிடு கின்றார் என்பது அறியப்படும். இதனால் உயிர்கள் - ஆன் மாக்கள் - இறைவனால் படைக்கப்பட்டன அல்ல என்ற உண்மையும் தெளிவாகின்றது.

இறைவன், உயிர், பாசம் என்ற மூன்றையும் பிறிதோர் இடத்தில் அடிகள் குறிப்பிடுவார்.

*"அருளுடைய பரம்என்றோ அன்று தானே*
*யான்உளன்என் றும்,எனக்கே ஆணவாதி*
*பெருகுவினைக் கட்டென்றும் என்னாற் கட்டிப்*
*பேசியதன் றே;அருள்நூல் பேசிற் றன்றே."*

***— ஆகாரபுவனம் - 29***

என்ற பாடற்பகுதியில் இவற்றைக் காணலாம். இதில் பரம் பொருளாகிய இறைவன் கைம்மாறு கருதாத கருணையொன் றினால் உலகத்தோடு தொடர்புடையவன். அவன் ஆணவம், கன்மம், மாயை (இவை மூன்றும் பாசத்தில் அடங்கும்) என்ற தளைகள் இல்லாதவன். இக் கட்டுகள் யாவும் ஆன்மாவுக்கே உள்ளவை. இங்ஙனம் அருள் நூல்களாகிய சைவப் பனுவல் கள் புகல்வதை அடிகளும் தமது துணிபாகக் கொள்வர் என்பதை நாம் அறிய முடிகின்றது.

மௌனகுருவாகிய தமது ஆசாரியப் பெருந்தகை,

*"பாராதி பூதம்நீ அல்லை - உன்னிப்*
*பார்இந் திரியம் கரணம் நீஅல்லை*
*ஆராய் உணர்நீ"*

**— ஆனந்தக்களிப்பு - 9**

என்றும்,

*"ஐந்துபுலன் ஐம்பூதம் கரண மாதி*
*அடுத்தகுணம் அத்தனையும் அல்லை அல்லை;*
*இந்தஉடல் அறிவறியா மையும்நீ அல்லை;*
*யாதொன்றும் பற்றின்அதன் இயல்பாய் நின்று*
*பந்தமறும் பளிங்கனைய சித்து நீஉன்*
*பக்குவம்கண் டறிவிக்கும் பான்மை யேம்யாம்"*

**— ஆகாரபுவனம் - 18**

என்றும் இயம்பியருளினதாக உரைப்பர். இவற்றால் நாம் அறிந்து கொள்ள வேண்டியவை: பூதம், மனம், குணம் முதலிய தத்துவங்களில் ஒன்றாகாது உயிர்; அஃது அறிவு டைய பொருளேயன்றி அறிவு என்றல் உண்மையன்று. அஃது அறியாமையால் பிணிக்கப்படுவதன்றி அறியாமை அதன் குணம் அன்று. இவ்வாறு கூறுதல் தவறு. உயிர் அறிவுடைப் பெருளாக இருப்பினும் எதைப்பற்றி நிற்குமோ அதனதன் இயல்பாய் நிற்கும் இயல்புடையது. இங்கு 'பளிங் கனைய சித்து' என்ற தொடர் சிந்திக்கத்தக்கது. படிகம் (ஸ்படி கம், அல்லது பளிங்கு) தன்னை அடுத்துள்ள பொருளின் நிறத்தையே தன் நிறமாகக் கொண்டு நிற்கும். அஃதாவது, அது நீலமணியைச் சார்ந்தபோது நீலமாயும், செம்மணியைச் சார்ந்தபொழுது செம்மையாயும் விளங்கும். இதை நினைந்தே வள்ளுவப் பெருந்தகையும் 'அடுத்தது காட்டும் பளிங்குபோல்' (குறள் 706) என்று குறிப்பிட்டார். படிகத்தின் வண்ணம் இவ்வாறு சார்ந்ததன் வண்ணமாக மாறுபாடு அடைவதாயினும், 'படிகத்தின் வண்ணம்' என்று ஒரு நிறம் உண்டு என்பதனை அறிதல் வேண்டும். இன்னும் கண் ஒளியைச் சார்ந்தபொழுது ஒளி வடிவமாயும் இருளைச்

சார்ந்தபொழுது இருள்வடிவமாயும் நிற்றலை அறிகின்றோம். இங்கும் கண்ணின் ஒளி இவ்வாறு மாறுவதாயினும் கண்ணிற் கென்று ஒளி உண்டு என்பதை அறிவோம். இவ்வாறே பசுவாகிய ஆன்மாவுக்கும் ஓர் அறிவு உண்டு என்பதை அறிதல் வேண்டும். இந்த அறிவு அறியப்படும் பொருளின் தன்மையாய் மாறும் என்பதும் தெளியப்படும். எனவே, 'சார்ந்ததன் வண்ணமாதல்' என்பது உயிரின் தன்னியல்புக ளில் (Essential nature) முதன்மையானது என்பது உணரப்ப டும். இதனால் உயிர்கள் எப்பொழுதும் தனித்து நின்று விளங்காது எனவும், ஒரு பொருளின் துணை கொண்டே அஃது அறியப்படும் எனவும் தெளிவாகின்றது. சித்தாந்தக் கருத்துப்படி உயிர்கள் பெத்த நிலையில் பாசத்தோடும், முத்தி நிலையில் பதியோடும் வைத்தே அறியப்படுவனவா கும். இக்கருத்து,

> *''அறியாமை சாரின் அதுவாய், அறிவாம்*
> *நெறியான போதுஅதுவாய் நிற்கும்''*
>
> — உடல்பொய்யுறவு - 22

என்ற பாடற்பகுதியாலும் அறியப்படும்.

(2) ஆன்மாவும் ஆணவமும்: சார்ந்ததன் வண்ணமாகிய தன்மை உயிருக்கு உண்டு என்பதை மேலே கண்டோம். இதனால் உயிர் அறிவில்லாத பொருளோடு சார்ந்து அதன் மயமாயிருப்பினும், அந்தச் சார்பினின்று விடுதலையடையத் தக்க பாங்கு உயிருக்கு (ஆன்மாவுக்கு) உண்டு. இதனால் தான் அடிகள் உயிரைப் 'பளிங்கனைய சித்து' என்று குறிப்பிடு கின்றார். பளிங்கு தான் சாரும் பொருளைத் தன்னகத்தே காட்டும். ஆனால், பளிங்கு அறிவில்லாப் பொருள்; ஆன்மா அறிவுடைய பொருள். ஆன்மாவுக்குச் சார்புபற்றிய இயல்பு இல்லையாயின், அறியாமையாகிய ஆணவக் கட்டினின்றும் அதனை விடுவித்தல் ஒருவர்க்கும் இயலாது. அங்ஙனமா யின் உலகப்பற்றே அதன் தன்மையாகக் கொள்ள வேண்டி யிருக்கும். இங்ஙனம் எஞ்ஞான்றும் சடப்பற்றே உயிருக்குள் ளதாயின், அது சடத்தை விட்டு இறைவனைப் பற்றுவதெங் ஙனம்? இறைவன் அதன் இயல்பை எவ்வாறு மாற்றமுடி

யும்? மாற்ற முடியாதாயின் இறைவனின் ஐந்தொழில்கள் பயனற்றனவாய் முடியுமன்றோ? இது சித்தாந்த உண்மைக்கு முரணாகவும் முடியும். ஆதலால் ஆன்மாவின் தன்மை ஆணவத்தோடு எக்காலத்தும் அத்துவிதமாய் இருப்பதன்று. ஆணவத்தை ஒழிக்கப் பெறும் தன்மை அதற்கு இருத்தலால்தான் அடிகள் 'பந்தமறும் சித்துநீ' என்றும்,

> *''ஆணவத்தோ டத்துவிதம் ஆனபடி மெய்ஞ்ஞானத்*
> *தாணுவினோ டத்துவிதம் சாருநாள் எந்நாளோ?''*
>
> **— எந்நாட். நிற்கும் நிலை 28**

என்றும் உரைக்கின்றார்.

பதியைப்போல பசு அறிவுடைய பொருளாயின் அஃது ஆணவம் முதலிய கட்டுக்குள் அகப்படாது. மாயைபோல அறிவில்லாப் பொருளாயின் அஃது அறிவுடைய பதியை ஒருக்காலும் அறிய மாட்டாது. ஆதலால் அடிகள்,

> *''அறிவறி யாமையும் நீயல்லை''*
>
> **— ஆகாரபுவனம் 18**

என்கின்றார். இறைவன் எக்காலத்தும் ஆணவம் முதலிய கட்டு இல்லாதவராதலால் உயிர்களை ஆணவத்தோடு பிணித்தவர் இறைவன் அல்லர் என்பது தெளிவாகின்றது.

கடவுளைத் தனக்கு உயிராகப் பெற்ற உயிர் தானே நன்மையும் தீமையும் அறியவல்லதாயின் அறியாமையாகிய ஆணவக் கட்டுக்குள் அகப்படாது அறிவுடைப் பொருளாகிய முதல்வனையே பற்றி நிற்கும். அவ்வாறு நில்லாது ஆணவக் கட்டுடையதாயிருத்தலின் அஃது அறிவிக்க அறியும் இயல்புடையதென்பது தெளிவாகின்றது. இக்கருத்து பற்றியே அடிகள்,

> *''சதசத் தருளுணர்த்தத் தானுணரா நின்ற*
> *விதமுற் றறிவெனும் பேர்மெய்''* **— உடல்பொய்யுறவு 22**

என்று அருளிச் செய்வர். இதை விளக்குவது இன்றியமையாதது. இயற்கை அறிவுடைமையால் என்றும் மாறாத பொருள்

'சத்து' என்று வழங்கப்படும். அசித்தாகிய பாசங்கள் நிலை மாற்றத்தை அடைதல்பற்றி 'அசத்து' எனப்படும். உயிர் சத்தோடு சேரும்போது சத்தாயும், அசத்தோடு சேரும்போது அசத்தாயும் இருக்கும் தன்மையாதலின் உயிர் 'சதசத்து' என்ற மற்றொரு பெயராலும் வழங்கப்படும். திருவருள் உயிருக்கு உணர்த்துவதனால் அஃது உணருகின்றது. இதனால் உயிருக்கும் அறிவுடையதென்ற பெயர் உண்டு. இதனை அடிகள்,

> *"நீயுணர்த்த நானுணரும் நேசத்தா லோஅறிவென்*
> *றேயெனக்கோர் நாமமிட்டதே."*

**— உடல்பொய்யுறவு 14**

என்ற திருவாக்காலும் அறியலாம்.

ஆணவம் அற்ற நிலையில் இருக்கும் உயிர் தனக்கு உயிராகிய முதல்வனைப் பற்றி நிற்கும். முதல்வன் பாலும் அறியாமை யாதும் இல்லை. ஆதலால் இத்தகைய உயர்நிலையிலிருந்து தனக்கு முரணான ஆணவக் கட்டிலே உயிர் சென்று வருவதற்கு இடம் இல்லை. இதனால்,

> *"தீது இலாவிளக்கு எடுத்துஇருள்*
> *தேடவும் சிக்காது;*
> *ஆத லால்அறி வாய்நின்ற*
> *இடத்துஅறி யாமை*
> *ஏதும் மில்லை"*

**— ஆசையெனும் 17**

என்று அடிகள் அருளிச் செய்வர். இதனால் உயிர் முதல்வனை அடைவதற்கு முன்னர் அஃது ஆணவக்கட்டில் கிடப்பதாகும் என்பது அறியப்படும். இங்ஙனம் அஃது எப்பொழுது அக்கட்டிற்கு உள்ளாயது என்பது அறுதியிட்டுக் கூறவொண்ணாது. ஆதலின் அஃது அனாதியே ஆணவத் தொடர்புடையது என்பது சிந்திக்கத் தக்கதாகும். மேலும் நாம் அறியத்தக்கவை: உடல் முதலியவற்றை இறைவன் உயிருக்குக் கொடுத்தான்; ஆணவத்தையும் அதற்குக் கொடுக்க வல்லவன். உயிர்கள் ஐம்பொறிகள் வாயிலாகப் பொருள்

களை அறிகின்றன. உடம்பெடுக்குமுன் உயிர் நின்ற நிலை ஆணவத்தோடு அத்துவிதமாய் அறிவின்றி விளங்கப் பெறாத இருள் நிலை. இந்த நிலையை அடிகள்,

*"அறிவின்றி நிற்கும் குறியேன்"*

— உடல் பொய்யுறவு 4

என்றும்,

*"காரிட்ட ஆணவக் கருவறை"*

— சின்மையானந்தகுரு - 6

என்றும் குறிப்பிடுவர். கருவறையில் சிசு தன் ஆற்றலையெல்லாம் ஒடுக்கி வைத்துக் கொண்டுள்ளது. சிசு கண் கொண்டு பார்ப்பதில்லை; காது கொண்டு கேட்பதில்லை; மூளையைப் பயன்படுத்தி எண்ணுவதுமில்லை. அறிவு அதனிடத்து ஒடுங்கிக் கிடக்கின்றது. முன்பு பல பிறப்புகளில் பெற்றுள்ள அநுபவங்களின் விளைவாக ஒருவிதத்தில் அச்சிசு அறிவுற்றது எனினும், அஃது அறிவு அற்றதாகவே கருவறையில் கிடக்கின்றது. இதே நிலையில்தான் ஆணவம் படைத்த உயிர்களும் உள்ளன. கருவறை வாசம் ஒரே இருள்மயமாக இருப்பதுபோலவே, ஆணவத்தில் அடைபட்டுக் கிடக்கும் உயிர்களும் அஞ்ஞானம் என்னும் காரிருளால் மூடப்பட்டுக் கிடக்கின்றன. கருவறையில் சிசுவின் குறைபட்ட நிலையில் ஆணவம் படைத்துள்ள உயிர்களும் இருக்கின்றன. இவ்வாறு அடிகள் தம்மைக் குறிப்பிட்டுப் பேசுகின்றார். இந்நிலையைச் சித்தாந்த நூலோர் 'கேவலமாகிய மறப்பு நிலை' என்பர். இந்நிலையில் கிடக்கும் உயிரை அறிவுடையதென்றல் பொருந்தாது. ஆகவே, அடிகள்,

*"அறிவென்ற கோலம்வறிதே"*

— உடல் பொய்யுறவு - 4

என்று கூறுவார்.

(3) திரோதான சக்தி: மும்மலங்களின் வேறாக மறைப்புச் சக்தியாகிய திரோதான சக்தியையும் மாயையினாலாகிய உல

கத்தையும் மேலிரண்டு பாசங்களாகக் கருதும் முறையும் உண்டு. அடிகள்,

> *"எம்மை வினையை இறையைஎம் பால்காட்டாத*
> *அம்மை திரோதை அகலும்நாள் எந்நாளோ!"*
>
> **— எந்நாட். தத்துவமுறைமை 24**

என்று கூறுவர். "உயிராகிய நம்மையும், நம்மைப் பற்றியுள்ள வினையையும், இறைவனையும் நமக்குத் தோன்றாத படி மறைக்கின்ற இறைவனது மறைப்பாற்றலை விட்டு நீங்கும் நாள் எந்த நாளோ?" என்பது இதன் பொருள். மேலும்,

> *"சன்னல் பின்னலான சகலமெனும் குப்பையிடை*
> *முன்னவன்ஞா னக்கனலை மூட்டும்நாள் எந்நாளோ!"*
>
> **— மேலது 26**

என்பர். "சன்னல் பின்னலான தத்துவக் கூட்டமாகிய குப்பையை ஞானத்தீயால் இறைவன் எரித்தொழிப்பது எந்த நாளோ" என்பது இதன் பொருள். இவற்றால் அடிகள் ஐவகைக் கட்டையும் உயிர்நீக்கப் பெறவேண்டும் என்பதை வற்புறுத்தியதை அறியலாம். இன்னும் எல்லாத் தத்துவங்கட்கும் வேறாக நிற்கும் நமது உயிரினை நாம் அறிதல் வேண்டும் என்பதை,

> *"தத்துவமாம் பாழ்த்த சடவுருவைத் தான்சுமந்த*
> *சித்துருவாம் எம்மைத் தெரிசிப்ப தெந்நாளோ?"*
>
> **— எந்நாட். தன்னுண்மை 3**

என்ற கண்ணியால் புலப்படுத்துவர்.

இவ்விடத்தில் நாம் தத்துவங்கள் யாவும் சடம் என்பதையும், உயிர் அவற்றின் வேறாக அறிவுப் பொருள் என்பதையும் தெளிதல் வேண்டும். இதனை அடிகள் எந்நாட்கண்ணி தன்னுண்மை என்னும் பகுதியாள் தெளிவுறுத்துவார். உடல் முதலியவற்றிற்கு வேறாகவுள்ள உயிரைக் காண்பது எப்போது? (3), ஐம்பொறியை உயிர் என்று கருதும் சிறுமை

எப்போது ஒழியும்? (4), அந்தக்கரணத்தை உயிரென்று கொள்ளும் தப்பெண்ணம் நம்மைத் தனியே காண்பதெப் போது? (5), சத்துவம் இராசதம், தாமதம் என்ற முக்குணத் தைச் சீவன் என்னும் மூடக் கொள்கையைவிட்டுத் திருவரு ளின் துணைகொண்டு நம்மை அறிந்து கொள்வதெப்போது (6) என்று கூறுவதால் இதனைத் தெளியலாம்.

உயிரின் வேறாய தத்துவங்களனைத்தையும் எந்நாட் கண்ணியுள் 'தத்துவ முறைமை' என்னும் பகுதியுள் அடிகள் அழகாக வகுத்துக் காட்டியுள்ளார். இருபத்தேழு கண்ணகளில் (1-27) இவை தெளிவுறுத்தப் பெற்றுள்ளன. ஐம்பூதங்க ளால் அலைக்கழிதல் (1), சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் என்னும் ஐம்புலன்களிலே திரியும் ஐம்பொறிகளாகிய ஆசைக் கள்வரால் உயிர் துன்புறுதல் (2), வாக்காதியான கன்ம மாயை தம்பால் வீண் காலம் போக்குதல் (3), சுத்த வித்தை முதலான ஐவகைத் தத்துவத்தை நீக்கி அருள் சாரும் நாளைக் காணுதல் (12), சஞ்சிதம் முதலிய முச்சேறும் வெந்த பொரியாதல் (21) - இங்ஙனம் துன்பங்களை உயிர் ஒழித்த விடத்தேதான் உயிருக்குத் திருவருள் சுரக்கும் என்பதை அடிகள் தெளிவுறுத்துவர்.

**(4) உயிர்கள் பல:** இறைவன் உயிருக்கு உயிராக உள்ளார் என்பது சித்தாந்த உண்மை. இதனை,

*''உயிருக்குயிராய் எந்நாளும்*
*ஓங்கா நிற்பர்''* — மேலது 14

என்னும் அடிகளின் திருவாக்கால் அறியப்படும்.

'பதி' என்ற கடவுட் பொருள் ஒன்றேயாகும் என்பது சித்தாந்தம். ஆனால், உயிர்கள் அளவிறந்தன. அதனால் இறையை ''ஏகன்'' என்றும், உயிரை ''அநேகன்'' என்றும் வழங்குவர்.

*'ஏகன் அநேகன் இறைவன் அடி வாழ்க!'*[1]

என்பது மணிவாசகம். அடிகளும்,

1. திருவா. சிவபுரா. அடி. 5

*''அண்டமுமாய்ப் பிண்டமுமாய் அளவிலாத*
*ஆருயிருக் கோருயிராய் அமர்ந்தாய்''*
— *ஆசையெனும் 12*

என்றும்,

*''எண்ணில்பல கோடிஉயிர் எத்தனையோ அத்தனைக்கும்*
*கண்ணிற் கலந்தஅருட் கண்ணே பராபரமே!''*
— *பராபரம் 277*

என்றும் அருளிச் செய்வர். உயிர்கள் எண்ணிறந்தன என்பதை மெய்ப்பிப்பதற்குச் சான்று ஒன்றும் வேண்டா. ஓர் உயிர் ஓர் உடம்பில் நின்று அநுபவிக்கும் இன்ப துன்ப அநுபவங்கள் - நுகர்ச்சிகள் - மற்றோர் உயிருக்கு இல்லாமையால் ஒவ்வோர் உடம்பில் உள்ளதும் தனித்தனி வேறுவேறு உயிரே என்பது எளிதில் தெளிவாகும்.

(5) உயிரின் பல்வகை நிலைகள்: உலகப் பற்றும் இல்லாது, கடவுட் பற்றும் இல்லாதவிடத்து மனம் கேவல நிலையில் வழுவிவிடும்.[2] இதனை அடிகள்,

*''பற்றினதைப் பற்றும்எந்தாய்! பற்றுவிட்டால் கேவலத்தில்*
*உற்றுவிடும்; நெஞ்சம்உனை ஒன்றிநிற்ப தெப்படியோ?''*
— *பலவகைக் கண்ணி - 18*

என்று குறிப்பிடுவர். இதனால் உயிர் ஏதாவதொன்றைப் பற்றி நிற்கும் என்பது தெளிவு. உலகத்தையாவது கடவுளையாவது உயிர் பற்றாதவிடத்து அஃது அறியாமையைப் பற்றி நிற்கும். அறிவுள்ள உயிருக்கு அறியாமை இன்பம் தராது. இதனால் உயிருக்குத் தன்னில் தானே ஓர் இன்பம் இல்லை என்பது தெளிவு. உயிர் தன்னிலே இன்பம் உடையதன்று என்றும், உயிர் தன்னையறிந்தால் திருவருளின் உண்மையுணர்ந்து தலைவனையே பற்றி நிற்குமேயன்றிப் பிறிதொன்றினையும் பற்றாது என்றும் மூன்று கண்ணிகளில் வற்புறுத்துவர் அடிகள்.

2. கேவலம் என்ற சொல் '**தனிமை**' என்று பொருள்படும்

*"எத்தனையோ தேர்ந்தாலும் என்னாலே இன்பமுண்டோ*
*சித்துருவே இன்பச் சிவமே பராபரமே! (81)*

*தன்னை அறிந்தால் தலைவன்மேல் பற்றலது*
*பின்னைஒரு பற்றும்உண்டோ? பேசாய்! பராபரமே! (94)*

*தன்னை யறிந்தருளே தாரகமா நிற்பதுவே*
*உன்னை அறிதற்கு உபாயம்; பராபரமே!" (96)*

*என்ற மூன்று கண்ணிகளில் இதனைக் கண்டு தெரியலாம்.*

*"குறிக ளோடுகுணம் ஏதும் இன்றி,அனல்*
*ஒழுக நின்றிடும் இரும்பு,அனல்*
*கூட லின்றி அதுவாய்இருந்தபடி*
*கொடிய ஆணவ அறைக்குள்ளே*

*அறிவ தேதும்அற, அறிவி லாமைமய*
*மாய்இருக்கும்எனை, அருளினால்*
*அளவி லாததனு கரண மாதியை*
*அளித்த போதுனை அறிந்துநான்*

*பிறிவி லாதவணம் நின்றி டாதபடி*
*பலநி றங்கவரும் உபலமாய்ப்*
*பெரிய மாயையில் அழுந்தி, நின்னது*
*ப்ரசாத நல்லருள் மறந்திடும்*

*சிறிய னேனும்*

— *சிற்சுகோதய விலாசம் - 2*

என்ற இந்தப் பாடலில் உயிரின் கேவல நிலையும் சகல நிலையும் குறிப்பிடப் பெற்றிருத்தல் அறியப்படும்.

(அ) கேவல நிலை: உயிர் ஆணவ மலத்தோடு மட்டும் இருக்கும் நிலை 'கேவலம்' ஆகும். இந்த நிலையில் ஆன்மா விற்கு அறிவு இச்சை செயல் இல்லை. உடம்பும் இல்லை. உட்கருவிச் செயல்களாகிய மனம் முதலியனவும் இல்லை. அதனால் வினைகளை ஈட்டுவதும் இல்லை. அவற்றின் பயனாகிய இன்ப துன்பங்களை நுகர்வதும் இல்லை. 'குறிக ளோடும்.... அறிவிலாமை மயமாய் இருக்கும் எனை' என்ற

பாடற் பகுதியில் இந்நிலையைக் காணலாம். இது, 'தீயில் காய்ச்சின இரும்பு நெருப்பேயாகாமலும், நெருப்பினைப் போல் அழல்வதால் அதற்கு வேறாகாமல் அதன் மயமாய் நிற்றலும் போல, குணம் குறியாதும் விளங்காமல் ஆணவத்தில் அழுந்தி அதன் மயமாய் அறியும் தன்மை யாதும் இன்றி அறிவின்மை வடிவாயிருந்த எனக்கு' என்பது இதன் பொருள். உடல், பொறி, கரணம் முதலிய எதுவும் இல்லாமல் அறியாமையே வடிவமாய்க் கிடக்கும் இந்நிலையை 'இருள்நிலை' என்று வழங்கலாம். 'உயிர் என்பது ஒன்று இல்லை' என்று சொல்லாமல் 'உள்ளது' என்பது மட்டும் கூற நிற்பதால், இது 'தன் உண்மை' என்று கூறப்பெறும்.[3]

(ஆ) சகல நிலை: இருள் நிலையாகிய கேவலத்தில் உயிர் மூழ்கிக் கிடக்கும் கொடுமையைக் கண்டு கண்ணுதலான இரக்கம் கொண்டு தன் கருணை காட்டுகின்றான். உயிரினிடம் அறியாமையைத் தந்து நிற்பதாகிய ஆணவமலத்தைப் போக்குதற் பொருட்டு மாயை, கன்மம் என்ற இரண்டு மலங்களையும் கூட்டுவிக்கின்றான். இதனால் ஆணவ மலம், சிறிதே நீங்கப் பெற்ற உயிர், உடல், பொறி, கரணங்களைப் பெற்று விண்மண் பாதலம் என்னும் மூவுலகங்களிலும் "புல்லாய்ப் பூண்டாய்.... கல்லாய் மனிதனாய்... முனிவராய் தேவராய்.... எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்து"[4] உழலும் நிலை 'சகலம்' எனப்படும். சகலம் - கலையோடு கூடுதல் எனப் பொருள்படும். கலை என்பது மாயா காரியம். இந்நிலையில் (சகலாவத்தையில்) உயிருக்கு அறிவு இச்சை செயல் ஆகிய அனைத்தும் உண்டு. இந்நிலையில் உயிர் பெரிய பொருளை அறிய மாட்டாது; சிறிய பொருளையே பெரிதாக மயங்கி அவற்றை அடைய விரும்பி முயலும். 'அருளினால் அளவிலாத தனு... நல்லருள் மறந்திடும் சிறியனேனும்' என்ற பாடற் பகுதியில் இந்நிலையைக் காணலாம். இது, 'நீ உன் பேரருளினால் புறக்கருவிகள் அகக்கருவிகளோடு கூடிய

3. எந்நாட்கண்ணி - தன்னுண்மை என்ற தலைப்பில் உள்ள எட்டுக் கண்ணிகளிலும் இதனைக் காணாம்.
4. திருவா.சிவபுரா. அடி (26-31)

எண்ணற்ற உடம்பு முதலியவற்றையெல்லாம் நல்கிய போது, அங்ஙனம் இவற்றை அளித்த உன்னை அறிந்து உன்னோடு பிரியாத வண்ணம் நின்றிடாமல் பல நிறங்களையும் தன்பால் கவர்ந்து கொள்ளும் இயல்புடைய பளிங்குக் கல்லைப் போலப் பல பொருள்களிலும் பற்று வைத்து மாயை என்னும் பெரிய கடலிலே ஆழ்ந்து நீ கொடுத்தருளும் பிரசாதமாகிய சிறந்த அருளை மறந்து விடுகின்ற சிறியேனாகிய நான்' என்பது இதன் பொருள். இந்த நிலை சிற்றறிவு, சிற்றிச்சை, சிறு தொழில் இவற்றை உடையதாகும். இந்நிலை 'மருள்நிலை' என்று வழங்கப்பெறும்.

(இ) சுத்த நிலை: மேற்குறிப்பிட்ட விண் மண் பாதலம் என்னும் மூவுலகங்களிலும் மாறிமாறிப் பிறந்து இன்பத்தைப் பெறவும் துன்பத்தைப் போக்கவும் விரும்பும் உயிர் அவற்றிற்குரிய வழிவகைகளை ஆராய்ந்து அறிகின்றது. அவ்வழிகளில் முயன்று எண்ணிய பயன் எண்ணியவாறே கைகூடுமாயின் இன்பத்தை அடைகின்றது. கைகூடாதவழி துன்பத்தை நுகர்கின்றது. விருப்பு வெறுப்புகளையும் அடைகின்றது. இந்தச் சுழற்சியால் ஆணவ மலத்தின் ஆற்றல் மெலிவடைவதால் சிறு பொருள்களின் மீதுள்ள நாட்டம் மாறிப் பெரும் பொருளை அடையும் நோக்கம் உண்டாகின்றது. அப்பொழுது இறைவன் குருவாகி வந்து முப்பொருள்களின் (பதி, பசு, பாசம் என்பவற்றின்) உண்மைகளை உள்ளவாறு உணர்த்தி மெய்யுணர்வைத் தருகின்றான். இந்த மெய்யுணர்வால் உயிரின் மலங்கள் அகலுகின்றன. இதனால் நின்மலனாகிய இறைவனை அடைந்து இன்புற்றிருக்கும் நிலை எய்தப் பெறுகின்றது. இந்த நிலையே சுத்தம் என்று வழங்கப் பெறுவது. மாசாகிய மலங்களினின்றும் முற்றிலும் நீங்கி உயிர் தூய்மை பெற்றதால் சுத்தாவத்தை என்ற திருப்பெயரைப் பெறுகின்றது. இந்நிலையில் உயிர் இறைவனது அருளையே பற்றுக் கோடாகக் கொண்டிருப்பதால் இந்நிலையை 'அருள் நிலை' என்று வழங்கலாம்.

இவண் குறிப்பிட்ட மூன்று நிலைகளும் காரண அவத்தை என்று வழங்கப்பெறும். இறைவன் உடம்பைக் கூட்டுவதற்கு முன் இருந்த நிலை அனாதி கேவலம். அன்றாடம் வரும் கேவல நிலை நித்திய கேவலம்.

மேற்குறிப்பிட்ட மூன்று அவத்தைகளையும் வேறு இரண்டு பாடல்களில் குறிப்பிட்டுள்ளமையையும் காணலாம். அப்பாடல்கள்:

*''காரிட்ட ஆணவக் கருவறையில் அறிவற்ற*
*கண்ணிலாக் குழவியைப்போல்*
*கட்டுண் டிருந்தஎமை வெளியில்விட் டல்லலாம்*
*காப்பிட் டதற்கிசைந்த*

*பேரிட்டு, மெய்யென்று பேசும்பாழ்ப் பொய்யுடல்*
*பெலக்கவிளை அமுதமூட்டிப்*
*பெரியபுவ னத்திடை போக்குவா வுறுகின்ற*
*பெரியவிளை யாட்டமைத்திட்டு*

*ஏரிட்ட தன்சுருதி மொழிதப்பின் நமனைவிட்(டு)*
*இடர்உறஉருக்கி, இடர்தீர்த்து*
*'இரவுபகல் இல்லாத பேரின்ப வீட்டினில்*
*இசைந்துதுயில் கொண்மின்!என்று*

*சீரிட்ட உலகன்னை வடிவான எந்தையே!''*

— சின்மையானந்த குரு - 6

*''கருமருவு குகையனைய காயத்தின் நடுவுள்*
*களிம்புதோய் செம்பனையயான்*
*காண்தக இருக்க,நீ ஞானஅனல் மூட்டியே*
*கனிவுபெற உள்உருக்கிப்*

*பருவமது அறிந்துநின் னருளான குளிகைகொடு*
*பரிசித்து, வேதிசெய்து,*
*பத்துமாற் றுத்தங்க மாக்கியே பணிகொண்ட*
*பட்சத்தை என்சொல்லுவேன்!*

*அருமைபெறு புகழ்பெற்ற வேதாந்த சித்தாந்தம்*
*ஆதியாம் அந்தம்மீதும்*
*அத்துவித நிலையராய் என்னையாண்டு, உன்னடிமை*
*யானவர்கள் அறிவினூடும்*

*திருமருவு கல்லால் அடிக்கீழும் வளர்கின்ற*
*சித்தந்த முத்தி முதலே!''*

— *மேலது 7*

இப்பாடல்களில் அமைந்துள்ள மூன்று நிலைகளையும் எடுத்து விளக்குவோம்.

(1) கேவலாவத்தை: காரிட்ட ஆணவக் .... கட்டுண்டு இருந்த எமை: 'கருப்ப வாசம் ஒரே இருள்மயமானது. அங்குள்ள சிசு கண் கொண்டு பார்ப்பதில்லை. காது கொண்டு கேட்பதில்லை. மூளையைப் பயன்படுத்தி அஃது எண்ணுவதும் இல்லை. அஃது அறிவற்றதாகக் கருப்பத்தில் கிடக்கின்றது. கருப்பையை விட்டு எங்குச் செல்வதற்கும் அதற்குச் சுதந்திரம் இல்லை. கருப்பத்தில் சிசுவினுடைய குறைபட்ட நிலையில் ஆணவம் படைத்துள்ள மனிதன் இருக்கின்றான் (முதல் பாடல்). 'கருமருவு குயைனைய.... காண்தக இருக்க: மூன்று பொருள்கள் ஒன்றோடொன்று ஒப்பிடத் தகுந்தவைகளாக உள்ளன. ஒன்று தாயின் கருப்பை. மற்றது மலையின் கண் உள்ள குகை. மூன்றாவது பொருள் மூசை என்பது.[5] கருவின்கண் வைக்கப்பெற்றுள்ள சிசு ஒன்று குகைவாசம் பண்ணுவதுபோன்று அக்கருவிலிருந்து கொண்டு வளர்ந்து வருகின்றது. பிறவிப் பிணியைப் போக்குவதற்கு யோகி குகையினுள் நிட்டை புரிந்து தனது மனத்தின் அமைப்பை மாற்றுகின்றான். தெய்வத்தின் துணை கொண்டு தன்னை மேலான வனாக மாற்றி விடுகின்றான். இங்ஙனமே மூசையில் குறையுடைய உலோகங்களை உருக்கிச் சுத்தப்படுத்துகின்றனர். இரசவாத வித்தைக்கும் இது பயன்படுகின்றது.

5. மூசை: இது தாமிரம் முதலிய உலோகங்களை உருக்கி எடுப்பதற்கென்று அமைந்துள்ள ஒருவகை மட்பாண்டம். (பொற்கொல்லர் பட்டறையில் பயன்படுவது)

குகையில் புகுந்து தன்னை மேலானவனாக மாற்றும் யோகி யையும் மூசையில் வைக்கப் பெற்றுள்ள மாசுள்ள தாமிரத்தை யும் ஒத்துள்ளது பரிபாகம் அடையாத சிவான்மா (இரண்டாம் பாடல்). இந்த இரண்டு பாடற் பகுதிகளால் கேவலாவத்தையி லுள்ள சீவன் காட்டப் பெறுகின்றான்.

(2) சகலாவத்தை: 'வெளியில் விட்டு.... இடர்தீர்த்து': இது "ஆணவத்தில் தோன்றி ஆணவத்துடன் வளரும் மனிதன் பிரபஞ்ச வாழ்க்கை என்னும் வெளியில் விடப்படுவன் ஆகின்றான். தாயின் வயிற்றிலிருந்து பிறந்துள்ள சிசு பசிப் பிணியில் அல்லல்படுகின்றது. நோய் ஏற்படும்பொழுதும் அல்லல் படுகின்றது. அல்லல் படும்பொழுதெல்லாம் குழந்தை அழுகின்றது. அழுகின்ற குழந்தைக்குப் பால் கிட்டு கின்றது. ஏனைய பாதுகாப்பும் கிட்டுகின்றது. எனவே, 'அழுதல்' என்பது சிசுவுக்கு இயற்கையினால் இடப்பட்ட காப்பு ஆகின்றது. இங்ஙனமே ஆணவத்தில் ஊறிக் கிடக் கின்ற மனிதனுக்கும் துன்பங்கள் பல தொடர்ந்து வருகின் றன. துன்பமில்லாத வாழ்வு எந்தவித உயிர்க்கும் இல்லை. உடல் எடுத்துள்ள உயிர்கள் யாவும் ஏதேனும் ஒரு விதத்தில் அல்லல்பட்டே ஆகவேண்டும். அந்த அல்லலினின்றும் தங் களை விடுவித்துக் கொள்ள உயிர்கள் ஓயாது முயன்று வருகின்றன. அந்த முயற்சியினால் வாழ்வில் முன்னேற்றம் உண்டாகின்றது. ஆக, உயிர்கள் அனைத்துக்கும் விதவித மான அல்லல்கள் அமைந்திருப்பதே அவற்றின் வளர்ச்சிக்கு ஏதுவாகின்றது. இந்த ஏற்பாடுதான் அல்லல் ஆம் காப்பு ஆகின்றது.

உலக வாழ்க்கையில் மனிதன் பல்வேறு சூழ்நிலைகளில் வைக்கப் பெறுகின்றான். பாலன், சிறுவன், இளைஞன், யுவன், நடுவயதுக் காளை, பழுத்த கிழவன் என்றும்; மாணாக்கன், கற்றவன், கலையில் வல்லவன் என்றும்; செல் வன், உலோபி, வள்ளல் என்றும்; நோயாளி, உடல்திட்பம் படைத்தவன், தடித்தவன், மெலிந்தவன் என்றும்; மணம கன், குடும்பி, தந்தை, பாட்டன் என்றும் 'அவற்றிற்கு 'இசைந்த பெயர்கள்' ஏற்படுகின்றன.

மனிதன் அல்லல்படுவதற்கு உடல் வாழ்க்கையே முக்கிய காரணமாக அமைகின்றது. மனித உடல் பல பொருள்கள் கூடி உருவெடுத்தது. அப்பொருள்களாகிய இரத்தம், மாமிசம், எலும்பு, கொழுப்பு முதலியன ஓயாது உருமாறி அமையும் தன்மையுடையவை. எளிதில் அழிந்துபட்டுப் போவதும் அவற்றின் இயல்பு. அழிந்துபடுபவைகள் அனைத்தும் பாழானவைகள். ஆகவே, ‘மெய்யென்று பேசும் பாழ்ப் பொய்யுடல்’ ஆகின்றது. உண்டி அமுது என்று பெயர் பெறுகின்றது. உணவு உண்பதன் மூலம் மனிதன் மரணத்தை ஒத்திப் போட்டு வருகின்றான். உணவை உண்டு செரிமானம் செய்வதால் அது வளர்ந்து பெலக்கவும் செய்கின்றது. உண்டியில் வைத்த ஆசை உடல் வாழ்க்கையில் வைத்த ஆசையின் விளைவு. ஆகவே, உண்டியைப் பெருமகிழ்வோடு ஏற்கின்றான். எனவே, ‘பெலக்கவிளை அமுதூட்டுகின்றான்’.

இத்தகைய உடலுடன் இவன் பூமியில் பல ஆண்டுகள் நடமாடுகின்றான். சிறிது காலம் சென்ற பிறகு அவனுக்கு ஓய்வு அவசியமாகின்றது. ஓய்வுக்கு மரணம் என்பது மற்றொரு பெயர். பிறப்பு - இறப்பு ஓயாது நிகழ்ந்து கொண்டிருப்பவை. உலக வாழ்க்கை ஒரு விளையாட்டாக அமைகின்றது. இதில் இனிமை ஒன்று உள்ளது. விளையாடத் தெரிந்தவர்கள் வெற்றியையும் தோல்வியையும் ஒரே பாங்கில் ஏற்றுக் கொள்வர். இதை விளையாட்டாக வைத்துக் கொள்வது தான் வாழ்க்கையின் குறிக்கோள். பெரிய புவனத்தினிடை விளையாட்டு அமைத்திட்டு என்று அடிகள் இதைப் பேசுகின்றார்.

பரம்பொருளைப் பற்றிய பேருண்மைகளே வேதாந்தம். இவை இறைவனின் ஆணைகள். இறைவனும் அவனிடமிருந்து வந்துள்ள ஆணையும், இணை பிரியாதவை. வேதாந்தம் என்னும் கோட்பாடுகளில் அழகும் நன்மையும் பொலிகின்றன. இவற்றை முறையாக அனுட்டித்தால் நன்மையும், புறக்கணிக்கும் பொழுது அழகும் நலனும் அழிவதால் தீமையும் ஏற்படுகின்றன. பொது நன்மைக்கென்று அமைந்துள்ள

சட்டதிட்டங்களை மீறி நடக்கின்றவர்கட்கு இடர்கள் அல்லது துன்பங்கள் வருகின்றன. சாலைப் போக்குவரவுகளில் ஏற்படும் விபத்துகள் உள்ளன. இவற்றைச் செய்விப்பவன் நமன் என்பான். மக்கள் இயற்கை நெறியிலிருந்து வழுவும் பொழுது எல்லாம் இடர்களை அவன் விளைவிப்பான். பல காலம் இடர்ப்பட்டவர்கள் - சீவர்கள் - உயர்ந்த அநுபவத்தால் நன்னெறியில் நிலைப்பதால் இடர்கள் தீர்ந்து விடுகின்றன. (இவை முதற்பாடலின் கருத்துகள்).

இரண்டாவது பாடலில் 'நீ ஞான அனல் மூட்டியே.... பட்சத்தை என் சொல்லுகேன்' என்பதன் பொருள்: குறைநிலையை நிறைநிலையாக்க மாறுதல்கள் செய்யப் பெறுதல் வேண்டும். எ-டு: செம்பைத் துலக்குவதால் அதனுள் படிந்துள்ள களிம்பை அறவே அகற்ற முடியாது. அதை ஒரு மூசையில் போட்டு வைத்து தீ மூட்டி முறையாக உருக்கி, இளகி வரும் பக்குவத்தைச் சரியாக அறிந்து அதற்கு ஒத்த குளிகை ஒன்று சேர்க்கப்பட்டால் களிம்பு நிரந்தரமாகவே நீங்கிவிடுகின்றது. இந்தச் செயலை ஒத்தது இறைவனுடைய அருளைத் துணையாகக் கொண்டு ஞானசாதனம் புரிகின்றவர்களின் செயல். செம்பைத் தூய்மையாக்கப் பஞ்ச பூதங்களில் ஒன்றாகிய தீ மூட்டப் பெறுகின்றது. சீவன் பரம் பொருள் ஆவதற்கு 'ஞான அனல்' மூட்டப் பெறுகின்றது. இத்தகைய மேலான எண்ணத்தை எண்ணி எண்ணி ஆன்ம சாதகன் உள்ளுருகி தபசு செய்யும்பொழுது தனது மனஅமைப்பை உருக்குகின்றான். மனம் பரிபக்குவம் அடைகின்றது. இதனால் ஆன்ம சாதகன் நிறை ஞானி ஆய்விடுகின்றான். இவன் உலகம் என்னும் குப்பையில் இருந்தாலும் பொன்னுக்கு ஒப்பானவனாய் விடுகின்றான். (இவை இரண்டாவது பாடலின் கருத்துகள்). இந்த இரண்டு பாடற் பகுதிகளாலும் சகலாவத்தை புலனாகின்றது.

(3) சுத்தாவத்தை: 'இரவு பகல் இல்லாத பேரின்ப வீட்டினில் ..... கொண்மின் என்று சீரிட்ட உலகன்னை வடிவான எந்தை' என்ற முதற்பாடலின் கருத்து: தீ நெறியிலிருந்து நன்னெறிக்கு வருகின்ற மனிதனுக்கு இரண்டு வித நிலைகள் அமைகின்

றன. இடர் தீர்ந்திருப்பது உடனே கிடைக்கும் வாய்ப்பு. இது பசிப்பிணியை அகற்றுவதற்கு ஒப்பானது. பேரின்பம் எய்து தல் அடுத்த பகுதியாகின்றது. நல்லுணவைச் சுவைப்பதற் கொப்பானது இது. பேரின்பம் ஒன்றே மனிதனுடைய உண் மையான நிலை. அஃது அவனுக்குச் சொந்தமான இருப்பிட மாதலால் அதற்கு 'வீடு' என்ற பெயரும் உண்டு. இவ்வீடு உலகிலுள்ள வீடு போன்றதன்று. இங்கு இருப்பது அழியும் தன்மையுடையது; காலத்துக்கு உட்பட்டது. எனவே, இதற்கு இரவு பகல் உண்டு. பேரின்ப வீடோ பிரபஞ்ச வாழ்க்கைக்கு அப்பாற்பட்டது. அதுகாலம் நடையாடாத இடம்; இரவு பகல் அங்கு இல்லை. துன்பமாக மாறி அமை யும் சிற்றின்பத்திற்கு ஆங்கு இடம் இல்லை. ஒப்பற்ற பேரா னந்தமே ஆங்கு எஞ்சியுள்ளது. சன்மார்க்கத்தில் செல்லும் ஆன்ம சாதகனுக்கு இத்தகைய பெரும் பேறு கிட்டுகின்றது. இரவு பகல் இல்லாத பேரின்ப வீட்டில் இசைந்து, துயில் கொள்ளுமாறு இறைவன் பணிக்கும் இடம் இது. துயில் கொள்ளுதல் என்பது 'செயலற்ற நிலை' என்பதைக் குறிக்கின் றது.

இறைவனைத் தாயாகவும், தந்தையாகவும் கருதுவது ஆன்றோர் வழக்கு. 'தாயும் ஆனார்' என்ற தொடரிலுள்ள வரலாறு இதனைத் தெளிவாக்கும். அர்த்தநாரீசுவரன், தையல் பாகன், மங்கை பங்கன் என்ற இறைவனின் திருப் பெயர்கள் 'சீரிட்ட உலகன்னை வடிவான எந்தை' என்ப தற்கு விளக்கமாக அமைகின்றன. (இவ்விளக்கம் முதற் பாடலின் பகுதி பெறுகின்றது).

இரண்டாவது பாடலின் 'அருமை பெறு புகழ் பெற்ற.... சித்தாந்த முத்தி முதலே' என்பதன் விளக்கம் இது: வேதாந்த சித்தாந்த நூல்கள் இறைவன் தத்துவத்தை விளக்க எழுந் தவை. பிரபஞ்சத்தின் நடைமுறையைப் புகட்டுவன வேதங் கள்; பிரபஞ்சத்துக்கு அப்பாலுள்ள பரம்பொருளை விளக்கு கின்ற நூலே வேதாந்தம். சைவ சமய நூல்கள் சித்தாந்தம் என்பவை. இவை பரம் பொருளை விளக்குவதால் அழியாப் புகழ் பெற்றவை. அத்துவித நிலை (இரண்டற்ற நிலை)யை

அடைந்த ஞானியர்களிடத்தும் இறைவனுடைய பேரறிவு சொரூபம் நன்றாக விளங்குகின்றது. நூல்கள் மூலம் இறைவன் சொரூபத்தை விளக்குவதைவிட இறைவனுடன் இரண்டறக் கலந்த சான்றோர்கள் மூலம் அவனைப் பற்றிய விளக்கம் நன்கு தெளிவாகும். சான்றோர்களை உள்ளபடி அறிவது கிட்டத்தட்ட இறைவனை அறிவதற்கு ஒப்பாகின்றது.

பரிபக்குவம் அடைந்த ஆன்மாக்களை உய்வித்தற் பொருட்டே கடவுள் தட்சிணாமூர்த்தியாக எழுந்தருளியுள்ளார். அவர் எழுந்தருளியிருக்கும் இடம் திருமருவுகல்லால மரம். இவர் மனத்தை முற்றிலும் வென்றவர்கட்கு நேர் காட்சி தருகின்றார். அநுபூதியில் அவரை அடைவதும் முக்தி அடைவதும் ஒன்றே. எங்கும் நிறைந்திருக்கும் இவர் சிரகிரியில் கோயில் கொண்டும் உள்ளார். உயிர்கள் அனைத்திற்கும் அவரே பரமகுரு. அவரை நேரில் காண்பது முத்திக்கு ஒப்பாகும். அதனால் அவர் 'சித்தாந்த முத்தி முதல்' ஆகின்றார். (இவை இரண்டாம் பாடற் பகுதியிலுள்ள கருத்துகள்) இந்த இரண்டு பாடற்பகுதிகளால் சுத்தாவத்தை தெளிவாகின்றது.

ஐந்தவத்தைகள்; தத்துவமும் தாத்துவிகமும் ஆகிய 96 கருவிகளுள் 35 கருவிகள்[6] ஆன்மாவுடன் கூடுதல் பிரிதல்களை உடையனவாய் நின்று அதனைச் சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதம்[7] என்னும் ஐந்து நிலை வேறுபடுகளை உடையனவாய் இருக்கும். இந்நிலைகள் காரியாவத்தை என்று வழங்கப்பெறும். ஆகவே, கேவலத்தின் காரியம் 5, சகலத்தின் காரியம் 5, சுத்தத்தின் காரியம் 5. ஆக காரியாவத்தை - 15. கேவலம் - மறப்பு; சகலம் - நினைப்பு; சுத்தம் - இரண்டும் அற்றது. இவை இரவு, பகல் இரண்டும் அற்ற இடம் என்று வழங்கப்படும். இந்த ஐந்து அவத்தைகளையும் அடிகள் இரண்டு திருப்பாடல்களில் குறிப்பிடுவர். அவை:

6. இவை செவி முதலிய ஞானேந்திரியங்கள் 5; மனம் முதலிய அந்தக்கரணங்கள் 4; புருடன் 1 ஆக தத்துவங்கள் 15உம்; சத்தாதி ஞானேந்திரிய விடயங்கள் 5, வாசனாதி கன்மேந்திரிய விடயங்கள் 5, பிராணாதி வாயுக்கள் 10. ஆக தத்துவங்கள் 20-உம் ஆக முப்பத்தைந்து. (வித்தியா தத்துவங்களும் சிவதத்துவங்களும் ஈண்டு புருடனில் அடக்கப்பட்டன.
7. இந்த வடமொழிப் பெயர்கள் அருந்தமிழில் **நனவு, கனவு, உறக்கம், பேருறக்கம் உயிர்ப்படங்கள்** என்று வழங்கப் பெறும்.

*''சாக்கிரமாம் நுதலினில்,இந் திரியம் பத்தும்;*
*சத்தாதி வசனாதி வாயு பத்தும்;*
*நீக்கமில்அந் தக்கரணம், புருட னோடு*
*நின்றமுப் பானைந்தும் நிலவும்; கண்டத்*
*தாக்கியசொப் பனமதனில் வாயு பத்தும்;*
*அடுத்தசத் தாதிவச னாதி யாக*
*நோக்குகர ணம்புருட னுடனே கூட,*
*நுவல்வரிரு பத்தைந்தா நுண்ணி யோரே*

*சுழுத்திஇத யந்தளிற்பி ராணம், சித்தம்,*
*சொல்லரிய புருடனுடன் மூன்ற தாகும்;*
*வழுத்தியாநா பியில்துரியம்; பிராண னோடு*
*மன்னுபுரு டனும்கூட வயங்கா நிற்கும்;*
*அழுத்திடுமூ லந்தன்னில் துரியா தீதம்;*
*அதனுடனே புருடன்ஒன்றி அமரும்; ஞானம்*
*பழுத்திடும்பக் குவரறிவர் அவத்தை ஐந்திற்*
*பாங்குபெறக் கருவி நிற்கும் பரிசுதானே!*

**— ஆசையெனும் 25,26**

இந்த இரண்டு திருப்பாடல்களின் கருத்தை விளக்குதல் இன்றியமையாதது.

சாக்கிரம்: ஆன்மாக்கட்கு இந்த அவத்தை நிகழ்தற் குரிய இடம் நுதல் (நெற்றி). தத்துவம் 36இல் சிவதத்துவமாகிய சுத்தவித்தை, ஈசுவரம், சாதாக்கியம், சத்தி, சிவம் ஆகிய ஐந்தும்; வித்தியா தத்துவங்களில் புருடன் நீங்கலாக காலம், நியதி, கலை, வித்தை, அராகம், மாயை ஆகிய ஆறும்; நிலம், நீர், தீ, வளி, விசும்பு ஆகிய ஐந்தும் ஆகப் பதினாறு கருவிகளும் நீங்கி நின்ற அகக் கருவிகள் இருபதும்; புறக்கருவி கள் 60இல் பிராணன், உதானன், அபானன், வியானன், சமானன், நாகன், கூர்மன், கிரிகரன், தேவதத்தன், தனஞ்ச யன் ஆகிய வாயுக்கள் பத்தும்; வாக்காதியின் வழித்தான வசனம், கமனம், தானம், விசர்க்கம், ஆனந்தம் ஆகிய ஐந்துடன் கூடிய முப்பத்தைந்துடன் இலாடத் தானத்தில் நின்று கண்டு கேட்டு உண்டு உயிர்ப்பது நீங்கி மயக்கத்தைப் பொருந்தி அறிகருவிகளையும் செலுத்தும் கருவிகளையும் கைவிட்டுப் பொருந்தி நிற்கும்.

சொப்பனம்: இதன் இடம் கண்டம் (கழுத்து). இங்கு ஆன்மா மெய், வாய், கண், செவி, மூக்கு ஆகிய அறிகருவிகள் ஐந்தும்; வாக்கு, பாதம், பாணி, பாயு உபத்தம் (மொழி, கால் கை, எருவாய், கருவாய்) ஆகிய தொழிற் கருவிகள் ஐந்தும் ஆகிய பத்தும் இலாடத்தானத்தல் நிற்க, மேற்குறிப்பிட்ட 35 கருவிகளுள் 25 கருவிகள் நின்று சூக்கும தேகத்தாற் பயன்கொண்டு பொருந்தி நிற்கும்.

சுழுத்தி: இதன் இடம் இதயம். பிராணவாயு நீங்கலாக வாயுக்கள் ஒன்பது, சித்தம் நீங்கலாக அந்தக்கரணம் மூன்று, சத்தாதி ஐந்து, வசனாதி ஐந்து; ஆகிய 22-உம் நிற்க, சித்தம், பிராணவாயு, புருடன் ஆகிய மூன்று கருவிகளுடன் ஒன்றும் தெரியாது பொருந்தி நிற்கும்.

துரியம்: இதன் இடம் உந்தி (நாபி). சித்தம் மாத்திரம் இதயத்தில் நிற்க, பிராண வாயும், புருடனும் ஒன்றுமறப் பொருந்தி நிற்கும்.

துரியாதீதம்: இதன் இடம் 'மூலாதாரம்' பிராண வாயு மட்டிலும் உந்தியில் நிற்க புருட தத்துவம் மட்டிலும் அதீதமாய்க் கருவிகள் ஒன்றுமின்றித் தனியாய்ப் பொருந்தி நிற்கும்.

இங்ஙனம் ஐந்து அவத்தைகளிலும் கருவிகள் நிற்கும் நிலையினைச் சித்தாந்தம் பிரித்துப் பேசும். சாக்கிரத்தில் (நனவில்) நினைப்பு மறப்பு நிகழ்தலால் இங்ஙனம் கூறிய ஐந்து உணர்ச்சி வகைகளும் ஒவ்வொரு அவத்தையிலும் நிகழ்வதாகக் கூறுவர். நனவில் அடிகள் கூறிய முப்பத்தைந்து கருவிகளோடு இருவகைப் பூதங்களும் தொழில் செய்ய எல்லாப் பொருள்களையும் நுகரும் நிலை நனவில் நனவெனப்படும். நனவில் கனவும் உண்டு. அஃது எல்லாப் பொருள்களையும் நுகரும் நிலையில் மனம் துன்புறுதற்கேதுவாகிய ஒன்றைக் கேள்விப்பட்டு வெளிச் செய்திகள் புலனாகாமல் துன்பத்திற்குக் காரணத்தை ஆய்ந்து கொண்டிருக்கும் நிலையாகும். மனத்துன்பத்தை மட்டிலும் உணர்ந்து கொண்டிருக்கும்

நிலை நனவில் துயிலாகும். தூக்கத்தில் ஆழ்ந்து பெருமூச்செறியும் நிலை நனவில் மிகு துயிலாகும். மூர்ச்சித்துக் கிடக்கும் நிலை நனவில் உயிர்ப் படங்கல் (துரியாதீதம்) என்னும் அதீத நிலையாகும்.

இங்ஙனம் முறையே உயிர் நெற்றி, கண்டம், இதயம், உந்தி, மூலாதாரம் என்ற ஐந்து இடங்களில் இறங்கி வருதலால் இவை கீழாலவத்தை என்ற பெயர் பெறுகின்றது. இங்ஙனம் முறையே இறங்கிய உயிர் பிறகு அம்முறையிலேயே ஏறிவருதல் மேலாலவத்தை எனப்படும். இந்நிலையில் இறுதியாகப் புருவ நடுவை அடைந்த உயிர் அவ்விடத்திலேயே ஐந்து நிலைகளை யடையும். இவையே மத்தியாவஸ்தை என்று வழங்கப் பெறும். இது சகலாவத்தையின் காரியமாகும்.

மத்தியாவத்தையின் ஐந்து நிலைகளிலும் உயிர் இயங்கும் முறைகளையும் அறிந்து கொள்ளல் வேண்டும். இந்த ஐந்து நிலைகள் சாக்கிரத்தில் சாக்கிரம், சாக்கிரத்தில் சொப்பனம், சாக்கிரத்தில் சுழுத்தி, சாக்கிரத்தில் துரியம், சாக்கிரத்தில் துரியாதீதம் என்பன. சாக்கிரத்தில் துரியாதீதம் என்பது, ஒருவன் ஒரு பொருளை ஓரிடத்தில் வைத்து அதனை அறியாமல் திகைத்து நிற்கும் நிலை; சிறிது பிராண வாயு இறங்கியது சாக்கிரத்தில் துரியம்; அந்தப் பொருள் வைத்த இடத்தை விசாரிக்க வந்த நிலை சாக்கிரத்தில் சுழுத்தி; அந்தப் பொருள் வைத்தவிடம் நினைவெழத் தோன்றுவது சாக்கிரத்தில் சொப்பனம்; அப்பொருள் புலப்பட அறியவந்தவிடம் சாக்கிரத்தில் சாக்கிரம். ஆக மத்தியாவத்தை ஐந்து.

சுத்தாவத்தையின் காரியம் நின்மலாவத்தை எனப்படும். இஃது அமலசாக்கிரம், அமல சொப்பனம், அமல சுழுத்தி, அமல துரியம், அமல துரியாதீதம் என்று ஐந்தாக விளங்குவது. இவற்றின் இலக்கணம்: அமல சாக்கிரம் என்பது, ஆசாரியனிடம் ஞான தீட்சை பெற்று முப்பொருள் உண்மையை விசாரித்து அறிந்து, கேட்டு, சிந்தித்து, தெளிந்து காணும் பொருளனைத்தும் சிவவடிவமாகவும், நுகர்வன எல்லாம்

சிவானந்தமயமாகவும் உணரும் நிலை. இது மாசில்நனவு எனவும் பெயர் பெறும். இதற்கு இடம் நெஞ்சு (இதயம்). அமல சொப்பனம் என்பது சிவோகம் பாவனை செய்வது. இது மாசில் கனவு என்று வழங்கப்பெறும். சிவத்தோடு இரண்டறக் கலந்ததாகத் தன்னைப் பாவித்தல் சிவோகம் பாவனையாகும். இதற்கு இடம் கழுத்து. அமல சுழுத்தி என்பது, மூலாதாரத்தில் அறியப்படும் கடவுளையும், அறிவையும் தன்னையும் ஆன்மா உணர்ந்து நிற்பதாகும். இது மாசில் துயில் எனவும் கூறப்படும். அமல துரியம் என்பது, கேவலம் நீங்கி அருளினாலே தன்னையும் அருளையும் கண்டு தன் வசத்தழிந்து அருள் வழித்தாய் நிற்பது. இது மாசில் பெருந்து யில் ஆகும். இதற்கு இடம் புருவநடு; அமலதுரியாதீதம் ஆவது, பிரம ரந்திரத்திலே எல்லையற்ற சிவத்தை இரண்டறப் பெற்று நுகர்ந்து ஆனந்தத்தில் அழுந்தி நிற்பது. இதுவே மாசில் ஒடுக்கம் எனவும் வழங்கப்படும்.

இங்ஙனம் உயிர்களின் பண்புகள் தெளிவாக விளக்கப் பெற்றன.

# 7. தத்துவக்குறிப்புகள்

'**தா**யுமான அடிகளின் பாடல்கள்' என்னும் நூல் சாத்திர நூல் அல்ல. அது தோத்திர நூல். சாத்திர நூலாயின் தத்துவக் கருத்துகள் நன்கு விளக்கம் பெற்றிருக்கும். இது தோத்திர நூலாயினும் தத்துவக் கருத்துகள் குறிப்புகள்போல நூலெங்கும் காணப் பெறுகின்றன. இத்தத்துவக் கருத்துக ளுக்கு விளக்கம் தெரிந்தாலன்றிப் பாடல்களைத் துய்த்தல் இயலாது. இத்தத்துவக் கருத்துகளை எடுத்துக்காட்டி அவற் றிற்கு விளக்கமும் ஈண்டுக் காண்போம்.

ஒரு பாடலின் (கருணாகரக் கடவுள் - 2)

*''மண்ணாதி ஐந்தொடு புறத்தில்உள கருவியும்*
*வாக்காதி சுரோத்ராதியும்*
*வளர்கின்ற சத்தாதி மனமாதி, கலையாதி,*
*மன்னுசுத் தாதியுடனே*

*தொண்ணூற்றோ டாறும்,மற் றுள்ளனவும் மௌனியாய்ச்*
*சொன்ன ஒரு சொற்கொண்டதே!*
*தூவெளிய தாய்அகண் டானந்த சுகவாரி*
*தோற்றும்அதை என்சொல்லுவேன்!''*

என்பது முதற்பகுதி. இதில் மண் முதலிய ஐம்பூதமும், புறக்கருவிகளும், ஐம்பொறிகளும், தந்மாத்திரைகளும், முக்க ரணங்களும் அசுத்தமாயா தத்துவங்களும் சுத்தத்துவங்களும் ஆகிய தொண்ணூற்றாறு தத்துவங்கள் மாயையில் நின்று வந்தன என்று குறிப்பாக உணர்த்துவர்.

சைவ சித்தாந்தத்தின் முடிந்த முடிபாகக் கொள்ளப்படும் பொருள்கள் பதி, பசு, பாசம் என்ற மூன்று. ஈண்டு மேற்கூறிய தத்துவங்கள் பாசத்தைப் பற்றியவை. பாசம் ஆணவம், கன்மம், மாயை என்ற மும்மலங்களைக் கொண்டது. இவற் றுள் மாயையினின்றும், தத்துவங்கள் தோன்றும். மாயை

என்றால் என்ன? உலகில் பல வகையாகக் காணப்படும் பொருள்களாய்ப் பரிணமிக்கக் கூடிய பலவகைச் சக்திகளின் தொகுதி 'மாயை' எனப்படுவது. இந்த மாயை சுத்தமாயை, அசுத்த மாயை என இருவகைப்படும். இந்த இருவகை மாயை களினின்றே தத்துவங்கள் தோன்றும்; தத்துவங்களினின்றே உலகம் தோன்றும்.

தத்துவங்கள் அகக்கருவி, புறக்கருவி என இருவகைப்படும். அகக்கருவிகளில் ஆன்மதத்துவம் - 24-உம், வித்தியாதத்துவம் 7-உம், சிவதத்துவம் 5-உம் அடங்கும். புறக்கருவிகளில் பூதகாரியங்கள் 25-உம், நாடிகள் 10-உம் ஏடணை 3-உம், வசனம் முதலிய 5-உம், குணங்கள் 3-உம், வாக்குகள் 4-உம் அடங்கும். இவற்றின் விரிவு பின்வருமாறு:

## அகக்கருவிகள் - 36

**ஆன்மதத்துவம்:**

1. பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம் (தமிழில் நிலம், நீர் தீ, வளி விசும்பு) என பூதங்கள் 5
2. சுரோத்திரம், துவக்கு, சட்சு, சிங்நுவை, ஆக்கிராணம் (தமிழில் மெய், வாய், கண், செவி, மூக்கு) என ஞானேந்திரியங்கள். 5
3. இவற்றின் விடயமான சத்தம், பரிசம், ரூபம், ரசம், கந்தம் (தமிழில் ஓசை, ஊறு, உரு, சுவை, நாற்றம்) என தந்மாத்திரைகள். 5
4. வாக்கு, பாதம், பாணி பாயு, உபத்தம் (மொழி, கால், கை, எருவாய், கருவாய்) என கன்மேந்திரியங்கள். 5
5. மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என அந்தக்கரணங்கள் (உட்கருவிகள்) 4

ஆக 24

**வித்தியாதத்துவம்:**

காலம், நியதி, கலை, வித்தை, அராகம், புருடன், மாயை என 7

**சிவதத்துவம்:**

சுத்தவித்தை, ஈசுவரம், சாதாக்கியம், சக்தி, சிவம் என 5

12

ஆக அகக்கருவிகள் - 24 + 12 = 36 காண்க

**புறக்கருவிகள் - 60**

இவை தத்துவங்களினின்றும் தோன்றும்; இவை தாத்துவிகங்கள் என வழங்கும். இவற்றினின்றே உலகம் (தனு, கரண, புவன போகங்கள்) தோன்றும்.

1. பிருதிவியின் கூறு: தோல், எலும்பு, நரம்பு, தசை, மயிர் என 5
2. அப்புவின் கூறு - நீர், உதிரம், மச்சை, மூளை, சுக்கிலம் என 5
3. தேயுவின் கூறு - ஆகாரம், நித்திரை, பயம், மைதுனம், சோம்பல் என 5
4. வாயுவின் கூறு - ஓடல், நடத்தல், நிற்றல், இருத்தல், கிடத்தல் என 5
5. ஆகாயத்தின் கூறு - குரோதம், லோபம், மோகம், மதம், மாச்சரியம் என 5

ஆகப் பூதகாரியம் 25

1. பிருதிவியின் வழித்தான இடை, பிங்கலை, சுழு முனை, காந்தாரி, அத்தி, சிங்ஙவை, அலம்புடை, புருடன், குகு, சங்கினி என நாடிகள் 10
2. வாயுவின் வழித்தான பிராணன், அபானன், உதானன், வியானன், சமானன், நாகன், கூர்மன், கிரிகரன், தேவதத்தன், தனஞ்சயன் என வாயுக்கள் 10
3. ஆகாயத்தின் வழித்தான அர்த்த ஏடணை, புத்திர ஏடணை, உலக ஏடணை என ஏடணைகள் 3
4. வாக்காதியின் வழித்தான வசனம், கமனம், தானம், விசர்க்கம், ஆனந்தம் என 5
5. பிரகிருதியின் வழித்தான சாத்துவிகம், இராசதம், தாமதம் என குணங்கள் 3
6. விந்துவின் வழித்தான சூக்குணம், பைசந்தி, மத்திமை, வைகரி என வாக்குகள் 4

35

ஆக புறக்கருவிகள் 25 + 35 = 60 காண்க.[9]

புறக்கருவிகள் அறுபது என்று,

*"ஆன புறக்கருவி யறுபத்து மற்றுளவும்*
*போன வழியும்கூடப் புல்முளைப்ப தெந்நாளோ?"*

— **எந்நாள். தத்தவமுறைமை - 15**

என்ற பாடலில் அடிகளே குறிப்பிட்டுள்ளமையும் கண்டு தெளிக.

9. இவை செயற்படும் முறைகளையும் ஏனைய விவரங்களையும் இந்த ஆசிரியர் எழுதியுள்ள **'சைவ சித்தாந்தம் - ஓர் அறிமுகம்'** (சை.சி.நூ.ப.கழகம், 154, டி.டி.கே. சாலை, சென்னை - 600 018) என்ற நூலை நோக்கி அறிக.

தத்துவங்களைக் குறிப்பிடும் போக்கில் ஒரு பாடலில்,

*"ஐவகை எனும்பூத மாதியை வகுத்ததனுள்*
*அசரசர பேதமான*
*யாவையும் வகுத்துநல் லறிவையும் வகுத்துமறை*
*யாதிநூ லையும்வகுத்து"*

— **சின்மையானந்த குரு - 4**

என்று குறிப்பிடுவர். இதனை விளக்குவோம். இறைவன் அனைத்து ஆற்றலையும் பெற்றவன் என்பதற்கு அவனது படைப்பே சிறந்ததோர் எடுத்துக்காட்டாக அமைகின்றது. பிரளயக் காலத்தில் பிரபஞ்சம் எல்லாம் அவனிடத்து ஒடுங் கிக் கிடக்கின்றது; படைப்புக் காலத்தில் அவை யாவும் தோற்றத்திற்கு வருகின்றன. படைப்பின் மகிமையிலிருந்து படைப்போனின் மகிமைகளில் பல நமக்குப் புலனாகின்றன. இறைவன் நமக்கு நல்கியுள்ள அறிவையும் ஆற்றலையும் கொண்டே அவனை ஆராய்கின்றோம்.

இறைவன் வேறு, அவனுடைய படைப்பு வேறு அல்ல. சுயம்பு என்பது இறைவனுக்கு அமைந்த பெயர். தோன்றாத நிலையிலிருந்து தோன்றுகின்ற நிலைக்குத் தன்னை மாற்றிய மைத்தவன் என்பது அதன் பொருள். முதலில் ஐவகைப் பூதத்தைக் காண்போம். ஆகாயம் முதலில் உண்டான பூதம். வெட்டவெளி (Empty space) என்பதுவே அது. இறைவன் நீக்கமற எங்கும் நிறைபொருள் என்பதை வெட்டவெளி மெய்ப்பிக்கின்றது. வெட்டவெளியை எல்லை கட்டிக்காட்ட முடியாது. அதனிடத்துப் பிளவையும் உண்டு பண்ண முடி யாது. வெட்ட வெளியிலே பூமி போன்ற கோள்கள் மிதந்து கொண்டுள்ளன. இங்ஙனம் மிதந்து கொண்டிருக்கும் கோள் கள் ஒவ்வொன்றிலும் வெட்டவெளி இடையீடின்றி எங்கும் வியாபகமாயுள்ளது. நாம் சுவர் ஒன்று எழுப்பி இப்பக்கம், அப்பக்கம் என்று பேசுவது போல் வெட்டவெளிக்கு இப்பு றம் அப்புறம் என்று பேச முடியாது. சுவரினூடும் சுவருக்கு நாலா புறங்களிலும் எங்கும் வியாபாகமாயிருப்பது வெளி.

இதை நன்கு புரிந்து கொள்ளுகின்றபொழுது இறைவன் எங்கும் நிறைந்திருக்கும் பொருள் என்பதை ஓரளவு அறிந்து கொள்ள முடிகின்றது. இதனைத்தான் கம்பநாடனும்,

*"சாணிலும் உளன்ஓர் தன்மை*
*யணுவினைச் சதகூ றிட்ட*
*கோணினும் உளன்மா மேருக்*
*குன்றினும் உளன்இந் நின்ற*
*தூணினும் உளன்"*

என் பாடலில் உணர்த்தியுள்ளான்.

இந்த வெட்டவெளிக்கு ஓசை தந்மாத்திரையாய் அமைந்துள்ளது. வெட்டவெளி முழுவதும் ஓசை தந்மாத்திரை நிறைந்துள்ளது. வெட்டவெளி முழுவதிலும் ஓசை வியாபகமாய் உள்ளது. மலையும், ஆறும், கடலும், ஓசைக்கு எல்லை போட்டுவிட முடியாது; வானொலி இக்கோட்பாட்டை மெய்ப்பித்து வருகின்றது. கடலடியினுள் நீர்மூழ்கிக் கப்பலிலிருந்தும் மிகுந்த ஆழத்தில் வெட்டப் பெற்றுள்ள சுரங்கங்களிலிருந்தும் வானொலியைக் கேட்கலாம். வானம் எங்கும் வியாபித்திருப்பது போன்று ஒலியும் வியாபகமானது என்பது மெய்ப்பிக்கப்பெற்றுள்ளது. ஒலியைக் கேட்டறிய நம்மிடத்துக் காது செவிப் புலன் உள்ளது.

இந்த வெட்டவெளியிலிருந்துதான் வாயு (காற்று) உண்டானது. இஃது எங்கும் வியாபகமானதன்று. பூமிக்கருகில் செறிந்தும், மேலே செல்லச் செல்லச் செறிவு குறைந்து கொண்டும் உள்ளது. காற்றே இல்லாத வெட்டவெளியும் உண்டு; புவிக்கு 200 கல் தொலைவுக்கு மேல் காற்றே இல்லை. காற்றின் தந்மாத்திரை ஊறு. காற்றின் துணையால் தொட்டுணர்தல் (நொப்புலன்) என்னும் பொறி நம்மிடம் அமைந்துள்ளது. வெப்பத்தையும தட்பத்தையும், கரட்டுந் தன்மையையும் மிருதுத் தன்மையையும் அறிவதற்கு நம் மேனி முழுவதிலும் நொப்புலன் பரவியுள்ளது.

மூன்றாவது பூதமாய் அமைந்திருப்பது தீ அல்லது நெருப்பு. காற்றைவிடத் தூல நிலைக்கு வந்திருப்பதால் அஃது இன்னும் அதிகமான எல்லையில் அடங்குகின்றது. சூரியன் போன்ற கோள்களில் அது நிலை பெற்றுள்ளது. புவியின் உட்புறத்தில் அஃது அக்கினிக் குழம்பாக நிறைந் துள்ளது. இளநீரோடு ஒப்பிட்டு பூமியின் அமைப்பைத் தெளியலாம். இளநீரின் உட்பகுதியில் இனிய நீர் அமைந்தி ருப்பது போன்று பூமியில் ஐம்பது கல் தொலைவுக்கு அப் பால் ஆழமான உட்பகுதியில் அக்கினிக் குழம்பாக அமைந் துள்ளது. இந்தக் அக்கினியின் தந்மாத்திரை ஒளி அல்லது ரூபம். ஒளிவிடுதல் அக்கினியோடு கூடி இயல்பாய் அமைந் துள்ளது. அந்த ஒளியின் துணை கொண்டு வடிவத்தைக் கிரகிக்கும் ஆற்றல் நமக்கு வருகின்றது. இதற்குத் துணை புரிவது கண் என்னும் பொறி.

நான்காவது பூதமாய் வருவது நீர். இது வண்ணத்தில் இன்னும் சிறிதாய் விடுகின்றது. சூரியனிடத்திலும் பூமியின் உட்புறத்திலும் அக்கினி இருப்பது போன்று நீர் அவ்வளவு வியாபகமாய் இல்லை. பூமியின் மேல் பரப்பில் முக்கால் பகுதியை அது மூடிக் கொண்டுள்ளது. சுவைத்துப் பார்ப்ப தற்குத் துணையாய் இருப்பது நீர். ஆகவே, புவியின் தந்மாத் திரை ரசம் என்னும் கோட்பாடாகின்றது. நாவில் ஊறும் உமிழ்நீருடன் கலக்கப் பொருளைச் சுவைத்துப் பார்க்கின் றோம்.

நீரினைவிட மேலும் ஒடுங்கிய நிலையில் இருப்பது நிலம். இப்பரந்த மண்ணுலகில் நாம் வாழ்வதற்கென்று அமைந்தது கால் பங்கு; ஏனைய முக்கால் பகுதி நீரில் மூழ்கியுள்ளது. மணம் மண்ணின் தந்மாத்திரை. மூக்கின் துணை கொண்டு நாம் பிரிதிவி (பூமி)யின் மணத்தை முகர்கின் றோம். இந்த ஐம்பெரும் பூதங்களும் படைப்பிற்குப் பயன்ப டுகின்றன. இப்படைப்பை உண்டு பண்ணிய இறைவனை ஐவகை என்னும் பூதமாதியை வகுத்தவர் எனத் தாயுமானவர் குறிப்பிடுகின்றார். ‘வகுத்தல்’ என்னும் சொல் படைத்தலைக் குறிப்பிடுகின்றது.

ஓர் உடலின் மூலம் தன் இயல்பை விளக்குகின்ற ஆன்மா சீவான்மா என்ற பெயர் பெறுகின்றது. உடல் உண்டாவதற்கு ஐம்பூதங்கள் முற்றிலும் இன்றியமையா தவை. ஆகாயம் நான்கு பூதங்கட்கு இருப்பிடமாகின்றது. நான்கு பூதங்கள் சேர்ந்து உடல் உண்டாவதற்குத் துணை புரிகின்றன. சீவான்மாக்களைப் பொதுவாக நிலைத்திணை (சரம்), இயங்கு திணை (அசரம்) என்று இரண்டு பிரிவுகளா கப் பிரிக்கின்றோம். கல்நிலையிலிருந்து முற்றிலும் பரிபக்கு வம் அடைந்துள்ள நிறை மனிதன்நிலைவரை எண்ணற்ற சீவகோடிகள் உள்ளன. அவற்றை அளந்து காட்ட எவராலும் இயலாது. இயற்கையின்கண் வெவ்வேறு இடங்களில் வெவ் வேறு பாங்குடைய சீவர்கள் வாழ்ந்து வருகின்றனர். இவை யாவற்றையும் தொகுத்து அடிகள் 'அதனுள் அசர பேதமான யாவையும் வகுத்து' என்று கூறுகின்றார்.

வாழ்க்கை என்னும் போராட்டத்தில் உயிர்கள் படிப்படி யாக அறிவை வளர்த்து வருகின்றன. வாழ்க்கையில் போட்டி யும் போராட்டமும் இல்லையாயின் அறிவு வளர்ச்சிக்கு இடம் இல்லாது போய்விடும். அறிவு வளர்ச்சி ஏணியில் மேலான நிலையில் இருப்பவன் மனிதன். தனது அறிவை முன்னிட்டே உயிர் வகைகளுள் அவன் சாலச் சிறந்தவன் எனக் கருதப் பெறுகின்றான். இக்கோட்பாட்டை அடிகள் 'நல்லறிவையும் வகுத்து' என்ற தொடரில் அமைத்துக் காட்டு கின்றார்.

மனிதனைத் தவிர ஏனைய உயிர்கள் தாம் பெற்ற அறிவு அநுபவத்தைத் தங்களுடைய இயல்பாக மாற்றித் தம் வழி வருவோரினிடத்து வழங்குகின்றன. ஆனால், மனிதனோ இந்த ஏற்பாட்டில் மற்ற உயிர்களிடத்தினின்றும் மாறுபட்ட வன் ஆகின்றான். மனிதர்கள் எல்லார்க்கும் ஒரேவித இயல்பு வந்தமைவதில்லை. விலங்கின் இயல்புடைய மக்கள் உளர்; பறவையின் இயல்புடைய மக்களும் காணப்படாமல் இல்லை; எத்தனைவித உயிர் வகைகள் உலகில் உள்ள னவோ அத்தனைவித இயல்புகளை மனிதனிடத்தில் காண லாம். அதற்குமேல் மனிதன் தன் அறிவினை நூல்களாக

அமைத்து மற்றவர்கட்கு வழங்கும் வல்லவனாகவும் அமை கின்றான். நெடுங்காலத்திற்கு முன்பு ஏதேனும் ஒரு துறையில் ஒரு மனிதன் பெற்ற அநுபவம் நெடுங்காலத்திற்குப் பிறகுத் தோன்றுகின்ற மனிதனுக்கு ஒரு நூலாக அமைந்து வழங்கப் பெறுகின்றது. இங்ஙனம் கணக்கற்ற நூல்களை உண்டு பண்ணியது மனிதனுடைய தனிச்சிறப்பு ஆகும். இந்த அரிய கோட்பாடுகள் யாவும் இயற்கையில் மறைந்து கிடக்கின்றன. மறைந்து கிடக்கும் அக்கோட்பாடுகளை அநுபவபூர்வமாக உணர்ந்து அவற்றை நூல்களாக அமைத்து வைப்பது மனித னுடைய ஒப்பற்ற தனி முயற்சி ஆகின்றது. இதனால் நாள டைவில் மனிதனுடைய அறிவுக்கு இழப்பு ஒன்றும் ஏற்படு வதில்லை. வளர்ச்சியே உண்டாகின்றது. இந்தச் சிறப்பு இயல்பைத் தான் அடிகள் ''முறையாதி நூல்களையும் வகுத் து'' என்று இயம்புகின்றார்.

அடிகள் தத்துவங்களைக் கூறுமிடங்களில், 'பூத முதலா கவே நாதபரியந்தமும்' (மலைவளர் காதலி - 3) என்றும், 'இருநில மாதிநாதம் ஈறதாம் இவைகடந்த' (வம்பனேன் - 3) என்றும் கூறுவதால் முப்பத்தாறு தத்துவமும் தொகுத்துச் சுட்டப்பெறுதலைக் கண்டு தெளியலாம். பிரகிருதி குண தத்துவத்தின் நுட்பமாதலால்,

*''முக்குணத்தால் எல்லாம் முளைக்கப் பிரகிருதிக்கு*
*இக்குணத்தை நல்கியதார்? எந்தாய்! பராபரமே!''*

— *பராபரம் 166*

என்று அடிகள் கூறுவர்.

இதனால் பிரகிருதிக்குக் கீழுள்ள தத்துவங்கள் சுட்டப் பெற்றுள்ளன. பிரகிருதியினின்று குணதத்துவமும், அதன்க ணின்று சாத்துவிக மிகுதியால் புத்தியும், அதன்கணின்று இராசத மிகுதியால் ஆங்காரமும், ஆங்காரத்தின் சத்துவப் பகுதியினின்று மனமும் ஐம்பொறியும், இராசதப் பகுதியினி யின்று வினைப் பொறிகள் (கன்மேந்திரியங்கள்) ஐந்தும் தாமதப் பகுதியினின்று தந்மாத்திரைகள் ஐந்தும் தந்மாத்திரை யினின்று ஐம்பூதமும் உண்டாகின்றன என்பது காண்க.

பிரகிருதிக்கு மேற்பட்ட தத்துவங்களை வித்தியா தத்துவம் ஏழாகவும், சுத்ததத்துவம் ஐந்தாகவும் பகுத்தோதுகின்றார் அடிகள்.

*"வித்தியா தத்துவங்கள் ஏழும் வெருண்டோடச்*
*சுத்தபர போகத்தைத் துயக்குநாள் எந்நாளோ?"*
*— எந்நாட். தத்துவமுறைமை - 11*

*"சுத்த வித்தை யேமுதலாத் தோன்றுமோ ரைந்துவகைத்*
*தத்துவத்தை நீக்கியருள் சாருநாள் எந்நாளோ?"*
*— மேலது 12*

என்ற கண்ணிகளில் இவற்றைக் காணலாம்.

வித்தியா தத்துவம் ஏழையும் அசுத்த மாயையினின்றும் அனந்ததேவர் என்னும் வித்தியேசுவரர் செயற்படுத்துவதால் இப்பெயர் பெற்றது. இவை காலம், நியதி, கலை, வித்தை, அராகம், புருடன், மாயை என்பனவாகும். காலம் என்பது உயிர் நுகர்வதை வரையறைப்படுத்துவது. அவரவர் செய்த வினையை அவரவரே நுகருமாறு வரையறைப்படுத்துவது நியதி தத்துவம். கலை என்னும் தத்துவம் உயிரினிடை ஆணவமல மறைப்பைச் சிறிது நீக்கி அதன் தொழிலாற்றலை விளக்குவது. வித்தை என்ற தத்துவம் மாயையினின்று தோன்றாமல் கலையினின்று தோன்றுவது. அராகம் வித்தையினின்று தோன்றுவது.

ஆன்மாவின் கிரியா சக்தியை விளக்கி அதனைத் தொழிற்படச் செய்வது கலை. வித்தியா தத்துவம் ஆன்மாவின் ஞான சக்தியை எழுப்பும். அராகம் ஆன்மாவின் இச்சா சக்தியை எழுப்பும். இந்நிலையில் ஆன்மா கன்மத்தை நுகரவும் ஈட்டவும் தகுதி பெற்று நிற்கும். ஆகவே, ஆன்மா கன்மத்தை நுகர்தல், ஈட்டல்கட்குக் காலம், நியதி, கலை, வித்தை, அராகம் என்னும் ஐந்தும் இன்றியமையாதனவாய் ஆன்மாவோடு எப்பொழுதும் நீங்காது சட்டைபோல் ஒன்றாய் ஒட்டியே கிடக்கும். இதனால் இவ்வைந்தும் 'பஞ்ச கஞ்சுகம்' என வழங்கப் பெறும். கஞ்சுகம் - சட்டை.

மேலே தத்துவங்கள் 36 என்று கூறினேன் அல்லவா? உயிர்கட்குச் சுட்டறிவு (பாசஞானம்) விளங்குதற் கேதுவாகிய அதிசூக்குமை, சூக்குமை, பைசந்தி, மத்திமை, வைகரி என்னும் ஐந்து வாக்குகளும் உண்டாவதற்கிடம் இத்தத்துவங்களேயாகும். உயிர்களைப் பிணித்திருக்கும் பலவகைப் பிணிப்புகளில் வாக்குகளே நீக்குவதற்கரிய பெரும் பிணிப்பாகும். இப்பிணிப்பு அறின் ஏனைய பிணிப்புகள் தாமே நீங்கி வீட்டு நிலை கைவரப்பெறும். இந்த ஐந்து வாக்குகளும் சுத்தமாயை என்பதன் பிரிவுகளே. இதே சுத்த மாயையினின்றும் தோன்றும் ஐந்து சிவ தத்துவங்கள் சிவம், சக்தி, சதாசிவம், ஈசுரம், சுத்தவித்தை என்பன. இத்தத்துவங்களின் வழிநின்றே இறைவன் ஐந்தொழில்களையும் (படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல்) இயற்றுவன்.

சிவதத்துவத்தில் இறைவனுடைய ஞானசக்தி மட்டிலும் விளங்கும். சக்தி தத்துவத்தில் முதல்வனது கிரியா சக்தி விளங்கும். சதாசிவத்தில் இறைவது ஞான சக்தியும், கிரியா சக்தியும் ஒத்து விளங்கும். ஈசுர தத்துவத்தில் இறைவனது கிரியா சக்தி சிறப்பாக மிக்கு விளங்கும். சுத்தவித்தையில் ஞான சக்தி மிக்கு நிற்கும். காரணம் ஞான நூல்கள் மந்திரங்கள் முதலியன வெளிப்படுத்துவதற்கும், கீழ்த்துவங்களிலுள்ளவர்களை இயக்கும் மூர்த்திகட்கு ஞானம் உதிப்பதற்குமாகும். இத்தத்துவங்கள் யாவும் அடிகளின் திருப்பாடல்களில் புலனாகும் அளவு ஒருவாறு விளக்கம் பெற்றன.

ஒருநிலையில் - அநுபூதி நிலையில் - தத்துவங்களையெல்லாம் மறந்து அருள்மோன வள்ளலாகிய இறைவனிடம் அன்பு பூணக் கருதுகின்றார்; கரங்கள் அவனிடம் கை கூப்பி எழுவதாகவும், கண்கள் அவனைக் கண்டநுபவிக்கவும் துடிப்பதாகக் கூறுவர்.

*''தத்துவப்பே யோடே தலையடித்துக் கொள்ளாமல்*
*வைத்த அருள்மோன வள்ளலையே - நித்தம்அன்பு*
*பூணக் கருதும்நெஞ்சு போற்றக் கரம்எழும்பும்;*
*காணத் துடிக்கும்இரு கண்.* — உடல் பொய்யுறவு - 29

என்ற பாடலில் இதனைக் கண்டு மகிழலாம்.

# 8. மனத்தின் பண்புகள்

சித்தாந்த சாத்திரத்தில் ஆன்மதத்துவம் இருப்பத்து நான்காகக் கூறப்பெறும். அவை: அந்தக்கரணம் நான்கு;[1] ஞானேந்திரியங்கள் ஐந்து; கன்மேந்திரியங்கள் ஐந்து; தந்மாத் திரைகள் ஐந்து; பூதங்கள் ஐந்து; இவையனைத்திற்கும் மூலகா ணமாக இருப்பது மூலப்பிரகிருதி; இது சாத்துவிகம், இராசதம், தாமதம் என்ற முக்குணங்களையும் உடையது. இந்த முக்கு ணங்களும் தூலமாய் வெளிப்படாது சூக்குமமாய் நிற்கும் நிலையே மூலப்பிரகிருதி. இஃது அவ்யக்தம் என்று வழங்கப் படும். வியக்தம் - வெளிப்பாடு; அவ்வியக்தம் - வெளிப்பா டின்மை. இஃது இங்ஙனம் வெளிப்படாது காரண நிலையில் நிற்றலால், பெரும்பாலும் இதனை ஒரு தத்துவமாகக் கூறப் பெறுதல் இல்லை.

சித்தம்: அவ்யக்தமாய் நிற்கும் மூலப்பிரகிருதியின் ஒரு பகுதியில், வெளிப்படாது சூக்குமமாய் நிற்கும் முக்குணங் கள் தூலமாய் வெளிப்பட்டுத் தம்முள் சமமாய் நிற்கும் நிலை ஒன்றுண்டு. இந்நிலை குணதத்துவம் என்று வழங்கப்படும். இக்குண தத்துவமே ஆன்மா ஒன்றைச் சிந்திப்பதற்குக் கருவி யாய் நிற்கும் 'சித்தம்' எனப்படும் அந்தக்கரணமாகும். அந்தக் கரணம் ஓர் அகக் கருவி. நன்கு தெரிந்த ஒன்றை மீளமீளச் சிந்திப்பதனால் இன்பமும் துன்பமும் உண்டாகின்றன. ஆகவே, ஆன்மாவின் தன் வேதனைக் காட்சிக்கு இச்சித்தமே கருவியாக அமைகின்றது. மனத்தால் ஆராய்வதற்குரிய எப் பொருளிலும் சித்தம் செல்லுதலால் அதன் வியாபகத்தைக் கடலுக்கும், அதன் செயலைக் கடலின் அலைக்கும், சித்தத் தின்வழிச் செல்லும் உயிர் (ஆன்மா) கடல் அலையால் தாக்குதலுறும் துரும்பிற்கும் ஒப்பிட்டு,

1. இவை: சித்தம், புத்தி, அகங்காரம், மனம் என்பன

*"சித்தமெனும் பௌவத் திரைக்கடலில் வாழ்துரும்பாய்*
*நித்தமலை யாதருளி நிற்கும்நாள் எந்நாளோ?"*

**— எந்நாட். தத்துவ முறைமை 10**

என்று பாடுவர் அடிகள். இதே கருத்தை இன்னொரு பாடலிலும்,

*"ஆழித் துரும்பெனவே அங்குமிங்கும் உன்அடிமை*
*பாழில் திரிவதென்ன பாவம் பராபரமே.*

**— பராபரம் 36**

என்று காட்டுவர். இந்தச் சித்தம் தெளிந்த நிலையில் அமைய வேண்டும் என்று அவாவி நிற்கும் அடிகள்,

*"சித்தம் தெளிந்தோர் தெளிவில் தெளிவான*
*சுத்த சுகக்கடலுள் தோயுநாள் எந்நாளோ?"*

**— எந்நாட். ஆனந்த இயல்பு 2**

என்று பாடுவர்.

புத்தி: குணதத்துவத்தின் ஒரு கூறில் சாத்விக குணம் மிக்குடையதாய்ப் புத்தி என்னும் அந்தக்கரணம் தோன்றும். இஃது ஆன்மா தான் ஐயுற்று நின்ற ஒன்றை இன்னதே எனத் திட்டமாகத் துணிதற்குக் கருவியாகும். புத்தி தத்துவம் இல்லையேல் ஒரு பொருள் 'இன்னது' எனத் திட்டமாக உணரும் நிலை உண்டாகாது. இந்த உணர்வு சவிகற்பஞானம் (பெயர் முதலிய பாகுபாடுகளோடு கூடிய ஞானம்) எனப் பெயர் பெறும். சவிகற்பகமாக உணரும் சிறப்புணர்வு புத்தி தத்துவத்தில் உண்டாவதால், அதுவே பின் துணியப்பட்ட அந்தப் பொருள் வடிவாய்த் திரிந்து (பரிணமித்து) நிற்கும். இதனால் ஆன்மா நேரே பற்றி அநுபவிப்பது புத்தி தத்துவத்தையேயன்றிப் புறப்பொருளையன்று. எனவே, புறத்திலுள்ள கண் முதலிய பொறிகள் வாயிலாகவும், பின் மனத்தின் வாயிலாகவும் புத்தியைத் திரிவுபடுத்தி நிற்பனவேயன்றி ஆன்மாவால் நேரே அநுபவிக்கப்படுதல் இல்லை என்பதை உணர்தல் வேண்டும். தாயுமான அடிகள்,

*"புத்திஎனும் துத்திப் பொறிஅரவின் வாய்த்தேரை*
*ஒத்துவிடா தெந்தையருள் ஓங்கும்நாள் எந்நாளோ?"*
— எந்நாட். தத்துவமுறைமை 8
(துத்தி - புள்ளிகள்)

என்று கூறுவர்.

காரணத்தில் உள்ளது காரியத்திலும் உளதாகும் என்பதை நாம் அறிவோம். எனவே, குண தத்துவத்தினின்றும் தோன்றிய புத்தி தத்துவத்திலும் முக்குணங்கள் உளவாகும். இதனால் அவற்றின் காரியமாகிய கொள்கைகள் பலவும் இப்புத்தியின் கண்ணே தோன்றும். இவை 'பாவகம்' எனப்படும். புத்தியில் தோன்றும் பாவகங்கள் எண்ணிறந்தனவாயினும் அவற்றை எட்டாகத் தொகுத்துக் கூறுவர் சித்தாந்திகள். இவற்றுள் தன்மம், ஞானம், வைராக்கியம், ஐசுவரியம் என்னும் நான்கும் நல்லவையாகும். இவற்றின் மறுதலையாகிய அதன்மம், அஞ்ஞானம், அவைராக்கியம், அநைசுவரியம் என்னும் நான்கும் தீயவையாகும். தன்மம் முதலிய நல்லவை நான்கும் ஒன்றன்பின் ஒன்றாகக் காரண காரிய முறையில் தோன்றி ஐசுவரியம் வந்தவுடன் அதன்மம் முதலிய தீயவை நான்கும் ஒன்றன்பின் ஒன்றாக அவ்வாறு தோன்றி அநைசுவரியம் வந்து நிற்கும். அநைசுவரியம் வந்தவுடன் முன்போலவே 'தன்மம்' என்னும் நல்லது தோன்றும். இங்ஙனம் இப்புத்தி தத்துவம் பலவகைப் பாவகங்கட்குக் காரணமாதலால், உயிர் அப்பாவகங்களின் வழியே நின்று இறைவனை அறியாமல் உலக பாசங்களில் ஒரு சக்கரம் போல் சுழன்று வருந்தும். இதனால்தான் புத்தி தத்துவத்தைப் பல புள்ளிகளையுடைய பாம்பிற்கு உவமிக்கின்றார் அடிகள். புத்தியால் அறிவு உண்டாகும்; அறிவினால் நிலையாதவற்றில் வெறுப்பு உண்டாகும்; அற நெறிச் சென்று செல்வம் பெறும் பொழுது செல்வத்தினால் செருக்கு உண்டாகும்; செருக்கினால் பாவச் செயல் ஏற்படும். பாவச் செயலினால் அறியாமை மிகும்; அறியாமையால் ஆசை மிகும். அதனால் வறுமையும் துன்பமும் ஏற்படும். ஏற்படவே, மீண்டும் அறத்திலும் நல்லறிவிலும் கருத்து

செல்லும். இங்ஙனமாகப் புத்தி தத்துவமாகிய சக்கரத்தில் மீண்டும் மீண்டும் சுழன்று சுழன்று இறைவனை நோக்கி மேற்செல்லாது உயிர் வருந்தும். அதாவது மேற்குறிப்பிட்ட பாவகங்கள் சக்கரத்திலுள்ள ஆரைக் கால்கள்போல் விரைவாக மாறிமாறி வருதலின் உயிர் (ஆன்மா) இப்பாவகங்களில் அழுந்தி இன்பம், துன்பம், மயக்கம் (சுகம், துக்கம், மயக்கம்) என்பவற்றை அடையும். பாம்பின் வாயில் அகப்பட்ட தேரை தப்பிப் பிழைக்க முடியாத நிலையை எய்துதல்போல, புத்தியின் சுழலில் அகப்பட்ட உயிர் உய்தல் அரிது என்பதைக் காட்டுகின்றார் அடிகள். மணிவாசகப் பெருமானும்,

*"அளவிலாப் பாவகத்தால்*
*அமுக்குண்டு இங்குஅறிவின்றி*
*விளைவொன்றும் அறியாதே*
*வெறுவியனாய்க் கிடப்பேனுக்கு"*[2]

என்று கூறியிருப்பது ஈண்டு சிந்திக்கத்தக்கது.

இப்பாவகங்களில் நல்லவை நான்கும் சாத்துவிகக் குணத்தால் உளவாவனவாகும். அவைராக்கியம் ஒன்றே இராசத குணத்தால் உளதாவது. ஏனைய மூன்றும் தாமத குணத்தால் உளவாவன. சாத்துவிகத்தால் இன்பமும், இராசதத்தால் துன்பமும், தாமத்தால் அவ் விரண்டுமின்றியிருக்கும் மயக்கமும் உள்ளனவாம் என்பது அறியப்படும்.

அகங்காரம்: புத்தி தத்துவத்தினின்றும் இராசத குணம் மிக்குடைய அகங்காரம் என்னும் தத்துவம் தோன்றும். இஃது ஆன்மா 'யான் இதனைச் செய்வேன்' என்று அகங்கரித்து எழுச்சியுறுவதற்குக் கருவியாகும். இது 'யான்' என்றும் 'எனது' என்றும் செருக்கினை விளைவிப்பதால் இதனை மதயானையாகவும் உயிர் இதன் வாயிற் கரும்பாகவும் கருதுவர் அடிகள்.

2. திருவா. கண்டபத்து - 8

*''ஆங்காரம் என்னுமத யானைவா யிற்கரும்பாய்*
*ஏங்காமல் எந்தைஅருள் எய்தும்நாள் எந்நாளோ?''*
*— எந்நாட். தத்துவ முறைமை 9*

என்ற பாடலைக் காண்க.

அடுத்து பிறிதொரு பாடலில் (மௌனகுரு - 9) ஆங்கா ரத்தின் இயல்பைத் தெளிவாக விளக்கியுள்ளார்.

*''ஆங்கார மானகுல வேடவெம் பேய்பாழ்த்த*
*ஆணவத் தினிலும்வலிதுகாண்;*
*அறிவினை மயக்கிடும்; நடுஅறிய வொட்டாது;*
*யாதொன்று தொடினும்அதுவாய்த்*

*தாங்காது மொழிபேசும்; அரிகரப் பிரமாதி*
*தம்மொடு சமானமென்னும்;*
*தடையற்ற தேரில்அஞ் சுருவாணி போலவே*
*தன்னில்அசை யாதுநிற்கும்;*

*'ஈங்கார் எனக்குநிகர்?' என்னப்ர தாபித்து*
*இராவணா காரமாகி*
*இதயவெளி எங்கணும் தன்னரசு நாடுசெய்*
*திருக்கும்;இத னொடெந்நேரமும்*

*வாங்கா நிலாதடிமை போராட முடியுமோ?*
*மௌனோப தேசகுருவே!''*

என்பது இப்பாடல். இந்த அகங்காரம் இன்னதென்பதைத் தவத்திரு சித்பவானந்த அடிகள் மிக அற்புதமாக விளக்குவர். எடுத்துக்காட்டொன்றாலும் தெளிவுபடுத்துவர்.[3] அகங்கா ரத்தை தேங்காயின் நாருக்கு ஒப்பிடுகின்றார். இந்த நார் தேங்காய் குரும்பையாக இருக்கும் பொழுது அதனைப் பாதுகாத்து அதன் வளர்ச்சிக்கு உதவுகின்றது. ஆனால், தேங்காயைப் பயன்படுத்தும் பொழுது அந்த நார் தேங்கா யைத் துய்ப்போருக்கு இடைஞ்சலாக அமைகின்றது. அதனை உரித்தெடுப்பதற்குத் தக்க ஆயுதம் பயன்படுத்த

3. சுவாமி சித்பவாநந்தர் - மௌன குருவணக்கம் - பக்.145-147

வேண்டியுள்ளது. அங்ஙனமே, தொடக்கக் காலத்தில் அகங்காரம் உயிர்களின் முன்னேற்றத்திற்குப் பெருந்துணை புரிகின்றது. அகங்காரம் இல்லாவிடில் சிற்றுயிர்கள் பேருயிர்களாகப் பரிணமிக்க முடியாது. இந்த அகங்காரம் என்பது என்ன? தான் அல்லாததைத் தான் என்று கருதுவது அகங்காரம். பாடலில் இஃது ஆங்காரம் என்று சொல்லப்படுகின்றது. இதனையும் எடுத்துக்காட்டால் தெளிவாக விளக்குவர் இராமகிருஷ்ண தபோவனத்து அடிகள். ஒரு மனிதன் விறகுக் கட்டொன்றை விற்பதற்காகத் தெருவில் எடுத்துச் செல்லுகின்றான். அவனுடைய ஊரும் பேரும் மக்களுக்குத் தெரியாது. 'விறகு' என்று அழைத்தால் அதற்கு அவன் செவி சாய்த்து விடையளிக்க ஆயத்தமாகின்றான். அவன் விறகு அல்ல என்பது நமக்கும் தெரியும்; அவனும் அதை அறிவான். ஆனால், விறகைச் சுமந்து செல்லும் அவன் தன்னை விறகுமயமாக எண்ணிக் கொள்ளுகின்றான். இங்ஙனமே சீவான்மாவும் தான் எடுத்திருக்கும் உடலையொட்டி அந்த உடல் மயமாகத் தன்னை உணர்கின்றது. உண்மையில் தான் உடல் அல்ல. தானல்லாத உடலைத் தான் என்று கருதுவதுதான் அகங்காரம். அஃது உடலின் இயல்புகளாகிய நிறம் உயரம் இனம், இடம் முதலியவற்றையெல்லாம் தன்மயமாகக் கருதிக் கொள்வதும் இந்த அகங்காரத்தினாலேயோகும். மனிதனது அந்தக்கரணங்களாகிய மனம், சித்தம், புத்தி முதலியவைகளையும் தன்மயமாக உணர்வது இந்த அகங்காரத்தின் விளைவே. இப்படித் தானல்லாததைத் தான் என்று ஆழ்ந்து பற்றிப் பிடித்திருக்கும் அபிமானத்தை அகற்றுதல் மிகக் கடினமானது. சீவான்மா பரமான்மாவை அடைய வொட்டாது அது பிரித்து வைக்கின்றது. தேங்காயினின்றும் நாரைப் பிரித்தெடுப்பதைப் போன்று இந்தப் பற்றை அகற்றுதல் சிரமமானது. இதனை அகற்றுவதற்கு ஆன்ம சாதகர்கள் அனைவரும் அரும்பாடு பட்டுள்ளனர். இந்தப் பிடிப்பை நியாயப்படுத்துவதற்கு 'தேகாத்மாவாதிகள்' என்ற ஒரு கூட்டமே தோன்றி அதனை ஒரு தத்துவமாகக் கொண்டுள்ளனர்.

தாயுமான அடிகள் அகங்காரத்தின் வலிவுக்கு இரண்டு சான்றுகளை எடுத்துக் கொண்டு விளக்குகின்றார் மேற்காட்டிய பாடலில். முதல் சான்று: குலவேடர். வேடத் தொழில் செய்யும் மனிதனிடம் வல்லியல்பு இயல்பாக அமைந்து விடுகின்றது. உயிர்களிடம் இரக்கம் காட்டும் பண்பு அவனிடம் இராது. அவன் கல் நெஞ்சம் படைத்தவனாக இருப்பான். தலைமுறை தலைமுறையாக வேடத் தொழிலை மேற்கொண்டிருக்கும் குடும்பத்தில் பிறந்துள்ள வேடன்தான் குலவேடன். அந்த இயல்பிலேயே ஊறி வளர்ந்தவன் இவன். (இந்தக் குலவேடர்களில் ஒருவனாகிய கண்ணப்பன் அன்பிற்கு எடுத்துக்காட்டாகத் திகழ்பவன் என்பதை ஈண்டு கருதுக). குலவேடர்கள் பலர் கூடி மான் ஒன்றைத் தாக்குவார்களாயின் அதனிடம் அவர்கள் சிறிதும் இரக்கம் காட்ட மாட்டார்கள். மான் அவர்களிடமிருந்து தப்பிக்க முடியாது. அதைத் தப்பிக்க விடவும் மாட்டார்கள். வேடர்கள் பலர் ஒன்றுகூடி செவ்விய வினையாற்றுவதற்கு ஒப்பாகின்றது ஆங்காரத்தின் செயல். தப்பித்துக் கொள்ள இயலும் சீவனை அது படாதபாடு படுத்துகின்றது.

இரண்டாவது சான்று: வெம்பேய்; கொடூரத் தன்மை வாய்ந்த பேய். கட்புலனாகாதிருந்து கொடிய செயலை ஆற்றுகின்ற இயற்கைச் சக்திக்குப் பேய் என்ற பெயர் வந்துள்ளது. அதற்கு ஓய்வே இல்லை. ஓரிடத்தில் அது கட்டுண்டும் இராது. யாரையும் எப்பொழுதும் துன்புறுத்தும் இயல்பு அதற்கு உண்டு. இத்தகைய வெவ்விய இயல்பு எந்த உயிருக்கு அமைந்திருக்கின்றதோ அந்த உயிரும் பேய்தான். வேடர்கள் செய்கின்ற செயலையும் கொடிய பேய் செய்கின்ற செயலையும் ஒன்று சேர்த்துச் செய்யவல்லது அகங்காரம். அதனிடமிருந்து தப்பித்துக் கொள்ள வல்லவனே தெய்வத்தையடையும் அருகதை உடையவனாகின்றான். ஆன்ம சாதகன் ஒருவன்மீது அது செலுத்தும் ஆதிக்கம் சிறிதேனும் குறையாது. இக்கருத்தைத்தான் அடிகள் 'ஆங்காரமான குலவேட வெம்பேய்' என்று கூறுகின்றார்.

தாவரங்கள் வளர்வதற்குத் துணைக் காரணமாக மண் இருப்பதுபோல, சீவனுக்கு உடல் முதலியன அமைவதற்கு துணைக் காரணமாக இருப்பது ஆணவ மலம்.[4] இது சீவனை அணுப்போன்று நுண்ணியதாக்கி விடுவதாலும், அதனை அஞ்ஞான இருளால் மூடுவதாலும் இதற்கு ஆணவம் என்ற பெயர் வந்தது. அணு என்ற சொல்லிலிருந்து ஆணவம் என்ற சொல் வந்துள்ளது. தானல்லாததனைத் 'தான்' என்று பாவிப் பது அகங்காரம் என்று சொன்னோமல்லவா? உடல் தான் அல்ல. அந்த உடலுக்குத் துணைக் காரணமாக ஆணவம் இருப்பதால் அகங்காரத்திற்கு மூலமாயிருப்பது ஆணவம். மண்ணைவிட அதினின்று உண்டாயிருக்கும் தென்னை நார் வலிதாயிருப்பதுபோல, அதே பாங்கில் மூலகாரணமாயிருக் கும் ஆணவத்தைவிட அகங்காரம் வலிதாயுள்ளது. இக்கோட் பாட்டை 'பாழ்த்த ஆணவத்திலும் வலிதுகாண்' என்று அடிகள் இயம்புகின்றார். ஆணவத்தைப் பாழ்த்தது என்று ஏன் பகர வேண்டும்? சீவன் பரிபக்குவமடைந்து பரமனைச் சேர்கின்ற பொழுது ஆணவம் தானாக அகன்று போய்விடுகின்றது. முக்தியடைகின்றவர்கள் பந்தத்தை உண்டு பண்ணியிருந்த ஆணவத்தை 'பாழ்த்த ஆணவம்' என்று பகர்வதில் பொருள் உண்டு.

சீவர்கள் அனைவருமே அகங்கரித்துள்ளனர் என்பது ஒரு பேருண்மை. ஒரு சீவன் தன்னை மனிதன் என்று அகங்கரிக்கின்றது. மற்றொரு சீவன் தன்னை விலங்கு என்று அகங்கரிக்கின்றது. இன்னும் ஒன்று தன்னைப் பறவையாக நினைத்துக் கொள்ளுகின்றது. எண்ணிறந்த உடலங்கள் சொரூபமாகச் சீவான்மாக்கள் தங்களை எண்ணிக் கொள்வதற் கான மயக்கம் அகங்காரத்தின் செயலாகும். இக்கருத்தையே அடிகள் 'அறிவினை மயக்கிடும்' என்கின்றார்.

4. ஆணவம் - இதன் விரிவான விளக்கத்தை இந்த ஆசிரியர் எழுதியுள்ள **சைவ சித்தாந்தம் - ஓர் அறிமுகம்** (கழகம், 154, டி.டி.கே.சாலை, சென்னை - 600 108) என்ற நூலில் கண்டு தெளிக.

மக்கள் இவ்வுலகில் வாழும் வாழ்வு இருமைகள் நிறைந் தது; இரவும் பகலும் காலத்திலுள்ள இருமைகள்; மலையும் மடுவும் இடத்திலுள்ள இருமைகள். வெற்றியும் தோல்வி யும், மகிழ்ச்சியும் துக்கமும், போற்றுதலும் தூற்றுதலும், புகழ்ச்சியும் இகழ்ச்சியும், இன்பமும் துன்பமும், விருப்பும் வெறுப்பும் - இப்படி எண்ணற்ற இருமைகள். மற்றும் தற்பெருமை, தளர்வு என்று இங்ஙனம் இரண்டு விதமான ஓரங்களில் மனம் சார்ந்து விடும்பொழுது அது நடுவுநிலையி னின்றும் பிறழ்ந்து விடுகின்றது. மகிழ்ச்சியில் மூழ்கி விடுகின் றவனும் துன்பத்தில் மூழ்கி விடுகின்றவனும் நடுவுநிலைமை பிறழ்ந்தவனாகின்றான். இவற்றிற்கெல்லாம் அகங்காரமே காரணமாகின்றது. இருமைகட்கு அடிமை ஆகிவிடாமல், இன்பத்திற்கும் துன்பத்திற்கும் விருப்புக்கும் வெறுப்புக்கும் ஆள் ஆகிவிடாமல், வெற்றி தோல்வி இவற்றில் கட்டுண்டு கிடக்காமல் நடுவுநிலை வகிக்கும் தராசு எடையை உள்ளபடி குறித்துக் காட்டும் முள்போல் மனத்தை இரண்டு எல்லைகட் கும் ஓரம் சாரவொட்டாமல் நடுவுநிலையில் வைத்துப் பழகு கின்றவனே நல்லறிவு படைத்தவனாகின்றான். விவேகம் அவ னிடத்துப் படிப்படியாக ஓங்குகின்றது. ஆனால், நல்லறிவு வளர்ச்சிக்கு தடையாயிருந்து மனத்தடுமாற்றத்தை உண்டு பண்ணுவது அகங்காரம். இதனைத்தான் 'நடுவறிய வொட் டாது' என்கின்றார்.

நடுவறிதலைப் பற்றிய மற்றொரு கோட்பாடும் உண்டு. மானிட வாழ்வில் பிள்ளைப் பருவத்திலிருந்து கிழப்பருவம் வரையில் நடுவாயிருப்பது ஆன்ம சொரூபம். விழிப்பு, உறக்கம், கனவு ஆகிய மூன்று அவத்தைகட்கும் நடுவாயி ருப்பது ஆன்ம சொரூபம். போக்குவரவு முதலியவற்றில் தட்டுப்படாது நடுவாயிருப்பது ஆன்மா. ஆனால், அகங்கா ரம் குறுக்கிடுவதால் அந்த நடுநிலையைச் சாதகன் அறிந்து கொள்ள முடியாதவனாகி விடுகின்றான்.

அகங்காரம் சூழ்நிலைக்கு ஒப்ப விதவிதமான வடிவு எடுக்கின்றது. இதனை முன்னிட்டுச் சீவனுக்கு வருகின்ற வெறியோ மிகக் கொடியது. தான் பிறந்த நாடு, தான் பேசும்

மொழி என்ற கருத்திற்கு அடிமைப்பட்டுத் தற்பெருமை பாராட்டும் இறுமாப்புக்கு மூலகாரணமாக இருப்பது அகங்கா ரம். தன்னுடைய சாதியைப் பற்றியும், குலம் கோத்திரம் பற்றியும், தான் ஆளும் கட்சியில் ஒருவன் என்ற நிலைபற்றி யும் பெருமை பாராட்டிக் கொள்வது மாந்தரது இயல்பு. தான் அல்லாததைத் தான் என்று கருதுவதாலும் தனது அல்லாத வற்றைத் தனது என்று கருதுவதாலும் இத்தகைய செருக்கு கள் உள்ளத்தில் உருவெடுக்கின்றன. இங்ஙனம் உருவெடுக் கும் மனப்பான்மையை மாற்றியமைப்பது எளிதான செய லன்று. இக்கருத்தையும் அடிகள் யாதொன்று தொடினும் அது வாய்த் தாங்காது மொழி பேசும் என்கின்றார். இவை யாவும் அகங்காரத்தின் விளைவுகளாகும். ஒவ்வொரு சீவனும் தான் தான் படைத்துக் கொண்டிருக்கும் அகங்காரத்திற்கு மாறு பட்ட கூற்று எதையும் ஏற்றுக் கொள்வதில்லை. புறம்பான கூற்றைத் தாக்கிப் பேசுவதே அதன் போக்கு ஆகும். இப் போக்கைத்தான் தாங்காது மொழி பேசும் என்று அடிகள் குறிப்பிடுவது.

இவ்வுலகில் இயற்கையாக நடைபெறும் அனைத்திற்கும் மும்மூர்த்திகளே காரணர் ஆகின்றனர். ஆக்கல், அளித்தல், அழித்தல் ஆகிய மூன்று செயல்களும் நிகழாவிட்டால் இயற் கையில் ஒழுங்குப்பாடு இராது. இந்த மூவிதச் செயல்களும் இயற்கையில் சிறியவை, பெரியவை ஆகிய அனைத்தின் வாயிலாகவும் நிகழ்ந்து வருகின்றன. ஒரு சிறிய செடி முளைத்து வளர்ந்து பட்டுப்போதலும், புதிய விண்மீன் தோன்றி நிலைத்திருந்து தேய்ந்து மறைதலும் போன்ற செயல் கள் யாவும் இயற்கையின் நியதிகள். மனிதனுடைய முயற்சி யில் இம்மூவிதச் செயல்கள் நடைபெற்று வந்தாலும், பெயர ளவில்தான் அச்செயல்கட்கு மனிதன் கர்த்தா ஆகின்றான். அவன் மூலமாக நடைபெறும் நிகழ்ச்சிகளையெல்லாம் மும் மூர்த்தியின் செயல்கள் என்றோ பரம்பொருளின் செயல் என்றோ கருதுவதே முறை. ஆனால், அகங்காரம் பிடித்திருக் கும் ஒருவன் அப்படிக் கருதான். அனைத்திற்கும் தான்தான் காரணகர்த்தா என்று நினைத்துக் கௌ்ளுகின்றான். இவை யெல்லாம் அகங்காரத்தின் விளைவு. இத்தகைய அகங்காரத்

தைக் குறித்துத்தான் அரிகரப் பிரம்மாதி தம்மொடு சமானமென் னும் என்று அடிகள் இயம்புகின்றார்.

தேர் ஒன்றின் வடிவம் எப்படி வேண்டுமானாலும் அமையலாம். பெரியது, சிறியது, உயர்ந்தது என்றெல்லாம் நாம் விரும்பியவாறு தேவைக்கேற்றவாறு வெவ்வேறு வித மாக மாற்றியமைக்கலாம். சக்கரங்கள் நன்கு சுழன்று வருவ தற்கான பாங்கை 'நவீன பொறியியல் அறிவைக் கொண்டு சிறப்பாக அமைத்துக் கொள்ளலாம்.[5] கண்ணைக் கவரும் அதன் அலங்காரத்தை வெவ்வேறு விதமாக அமைத்துக் கொள்ளலாம். சக்கரங்களின் அமைப்பும் அலங்காரங்களின் அமைப்பும் பல்வேறு திருத்தங்கள் அமைந்து கொண்டிருப்ப தற்கிடையிலும் சக்கரங்களைத் தாங்கியிருக்கும் அச்சாணி ஒருவித மாறுதலும் அடையாதுள்ளது. அசைந்தியங்கும் தேரில் அஃது அசையாதுள்ளது. அந்த அச்சாணிக்கு ஒப்பா னது மனிதனது அகங்காரம். அடிகள் மானிட உடலை ஒரு தேருக்கு ஒப்பிடுகின்றார். பிறக்குங் குழந்தை வடிவத்திலி ருந்து கிழவன் வடிவம் வரையில் உடல் என்னும் தேர் எத்தனையோ விதமான அலங்காரங்களைக் கண்டுள்ளது. அது வெவ்வேறு இடங்கட்குச் சென்றுள்ளது. உடல் வாழ்க் கையில் அமையும் மாறுதல்கள் அனைத்திற்கும் அடிப்படை யாயிருந்து உறுதி தருவது அகங்காரம். அகங்காரத்தின் வலி வினால் தான் உயிர்களனைத்தும் உடல் வாழ்க்கையைக் கொண்டு செலுத்தி வருகின்றன. உடல் வாழ்க்கையைக் கடந்து அப்பாலுள்ள நிலைக்குச் செல்ல முயல்பவர்கட்கு அந்த அகங்காரம் ஒரு பெருந்தடையாக - பேரிடைஞ்சலாக - ஆகின்றது. இக்கருத்தை 'தடையற்ற தேரில் அஞ்சுருவாணி போலவே தன்னில் அசையாது நிற்கும்' என்கின்றார் அடிகள். அச்சாணியைத்தான் அடிகள் 'அஞ்சுருவாணி' என்கின்றார்.

இராமாயணத்தில் இராவணனைப் பற்றியும் நன்கு தெரிந்து கொள்ள வேண்டும். இவனுடைய பாங்குகளை யெல்லாம் நன்கு அறியாவிடில் இராமனையும் நாம் முழுதும்

5. மிகப் பெரிய தேராகிய திருவாரூர் தேரின் சக்கரங்களுக்கு Ball bearing அமைத்தது கலைஞரின் மூளை என்பது ஈண்டு நினைவுகூரத்தக்கது.

அறிந்து கொள்ள முடியாது. இராவணன் இல்லையெனில் இராமாயணமே இல்லை.[6] அவன் பத்துத் தலைகளையும் இருபது கைகளையும் உடையவன். தன் விருப்பம் போன்று ஒன்று, இரண்டு அல்லது அதற்கு மேற்பட்டுப் பத்து வரையில் எத்தனை தலைகளுடன் வேண்டுமானாலும் அவன் தன்னைத் தோற்றுவித்துக் கொள்ள முடியும். விரும்பியவாறு வடிவமும் எடுத்துக் கொள்ள வல்லவன். கொடிய அகங்காரத்துடன் கூடிய மனம் இராவண சொரூபம் படைத்தது. அடிகள் 'இராவணாகாரம்' என்கிறார். 'இராவணாகாரம்' என்பது இராவண வடிவம் என்பது பொருள். மனம் ஞானேந்திரியங்கள் ஐந்து, கர்மேந்திரியங்கள் ஐந்து ஆகப் பத்து இந்திரியங்களையும் தனித்தனியாகவும் தொகுத்தும் பயன்படுத்த வல்லது. பத்து வரையில் எத்தனை தலைகளுடன் வேண்டுமானாலும் தோன்றவல்லவன் இராவணன் என்ற கருத்து இதுவேயாகும். இராவணனுடைய தலைகளை வெட்ட வெட்ட அவை புதிய வடிவத்துடன் முளைத்துக் கொண்டே போகின்றன. அகங்காரத்தின் போக்கும் அத்தகையது. விவேகத்துடன் ஆன்ம சாதகன் அதனை அழித்துக் கொண்டே போனாலும், அகங்காரம் புதிய புதிய வடிவங்களை எடுத்துக் கொண்டே போகின்றது. மனத்தின் திறமைக்கு எடுத்துக்காட்டாக இருபது கைகள் வரை அந்த அரக்கனுக்கு அமைந்துள்ளன.

மனம், விழிப்பு, கனவு, சுழுமுனை ஆகிய மூன்று நிலைகளிலும் ஆட்சி புரிகின்றது. இராவண வடிவமாக மனம் கருதப்படும்பொழுது மூவுலகிலும் அதன் ஆட்சி செல்லுகின்றது என்று சொல்லப் பெறுகின்து. தன்னிடத்து எல்லா ஆற்றலும் உள்ளது என்றும், தனக்கு நிகராக வேறு யாரும் இல்லையென்றும் இராவணன் சொல்லிக் கொண்டதைப் போன்றே அகங்காரத்தினையுடைய மனமும் பகர்கின்றது.

6. இராவணனின் சிறப்பால்தான் இராமனின் சிறப்பு ஓங்கி நிற்கிறது என்று ஒரு சமயம் 1977 - திருப்பதி இராமாயணக் கருத்தரங்கில் ஆந்திரப் பேரறிஞர் பெசவாடா கோபால ரெட்டி கூறியது நினைவுக்கு வருகிறது.

இக்கருத்துக்களைத்தான் அடிகளும் 'ஈங்கார் எனக்கு நிகர் எனப் பிரதாபித்து இராவணாகாரமாகி இதயவெளி எங்கணும் தன்னரசு நாடு செய்திருக்கும்' என்று அகங்காரத்தின் திற மையை எடுத்துக் காட்டுகின்றார். தங்குதடையின்றித் தன் கருத்தை வெளியிடுவது 'பிரஸ்தாபித்தல்' என்பது. இதுவே கவிதையில் 'பிரதாபித்தல்' என்ற திரிவு வடிவம் கொள்ளுகின் றது.

உள்ளத்தில் இருக்கும் பெருவெளியை 'இதய வெளி' என்று சொல்லுவது மரபு. அந்த இதயவெளியில் தான் மேற்குறிப்பிட்ட விழிப்பு, கனவு, சுழுமுனை ஆகிய மூன்று அவத்தைகளும் (நிலைகளும்) நாடோறும் மாறி மாறி வருகின் றன. இந்த மூன்று நிலைகளின் மீதே ஆங்காரம் தன் ஆதிக்கத் தைச் செலுத்தி வருகின்றது. இராவணன் மூன்று உலகங்களி லும் தன் ஆதிக்கத்தைச் செலுத்தி வந்தான் என்பது ஐதிகம். அவனுக்கு நிகராக இந்த மூன்று அவத்தைகளின்மீதும் அகங் காரம் தன் ஆணையைச் செலுத்தி வருகின்றது.

அகங்காரத்தைப்பற்றி இன்னோர் உண்மையையும் நாம் அறிதல் வேண்டும். தானல்லாததனைத் தான் என்று கருது வது அகங்காரம் என்பதனை நாம் அறிவோம். உடலும், அந்தக் கரணங்களாகிய மனம் சித்தம் புத்தி முதலியனவும் புறக்கரணங்களாகிய கண், காது, வாய், மூக்கு முதலியனவும் ஆன்மாவின் உண்மை சொரூபமல்ல. ஆனால், இவை யாவற்றையும் உண்மை சொரூபமாகக் கருதுவதனால் சிற்று யிர்கள் பேருயிர்களாக பரிணமிக்கின்றன. அங்ஙனம் பரிண மித்து வரும் நிலையில் ஆங்காரம் முற்றிலும் அவசியமாகின் றது. அகங்காரம் இல்லையாயின் சிற்றுயிர்கட்கு முன்னேற் றம் இல்லை. மேலே குறிப்பிட்ட தென்னங் குரும்பையின் நிலையை மீண்டும் சிந்திக்கின்றோம். இதில் தொடக்க நிலை யில் மேல்நார், உள்ளிருக்கும் பருப்பு, ஓடு முதலியன வேறுபாடற்ற நிலையிலுள்ளன. முற்றிலும் முதிர்ந்த பின் னரே இவற்றிற்கிடையில் வேற்றுமை தெரிகின்றது. பிறகு தேங்காய் நாரினின்றும் பிரித்தாக வேண்டும். அகங்காரம் தென்னை நார் போன்றது. நல்ல மானிட நிலையை அடை

யும் வரையில் அகங்காரம் பெருந்துணை புரிகின்றது. மனி தன் உடல் சொரூபமல்லன்; அவன் ஆன்ம சொரூபமுடைய வன். இந்த ஆன்ம சொரூபம் பரமான்மாவுக்கு உரியது என்னும் ஞானத்திற்கு சீவன் தன்னைப் பக்குவப்படுத்திக் கொள்ள வேண்டும். இந்த முயற்சியில் அவன் ஈடுபடுகின்ற பொழுதுதான் 'தான்' ஆன்ம சொரூபமல்ல; உடல் சொரூபம் தான் என்று நினைக்கின்ற அகங்காரம் முன்னணியில் நின்று கொண்டு அவனுடைய ஆன்மசாதனத்திற்குப் பெருந்தடை செய்கின்றது. எவ்வளவு முயன்றாலும் தேகாத்ம புத்தி அல்லது தன்னைத் தேகம் என்று கருதுகின்ற அகங்காரம் அகலுவ தில்லை. இக்கருத்தை 'இதனோடு எந்நேரமும் வாங்கா நிலா அடிமை போராட முடியுமோ?' என்று அடிகள் வினவுகின்றார். 'வாங்கா நிலா' என்பதற்கு 'விலகியிருக்காமல்' என்பது பொருளாகின்றது. உடல் 'நான்' என்கின்ற உணர்விலிருந்து விலகியிருப்பதற்கு மாறாகத் தன்னை உடல்மயமாக எண் ணிக் கொண்டு விதவிதமான இன்னல்கட்கு ஓயாது ஆளா வது பொருந்துமா என்பது இதன் கருத்து.

அடிகளார் பிறிதோர் இடத்தில்,

*''நானென்னும் ஓர்அகந்தை எவர்க்கும் வந்து*
*நலிந்தவுடன் சகமாயை நலியா வாகித்*
*தான்வந்து தொடரும்; இத்தால் வளரும்துன்பச்*
*சாகரத்தின் பெருமைஎவர் சாற்ற வல்லார்''*

**— ஆகாரபுவனம் - 15**

என்று பேசுவர். 'நான்' என்னும் அகந்தை தரும் துன்ப சாகரத்தை எடுத்துக்காட்டுகின்றார். இன்னும், மிகவும் கவ லையுடன் இறைவனை வினவுகின்றார். ''நான், நான்'' சொல் லித் திரியும் ஓர் அகந்தையை எனக்குக் கொடுத்துவிட்டு என்னை இந்நிலையில் வைக்க வேண்டுமா? இதனால் என் இரு வினைகளை ஈட்ட வேண்டுமா? இதனால் உடலை ஒரு சுமையாகத் தாங்கிக் கிடந்து உழலுமாறு செய்ய வேண் டுமா? இந்த 'உடற்பாரத்தினுள்' உயிரையும் உள் வைத்து வேடிக்கை பார்க்கின்றாயா?'' என்கிறார்.

*''நான்நான்''இங் கெனும்அகந்தை எனக்கேன் வைத்தாய்?*
*நல்வினைதீ வினைஎனவே நடுவே நாட்டி*
*ஊனாரும் உடற்சுமைஎன் மீதேன் வைத்தாய்?*
*உயிர்எனவும் என்னைஒன்றா உள்ஏன் வைத்தாய்?''*
**— பன்மாலை 5**

என்ற பாடற் பகுதியில் இதனைக் காணலாம். இராவணனுக்கும் அகங்காரத்திற்கும் வாசி (வேற்றுமை) இல்லை. சீதாப்பிராட்டி சிறையிலிருந்த பொழுது இராவணனைச் சிறிதும் நினையாது சதா இராமச் சிந்தனையிலேயே ஆழ்ந்திருக்கின்றார். இராவணன் தன்னை வெல்ல வந்தபொழுது அவனைத் துரும்பென மதித்து மிகத் திறமையுடன் முறியடித்துவிட்டுத் திரும்பவும் இராமச் சிந்தனையிலேயே ஆழ்ந்து விடுகின்றார். ஆன்மசாதகர்கள் பிராட்டி கொண்ட செயலைக் கடைப்பிடிக்க வேண்டும். அகங்காரத்துடன் போராட வேண்டியதில்லை. சித்தமிசைக் குடிகொண்டுள்ள அறிவான தெய்வத்திடம் பரிந்து விண்ணப்பித்து அவனை விடாது வழுத்துவதே சாதகனின் கடமையாகக் கொள்ள வேண்டும். அவன் இறைவனைச் சாரச்சார அகங்காரத்தின் வேகம் தணிந்துவிடும்.

ஆங்காரம் - ஆணவ மலம்: தாயுமானவர் பாடல்களில் சிலவற்றில் ஆங்காரத்தை ஆணவ மலத்தோடு இசைத்துக் கூறுதலையும் காண முடிகின்றது. ஆணவத்தையும் ஆங்காரத்தைப் போலவே பேயெனவே அடிகள் கூறுகின்றார்.

*''கெட்டவழி ஆணவப்பேய் கீழாக; மேலான*
*சிட்டர்உனைப் பூசை செய்வார்; பராபரமே!''*
**— பராபரம் - 152**

என்ற பாடலைக் காண்க. பற்றினதையே பற்றும் செயலுக்கு ஆணவமே காரணம் என்பது அடிகளாரின் கருத்து.

*''சொன்னதைச் சொல்லித் துடிக்கின்ற ஆணவப்பேய்க்(கு)*
*இன்னல்வருவ தெந்நாள்? எந்தாய்! பராபரமே!''*
**— பராபரம் 159**

*"பிடித்ததையே தாபிக்கும் பேரா ணவத்தை*
*அடித்துத் துரத்தவல்லா ரார்காண் பராபரமே!"*

— *மேலது 306*

என்ற பாசுரங்களில் இக்கருத்தைக் கண்டு தெளியலாம்.

அடிகளார் பிறிதோர் இடத்தில் இறையடியார்களைப் பற்றிக் குறிப்பிடுமிடத்து (ஆனந்தமானபரம் - 7) இந்த ஆணவ மலத்தை வேரறக் களைந்தவர்கள் அடியார்கள் என்று சுட்டி அவர்களின் இணக்கத்தை வேண்டுகின்றார். இங்கு ஆணவ முடைய நெஞ்சை கரியகாடாக உருவகிக்கின்றார். அடியார் கள் இக்காட்டை வேரறக் களைந்து வெளியாக்குகின்றனர். தரையின்கீழ் பதிந்து கிடக்கும் அகங்காரம் என்னும் கல்லி னைப் பிளந்தெறிகின்றனர். இதன்பிறகு இந்த நெஞ்சுவெளி யினைத் திருத்தி ஞான முடிவாகிய மோன விதையை விதைக் கின்றனர். இதற்கு அன்பெனும் நீரைப் பாய்ச்சுகின்றனர். அது பயிராகும்வரை மயக்கத்தை விளைவிக்கும் மாயா காரி யங்களாகிய வலிய பறவைகள் அணுகாத வண்ணம் நேர்மை யுடன் பாதுகாக்கின்றனர். இந்த ஆன்மிக வேளாண்மையில் விளைந்த சிவபோகத்தை மாந்திக் களிக்கின்றனர். "இத்தகைய அன்பர் இணக்கம் அடியேனுக்குக் கிடைக்குமாறு செய்வதே தங்கள் பொறுப்பு" என்கின்றார்.

அகங்காரம் பற்றி வேதாந்திகள் இன்னொரு முறையிலும் சிந்தித்துள்ளனர். மனிதனை உலக வாழ்க்கையில் கட்டி வைக்கும் முளை அகங்காரமாகும். 'ஆங்கார முளை' (மௌன குரு - 1) என்று அடிகள் கூறுவர். அகங்காரம் இருக்கும் வரையில் மனிதன்[7] பந்தபாசங்கட்கு ஆளாகின்றான். அகங் காரம் இருக்கும் வரையில் மனிதனுக்கு இறைவன் காட்சி தருவதில்லை. இராமகிருஷ்ண பரமஹம்சர் அதை இரண்டு வகைப்பட்டதாகப் பிரித்துக் காட்டுவர். 'பழுத்த அகங்காரம்' என்பது ஒன்று. 'பழுக்காத அகங்காரம்' மற்றொன்று. முதல் வகை அகங்காரம் மனிதனுக்குத் தீங்கு விளைவிக்காது. அது ஒருவகையில் அவனது முன்னேற்றத்துக்குத் துணை புரி

7. அகந்தைக் கிழங்கை அகழ்ந்தெடுக்கும் தொழும்பர்' (மீனா. பிள்ளைத் தமிழ் - 61) என்பர் குமரகுருபர அடிகள். ஈண்டு அவர் அகங்காரத்தை கிழங்காக உருவகிக்கின்றார் (தொழும்பர் - அன்பர்)

கின்றது. 'நான் இறைவனுடைய அடியான்; நான் இறைவனுக்கு உரியவன்' - ஒரு மனிதன் தன்னை இப்படி அகங்கரிப்பானாகில் அதில் கேடு ஒன்றும் விளைவதில்லை.[8] இது பழுத்த அகங்காரம். பழுக்காத அகங்காரம் வீண் கர்வம் படைத்தது. 'என்னை யார் என்று தெரியுமா? உன்னை ஒரு கை பார்க்கின்றேன், பொறு' - இப்படிப் பகர்வது அதன் இயல்பு. அது மனிதனை புதிய பாசங்களில் ஆழ்த்துகின்றது.[9]

அகங்காரம் என்ற ஒன்று மனிதனிடம் அமையாவிடின், அவன் எந்தச் செயலிலும் செல்லுவதற்கு எழுச்சியற்றவனாகி விடுவான். இது சாத்துவித அகங்காரம், இராசத அகங்காரம், தாமத அகங்காரம் என மூன்றாகி நிற்கும். இவற்றுள் சாத்துவித அகங்காரம் தைசதாகங்காரம் என்றும், இராசத அகங்காரம் வைகாரிகாகங்காரம் என்றும், தாமத அகங்காரம் பூதாதி அகங்காரம் என்றும் பெயர்களைப் பெறும்.

**மனம்:** இந்த அந்தக்கரணம் தைசதாகங்காரத்தினின்று முதற்கண் தோன்றும். இது புறக்கருவிகளாகிய மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐம்பொறிகளால் கவரப்பெற்று ஊறு, சுவை, உருவம், நாற்றம், ஓசை என்னும் புலன்களை ஆன்மா பற்றுதற்கும், பின் புத்தி தத்துவத்தால் அறுதியிடப் பெற்றவற்றை நினைவில் வைத்துக் கொள்ளுவதற்கும் உரிய கருவியாகும். முன்பு புத்தி தத்துவத்தால் அறுதியிடப் பெற்ற பொருளின் பெயர், சாதி, குணம், கன்மம், உடைமை என்பவற்றின் நினைவு மனத்தின்கண் தங்கிக் கிடப்பதால் அப்பொருளேயாயினும், அதனோடு ஒருங்கொத்த அவ்வினப் பொருளாயினும் மீளவும் புறக்கருவிகட்குப் புலனாகும்பொழுது 'இஃது இன்ன பொருள் போலும்' எனப் பொதுவாக நினைத்தும் பின் 'இஃது இப்பொருள் தானோ? அன்றோ?' என ஐயுற்றும் நிற்கும். 'இஃது இன்ன பொருள் போலும்' எனப் பொதுவாக நினைத்தல்' சங்கற்பம் என்றும், 'அஃது ஆமோ?

8. வைணவர்கள் இந்த உறவினை **'ஸ்வஸ்வாமி'** (சொத்தும், சொத்துக்குரியவன்) உறவு என்று கூறுவர்.
9. சுவாமி சித்பவானந்தர்: **மௌனகுரு வணக்கம்** - பக்கம் 5 காண்க.

அன்றோ?' எனக் கவர்த்து நிற்றல் 'விகற்பம்' என்றும் வழங்கப்பெறும். இவற்றுள் பின்னது 'ஐயம்' என்றாலும், முன்னதும் ஐயத்தின்பாற்பட்டதேயாகும். ஆகவே, சங்கற்ப விகற்பங்களால் ஐயுற்று நிற்கும் கருவி மனமே என்பதும் மனம் இங்ஙனம் பற்றி நின்று ஐயுற்ற பொருளைப் பின்னர் புத்தி இன்னதெனத் துணியும் என்பதும் நாம் ஈண்டு அறிந்து தெளிய வேண்டியவையாகும்.

இன்னோர் உண்மையும் நாம் உளங்கொள்ள வேண்டிய தாகின்றது. முன்னர் அறியப்பெற்ற பொருளையே பின்னர்க் காண நேரிடுங்கால் முன்னர் ஐயம் தோன்றிப் பின்னர் துணிவு பிறக்கும். அவ்வாறன்றிப் புதிதாக ஒரு பொருளைக் காண நேரிடின் 'இது யாது? என்ற அவாய் நிலையன்றி ஐயமும் துணிவும் தோன்றா. அப்பொழுது அப்பொருளை அறிந்தான் ஒருவன். 'இஃது இன்னது' என்று அறிவித்தவழி துணிவு பிறக்கும். சிலசமயம் புத்தி தத்துவம் ஒரு பொருளை மற்றொரு பொருளாக மாறித் துணிதலும் உண்டு. இது துணிவு அன்று; திரிவு (விபரீதம்) என்பது அதன் பெயர். புத்தி நன்மை, தீமை என்ற இரண்டற்கும் பற்றுக் கோடாதலின் திரிபு அதன்கண் குற்றமாய் நின்று, பிறகு மெய்ம்மையால் போக்கப் பெறும். அந்தக்கரணங்களின் தோற்றம் 'சித்தம், புத்தி, அகங்காரம், மனம்' என்றாலும், அதனை 'மனம், புத்தி, சித்தம், அகங்காரம்' என்று கூறுதலே முறையாய் உள்ளது. அதற்குக் காரணம் என்ன? ஐம்பொறிகளால் அறியப்பெற்ற பொருளை மனம் முதற்கண் பற்றி ஐயுறுதலும், அதன் பிறகு புத்தி ஐயத்தின் மறுதலையாகிய துணிவைச் செய்தலும், அதன் பின்னர்ச் சித்தம் புத்தியால் துணியப் பெற்றவற்றை மீளமீளச் சிந்தித்து இன்பதுன்பங்களை எய்து வித்தலும், அகங்காரம் எல்லாவிடத்தும் 'யான் இதனை ஆராய்வேன், இதனைத் துணிவேன், இதனைக் கொள்வேன் அல்லது புறக்கணிப்பேன்' என இம் முறையில் செயற்படு தலே யாகும்.

தைசதாகங்காரத்தினின்றும் மனம் தோன்றிய பின்னர் ஞானேந்திரியங்களும் (மெய், வாய், கண், செவி, மூக்கு) இவற்றையடுத்து, வைகாரிகாகங்காரத்தின்று கன்மேந்திரியங் களும் (வாக்கு, பாதம், பாணி, பாயு, உபத்தம்)[10] தோன்றும். தாமதாகங்காரத்தினின்றும் சுத்தம், பரிசம், ரூபம், ரசம், கந்தம்[11] என்னும் தந்மாத்திரைகள் தோன்றும். தந்மாத்திரை என்பது, 'அதனளவாய் நிற்றல்' என்று பொருள் படும். அதாவது வேறொன்றோடும் கூடாது, 'தனித்து நிற்றல்' என்பதாகும். பூதங்கள் நேரே தூலமாய்த் தோன்றாமல் முதற்கண் தந்மாத் திரை வடிவில் தோன்றிய பின்னரே பூதவடிவில் தோன்றும். பூதங்களின் சூக்குமநிலையே தந்மாத்திரையாதல்பற்றி அவை 'சூக்கும பூதம்' எனவும் வழங்கும். அதனால் பூதங்க ளைத் (நிலம், நீர், தீ, வளி, விசும்பு என்பவற்றை) தூலபூதம் என்றும், மகாபூதம் எனவும் வழங்குவர்.

பூதங்களை அறியும் ஐயறிவு ஐம்புலன்களாகும். ஐயறி வாகிய ஐம்புலன்கள் வழியாக மனம் செல்லுங்கால் அஃது உலகப் பற்றில் ஈடுபடும். மனமே ஆன்மா உலகத்தை ஆராய்வதற்குக் கருவியாக உள்ளது. எல்லா விதமான நினை விற்கும் மனம் இடமாக இருத்தலாலும் உலகில் கண்ட வற்றை மனம் தன்னில் பதிவு செய்து மீண்டும் ஆன்மா அவற்றை நினைப்பதற்குக் காரணமாயிருத்தலாலும், மனத்தி னைத் தாயுமான அடிகள் பெரியதொரு மாயாதத்துவமாகக் கருதுவர். 'வல்லமையே காட்டுகின்ற மாமாயை' (பராபரம் - 165) என்றது காண்க. இத்தத்துவத்தின் இயல்புகளைப் பல பாடல்களில் விளக்குவார் அடிகள்.

மனமும் இந்திரியங்களும்: மனம் ஐம்புலன்களால் கெடு வதை திவ்விய கவி பிள்ளைப் பெருமாள் அய்யங்கார்,

10. இவை தமிழில் முறையே **மொழி, கால், கை, எருவாய், கருவாய்** என்றும் வழங்கப்பெறும்.

11. ஓசை, ஊறு, உருவம், சுவை, நாற்றம் என்பது தமிழ்

*''மறக்கும்ப தந்தியும் சேலும்*
*அசுணமும் வண்டினமும்*
*பறக்கும் பதங்க மும்போல்*
*ஐவராற் கொடும்பாதகரே''*[12]

என்று காட்டுவது ஈண்டு நினைத்தல் ஆகும். மனம் ஐம்புலன் களின் ஆசையால் கெடுவதற்கு யானை, மீன், அசுணம், வண்டு, விட்டில் ஆகிய ஐந்து பிராணிகளின் உவமை கூறப் பெற்றுள்ளன. யானை 'ஊற்றுணர்ச்சியால்' அழியும். யானை யைப் பிடிக்கும் வேடர்கள் காட்டில் ஒரு பள்ளம் பறித்து அதன் ஒரு புறத்தில் ஒரு பெண் யானையை நிறுத்திக் குழியைத் தழை முதலியவற்றால் மறைப்பர். மறுபுறத்தில் ஆண் யானை பெண் யானையைக் கூடும் விருப்பால் ஓடிவ ருகையில் குழியில் வீழ்ந்து மேலேறமாட்டாது அகப்பட்டுக் கொள்ளும். பிறகு அதனைத் தந்திரமாக விலங்கிட்டு மேலேற் றித் தம் வசப்படுத்திக் கொள்வர் எயினர்கள். மீன சுவையால் அழியும். தூண்டிலில் வைக்கப்பட்ட தசையை உண்ண வேணடும் என்ற அவாவினால் மீன் விரைந்து வந்து அதில் வாயினை வைத்து அம்முள்ளில் மாட்டிக் கொள்ளும். மீள மாட்டாத மீனை வலைஞர் எடுத்துத் தம் கூடையில் போட் டுக் கொள்வர். இங்கு மீன் வாய் (நாக்கு) என்னும் பொறிக்கு ரிய சுவையின்பத்தின் ஆசையால் அழிந்தது.

அசுணம் ஒலியால் அழியும். அசுணம் இசையறி குறிஞ்சி நிலப் பிராணி. இதனைப் பிடிக்க விரும்பும் குறவர்கள் நிலவுகாயும் மாலைப் பொழுதில் வேய்ங் குழல் முதலியவற் றால் இன்னோசையை எழுப்புவர். அந்த இசையைச் செவிம டுத்துக் களிப்படைய விரும்பிய பறவைகள் அவ்வின்னிசை யைச் செவியிலேற்றுத் தம்மை மறந்த நிலையில் இருக்கும் பொழுது அக்குறவர்கள் பறையோசையை முழக்குவர். அவ் வல்லோசையைக் கேட்டவுடன் அப்பறவைகள் இறந்துப டும். அவற்றை அவர்கள் எடுத்துச் செல்வர். இது செவியென்

12. திருவேங்கடத் தந்தாதி - பாடல் 28. கும்பம் - மத்தகம்; தந்தி - யானை; சேல் - மீன்; அசுணம் - ஒருவகைப் பறவை; பதங்கம் - விட்டில்

னும் பொறிக்குரிய ஓசையின்பத்தின் ஆசையால் அழிந்தது. வண்டு மணத்தால் அழியும். வண்டுகள் மலர்களின் நறுமணத்தை அவாவித் தாமரை முதலிய பெருமலர்களில் வந்து தங்கும். அம்மலர்கள் குவிந்து கொள்ளுங்கால் வண்டுகள் மலர்களில் அகப்பட்டுத் தவிக்கும். அன்றியும், சண்பக மலரின் நறுமணத்தையும் அதன் நறுந்தேனையும் நுகரும் விருப்பால் அதனை அணுகி மொய்த்து அம்மலரின் வெப்பம் தாங்க முடியாமல் இறந்துவிடும். மற்றும் நறுமண நசையால் தேனில் மொய்த்து அதனை மிகுதியாக உண்டு மயங்கி மீள மாட்டாது சிக்கி அழிதலும் உண்டு. இது மூக்கு என்னும் பொறிக்குரிய நாற்றவின்பத்தின் ஆசையால் அழிந்தது.

விட்டில் ஒளியால் அழியும். இதனையும் விளக்குவோம். விட்டில் பூச்சி விளக்கொளியைக் கண்டவுடன் அதனிடத்து அவாவோடு ஓடிவந்து விழுந்து இறந்து படும். இது கண் என்னும் பொறிக்குரிய ஒளியின் ஆசையால் அழிந்தது. ஆயின் மனிதன் ஐம்புலன்களையும் ஒரு சேர நுகரத் தொடங்கி அழிந்து படுகின்றான். இங்ஙனம் ஐந்து புலன்களால் மக்கள் அழிந்துபடுவதைக் கூறுகின்றார் திவ்விய கவி.

இந்த உலகம் பலவிதமான பற்றுகளுக்கு இடங்கொடுக்கின்றது. ஒவ்வோர் உயிரும் ஒருவித உடல் பற்றுக்கு இலக்காகின்றது. அதில் சலிப்பு ஏற்பட்டதும் மற்றோர் உடலை எடுக்க அவ்வுயிர் முந்துகின்றது. இங்ஙனம் உலகம் முழுதும் பற்று மயமாக உள்ளது. ஒரு சீவனுடைய வாழ்க்கையை ஆராய்ந்து பார்த்தால் பற்றுதலுக்குக் காரணமாக இருப்பது 'மனம்' என்பது தெளிவாகின்றது. இதன் காரணமாக உயிர்கள் அனைத்தும் விதவிதமான பற்றுதல் வைத்து வாழ்கின்றன. உயிர் ஒன்று எதனிடம் பற்று வைக்கின்றதோ அஃது அதுவாய் நாளடைவில் மாறி விடுகின்றது. கணக்கற்ற பிறவிகளில் உடல்கள் கணக்கற்ற உயிர்களை எடுப்பதற்குப் பற்று ஒன்றே முதற் காரணமாகின்றது. புழுவொன்றின் வாழ்வைக் கவனித்தால் அஃது இடம் மாறிப் போதலில் சிறப்பு அம்சம் ஒன்று உண்டு. சரடு போன்று நீண்ட உடல் படைத்திருக்கும் அது தன் உடலின் ஒரு பகுதியைக் கொண்டு ஓரிடத்தைப்

பற்றிப் பிடித்துக் கொண்டு தன் உடலின் மற்றப் பகுதியினால் புதிய இடத்தைத் தாவிப் பிடிக்கும். அப்படிப் புதிய பற்றுக்கோடு கிடைத்ததும் அது பழைய இடத்தைத் தவிர்க்கின்றது. இப்போக்கில்தான் சீவர்கள் கணக்கிலடங்காத உடல்களிலும், வாழ்க்கை முறைகளிலும் பற்றுதல் வைத்து தங்கள் வாழ்க்கையை நடத்தி வருகின்றனர்.

உயிர்களில் மனித மனம்தான் சிறந்தது. ஆனால், மனத்தின் தொடக்க நிலையின் அறிகுறிகள் சிற்றுயிர்களிடத்தும் உள்ளன. மனிதனிடத்து மனம் மிகவும் பக்குவமடைந்த நிலையில் உள்ளது. இந்த மனத்துடன் அவன் எதைப் பற்றிப் பிடிக்கின்றானோ அதன்மயமாகி விடுகின்றான். 'உலகப் பொருள்களைப் பற்றினால் அவன் உலகமயமாகின்றான். இறைவனுடைய அருளைப் பற்றினால் அவன் இறைவன் மயம் ஆகின்றான்.'[13] நல்ல மனத்தைப் பெற்றானபிறகு அதன் துணை கொண்டு அருளைப் பற்றாது அழிந்துபோம் பொருள்களைப் பற்றுவானாகில் அவன் மனம் பாழும் சிந்தை ஆய்விடுகின்றது. உலகப் பொருள் யாவும் காலக்கிரமத்தில் பாழாய்ப் போய்விடுகின்றன. பாழாகப் போகும் சிந்தையைப் 'பாழும் சிந்தை' என்று பகரலாமன்றோ? பற்றுதல் மயமாகி இருக்கும் சிந்தையைக் கொண்டு இறைவனைப் பற்றுதல் வேண்டும்.

*''பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்*
*பற்றுக பற்று விடற்கு''*[14]

என்பது தமிழ் மறை. ஆனால், பொல்லாத மனம் அவ்வரிய செயலைச் செய்வதில்லை. இறைவனிடத்துப் பற்று வைக்கின்றவர்கட்கு இறைவனே கிட்டுவன் என்பதைத் திரும்பத் திரும்பக் கூறிக் கொண்டிருந்தால் இறைவன் பற்று சிறிது

13. **சார்ந்ததன் வண்ணமாதல்** - என்ற சைவ சித்தாந்தக் கருத்துடன் வைத்தெண்ணக் கூடியது. அதாவது பசு (ஆன்மா) இறைவனைச் சாருங்கால் இறைவனாகவும், பாசத்தைச் சார்ந்தால் பாசமாகவும் மாறும். நிலத்தில் பால் நீர் திரிற்றாகும்' (குறள் - 452) என்றார் வள்ளுவர் பெருமானும்.
14. குறள் - 350 (துறவு)

சிறிதாக உண்டாகும். ஆனால், மானிட சிந்தை இதற்கு இடம் தருவதில்லை. பயன்படாத பாழ்த்த பொருள்களைப் பற்றியே பகர்ந்து கொண்டிருப்பதற்கு அது தூண்டுகின்றது. இக்கருத்துகளைத் தொகுத்து அடிகள்,

*"பற்றுவெகு விதமாகி ஒன்றைவிட் டொன்றனைப்*
*பற்றிஉழல் கிருமிபோலப்*
*பாழ்ஞ்சிந்தை பெற்றநான் வெளியாக நின்னருள்*
*பகர்ந்தும்அறி யேன்."* — மௌனகுரு 10

என்று கூறுவர்.

மேலும், அவர் ஐம்புலன்களின்வழிச் செல்லாது மனம் உலகொடு கலந்துள்ள முதல்வன்பாற் சென்றால் திருத்தமடையும் எனக் கருதுகின்றார்.

*"வேட்டைப் புலையர் மேவாத வண்ணம்மனக்*
*காட்டைத் திருத்திக் கரைகாண்ப தெந்நாளோ?"*
— எந்நாட். தத்துவமுறைமை - 6

என்ற கண்ணியில் இதனைக் காணலாம். மனம் திருந்தி அதன்கண் திருவருளாகிய மரம் முளைத்து வளருமாயின் அம்மரத்தின் அடியில் இறைவன் குருவாயிருந்து அருள் புரிவார் என்பது அடிகளாரின் நம்பிக்கை. இதனை,

*"மனதேகல் லால்எனக் கன்றோ - தெய்வ*
*மௌன குருவாகி வந்துகை காட்டி*
*எனதாம் பணியற மாற்றி - அவன்*
*இன்னருள் வெள்ளத்(து) இருத்திவைத் தாண்டி."*
— ஆனந்தக்களிப்பு - 12

என்று கூறுவார். புலன்களின் கொடுமையைத் தாங்க முடியாமல்,

*"விஞ்சுபுலப் பாடனைத்தும் வீறுதுன்பம் செய்யஅந்த*
*அஞ்சுபுலி வேடருக்கும ஆற்றேன் பராபரமே!"*
— பராபரம் 265

என்று இறைவனிடம் முறையிடுகின்றார். மற்றும்,

*"அறிவிப்பான் நீஎன்றால் ஐம்புலன்கள் தத்தம்*
*நெறிநிற்பார் யாரே? நிகழ்த்தாய் பராபரமே!"*

— மேலது 250

என்று கூறுவதையும் காண்க. பின்னும் ஐம்புலக் கொடுமையைப் பிறிதோரிடத்தில்,

*"வாயில்ஓர் ஐந்தில் புலன்எனும் வேடர்*
*வந்தெனை ஈர்த்து,வெங் காமத்*
*தீயிலே வெதுப்பி உயிரொடு தின்னச்,*
*சிந்தைநைந் துருகி,மெய்ம் மறந்து*
*தாயிலாச் சேய்போல் அலைந்தலைப் பட்டேன்?"*

— சிவன் செயல் - 5

என்று பகர்கின்றார்.

மனக்குரங்கு: தமக்குக் கட்டுப்படாமல் இருக்கும் மனத்தைக் குரங்குக்கு ஒப்பிட்டுப் பேசுவது அடிகளாரின் தனிச்சிறப்பு. மனத்தை ஒடுக்காது உலகத்தில் செல்லவிட்டால் அது குரங்குபோல எங்கும் தாவிச் சென்று அறிவுடைப் பொருளாகிய உயிருக்குப் பலவகையாகிய இன்னல்களை விளைத்து அதனைச் சீர் குலைக்கும் என்கின்றார் அடிகள். இதனை,

*"மனமான வானரக்கைம் மாலையா காமால்*
*எனையாள் அடிகள்அடி எய்துநாள் எந்நாளோ?"*

— எந்நாட். தத்துவமுறைமை - 5

என்ற பாடலில் காணலாம். இதில் மனம் என்னும் குரங்கின் கையில் அகப்பட்ட மாலையாகத் தன்னை உவமிக்கின்றார். குரங்கு கையில் அகப்படும் பூமாலையை அது பல்வேறு வகையில் சிதைத்தழிப்பதுபோல் தானும் மனத்தால் துன்பப்படுதலை எடுத்துக் காட்டுகின்றார்.

இன்னொரு பாடலில் குரங்காக விளையாடுகின்ற அந்த மனத்தைப் பற்றிச் சொல்லுகின்றார். மனமாகிய அந்தக்

குரங்கு சாதாரணக் குரங்கு அன்று; பேய்க் குரங்கு; குதிக்கின்ற பேய்க் குரங்கு. அது பொல்லாத இயல்புடையது. குரங்கிலும் பேய்க்குரங்காக இருக்கும் ஒன்று குதிக்கத் தொடங்கிவிட்டால், அதன் ஆட்டத்தைச் சொல்லி முடியாது. ஆனால், இந்த மனம் இருக்கின்றதே! இது மனம் குரங்கைவிடப் பொல்லாதது; அந்தக் குரங்கு குதிக்கின்ற குதிப்பைவிட மிகுதியாகக் குதிக்கும் ஆற்றல் பெற்றது. இதனை விளக்க ஓர் உவமையைத் தேர்ந்தெடுத்தார் அடிகள்; இந்தப் பேய்க் குரங்கை ஒரு தேள் கொட்டிவிட்டால் எவ்வளவு குதிக்கும் அது? இந்தத் தேளும் ஒரு சாதாரணத் தேளன்று; கொள்ளித் தேள்!

> *"கொள்ளித்தேள் கொட்டிக் குதிக்கின்ற பேய்க்குரங்காய்க்*
> *கள்ளமனந் துள்ளுவதென் கண்டாய் பராபரமே!"*
>
> — *பராபரம் 172*

என்ற பாடலில் கள்ள மனம் துள்ளுவதைக் காட்டுகின்றார்.

> *"காடுங் கரையும் மனக்குரங்கு*
> *கால்விட் டோட அதன்பிறகே*
> *ஓடும் தொழிலால் பயன்உளதோ?"*
>
> — *காடும் கரையும் - 1*

என்றதில் காட்டிலும் கரையிலும் கால்விட்டு ஓடும் மனக்குரங்கைக் காட்டுகின்றார். அடுத்து,

> *"குணமிலா மனமென்னும் பேய்க்குரங்கின் பின்னே*
> *மாறாத கவலையுடன் சுழல என்னை வைத்தனையே!"*
>
> — *கல்லாலின் - 4*

என்று பேய்க் குரங்கின்பின்னே கவலையுடன் தன்னைச் சுழன்று ஓடவைத்த நிலைக்கு எண்ணி ஏங்குகின்றார்.

திருந்தா மனம்: திருந்தா மனத்தின் தன்மையை அடிகள் பலவிடங்களிலும் எடுத்துக் காட்டுகின்றார். ஒரு பாடலில் (எங்கும் நிறைகின்ற பொருள் - 4) கூறுவதைக் காண்போம்.

சொன்னபடி இணங்கி வாராத பிள்ளையைத் தாய் தொட்டி லில் வைத்து ஆட்டித் தொடையையும் கிள்ளி விடுதல்போல் மனம் ஏதாவது ஒரு பொருளில் நினைப்பை உண்டாக்கிக் கொண்டேயிருக்கும். ஆணவமலத் தொடர்புடைய[15] உயிர் மாயையாகிய உலகத்தில் நன்கு அழுந்தாதபொழுது உடம் பாகிய தொட்டிலின் ஊசலாட உலகப் பொருள்களில் உயி ரின் அறிவு அழுந்த நேருமாதலின், அதனைத் தொடையி னைக் கிள்ளுவதற்கு உவமித்துள்ளார். மனம் ஒரு பொரு ளைப் பற்றுவதால்தான், உயிர் அதில் அழுந்துவதாகிய துன்பத்தை அடைகின்றது. மனம் ஒரு பொருளை விட்டு மற்றொரு பொருளைப் பற்றுங்கால் முன்பற்றிய பொருளை மறக்கின்றது. இதனை அடிகள் 'தொடுத்தழிக்கும்' என்கின் றார். பற்றிய பொருளின் தாக்கத்தினாலேயே பலவகையான வேட்கைகளில் ஈடுபட்டுத் திரிதலால், 'தலை சுற்றி ஆடும்' என்கின்றார். ஏழுபூமி என்றது எழு வகையான மோக விகாரங்களை. மேலும் இந்த மனம் கணவனுக்கு அடங்காத பெண்போலத் தானே வெளிச் சென்று அலையும். அறநெறி யில் மனம் அடங்கி நில்லாது தான் விரும்பிய வண்ணம் வரம்பு கடந்து செல்லுதலால் 'புருடனில் அடங்காத பூவை 'க்கு உவமையாக்கினார்.

இங்ஙனம் அலைந்து திரியும் மனம் கல்லைவிடவும் இரும்பைவிடவும் மிகுதியான வன்மையைக் காட்டி விடும். ஒரு பொருளின்மீது விருப்பும் வெறுப்பும் மிகுந்த விடத்து மனம் அதனைப் பெறுவதிலும் அல்லது அழிப்பதிலும் தன்நோக்கத்தை நிறைவேற்றுவதில் உறுதி கொள்ளும்போது இரக்கமின்றிச் செயற்படும் தன்மையது. இதனால் கல்லோடி ரும்புக்கும் மிக வன்மை காட்டிடும் என்கின்றார் அடிகள். தான் நேரில் காணாமல் பிறர் சொல்லக் கேட்டவற்றையெல்லாம் தான் கண்டனவாகக் காட்டி அதனை அடைய முயலும். இந்த

15. இம்மலம் ஆன்மாக்களை அணுத் தன்மையடையச் செய்தலின் 'ஆணவம்' எனப் பெயர் பெற்றது.

முயற்சியில் உயிரின் அறிவு அந்தப் பொருளில் அழுந்தியவி டத்து அது விரிவடையாது அந்தப் பொருளின்கண் ஒடுங்கிப் போதலால் 'அணுவாய்ச் சுருக்கிடும்' என்கின்றார். இங்ஙனம் எல்லாவகையான வஞ்சனைக் கூத்தின் வித்தைகளனைத்தை யும் மனம் என்னும் 'மாயாதத்துவம்' செய்யவல்லது. அஃது இயற்கையில் நல்லறிவில்லாத 'என் வயப்பட்டு அடங்குமோ?' என்கின்றார். எத்தனையோ விதமான உலகப் பற்றுகளில் உயிரினைத் தந்திரமாக மனம் அழுந்துதலால் அதனை வெல் லுதல் அரிது என்கின்றார்.

மனத்தின் பொய்ப் பாவனைகளைச் சில எடுத்துக்காட்டு களால் அடிகள் விளக்குவது இனிதாக அமைகின்றது. இதனை ஒரு பாடலில் (சச்சிதானந்தசிவம் - 4) காணலாம். கண்ணினை மூடி விழித்தற்குரிய கணப் பொழுதை உலகம் தோன்றி ஒடுங்கும் வரையுள்ள கற்ப நீடூழி காலமாகத் தோற் றுவிக்கும்; நிலையில்லாத இந்த உலகத்தை எவ்வளவோ சிறந்த உலகமாக நினைக்கும்படிச் செய்துவிடும். மகளிற்பாற் பெறக்கூடிய சிறிய அளவுடைய இன்பத்தைப் பெரிய மேரு வின் அளவினதாகக் காட்டிக் குடும்பச் சுமையை எடுக்கு மாறு நம்மைத் தூண்டித் தன்னையே சும்மாடாக (சும்மாடு - சுமையை அடுத்திருப்பது) வைத்து நம்மைச் சுமையாளா கவே செய்துவிடும். மற்றும், நாடோறும் நமக்குக் கெடும தியை அளித்து நல்லறிவு அனைத்தையும் சூறையிட்டு இந்திர சாலம் போன்ற சூழ்ச்சிகள் மிக்க ஒரு வாழ்க்கை நாடகத்தை நடிக்கும். இம்மனத்தின் வியத்தகும் இயல்பு சொல்லுந்தர மன்று. "இறைவனே, நின் திருவருளைப் பெற்ற பேர்க்கெல் லாம் ஒளியோடு விளங்குகின்ற இந்த மனம் அருள் தன்மையு டையதா? அல்லது மருள் தன்மையுடையதா? இந்த நுட் பத்தை நீ எனக்குச் சொல்ல வேண்டும்" என்கின்றார்.

திருந்தா மனத்தை அடக்குதல் அருமை என்பதை ஒரு பாடலில் 'தேசோமயானந்தம் - 8) ஒப்புமை நயம் விளங்க உரைக்கின்றார். நம்மிடம் உள்ள மனத்தின் தன்மையை உணர்ந்தால் அது நமக்கு அடங்கிவிடும். சான்றோர் சொன்ன உண்மை இதுதான். இதை உணர்ந்தவர் தாயுமானவர்.

உணர்ந்த பின் பாடுகின்றார். கட்டுத் தறிகளை முறித்துவிடும் மத யானையை வசப்படுத்தி நடத்தலாம். கரடி, புலி இவற்றின் வாயையும் கட்டலாம். ஒரு சிங்கத்தின் முதுகில் ஏறி சவாரி செய்யும் அளவிற்கு அதை அடக்கியாளலாம். நச்சுப் பாம்பு களையும் எடுத்து ஆட்டுதல் கூடும். நீர்மேல் நடக்கலாம். நெருப்பின்மேல் அமர்ந்து இருக்கலாம். வெய்தாகிய நெருப்பில் ஐந்து உலோகங்களையும் இரதகுளிகையிட்டுப் பொன்னாக்கி அதை விற்றுப் பொருள் பெற்று நுகரலாம்; வேறொருவர் காணாமல் இவ்வுலகத்தில் உலாவலாம்; விண்ணவர்களையும் ஏவல் கேட்கச் செய்யலாம். வாழ்நாள் முழுதும் இளமையோடிருக்க வகை செய்யலாம். ஒப்பற்ற அட்டமா சித்திகளையும் பெற்றுவிடலாம். ஆனால், ஒன்று முடியாது; இவற்றையெல்லாம் செய்ய வல்லவர்களாலும் முடியாத ஒன்று அது.

*''சிந்தையை அடக்கியே சும்மா இருக்கின்ற*
*திறம் அரிது....''*

இவண்கூறிய சித்திகளிளெல்லாம் மனம் ஈடுபட்டு அழுந்திய உலகத்தின்கண் உள்ள பொருள்கள். இவை மணிமந்திரம் மருந்து முதலியவற்றைச் செம்மைப்படுத்திக் கொள்வதால் வருவன. உலகப் பற்றை ஒழியாமலே இவற்றை முடிப்பதை விட உலகப் பற்று ஒழித்தல் அரிதாதலின் இவ்வாறு கூறினார்.

எத்தகைய சித்திகளைப் பெற்றாலும், சினம் அடங்கப் பெற்றாலும் மனத்தை அடக்க முடியாதவர்கட்கு வாய்ப் பேச்சினால் என்ன பயன் என்பதை,

***''சினம்இறக்கக் கற்றாலும் சித்தியெல்லாம் பெற்றாலும்***
***மனம்இறக்கக் கல்லார்க்கு வாய்ஏன் பராபரமே!''***
***— பராபரம் - 169***

என்ற பாடலால் புலப்படுத்துகின்றார். மனம் நெடுநாள் பழகிய பழக்கத்தால் அது நம் வழிக்கு வருவதில்லை. நாம் அது போனபோக்கில் செல்லாமல் நல்லதொன்றை நாடும் போது அது மல் வீரரைப் போன்று நம்மை வந்து எதிர்க்கும் என்கின்றார் அடிகள்.

*"வாதுக்கு வந்தெதிர்த்த மல்லரைப்போல் பாழ்த்தமனம்*
*ஏதுக்குக் கூத்தாடுது எந்தாய் பராபரமே!"*

— பராபரம் 170

என்றது காண்க. பிறிதோர் இடத்திலும் மல்லரைப்போல் வாதாடாமல் அமைதியாக இருக்குமாறு மனத்தைத் தெருட்டு கின்றார்.

*"ஏதுக்குச் சும்மா இருமனமே யென்றுனக்குப்*
*போதித்த உண்மைஎங்கே போகவிட்டாய்? - வாதுக்கு*
*வந்தெதிர்த்த மல்லரைப்போல் வாதாடி னாயே,யுன்*
*புந்தியென்ன? போதமென்ன? போ!"*

— உடல்பொய்யுறவு 5

என்பது காண்க.

'பழக்கம் கொடிது, கொடிது' என்பர் பெரியோர். மனம் அடக்கம் உற்றதுபோல் தோன்றினாலும் அது பழைய தீச்செ யலின்கண்ணே மீண்டும் மீண்டும் செல்லும், அங்ஙனம் செல்லின் அதனால் பயன் ஒன்றும் ஏற்படாது.

*"சூதாடு வோர்போல் துவண்டு துவண்டுமனம்*
*வாதாடில் என்னபயன் வாய்க்கும்? பராபரமே!"*

— பராபரம் 171

என்பர் அடிகள். மனத்தினை வண்ணானுக்கு ஒப்பிடுகின்றார் அடிகள். கற்ற நற்கல்விக்கிசையத் தம்மை ஞான ஒழுக்கங்க ளிலே செல்ல இடங்கொடாது படித்த படிப்புகள் சிதறிப் பயன் இல்லாமல் போகும்படி செய்துவிடுகின்றது மனம். "ஆடைகளை நூல் பிரிந்துப் போமாறு அவற்றைக் கல்லில் அடிக்கும் வண்ணானைப் போல் நீ என்னை இழுத்திழுத்து அடிக்கின்றாய்" என்று நெஞ்சை நோக்கிப் பேசுகின்றார்.

*"இழுத்தடித்தாய் நெஞ்சே!நீ என்கலைகள் சோர*
*அழுக்கடிக்கும் வண்ணார் போலாய்."*

— உடல் பொய்யுறவு - 65

என்ற பாடற் பகுதியில் இதனைக் காணலாம். ஒரு பாடலில்

(ஆசையெனும் - 1) ஆசைக்குப் பெருங்காற்றை உவமை கூறுகின்றார். பெருங்காற்றில் அகப்பட்ட இலவம் பஞ்சு அலைவதுபோல் ஆசையால் மனம் அலையும்போது தமக்கு மோசம் வரும் என்கின்றார். இதனால் தாம் கற்றதும் கேட்டதும் தூர்ந்து முத்திக்கான நேசமும் வாசமும் போய்விடும் என்கின்றார். பிறிதோர் இடத்தில்,

*"பஞ்சாய்ப் பறக்குநெஞ்சப் பாவியைநீ கூவிஐயா*
*அஞ்சாதேஎன்(று) இன்னருள் செயவும் காண்பேனோ?"*
***— காண்பேனோ - 21***

என்று கூறுவதையும் காணலாம்.

சில பாடல்களில் மனத்தினை வானத்திற் பறக்கும் காற்றாடிக்கு உவமை கூறி விளக்குவார். காற்றாடி சுற்றிச் சுற்றித் திரிவதுபோல, மனமும் உழன்று திரிகின்றது என்பார்,

*"ஆடு கறங்காகி அலமந்து உழன்றுமனம்*
*வாடும் எனைஐயா வாவெனவும் காண்பேனோ"*
***— மேலது 22***

என்ற பாடலில் விளக்குவார். வாலற்றுப் போனால் காற்றாடி கீழே விழுந்து கிடக்கும். அதுபோல் மனம் வலியற்று அடங்கும்படி இறைவனை அருள்புரிய வேண்டுகின்றார்.

*"வாலற்ற பட்டமென மாயா மனப்படலம்*
*காலற்று வீழவும்முக் கண்ணுடையாய் காண்பேனோ"*
***— மேலது 7***

என்ற கண்ணியில் இதனைக் காணலாம்.

**மனத்தை இழித்துக் கூறுதல்:** சில இடங்களில் அடிகள் மனத்தை இழித்தும் கடிகின்றார்.

*"கல்லேனும் ஐயஒரு காலத்தில் உருகும்;என்*
*கல்நெஞ்சம் உருகஇலையே!"* ***— சுகவாரி 3***

என்ற பாடற் பகுதியில் தமது நெஞ்சினைக் கல்லினும் வலியதென்கின்றார். சூரிய காந்தக்கல் ஞாயிற்றின் கதிர்கள் பட்டவு

டனும், சந்திரகாந்தக் கல் திங்களின் கதிர்கள் பட்டவுடனும், கருங்கல் ஞாயிறும் திங்களும் கூடுகின்ற அமாவாசையன்றும் உருகுவதாகக் கூறும் இலக்கிய மரபு ஒன்று உண்டு. ஆத லால் ஒருகாலும் உருகா நெஞ்சைக் கல்லினும் வலியது என்கின்றார்.

தம் ஆசிரியர் ஞானம் எனும் தன்மை பேச ஒரு மொழி யைக் கூறினார். 'அது குருமொழி; அது மலை இலக்கு' (நினைவொன்று -2) அதுதான் 'சும்மா இரு' என்று சொல்லப் பெறும் மோனநிலை. இதன் பொருளை உன்னி உருகாமைக் காகத் தம் நெஞ்சினைக் கடிகின்றார்.

*"வன்நெஞ்சோ? இரங்காத மரநெஞ்சோ?*
*இருப்புநெஞ்சோ? வயிர மான*
*கல்நெஞ்சோ? அலது மண்ணாங் கட்டிநெஞ்சோ?*
*எனதுநெஞ்சம் கருதில் தானே"*

**— ஆசையெனும் 4**

என்ற பாடற்பகுதியில் இதனைக் காணலாம். இதன் கண், மரம் ஒருநாளும் உருகாது ஆதலின், அதுபோல ஒருகாலும் மனம் உருகாதிருந்து விடுமோ என்ற ஐயத்தைக் குறிப்பதற்கு 'மரநெஞ்சோ?' என்கின்றார். செயற்கை முயற்சியால் (வெந் தழலால்) உருக்கப்படும் இரும்புபோல மிகவும் கடுமையான தவத்தால் (தவக்கனலால்) மனம் உருகுதல் கூடும் என்ற கருத்தை விளக்குவதற்கு 'இரும்பு நெஞ்சோ?' என்கின்றார். காலத்தின் இயல்புபற்றிக் கல் ஒரு பொழுதில் உருகுதலால் பக்குவக் காலம் ஏற்படும்பொழுது மனம் தானே உருகுதல் கூடுமோ என்பதை அறிவித்ததற்கு 'கல் நெஞ்சோ' என்கின் றார். கல்லினும் வலி குறைந்த மண்ணாங்கட்டி உறுதியாகத் தாக்கியவுடன் உதிர்ந்து போவது போலத் திருவருட் பதிவின் உறைப்பால் மனம் வலியற்று ஒழியுமாதலால் 'மண்ணாங் கட்டி நெஞ்சோ' என்று இறுதியில் கூறுகின்றார்.

நமக்கு ஏற்படும் பிறப்பு - இறப்பு வட்டம்' (Cycle of births and deaths) மறப்பு - நினைப்பு இயல்பினைக் கொண்ட மனத்தின் செய்கையால் வருகின்றது என்கின்றார்.

*''இறப்பும், பிறப்பும் பொருந்த - எனக்*
*கெவ்வண்ணம் வந்ததென் றெண்ணியான் பார்க்கின்*
*மறப்பு நினைப்பு மாய்நின்ற - வஞ்ச*
*மாயா மனத்தால் வளர்ந்தது!''*
*— ஆனந்தக் களிப்பு - 11*

என்ற பாடலில் இதனைக் கண்டு தெளியலாம்.

ஒரு பாடலில் மனத்தை வெறுத்துக் கூறுகின்றார் இங்கு ''மனமே உன்னை மதியேன்'' என்கின்றார்.

*''எனக்கும் உனக்கும்உற வில்லை எனத்தேர்ந்து*
*நினக்கஅரி தானஇன்ப நிட்டை - தனைக்கொடுத்தே*
*ஆசான் மவுனி அளித்தான்நெஞ் சே!உனைஓர்*
*காசா மதியேன் நான்'' — உடல்பொய்யுறவு - 72*

என்ற பாடல் இன்ப நிட்டை கைவரப்பெற்ற பிறகு மனத்தை விளித்துப் பேசும் பேச்சு இது.

ஒரு பாடலில் நெஞ்சைக் கடிந்து கூறுவதைக் காணலாம். 'ஏ மனமே, உன்னுடைய கெடுவழிகளையெல்லாம் கட்டி ஒருபுறம் வைத்துவிட்டு உண்மையை ஆராய்ச்சி செய். அடிக்கடி உலகமெங்கும் சுழல்கின்றாய். உனக்கு ஓராயிரம் அறவுரை கூறினாலும் நீ ஓர்வதில்லை. அங்ஙனமாயின் நீ கெட்டொழிவாய். திருவருளாகிய ஆயுதத்தைக் கொண்டு உன்னை வெல்லுவேன்'' (பாய்ப்புலி - 50) என்று பகர்கின்றார்.

நெஞ்சை அணைத்துக் கொண்டு பேசல்: இதுகாறும் குறை கூறியும் வெறுத்தும் கடிந்தும் வந்த அடிகள் நெஞ்சைத் தம் வசப்படுத்திக் கொண்டு - அரவணைத்துக் கொண்டுபேசவும் செய்கின்றார். அறவுரை வழங்கத் தொடங்குகின்றார். ஒரு குழந்தையை அடிக்கடிக் கடிந்து அடக்க முயல்வதைவிட அதை அன்புடன் அரவணைத்துக் கொண்டு அறவுரை வழங்குதலால் பெரும் பயன் ஏற்படும் என்பதை விவேகமுள்ள தாய்மார் அறிவர். உளவியலாரும் இம் முறையையே வற்புறுத்துவர். இந்த நிலையைப் பல பாடல்களில் கண்டு தெளியலாம்.

'ஏ மனமே, வந்த வரவை மறந்து உலக வாழ்க்கையில் அழுந்திவிட்டாய். இப்படி உன்னைத் தளையில் அழுந்த கற்றுக் கொடுத்தவர் யார்? உனக்கு ஏன் இந்த அறிவு? இனிமேலாவது என் புத்திமதியைக் கேள் - 'இந்த மதி ஏன் உனக்கு? என் மதி கேள்' பரத்தைச் சாரின் உனக்கு இன்பம் உண்டாகும் (ஏசற்ற - 7) 'நெஞ்சமே ஊசற் கயிறு போன்ற உலக நெறியின் கண்ணே சென்று பற்று என்னும் தளையி னுள் மாட்டிக் கொள்ளாதே. குற்றமற்ற இந்நிலையில் எந்தை மாசற்ற சிவானந்தப் பெருக்கு முழுவதையும் தந்தருளுவன்' (மேலது 1). உலகப் பரப்பையெல்லாம் வீணாக நீ உன்வசப் படுத்திக் கொண்டாலும் ஆனந்தக் கடலில் மூழ்கக் கற்றுக் கொள்ளமாட்டாயோ? திருவருளாகிய எந்தையின் திருவடி யின்கீழ் தாழ்ந்து வணங்காயோ? அங்ஙனம் வணங்குவாயா யின், நீயும் என்னைப்போல் வாழ்ந்து அழியாதிருப்பாய் (மேலது 2). 'பேரின்ப வெளி குருவின் பார்வையின்றி நமக்குக் கிடைக்காது. நம்மை ஆளவந்த குருவின் பொன்ன டிக்கீழ் இருக்க என்னிடம் வந்துசேர்' (மேலது 3) 'பண்டையு ளவாதனையால் நீ துன்புறுகின்றாய். உன்னைக் குறை சொல் லிப் பயன் இல்லை. 'அஞ்சல் அஞ்சல்' என்றும் நம்மேல் இரக்கங் கொள்ளும் இறைவனாகிய ஆனந்த கடலில் என் போல் அழுந்த வருவாயாக' (மேலது 4)

மேலும் கூறுகின்றார்: 'வட ஆலின்கீழ் வீற்றிருக்கும் தெய்வ உருவை வந்துப் பார்த்து உருகக் கற்றுக் கொள். அப்படிச் செய்தால் நீ பூரணத்துவம் அடைவாய்' (மேலது 5) 'ஒவ்வொரு வழியாக முன்னேறலாம் என்று நான் எண்ணு கின்றேன். உன்னை விட்டு விட்டால் நான் இறைவனிடம் அன்பு செலுத்த முடியாது. இறைவனிடம் பக்தி செலுத்துவ தற்கு நின் துணை வேண்டும். உன் வழியாகத்தான் இறைவ னின் திருவருள் வெள்ளம் பாய்ந்து நான் பயிராய்ப் பிழைந்து வாழவேண்டும். நீ வந்து ஓயாமல் உருகினால் தாயான மோன அருள் உன்னை வந்து சந்திக்கும்' (மேலது 6) 'உலகமெலாம் உய்வதற்கு அன்பு நிலை வேண்டும் என்பர் பெரியோர். அந்த அன்பு நிலை உன்னையன்றி இல்லையே' (மேலது 8).

'பொன்னிலே பணிபோன்ற மாயை தரும் மனமே, உன் அறிவை ஆராய்ந்தால், நீ திருவருளுக்கு ஒப்பாவாய். குற்றங்கள் தீர்ந்து நீ என்னை அடைந்தால், நான் உய்வேன். உன்னைப்போல் எனக்குத் துணையாவார் ஒருவரும் இலை; என் உயிர்க்கு சிறந்த உறவுமாகின்றாய் (மண்டலத்தின் 8). உடலை எடுத்த நான்முகனும் உன்னைத் தவிர்க்க முடியாது. உன்னை அசத்து என்று சொல்லேன்; சத்து என்றே வாழ்த்துவேன். என்னோடு பழகிய நீ எனைப் பிரிந்த துயரத்தினால் இறந்து தென்புலம் சேர்ந்தாலும் அத்திசையைப் பூரணமாய் வணக்கம் செய்வேன். (மேலது 9)

*"ஆண்டகுரு மௌனிதன்னால் யான்எனது*
*அவனருள் நான் அற்று வேன்" (மேலது - 10)*

— என்னுடைய குருவின் அருளால் நான் 'யான், எனது' என்ற அகங்கார மமகாரம் இரண்டும் அற்று அவன் அருள் வடிவாக விளங்குவேன்.'

*" ............... பூவில்*
*காண்தகஎண் சித்முத்தி எனக்குண்டாம்;" (மேலது 10)*

இன்னும் 'உன்னுடைய வள்ளண்மைக்கு காரேனும் கற்பகப் பூங்காவேனும் உனக்கு உவமை சொல்ல முடியாது. ஏழுலகத்திலும் நின் மகிமையைச் சொல்ல முடியாது' (மேலது - 11).

மனத்தை வென்ற நிலை: அடிகள் தாம் இறைவனோடு ஒருமைப்பட்டிருந்த காலத்தில் மனத்தைத் தாம் வென்ற நிலையையும் எடுத்துக்காட்டுகின்றார். அருளே கோயிலாகக் கொண்டு பேரின்பமாய் இருந்த பரம் பொருளோடு நான் உடனிருந்தபொழுது, ஓடிப்போய் ஒளித்துக் கொண்ட நெஞ்சே, நீ முயற்கொம்போ? ஆகாயப் பூவோ? கானல் நீரோ? நீ விளங்க இருந்த இடம் எந்த இடம்? எனக்குத் தெரியவில்லையே" (ஏசற்ற: 9,10) என்கின்றார். முயற்கொம்பு முதலிய பொருள்களும் இல்பொருளுக்கு உவமையாகக் கூறப் பெறுவனவாகும்.

அடிகள் வென்ற மனத்தை வினைத் தேவதைகட்குப் பலிகொடுத்து விட்டதாக ஒரு பாடலில் (கருணாகரக் கடவுள் - 8) கூறுகின்றார்

*''துள்ளுமறி யாமனது பலிகொடுத் தேன்;கன்ம*
*துட்டதே வதைகள்இல்லை;*
*துரியநிறை சாந்ததே வதையாம் உனக்கே;*
*தொழும்பன்அன் பபிடேகநீர்;*

*உள்ளுறையில் என்ஆவி நைவேத்தியம்; ப்ராணன்*
*ஓங்குமதி தூபதீபம்;*
*ஒருகாலம் அன்றிது; சதாகால பூசையா*
*ஒப்புவித்தேன்...............''*

என்றது காண்க. இதில் மனத்தினைத் துள்ளுகின்ற ஆட்டிற்கு உவமிக்கின்றார். மனம் சில சமயங்களில் சும்மா இருப்பது போலத் தோன்றி உலகப் பொருள்களில் இடையிடையே சென்று பற்றுகின்றது. பற்றியவுடன் பற்றுக் காரணமாகச் செயல்கள் ஏற்படுகின்றன. இவற்றால் பிறப்பு இறப்புத் துன்பங்கள் விளைகின்றன. இவையே கர்மதுட்ட தேவதைகளாகையால் மனத்தை அவற்றிற்குப் பலியாக்குகின்றார். சிறு தேவதைகட்குப் பலியிடும் உலக வழக்கையொட்டி இவ்வாறு கூறுகின்றார். சிறு தேவதைகட்கும் பலியிடுதல் கூடாது என்பது பெரியோர் கருத்தாதலின், அதுபற்றி 'துரியநிறை சாந்த தேவதையாம் உனக்கே தொழும்பன்' என்கின்றார். 'தூய்மையும் பொறையும் உடைய உனக்கு அடியன்' என்பது இதன் கருத்து.

அன்பு என்பது மன உருக்கத்தால் உண்டாவது. இதனால் அதனை நீருக்கு உவமையாக்குகின்றார். நீர் பயன்படுவது திருமுழுக்கிற்கே யாதலால் 'அன்பு அபிடேக நீர்' என்கின்றார். கண்ணப்ப நாயனார் காளத்தியப்பர் மீது பொழிந்த வாய்நீரை விளைந்த அன்பிற்குச் சேக்கிழார் பெருமான் உவமை கூறியது, ஈண்டு நினைக்கத்தக்கது. இறைவனோடு இரண்டறக் கலப்பது உயிராதலின் 'நைவேத்தியம்' என்று குறிப்பிடுகின்றார். நறும்புகை காற்றினால் நன்மணம் கமழ வீசுகின்றதனால் உடம்பிற்கு ஆதாரமாகிய பிராணனைத்

'தூபம்' ஆக்குகின்றார். இவண் குறித்த அகப்பூசையினை ஒருகாலம் செய்து ஒருகாலம் செய்யாதிருந்தால் மனம் ஒடுக்கம் அடையாதாதலின்,

> *"சதாகால பூசையா*
> *யொப்பு வித்தேன்"*

என்று கூறுகின்றார்.

**இறைவனை வேண்டுவது:** தம் மனத்தைக் குவியச் செய்ய வேண்டும் என இறைவனை இறைஞ்சுகின்றார். ஒரு பாடலில் (பரிபூரணானந்தம் - 9) இதனைக் காணலாம். கேட்கும் போக்கே விந்தையாக உள்ளது. 'ஆழ்ந்த கடல் செயற்கையாகக் கட்டிய கரையின்றி ஒரு வரம்பில் நிற்கவில்லையா? கொடிய நஞ்சும் அமுதமாகவில்லையா? கடலின் நடுவே வடவை அனல் நிலை பெறவில்லையா?[16] வானிலே பல கோடி அண்டங்கள் கீழே விழாமல் சாட்டையிலாப் பம்பரங்கள் போல் சுழலவில்லையா?[17] மேருமலை வில்லாக வளையவில்லையா?[18] ஏழு வகையான வியக்கத்தக்க முகில்களும் விண்ணவர் தலைவன் கட்டளைப்படி செல்கின்றன வல்லவா?[19] இராமன் திருவடி பட்டபோது கல்லாக இருந்த அகலிகை பெண்ணாகவில்லையா? மணிமந்திரம் மருந்து முதலியவற்றால் விரும்பிய சித்திகளைப் பெறுவதற்கு வழிவகுக்கவில்லையா? இத்தகைய அருஞ்செயல்களையெல்லாம் நிகழ்த்தவல்ல உனக்கு,

16. வடவனல் என்பது ஒரு பெண் குதிரை வடிவமாய இருப்பதாகப் புராணம் கூறும். இதனை ஊழித் தீ என்றும் கூறுவர். இது கடலின் நீர் மிகாமற் செய்வதென்றும், ஊழிக் காலத்தில் வெளிப்பட்டு உலக ஒடுக்கத்திற்குக் காரணமாவதென்றும் நூலோர் கூறுவர். இதனை மின்னாற்றல் போன்ற ஒரு வகை வெம்மை ஆற்றல் என்று கருதுவாரும் உளர்.
17. வானில் உலகங்கள் நிலைத்திருப்பதற்குக் காரணம் ஒன்றையொன்று தன்பால் ஈர்க்கும் கவர்ச்சி விசை அமைத்து அவற்றிற்கெல்லாம் ஆதரவாயிருப்பது சிவசக்தியே. இதனை ஆதார சக்தி என்றும் கூறுவர்.
18. திரிபுரம் எரித்த வரலாற்றில் இது கூறப் பெறுகின்றது.
19. இந்த ஏழு மேகங்களும் நீர், பூ, பொன், மணி, மண், கல், தீ என்பவற்றை முறையே பொழிவனவாகும்.

*“பாழான என்மனம் குவியஒரு தந்திரம்*
*பண்ணுவ துனக்கருமையோ?”*

என்கின்றார். ‘என் மனம் உலகின்கண் விரிந்து செல்லாமல் அகமுகமாய் ஒடுங்கும்படி ஒரு சூழ்ச்சி செய்வது உனக்கு முடியாததொன்றா?’ என்பது கருத்து.

தன்னுடைய மனநிலையைப்பற்றிக் கூறுகின்ற ஒரு பாடலில் “ஒவ்வொரு சமயம் என் மனம் உயர்ந்தவற்றை எண்ணுகின்றது; இதனால் உயர்நிலையை அடைகின்றது. பிறிதொரு சமயம் சோர்வுற்றுத் தளர்கின்றது. இப்பொழுது யாதொரு நினைவின்றிக் கிடக்கின்றேன். இறைவா! நீ எனக்கு அருள் தந்து ஒரே நிலையான வாழ்வை நல்கக் கூடாதா’ என்று கேட்கின்றார்.

*“என்செய லின்றி யாவும்நின் செயல்என்(று)*
*எண்ணுவேன் ஒவ்வொரு காலம்;*
*புன்செயல் மாயை மயக்கின்என் செயலாப்*
*பொருந்துவேன அஃதொரு காலம்;*
*பின்செயல் யாதும் நினைவின்றிக் கிடப்பேன்;*
*பித்தனேன்; நன்னிலை பெறநின்*
*தன்செய லாக முடித்திடல் வேண்டும்;*
*சச்சிதா னந்தசற் குருவே!”* — ஆரணம் 8

என்ற பாடலில் இந்த வேண்டுகோளைக் காணலாம். இந்த நிலையில்தான் அடிகட்குத் துறவு ஆசை ஏற்படுகின்றது. இப்போதுதான் நிலையாமைபற்றிச் சான்றோர்கள் சொன்ன கருத்துகள் அமைந்த பல பாடல்கள் பிறக்கின்றன.

முத்தி நிலையில் ‘மனம்’ இருக்கும் நிலை தெரியாது மறைந்து போவதை அடிகள்,

*“அருளேஓர் ஆலயமா ஆனந்த மாய்இருந்த*
*பொருளோ டியானிருக்கப் போயொளித்த நெஞ்சே!நீ*
*மருள்தீர் முயற்கோடோ? வான்மலரோ? பேய்த்தேரோ?*
*இருளுதீர நீஉறைந்த தெவ்விடமோ? காணேனே!”*
— ஏசற்ற அநநிலை - 9

என்று அற்புதமாகப் புலப்படுத்துகின்றார்.

# 9. வாழ்வில் வினையின் பங்கு

எல்லா உயிர்களும் இன்பத்தையே விரும்புகின்றன. எனினும், அவை துன்பத்தையும் நுகர நேரிடுகின்றது. சிலருக்குத் தாம் தொடங்கும் செயல் எதுவாயினும் அஃது இனிது முற்றுப் பெறுவதற்குரிய சூழ்நிலைகள் தொடர்ச்சியாக அமைந்து விடுகின்றன. எனினும், வேறு சிலருக்குத் தொடங்கும் செயல்கள் அனைத்திலும் அவை தடைப்படுவதற்குரிய சூழ்நிலைகளே அமைகின்றன. அன்றியும், ஒருவருக்கே சிலகாலம் தொடர்ச்சியாக நல்ல சூழ்நிலைகளே அமைவதையும், பின்பு சிலகாலம் தீமையான சூழ்நிலைகள் அமைவதையும் காண்கின்றோம். இவற்றால் இன்பதுன்பங்களுக்குச் சூழ்நிலைதான் காரணமாயினும், அச்சூழ்நிலைகளின் அமைப்பிற்குக் காரணம் வேறொன்று உள்ளது என்பது தெளிவாகின்றதன்றோ? இந்தக் காரணத்தைத்தான் 'வினை' அல்லது 'கன்மம்'[1] என்று குறிப்பிடுவர் மெய்விளக்க அறிஞர்கள்.

இன்னும் நாம் வாழ்க்கையைக் கூர்ந்து நோக்கினால் ஒரு பேருண்மை தட்டுப்படும். ஒருவரது வாக்கையில் இரண்டுப் பகுதிகள் உள்ளன. ஒன்று அகவாழ்க்கைப் பகுதி; மற்றொன்று புறவாழ்க்கைப் பகுதி. அறிவு, அடக்கம், ஒழுக்கம், சால்பு முதலியவை அகவாழ்க்கைப் பகுதிகள். செல்வம் சேர்த்தல், நுகர்தல் முதலியவை புறவாழ்க்கைப் பகுதிகள். புறவாழ்க்கைப் பகுதியில் ஊழின் (மூலகன்மம்) துணை இருந்தால் அல்லாமல் நினைத்தவாறு பெற முடியாது. அகவாழ்க்கைப் பகுதியில் ஊழ் அவரவாக்கு உரிமை கொடுத்துள்ளது. அகவாழ்க்கையில் வேண்டிய வேண்டியாங்கு எய்தலாம். வள்ளுவர் பெருமானும்,

1. சித்தாந்தத்தில் **'கன்மம்'** பாசத்தில் அடங்கும். பாசங்கள் மூன்று: அவை: ஆணவம், கன்மம், மாயை என்பனவாகும். அவை **மும்மலங்கள்.** மலம் - அழுக்கு. ஆன்மாவைப் பற்றியிருப்பது. ஆணவம் நுண்பொருள், எளிதில் உணர முடியாதது. மாயை, பருப்பொருள். கன்மம் இரண்டிற்கும் இடைப்பட்ட பொருள்.

*"வேண்டிய வேண்டியாங்கு எய்தலால் செய்தவம்*
*ஈண்டும் முயலப் படும்." (குறள் 265)*

என்று கூறியுள்ளமை சிந்திக்கத்தக்கது.

இதுகாறும் இந்நிலவுலகில் அறிவுடையவராக விரும்பி முயன்றவர் அறிவு பெறாமல் இருந்ததில்லை; ஒழுக்கத்தைப் போற்றி வாழ முயன்றவர் விரும்பியவாறு அதனைப் பெறத் தவறியதும் இல்லை; அவாவை அறுத்தொழிக்க வேண்டும் என்று உண்மையாக முயன்றவர் முயற்சியின் பயனைப் பெறாததும் இல்லை; இவ்வாறே மற்ற நற்பண்புகளை விரும்பிப் பாடுபட்டவர்கள் அவ்வவற்றை அடைந்து முன்னேறியுள்ளனர். ஆனால், செல்வம் பெற வேண்டும் என்று விரும்பிப் பாடுபட்டவர்கள் எல்லோரும் செல்வம் பெறவில்லை; பாடுபட்டவர்களில் ஒரு சிலரே பயன் அடைந்துள்ளனர். பாடுபடாமல் செல்வத்தைப் பற்றிக் கனவு காணாமலிருந்த சிலரும் பெற்றுள்ளனர். பெற்ற செல்வத்தை நுகர்வதிலும் இந்நிலையையே காண்கின்றோம். பொருள்களை நுகர வேண்டும் என்று விரும்பிய எல்லோரும் நுகர்வு பெறவில்லை.[2] அவர்களுள் சிலரே பெற்றுள்ளனர். பொருள் நுகர்வைப் பற்றி எண்ணாமல் வாழ்ந்தவர்கள் எதிர்பாராமல் பெற்று நுகரவும் முடிந்துள்ளது. ஆனால், அறிவு, ஒழுக்கம் முதலிய துறைகளில் உண்மையாக முயன்றவர் பெறாததும் இல்லை; முயலாதவர் பெற்றதும் இல்லை. இவ்வாறு ஆராய்ந்து நோக்கினால் புறவாழ்க்கைத் துறைகளில் ஊழ் அல்லது கன்மத்தின் அமைப்புக்கு ஏற்றவாறு எல்லாம் நடைபெறுவதையும், அகவாழ்க்கைத் துறைகளில் அது மக்களுக்கு உரிமை கொடுத்திருத்தலையும் கண்டு மகிழலாம்.

மூலவினை: இந்த எண்ணங்களின் அடிப்படையில் தாயுமானவர் பாடல்களில் வினைபற்றி வரும் பாடல்களை நோக்குவோம். ஆணவமலத்தால் பிணிக்கப்பெற்ற உயிர்

2. செல்வர்கள் பலருள் உப்பு, சர்க்கரை போன்ற சாதாரண நுகர்பொருள்கூட தள்ள வேண்டுமென்று மருத்துவர் தடை விதித்துள்ளமையைச் சிந்திக்க வேண்டும்.

உலகத்தோடு தொடர்பு கொள்ளும்பொழுது அதன்கண் பற்று வைக்கின்ற செயலுக்குக் காரணமாயுள்ளதற்கு 'மூல வினை' அல்லது 'மூலகன்மம்' என்பர் மெய்விளக்க அறிஞர் கள். உலகின்பாற் செல்லும் உள்ளச் செயலுள்ள வரை, பன்முறை உண்மை நூல் கற்றாலும் மனக்கலக்கம் தீருவ தில்லை. இந்த உண்மையினை,

*"கண்டுகண்டும் தேறாக் கலக்கமெல்லாம் தீரும்வண்ணம்*
*பண்டைவினை வேரைப் பறிக்கும்நாள் எந்நாளோ?"*
*— எந்நாட். தத்துவமுறைமை - 18*

என்று அடிகள் கூறுவர். இன்னும்,

*"இன்றோ இருவினைவந் தேறியது? நான்என்றோ*
*அன்றே விளைந்ததன்றோ ஆற்றேன் பராபரமே!"*
*— பராபரம் - 160*

என்ற பராபரக் கண்ணியில் இருவினை என்பதற்கு 'நல் வினை, தீவினை' என்று பொருள் கொள்ளுவதைவிட 'மூலவி னை' என்று கொள்ளல் முற்றிலும் பொருந்துகின்றது. "நான் எப்போது உள்ளேனோ அப்போதே வினையும் ஏற்பட்டது " என்று கூறியதனால் இப் பொருத்தம் அமைந்து விடுகின் றது. 'நான்' என்பதற்கு 'அகந்தை' (அகங்காரம்) என்று பொருள் கூறினும் பொருந்தும். 'அகங்காரம்' எப்பொழுது உண்டாயிற்றோ அப்பொழுதே 'வினை' வந்தது என்று கூறுவதில் பொருத்தம் தெரிகின்றதன்றோ? "வினைக்குக் காரணமாகிய எண்ணத்தை நீ நினைப்பித்தாலன்றி அஃது எனக்கு உண்டாவதில்லை. அவ்வாறிருக்க நான் அவ்வெண் ணம் உதிப்பதற்கு முன் செயக் கிடந்த வினை ஏது?" என்று கேட்கின்றார்.

*"எண்ணமுந்தான் நின்னைவிட இல்லையென்றால் யான்முனமே*
*பண்ணவினை ஏது? பகாராய் பராபரமே!"*
*— பராபரம் 161*

என்பதில் இதனைக் காணலாம். இதே கருத்தினை இன்னும் பல இடங்களில் காணலாம்.

*"என்னையின்ன தென்றறியா ஏழைக்கும் ஆகெடுவேன்!*
*முன்னைவினை கூடல் முறையோ பராபரமே!"*

*— பராபரம் - 162*

*"அறியாநான் செய்வினையை ஐயா!நீ கூட்டும்*
*குறியேதெனக் குளவு கூறாய் பராபரமே!"*

*— மேலது - 163*

என்ற கண்ணிகளிலும் இதனைக் காணலாம்.

மேலும் மற்றோர் பாடலில் (கல்லாலின் - 27),

*"என்னேநான் பிறந்துழல வந்தவா றிங்கு*
*எனக்கெனவோர் செயலிலையே; ஏழை யேன்பால்*
*முன்னேசெய் வினையெனவும், பின்னே வந்து*
*மூளும்வினை எனவும்வர முறைஎன்? எந்தாய்!"*

என்பதில் இக்கருத்தினைக் காணலாம். "எந்தையே, எனக்கென்று ஒரு செயல் இல்லை. அங்ஙனமிருக்க முன்னை வினை (சஞ்சிதம்), மூளும் வினை (பிராரத்தம்) என்றெல்லாம் என்மீது வரக் காரணம் இல்லையே" என்று இறைவனிடம் முறையிடுகின்றார்.[3]

இன்னும் பிறிதோர் இடத்தில் (சின்மையானந்தகுரு - 10) வினைபற்றி,

*"ஆதரவு வையாமல் அறிவினை மறைப்பதும்நின்*
*அருள்;பின்னும் அறிவின்மைதீர்த்து*
*அறிவித்து நிற்பதும்நின் அருள்;ஆகில் எளியனேற்(கு)*
*அறிவாவதுஏது? அறிவிலா*
*ஏதம்வரு வகையேது? வினைஏது? வினைதனக்(கு)*
*ஈடான காயம்ஏது?"*

என்று கூறுவார். இம்மண்ணுலக வாழ்க்கையில் உயிர்கட்கு

3. சஞ்சிதம் - முன்வினை, பழவினை; பிராரத்தம் - தற்போது நுகரப்பெறும் வினை; **நுகர்வினை, மூள்வினை** என்றும் இது வழங்கப்பெறும். ஆகாமியம் - இப்பிறவியில் 'தான்' என்னும் முனைப்பால் செய்யப் பெறுவது. இஃது **எதிர்வினை, செய்வினை** என்றும் வழங்கப் பெறும்.

நிலைத்த ஆதரவு ஒன்றும் இல்லை. அவற்றிற்கு (சீவர்கட்கு) ஆதரவாய் இருப்பது பரம்பொருள். பரம் பொருளை அடைந்த பிறகு ஆதரவு பெற்றதாய் விடுகின்றது. அதனைப் பெறுவ தற்கு முன்னர் உயிர்கட்கு ஓய்வு ஒழிவு இல்லை. முயற்சிக ளும் ஓயாது நடைபெற்றுக் கொண்டே இருக்கும். இத்தகைய வியவகார நிலையைத்தான் அடிகள் 'ஆதரவு வையாமல்' என்று குறிப்பிடுகின்றார்.

இன்பத்தைப் பெறுவதற்கும் பூரணத்தை அடைவதற் கும் உயிர்கள் முயன்று வருகின்றன. ஏதோ சிறிதளவு இன் பத்தை இடையிடையே பெறுவதும் பூரணத்தை எட்டிவிட்ட தாகச் சில வேளைகளில் எண்ணிக் கொள்வதும் மக்களின் இயல்பாக உள்ளது. இங்ஙனம் இன்பத்தைப் பெறுவதற்கும் பூரணத்தை அடைவதற்கும் ஏதுவாயிருப்பது அறிவு; ஞானம். மக்கள் பெற்றுள்ள அறிவு நிலைத்த அறிவு அன்று. மேகங்களுக்கிடையிலுள்ள சூரியன் அல்லது சந்திரன் தொடர்ந்து ஒளி தருவதில்லை. ஒளி தருவதும் அது கொடாது மறைந்து போவதும் சூரிய சந்திரர்கட்கிடையே நடைபெற்று வருவதுபோலவே, நாம் பெற்றுள்ள அறிவும் இடையி டையே மறைக்கப்படுவதாகவும், பிறகு தெளிவு பெறுவதாக வும் மாறி மாறி அமைந்து வருகின்றது. அறிவு தெளிவான நிலையில் இருக்கும்போது தகுந்த நல்வினைகளை ஆற்றுகின் றோம். அறிவு தெளிவற்ற நிலைகளில் உள்ளபோது தகாத தீவினைகளையும் செய்து விடுகின்றோம். நிலைத்துள்ள தெளிந்த அறிவு நம்மிடத்து இல்லாமையே இதற்குக் காரண மாகின்றது. நமக்குச் 'சீவபோதம்' இருக்கும் வரையில் அறிவில் மறைவும் தெளிவும் மாறி மாறி அமைந்து கொண்டே இருக் கும். இறைவனுடைய பிரபஞ்ச நடைமுறை என்னும் பெருந் திட்டத்தில் அமைந்திருப்பது இதுவேயாகும். இக்கோட்பாட் டையே அடிகள் "அறிவினை மறைப்பது நின் அருள்; பின்னும் அறிவின்மை தீர்த்து அறிவித்து நிற்பதும் நின் அருள்; ஆகில்" என்கின்றார்.

சீவர்கள் யாண்டும் சுய அறிவு படைத்தவர்களா? அல் லது இறைவன் அப்போதைக்கப்போது தருகின்ற அறிவைத்

தற்காலிகமாய்ப் பெறுகின்றவர்களா? என்ற வினா எழுகின்றது. சீவர்கட்கு 'சீவபோதம்' இருக்கும்வரை அவர்களுடைய அறிவும் அது மறைந்திருக்கும் நிலையும் இப்படி மாறி மாறி அமைந்து வருகின்றது. சீவர்கள் திரும்பத் திரும்பத் தவறு செய்து விடுகின்றனர். இதைத் தொடர்ந்து துக்கம் வருகின்றது. நாம் படுகின்ற துக்கத்திற்குக் காரணம் என்ன என்கின்ற வினாவை எல்லாக் காலங்களிலும் எழுப்பி வருகின்றோம். இதே வினா பல்லாயிரக்கணக்கான ஆண்டுகட்கு முன்பு எழுந்தது. இன்றும் எழுகின்றது; பல்லாயிரம் ஆண்டுகட்குப் பின்னரும் இவ்வினா எழுந்தே தீரும். எனவே, இது பொதுவான வினா. இதற்கு விடை இல்லையா? என்று மேலும் நாம் கேட்கலாம். இதற்கு எக்காலத்திலும் விடை உண்டு. நாம் படுகின்ற துக்கத்திற்கெல்லாம் அடிப்படைக் காரணம் அறிவின்மை; அஞ்ஞானம். அஞ்ஞானத்தால் நாம் குற்றம் செய்கின்றோம். அஞ்ஞானம் நம்மிடம் இருக்கும் வரை நாம் குற்றம் புரிந்து வருவோம். துன்பத்தையும் அநுபவித்துக் கொண்டே இருப்போம். அறிவு நமக்குச் சொந்தமின்றிப் போய்விட்டால் அதை நாம் இழக்கின்ற பொழுதெல்லாம் நாம் குற்றத்தைச் செய்தே ஆகவேண்டும் என்ற நிலை ஏற்படுகின்றது. அதற்காக வருந்தியே ஆகவேண்டும் என்ற நிலையும் அமைகின்றது. உண்மையில் இத்தகைய பரிதாபகரமான நிலையிலா மனிதன் உள்ளான்? இக்கருத்தை, 'எளியனேற்கு **அறிவாவது ஏது? அறிவிலா ஏதம் வரும்வகை ஏது?'** என்று காட்டுகின்றார். 'ஏதம்' என்ற சொல் ஈண்டுக் 'குற்றம்' என்று பொருள்படுகின்றது.

சீவான்மாவுக்கு அமைந்துள்ள பல பண்புகளுள் அவன் 'கர்ம சொரூபம்' என்பதும் ஒன்று. வினைவயத்தனாய் இருக்கும்வரை, அவன் 'வினை' செய்து கொண்டே இருப்பான். வினைக்குத் தன்னைக் கர்த்தாவாக எண்ணுவதும் அவனுடைய இயல்பாக உள்ளது. ஒருவன் தன்னைக் கர்த்தா என்று எண்ணிக் கொண்டிருக்கும்வரை அவன் வினைப் பயனை ஓயாது வளர்த்துக் கொண்டே போகின்றான். வங்கியில் போட்ட பணம் வட்டி மூலம் அல்லும் பகலும் ஓயாது வளர்வதுபோன்று சீவான்மாவுக்கும் வினை வளர்ந்து

கொண்டே போகின்றது. இங்ஙனம் வளர்வதற்குக் காரணம் அவனிடமுள்ள அஞ்ஞானமேயாகும். கால்நடையில் செல்கின்றவன் தன் சுமையைக் கையிலோ அல்லது தலையிலோ சுமந்து கொண்டே போகவேண்டும். ஆனால், அவன் இருப்பூர்தியில் பயணம் செய்யும்போதும் தன் சுமையைத் தலையிலே வைத்திருப்பானேயாகில் அது பரிதாபகரமான நிலையாகின்றது. வண்டியில் ஓர் இடத்தில் சுமையை இறக்கி வைத்துவிட்டால் அது அவனோடு வந்து கொண்டே இருக்கும். அதைச் சுமக்க வேண்டிய சிரமம் அவனுக்கு இல்லாது போகும். இறைவனுடைய அருளை அறிந்து கொள்கின்ற வரையில் அவரவர் 'வினை' என்னும் சுமையை அல்லும் பகலும் சுமந்து கொண்டே உள்ளனர். இறைவனுடைய அருளால் எல்லாம் நிகழ்கின்றன என்று அறிகின்றவர்கள் தங்கள் வினையை இறைவன் வினை என உணர்ந்து இறைவனிடம் ஒப்படைத்து விடுகின்றனர். பிறகு வினை அவர்களிடம் வளர்வதில்லை. அதன் பயனும் அவர்களை அடைவதில்லை. வினைக்கும் அவர்கள் கர்த்தாக்கள் ஆவதும் இல்லை. இக்கருத்தையே தேர்த் தட்டிலிருந்து கொண்டு பரந்தாமன் பார்த்தனுக்கு விளக்கினான். இக்கோட்பாட்டைத் தான் தாயுமானவர் 'வினை ஏது?' என்று இயம்புகின்றார்.

'காயம்' என்பது உடல். காயத்தைப் பெற்றிருப்பது சீவனுடைய மற்றொரு கூறு. காயம் வெங்காயம்[4] போன்றது. வெங்காயத்தின் சருகை உரிக்க உரிக்க உள்ளிருக்கும் பகுதி சருகாக மாறி அமைகின்றது. சீவான்மாவுக்கு வினை இருக்கும் வரையில் அதன் புறத்தோற்றமாக உடல் வாழ்வு அவனுக்கு வந்தமைகின்றது. விதவிதமான உடலங்களை எடுத்தவர்களாக எண்ணிறந்த சீவான் மாக்களைக் காண்கின்றோம். அவரவர் வினையை நிறைவேற்றிக் கொள்வதற்கான உடலங்களை அவர்கள் எடுத்து வருகின்றனர்.

*“புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்*
*பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்*
*கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்*

4. தந்தை பெரியார் தம் பேச்சில் அடிக்கடிக் கையாளும் சொல் இது.

*வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்*
*செல்லாஅ நின்றவித் தாவர சங்கமத்துள்*
*எல்லாப் பிறப்பும் பிறந்து இளைத்து''*[5]

என்று மணிவாசகப் பெருமான் கூறுவதும் இக்கருத்தையே. இக்கூறிய உடலங்கள் யாவும் அவரவர் செய்யும் வினைக்கு ஏற்ற பாங்கில் வந்து அமைகின்றன. தான் செய்யும் வினைகளை எல்லாம் இறைவனுக்கு உரியவை என்று அவனிடம் ஒப்படைத்துவிட்டால் 'பிறப்பு - இறப்பு' வட்டம் நின்று போய்விடுகின்றது. இக்கோட்பாட்டினையே அடிகள் 'வினைதனக்கு ஈடான காயம் ஏது' என்று கூறுகின்றார்.

மும்மலங்களின் நிலைமை: ஆணவம், கன்மம், மாயை என்ற மும்மலங்களும் உயிருடன் சேர்ந்திருக்கும் நிலையை உமாபதி சிவம் என்ற சித்தாந்த ஆசிரியர் நெல்லிலே முளை, தவிடு, உமி இவை சேர்ந்திருப்பதைக் காட்டி விளக்குவர். இவ்விளக்கத்தையும் அறிந்து கொண்டால் தாயுமானவரின் வினை பற்றிய குறிப்பு மேலும் தெளிவாகும். முளையைப் போன்றது கன்மம் அல்லது வினை. தவிட்டைப் போன்றது மாயை. உமியைப் போன்றது ஆணவம். எனவே, அரிசி ஆன்மாவிற்கு உவமையாகின்றது என்பது தெளிவு. இந்த மூன்று மலங்களும் எந்தவிதத்தில் உமி, முளை, தவிடு ஆகிய மூன்றுடன் ஒற்றுமைப்படுத்துகின்ன என்பதை விளக்குதல் வேண்டும். நெல்லிலுள்ள முளைத்தல் ஆற்றல் முளையைத் தோற்றுவிப்பதுபோல் கன்ம மலம் (வினை) உயிரினிடத்துச் சுகத் துக்கங்களை முதற்காரணமாய் நின்று தோற்றுவிக்கும். தவிடு முளைத்தற்கு அநுகூலம் செய்து உடன் நிற்குமாறு போல, மாயா மலம் அச் சுகதுக்கங்கள் தோன்றுவதற்குத் துணைக் காரணமாய்த் தன் காரியமாகிய தனு, கரணம் முதலியவற்றையும் நம் உயிரையும் அசைவித்து நிற்கும். உமி அம்முளை தோன்றுவதற்கு நிமித்த காரணமாயிருப்பது போல, ஆணவமலம் அச்சுகதுக்கத் தோற்றத்திற்கு நிமித்த காரணமாய் நின்று அவற்றை முறுகுவித்து உயிர் நுகருமாறு

5. திருவா. சிவபுராணம் - அடி (26-31)

நிலைபெறுத்தும். இங்கு ஆன்மாவின் சுகதுக்கங்களுக்கு ஆணவம், கன்மம், மாயை ஆகிய மூன்று மலங்களும் நிமித்தம், முதல், துணை ஆகிய மூன்று காரணங்களாக அமைவது குறிப்பிடத்தக்கது. ஆணவத்தோடொப்ப அநாதியாகச் சொல்லப் பெறும் மூலகன்மம் (மூல வினை) நன்மை, தீமை எனப் பாகுபாடு அடையாமல் பொதுவாய் நிற்கும். பின்னர் அது செயற்படும் காலத்தில் நல்வினையும் தீவினையும் என இரண்டு வகையாய்ச் சிறப்புற்றுச் செயல்பற்றிப் பலவாகித் திகழும்.

தாயுமானவர் சொல்கின்றார்: "இருவினையாகிய (மூல வினை) நோய் என்னைக் கெடுக்க வந்தது. என்னிடம் பேரருளுடைய நீ அவ்விரு வினையைக் கெடுப்பது முறையன்றோ?" என்கின்றார். இதனை,

*"என்னைக் கெடுக்க இசைந்த இருவினைநோய்*
*தன்னைக் கெடுக்கத் தகாதோ? பராபரமே!"*

— **பராபரம் - 164**

என்ற கண்ணியில் கண்டு மகிழலாம். 'திண்ணிய வினையைக் கொன்று அடியேனை உய்ய வைத்தால், உனக்குப் புண்ணியம் அல்லவா?' என்று ஒரு பாடலில் வேண்டுகின்றார்.

*"திண்ணிய வினையைக் கொன்று*
*சிறியனை உய்யக் கொண்டால்*
*புண்ணியம் நினக்கே யன்றோ?*
*பூரணா னந்த வாழ்வே."* — **கற்புறுசிந்தை - 5**

என்ற பாடற்பகுதியில் இதனைக் காணலாம்.

**வினையின் மூவகை நிலைகள்:** நல்லனவும் தீயனவுமாகச் செயற்படும் வினைகள் ஆகாமியம் என்ற பெயரால் வழங்கும். இஃது இலக்கியங்களில் எதிர்வினை, வருவினை, மேல்வினை என்ற பெயர்களாலும் சுட்டப்பெறும். நல்லனவும், தீயனவுமான வினைகள் சூக்குமமாய் மறைந்து நிலைபெற்று நிற்கும்பொழுது சஞ்சிதம் என்ற பெயரைப் பெறும். இந்நிலையில் இது அபூர்வம், பழவினை, தொல்வினை, கிடைவினை

என்ற பெயர்களாலும் வழங்கும். இச்சூக்கும வினைகள் பின்னர் இன்ப துன்பங்களாய் வந்து பயன்தரும் பொழுது பிராரத்தம் என்ற திருநாமம் பெறும். இஃது ஊழ்வினை, நுகர்வினை என்ற பெயர்களாலும் சுட்டப்பெறும்.

வினையின் பயனை நுகர்தற் கேதுவாகிய புண்ணிய பாவங்கள் புத்தி தத்துவத்தில் பொருந்திக் கிடக்கும்பொழுது சஞ்சிதம் ஆகும். நல்வினையும் தீவினையும் பயிர் போலவும், புண்ணிய பாவங்கள் நெல் போலவும் புத்தி தத்துவமும் அதற்காதாரமான மாயையும் நெல் வைத்த களஞ்சியம் போலவும் இருப்பதாகக் கருதுகின்றார் அடிகள். பயிரானது வெய்யிலின் வெம்மையால் கருகியொழிவது போல இறைவனின் அருட்கதிரின் வெப்பம் தாக்க இருவினையாகிய பயிர் மாய்ந்தொழியும் என்பார்,

*"பைங்கூழ் வினைதான் படுசாவி யாகஎமக்(கு)*
*எங்கோன் கிரணவெயில் எய்துநாள் எந்நாளோ?"*
— *எந்நாட், தத்துவ முறைமை - 19*

"நான்" என்னும் முனைப்பால் (வெளிப்படையாகச்) செய்யப்படும் வினை ஆகாமியம் ஆகும். இது முன் வினைப் பயனை நுகருங்கால் செய்யப்படுவது. வினைப் பயன் நுகர்தற்குரியதாய் வரும்பொழுது அது பிராரத்தம் ஆகும். முன்வினை, மூள்வினை, செய்வினை என்ற மூன்றும் முறையே சஞ்சிதம், பிராரத்தம், ஆகாமியம் எனப் பெயர் பெறும். இம்மூன்றும், ஒழிய வேண்டும் என விரும்பும் அடிகள்,

*"சஞ்சிதமே ஆதி சரக்கான முச்சேறும்*
*வெந்தபொரி யாகஅருள் மேவுநாள் எந்நாளோ?"*
— *எந்நாட் தத்துவ முறைமை 21*

என்று இயம்புகின்றார்.

சஞ்சிதம் புசிக்கப்பட்ட பின்னரும் மேலை வினைக்கு வித்தாகத் தொகுத்து வைக்கப் பெற்ற சரக்காகும். ஆதலின் அந்த வித்தினை அருட்கதிரால் வறுத்த வித்தாக்கி விட்டால் மேல் முளைத்தற்கு வாய்ப்பு இல்லாது போகும் என்று கருதும் அடிகள்,

*"குறித்தவித மாதியாற் கூடும்வினை யெல்லாம்*
*வறுத்தவித்தாம் வண்ணம்அருள் மேவும்நாள் எந்நாளோ?"*
**— எந்நாட். தத்துவ முறைமை 20**

எனக் கூறுவர். இதனையே மணிவாசகப் பெருமானும்,

*"உணக்கி லாததோர் வித்து மேல்விளை*
*யாமல் என்வினை யொத்தபின்*
*கணக்கி லாத்திருக் கோல நீவந்து*
*காட்டினாய்"*[6]

என்ற தம் மணிவாசகத்தால் குறிப்பிடுவர். தன்னுணர்ச்சியால் வினை இயற்றாது திருவருள் நெறி நின்று எதனையும் இயற்றுவார்க்கு வினை பற்றறும்; வினையை வெல்லுதலும் கூடும்.

*"'சிவாய நம'வென்று சிந்தித் திருப்பார்க்கு*
*அபாயம் ஒருநாளும் இல்லை"*[7]

என்று ஔவைப் பாட்டி கூறியுள்ளது இதனை விளக்க வந்துள்ளதேயாகும்.

வினையின் நிலைமைபற்றி அடிகள் பிறிதோர் பாடலில்,

*"காகமா னதுகோடி கூடிநின் றாலுமொரு*
*கல்லின்முன் எதிர்நிற்குமோ?*
*கன்மமா னவைகோடி முன்னேசெய் தாலும்நின்*
*கருணைப்பிர வாகஅருளைத்*

*தாகமாய் நாடினரை வாதிக்க வல்லவோ?"*
**— எங்கும் நிறைகின்ற பொருள் - 6**

என்று கூறுவர். இங்கு அடிகள் தீவினைக்குக் காகத்தையும் திருவருளுக்குக் கல்லினையும் உவமிக்கன்றார். புத்தி தத்துவத்தைப் பற்றுக் கோடாகாவுள்ள சஞ்சித கன்மங்கள் பலவாகும் என்பதை விளக்குவதற்குக் காகமானது ஒருகோடி என்

6. திருவா.திருக்கழுக்.-1 7. நல்வழி - 15

கின்றார். அவை புசிக்கப் பெறும்பொழுது, ஆகாமியங்கள் விளையாதிருத்தற்குத் திருவருளே பேருதவி புரிய வேண்டுவ தாதலின் அதனைக் 'கல்' என்கின்றார். கல்லைக் கண்டவுடன் காகங்கள் விலகிப் பறந்தோடுவதுபோலத் திருவருளை நாடும் உள்ளத்தில் தீயனவியற்றும் கருத்துகள் செல்லா என்பது தெளியப்படும். திருவருளின்கண் அழுத்தமான நாட்டம் இல் லாதவர்கள் தவறுதல் கூடும். ஆதலின் 'தாகமாய் நாடினரை வாதிக்க வல்லதோ?' என்கின்றார். காகக் கூட்டம்போல் வினைகளும் கூட்டமாக ஒருங்கே வந்து உயிர்களை வருத்து கின்றன என்ற கருத்தும் இதில் பெறப்படுகின்றது. இதே பாடலில்,

*''வினையெல்லாம்*
*சங்கேத மாய்க்கூடியே*
*தேகமா னதைமிகவும் வாட்டுதே''*

என்று கூறுவதனாலும் இது தெளியப்படும். காகம் கறுப்பு நிறமாக உள்ளதுபோல, வினைகளும் மயக்கம் விளைத்துப் பந்தத்தைப் பயத்தல் தெளிவு.

பிறிதோர் இடத்தில் காகத்தை நல்லதற்கும் உவமையாக் குகின்றார். ஆணவக் காரிருளால் மூடப் பெற்றுக் காகம் போன்றுள்ள யாவும் அகண்டாகார சிவத்தை நாடவேண்டும் என்று ஆற்றுப்படுத்து மிடத்துக் காகத்தின் கூட்ட ஒற்றுமை யைக் காட்டுவதையும் காண்கின்றோம்.

*''காகம் உறவு கலந்துண்ணக்*
*கண்டீர்; அகண்டா காரசிவ*
*போக மெனும்பே ரின்பவெள்ளம்*
*பொங்கித் ததும்பிப் பூரணமாய்,*
*ஏக உருவாய்க் கிடக்குதையோ;*
*இன்புற் றிடநாம் இனிஎடுத்த*
*தேகம் விழுமுன் புசிப்பதற்குச்*
*சேர வாரும் செகத்தீரே!''*

— **காடும் கரையும் 3**

என்ற திருப்பாடலில் இதனைக் கண்டு தெளியலாம். காகங்

கள்போல் கூட்டமாக வந்து 'அகண்டாகார சிவபோகம் எனும் பேரின்ப வெள்ளத்தைப்' புசிப்பதற்கு வருமாறு மக்களை அழைக்கின்றார்.

வினையின் வலிமை: கன்மங்களின் வலிமை அஞ்சத்தக்க தொன்று. எந்த நற்செயலை முயலும் போதெல்லாம், முயல் கின்றவனின் வினைப்பயன் அதற்கு ஓர் இடையூறாக நின்று இடுக்கண் விளைவிக்கின்றது. இதனை அடிகள்,

*"கருவிகர ணங்கள்ஓயக்*
*கண்மூடி ஒருகணம் இருக்கஎன் றால்பாழ்த்த*
*கன்மங்கள் போராடுதே*

*பண்டையுள கன்மமே கர்த்தா எனும்பெயர்ப்*
*பட்சம்நான் இச்சிப்பணா?"*

*— பரிபூரணானந்தம் - 4*

என்று கூறுவார். இக்கருத்தைத் தெளிவாக அறிந்து கொள்ள முயலுவோம். நிறைஞானத்தை அடைய முயலும் ஆன்ம சாதகன் மேற்கொள்ள வேண்டிய சில சாதனங்கள் உள்ளன. புறவாயில்கள் ஐந்தையும் அடக்கி யாண்டு பழகுதல் ஒரு சாதனம். இந்த ஐந்து இந்திரியங்கள் வாயிலாக மனம் புற உலகில் சஞ்சரித்துக் கொண்டே உள்ளன. பல பிறப்புகளில் வந்துள்ள வாசனையின் விளைவு இது. முன்பு அகங்காரத் தைப் பெருக்கிக் கொண்டு போவதற்குப் புதிய மேலாம் உடல் எடுக்க அவசியமாக இருந்தது. அதன் பின்னர் சீவன் இந்திரியங்களையும் ஒன்றன்பின் ஒன்றாக எடுத்துக் கொள்ள வேண்டியது அவசியமாயிற்று. இந்த இந்திரியங்களின் வாயி லாகப் புறஉலகம் முழுவதும் காட்சிக்கு வருகின்றது. பிறவிக் குருடனுக்கு நிறங்களைப் பற்றிய ஞானம் இல்லை. வடிவு அழகைப் பற்றிய ஞானம் இல்லை; வெளிச்சத்தைப் பற்றிய ஞானமும் இல்லை. அஞ்ஙனமே பிறவிச் செவிடனுக்கு ஓசையைப் பற்றிய ஞானம் இல்லை. ஆதலால் அவன் மொழி பயின்று கொள்ள முடியாது. தன் கருத்தை விதவித மாக விளக்குவதும் அவனுக்குச் சாத்தியமன்று. இப்படிப்

பஞ்சேந்திரியங்களும் இல்லாது போய்விடின் புறஉலகு இருந்தும் இந்திரியங்கள் இல்லாதவனுக்கு அது காட்சிக்கு வருவதில்லை. பஞ்சேந்திரியங்களின் வாயிலாகப் புறஉலகம் முற்றும் காட்சிக்கு வருகின்றது. அந்தக்கரணம் அல்லது அறிவு அதை முறையாகப் பாகுபடுத்தும்பொழுது மனிதன் பெறுகின்ற அண்டபகிரண்டங்களைப் பற்றிய ஞானமாகின்றது. இதைக் கடந்து அவன் துரிய நிலைக்குப்[8] போக முயலுகின்றபொழுது இந்தப் பஞ்சேந்திரியங்களையும் புறக்கணிக்கும் நிலை வருகின்றது. அந்தக்கரணங்களாகிய சித்தம், மனம், புத்தி, அகங்காரம் ஆகியவையும் ஓய்ந்துவிட வேண்டும். ஆனால், இவை புற உலகில் சென்று பழகியிருப்பதனால், இவை எளிதில் அடங்குவதில்லை. இவற்றின் செயல் ஞானிக்கு உகந்ததன்று. ஞானியின் ஞானக் காட்சிக்கு இவை தடையாகின்றன. தடையாயிருக்கும் பாங்கைத்தான் அடிகள் 'கருவி கரணங்கள் ஓய கண்மூடி ஒருகணம் இருக்க என்றால் பாழ்த்த கர்மங்கள் போராடுதே' என்கின்றார்.

எந்தச் செயல் மனத்தில் இனியதாகவும் இன்னாததாகவும் பதிவு பெறுகின்றதோ அதுவே கர்மமாகும். செயல்கள் யாவும் மனத்தில் விதவிதமான பதிவுகளை உண்டு பண்ணுகின்றன. இப்பதிவுகள் 'சம்ஸ்காரங்கள்' என்று வழங்குகின்றன. 'விருத்திகள்' என்றும் இவற்றை இயம்புவதுண்டு.

8. பாசத்தால் கட்டுண்ட உயிர் ஒருகாலத்தில் பாசத்தினின்று நீங்கும். இவ்வாறு நீங்குவது மூன்று நிலைகளில் நடைபெறும். இதை **அவத்தை** என்று குறிப்பர் சித்தாந்திகள். இது **கேவலம், சகலம், சுத்தம்** என்று மூன்று வகைப்படும். இம்மூன்று நிலைகளும் **காரண அவத்தை** என்று வழங்கப் பெறும். இறைவன் உடம்பைக் கூட்டுவதற்கு முன் இருந்த கேவல நிலை அநாதி கேவலம். அன்றாடம் வரும் கேவல நிலை நித்திய கேவலம். உயிர்கள் உடம்பை எடுத்து வாழும் நிலையில் **சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதம்** (இவை அருந்தமிழில் நனவு, கனவு, உறக்கம், பேருறக்கம், உயிர்ப்படங்கல் என்பன) என்னும் ஐந்து நிலை வேறுபாடுகளை உடையனவாக இருக்கும். இந்நிலைகள் **'காரியாவத்தை'** என வழங்கப்பெறும். இவற்றின் விவரங்களையும் இவை செயற்படும் முறைகளையும் சித்தாந்த நூல்களில் கண்டு தெளிக. இவ்வாசிரியரின் **'சைவ சித்தாந்தம் - ஓர் அறிமுகம்'** (கழக வெளியீடு) என்ற நூல் இதற்குத் துணையாக இருக்கும்.

சமஸ்காரங்களாக மனத்தில் பதிவு பெற்றிருக்கும் கர்மங்கள் திரும்பவும் உருவெடுத்து வரும். இதனால் கனவு உண்டா கின்றது. தியானம் பண்ண அமருகின்றபொழுது அவை மிக எளிதில் மனத்தில் தோன்றத் தொடங்குகின்றன. இவற்றை அகற்ற அகற்ற ஆழ்ந்து உள்ளே புதைந்து கிடக்கும் பழைய விருத்திகள் ஓயாது வந்து கொண்டிருக்கும். ஆதலால்தான் அடிகள் 'பாழ்த்தக் கர்மங்கள் போராடுதே' என்று குறிப்பிடுகின் றார்.

'பூர்வமோம்சை' என்பது ஆறு சாத்திரங்களுள்[9] ஒன்று. இதன்படி கர்மமே கர்த்தாவாகும். கடவுளை இச்சாத்திரம் அங்கீகரிப்பதில்லை. கர்மமே எல்லாம் வல்லது என்பது இத்தரிசனம் ஏற்றுக் கொள்ளுகின்றது. கர்மம்தான் ஆதியந் தம் அற்றது என்று செப்புகின்றது. இக்கோட்பாட்டினர் கர்மமே எல்லாம் வல்லது என்று நம்புகின்றனர். கர்மத் தையே தெய்வம் என்று போற்றுவது இவர்தம் குறிக்கோள். கர்மத்தின் துணையால் எதை வேண்டுமானாலும் பெறலாம் என்பது இவர்தம் நம்பிக்கை. இவர்கள் கோட்பாட்டின்படி மனத்தகத்தில் முன்பு செய்த வினையின் வேகம் ஓயாது தோன்றி வந்து ஆதிக்கம் புரிகின்றது. இதனை யாராலும் வென்றுவிட முடியாத நிலையில் உள்ளது. பூர்வமீமாம்சர்க ளது பட்சம் (பக்கம்) கர்மமே எல்லாம் வல்லது என்பது. உத்தரமீமாம்சமாகிய வேதாந்தத்தின் பட்சம் கர்மத்தினும் உயர்ந்தது கடவுளின் கருணை என்பது. இங்ஙனம் இரண்டு பட்சங்கள் உள்ளன. பூர்வபட்சம் ஒன்று; உத்தரபட்சம் மற்றொன்று. இவற்றுள் பூர்வபட்சத்தை 'நான் சோர்ந்து விடு வதா?' என்னும் கவலை நிறைந்த உணர்வுடன் அடிகள் 'பண்டை உளகர்மமே கர்த்தா எனும் பெயர் பட்சம் நான் இச்சிப் பனோ?' என்று பகர்கின்றார். தாம் அக்கோட்பாட்டை இச்சிக்க லாகாது என்ற கருத்துதான் இதில் அடங்கியுள்ளது என்பது அறியத்தக்கது.

9. ஆறு சாத்திரங்களாவன: வேதாந்தம், வைசேடிகம், பாட்டம், பிரபாகரம், பூர்வமீமாம்சை, உத்திர மீமாம்சை என்பன.

விதியும் மதியும்: விதியை மதியால் வெல்ல முடியுமா? என்பது கேள்வி. மதியானது திருவருள் பதியப்பெற்றால் வெல்லும் ஆற்றலுடையதாகின்றது என்பது அடிகளின் கருத்து. மதி மாயையில் பதிந்து கிடந்தால் விதிவழியே மதியும் செல்லும். இதனை,

*"விதியை யும்விதித் தென்னை விதித்திட்ட*
*மதியை யும்விதித்து அம்மதி மாயையில்*
*பதிய வைத்த பசுபதி! நின்அருள்*
*கதியை எப்படிக் கண்டு களிப்பதே?"*

— பொன்னை மாதரை - 63

என்ற பாடலில் குறிப்பிடுவர்.

உலகத் தொடர்பான நினைவுகள் எல்லாம் வரும் பிறப்பு களுக்கு வித்தாகும் என்பதை,

*"எண்ணிய எண்ணம் எல்லாம்*
*இறப்புமேல் பிறப்புக்கு ஆசை*
*பண்ணி....*

— கற்புறு சிந்தை - 5

என்பதால் தெரிவிக்கின்றார். நினைவுகள் அளவில்லாமல் இருத்தல் போலப் பிறப்புகளும் அளப்பில என்பதை,

*"கடல்எத் தனை,மலை எத்தனை,*
*அத்தனை கன்மம்;அதற்(கு)*
*உடல்எத் தனை,அத் தனைகடல்*
*நுண்மணல் ஒக்கும்;இந்த*
*சடலத்தை நான்விடும் முன்னே*
*உனைவந்து சார,இருட்*
*படலத்தை மாற்றப் படாதோ?*
*நிறைந்த பராபரமே!"*

— பாயப்புலி - 38

என்ற திருப்பாடல் தெரிவித்தலைக் காணலாம். இறைவனை யன்றி வினை இல்லை என்பதை,

*"நினையும் நினைவும் நினைவுஅன்றி*
*இல்லை; நினைந்திடுங்கால்*
*வினைஎன்று ஒருமுதல் நின்னையல்*
*லாது விளைவதுண்டோ?"* — *மேலது 39*

என்ற பாடலால் புலப்படுத்துவர்.

வினைபற்றிய மற்றோர் கருத்து: பிராரத்தம், சஞ்சிதம், ஆகாமியம் என்ற மூன்றுவித வினைகளில் பிராரத்தம் அநுபவித்தே தீர வேண்டியது.

*"சரணம் ஆகும் தனதாள்அடைந் தார்க்கெலாம்*
*மரணம் ஆனால் வைகுந்தம் கொடுக்கும்பிரான்"*[10]

என்ற பாசுரத்தால் இப்பிறப்பின் இறுதியில் தான் வீடுபேறு கிடைக்கும் என்பது உறுதியாகின்றது. எனவே, பிராரத்தத்தை அநுபவித்து முடிந்த பிறகே வீடுபேறு கிடைக்கும் என்பது உறுதியாகின்றது. சஞ்சிதம், ஆகாமிய கன்மங்களை இறைவன் தீயினில் தூசாக ஆக்கிவிடுவான் என்பது சொல்லாமல் போதருகின்றது. ஆகாமியம் இல்லாமல் பிராரத்தத்தை அநுபவித்தல் இயலாது என்பது உண்மையேயாயினும், அஃறிணையும் பிரார்த்தத்தை அநுபவித்தல் கூடும். அஃது எங்ஙனமெனில், பிராரத்தத்தை அநுபவித்தற்பொருட்டு நிகழும் முயற்சி விருப்பு வெறுப்புகளோடு கூடி நிகழும் பொழுதே 'ஆகாமியம்' எனப் பெயர் பெற்று அடுத்த பிறப்பில் தொடரும் சஞ்சிதத்துடன் சேர்ந்துவிடும். விருப்பு வெறுப்பு இல்லையேல் ஆகாமியம் ஆதல் இல்லை.

வினைசெயற்படுதல்: உயிர்களால் இயற்றப்படும் வினை அறிவுடையதன்று; அஃது அறிவில்லாத சடம். அதனால், அது செய்தவனைப் பற்ற இயலாது. அஃது எங்கோ ஓரிடத்தில் என்றோ ஒருகாலத்தில் ஏதோ ஓர் உடம்பு கொண்டு செயற்படுகின்றது. செய்யப்பெற்ற செயல் அப்பொழுது நிகழ்ந்து அழிந்து விடுகின்றது. ஆதலால், அது பின்னர் என்றாவது, எங்காவது, எந்த உடம்பிலாவது பயன்தர இயலாது. அதனால், இறைவனே அவரவர் செய்யும் வினையை

10. திருவாய். 9.10:5

நடுவனாய் நின்று அவ்வவ்வினைக்குரிய பயனை உரிய காலத்தில் உரிய இடத்தில் உரிய உடம்பில் கூட்டுவிப்பான். இதற்குக் காரணம் இறைவன் அவ்வினையைச் செய்யும் ஆருயிர்கள்மீதுள்ள அளவற்றக் கருணையேயாகும்.

இதனைச் சித்தாந்த முறையில் விளக்கம் பெறவேண்டும். இறைவன் உயிர்கட்கு வினைப் பயனை ஊட்டுவித்ததற்குக் காரணம் அவற்றைப் பிணித்துள்ள ஆணவ மலத்தைப் போக்குதல் வேண்டும் என்னும் திருவுள்ளக் கருத்தேயாகும். உயிர்கள் 'எல்லாவற்றிற்கும் இறைவனே முதல்வன்' என்பதை மறந்து 'எல்லாவற்றிற்கும் தாங்களே முதல்வர்' என்று எண்ணும் செருக்கினால் செய்யப்பெறும் செயல்களே 'வினை' எனப்படும். இம்மறதியும் செருக்கும் ஆணவமல மறைப்பினால் வருவன. வினையை உயிர்கள் தவறாது அநுபவிக்க அநுபவிக்க அவை தமது அறியாமை நீங்கி இறைவனை அறியும் அறிவைப் பெறும். இறைவன் வினைப்பயனை ஊட்டுவித்தல் மருத்துவர் நோயாளிக்கு மருந்து கொடுத்தல் போன்றது. ஆணவ மலம் உயிர்கட்கு உள்ள நோய் ஆகும். அதற்கு மருந்தாய் உள்ளவை வினைப் பயன்கள். மருந்துகளில் சில இனிக்கும்; சில கசக்கும். நல்வினைப் பயனான இன்பம் இனிப்பான மருந்தை உண்பதைப் போன்றது; தீவினைப் பயனாகிய துன்பம் கசப்பான மருந்தை உண்பது போன்றது. இன்னும் சிலவேளைகளில் அறுத்தும் கீறியும் சுட்டும் செய்யும் சிகிச்சைகளும் நிகழும் சந்தர்ப்பங்களும் ஏற்படுகின்றன அல்லவா? இங்ஙனமே மிகப் பெரிய துன்பங்களையும் மிகப் பெரிய பயனாக இறைவன் ஊட்டுவிப்பான். ஆருயிர்கள் இவற்றைத் தாங்கிக் கொள்ளத்தான் வேண்டும். இது கருதியே வள்ளுவர் பெருமானும் 'இடுக்கண் வருங்கால் நகுக' (குறள் 621) என்று கூறிப் போந்தார் என்பதையும் நினைக்கத் தோன்றுகிறதல்லவா? சுருங்கக் கூறின், ஆருயிர்களின்மீது எல்லையற்ற கருணையையுடைய இறைவன் ஆணவத்தின் ஆற்றல் கெடுதற்பொருட்டே வினையின் பயனை ஊட்டுவிக்கின்றான் என்பதை உணர்தல் வேண்டும்.

*"நன்றாங்கால் நல்லவாக் காண்பவர் அன்றாங்கால்*
*அல்லற் படுவ தெவன்?"*[11]

என்ற குறள் நம் சிந்தனைக்கு விருந்தாக அமைகின்றது.

மணிவாசகப் பெருமானும் இறைவன் வினையின் பய னைக் கூட்டுவிக்கின்றான் என்பதை,

*"முன்னை வினையிரண்டும் வேரறுத்து முன்னின்றான்*
*பின்னைப் பிறப்பறுக்கும் பேராளன் - தென்னன்*
*பெருந்துறையில் மேய பெருங்கருணை யாளன்*
*வருந்துயரம் தீர்க்கும் மருந்து"*[12]

(முன்னைவினை இரண்டு - சஞ்சிதம், பிராரத்தம்; முன்னின்றான் - குருவாக நின்றான்; வருந்துயரம் - ஆகாமிய வினையாகிய துன்பம்)

என்று கூறியமையால், தெளியலாம். ஒருவர் பிறரது தீவி னைப் பயனைத் தாம் ஏற்றுக் கொள்ள விரும்பினும், தாம் செய்த நல்வினைப் பயனைப் பிறர்க்குத் தர விரும்பினும் இறைவனது ஆணை அவற்றை முற்றுவிக்கும் என்பது அறி யப்படும்.

இறுதியாக மேற்குறிப்பிட்ட தாயுமானவரின் பரிபூரணா னந்தப் பாடலின் கருத்தைச் சிந்திப்போம். இறைவன் எங்கும் நீக்கமற நிறைந்திருக்கின்றான். அவனுடைய கருணையை நாடுகின்றவர்கட்கு வினை எவ்வளவு வேகம் படைத்திருந்தா லும் அதன் வேகம் ஒடுங்கி விடுகின்றது. "இறைவா, உன் னையே நினைந்து உன் கருணையையே நாடி நான் இருப்பே னாகில் கர்மம் இவ்வளவு ஆதிக்கம் பெற்று மனத்தகத்து வந்து முன்னணியில் நிற்பதற்கு அதற்கு எங்ஙனம் இயலும்?" என்ற கருத்து இப்பாடலில் வெளியாகின்றது. தீவிரமான அருள் வேட்கையுடன் இறைனை நாடி இருப்பவர்கட்கு "எல்லாம் வல்லது வினை" என்ற கோட்பாடு உருவெடுப்

11. குறள்-319 12. திருவா.திருவெண்பா-4

பதற்கே இடம் இல்லாது போய்விடுகின்றது. இத்தகைய தீவிர உணர்வு தனக்கு வரவேண்டும் என்று எங்கும் நிறைந்துள்ள பரிபூரணானந்தப் பரம்பொருளிடம் விண்ணப்பம் செய்கின்றார் அடிகள்.

*"கன்மம் ஏது? கடுநர கேதுமேல்*
*சென்மம் ஏது?எனைத் தீண்டக் கடவதோ?*
*என்ம னோரதம் எய்தும் படிக்குஅருள்*
*நன்மை கூர்முக்கண் நாதன் இருக்கவே"*

**— பொன்னை மாதரை - 49**

என்ற பாடலால் 'நாதன் இருக்க நமக்கேன் பயம்?' என்ற கருத்து தெளிவாகின்றது. இறையருளால் வினையை வெல்லலாம் என்பது அடிகளின் அசைக்க முடியாத நம்பிக்கை. முக்கண் கோவைப் பணிந்தால் கருவிலிருக்கின்ற கன்மம் இல்லாதொழியும் என்கின்றார்.

# 10. புனிதமெனும் அத்துவிதம்

இறைவனுக்கு உலகத்தோடுள்ள தொடர்பை விளக்கு வதற்கு அடிகளார் அத்துவிதம் என்ற சொல்லைப் பயன்படுத் துகின்றார். அத்துவிதமாவது, இரண்டல்லாமை (அதாவது பிரிவின்மை) என்பது அவர்தரும் விளக்கம். '''அத்துவிதம்' என்ற சொல்லே அந்நியநாத்தியை (பிரிப்பின்மையை) உணர்த்துமாயிற்று''[1] என்று உரைத்தருளினமையால் இது தெளியப்படும். 'பிரிவின்மை' என்று கூறுவதனாலேயே 'பொருள் இரண்டு' என்பதும், 'இரண்டாயினும் வேறுவே றாய் நில்லாது ஒன்றியே நிற்கும்' என்பதும் பெறப்படும். அத்துவிதத் தொடர்பில் அபேதம், பேதம், பேதாபேதம் என்ற மூன்று தன்மைகளும் ஒருங்கே காணப் பெறுகின்றன. இம் மூன்றற்கும் பொதுவாய் நிற்றலையே வேதம் 'அத்விதீயம்' (அத்துவிதம்) என்று கூறுகின்றது. இதன் உண்மைப் பொருள் சித்தாந்தத்தில்தான் தெளிவாகின்றது. 'இறைவன் உயிர்களோடு கலப்பினால் ஒன்றாயும், பொருள் தன்மையால் வேறாயும் உயிர்க்கு உயிராதல் தன்மையால் உடனாயும் நின்று உலகத்தைச் செயற்படுத்துவான் என்பது சித்தாந்தம் தரும் விளக்கம்.

இந்த விளக்கத்தை மேலும் விரித்துக்காட்டித் தெளிவு பெறுவோம். இறைவனும் உலகமும் ஒன்றி நிற்கும் கலப் பினை நோக்குங்கால் இரண்டும் ஒன்றே எனக் கூறுமாறு அபேதமாய் நிற்கின்றான் இறைவன். பொருள் தன்மையை நோக்குங்கால், 'இறைவன் தன்மை வேறு உலகின் தன்மை வேறு' எனக் காணப் பெறுவதால் இறைவன் பேதமாய் நிற்பது தெரிகின்றது. உலகத்தை இறைவன் தொழிற்படுத்த லேயன்றி, அதன் பொருட்டுத் தானும் உடன் தொழிற்பட்டு நின்றும், உலகம்போலத் தான் விகாரம் அடையாது நிற்றலை

1. சி.ஞா.போ.2ஆம் சூத்திரம் மலதிகாரணம் - வார்த்திகம் (7b) - (சிற்றுரை) காண்க

நோக்குங்கால் அபேதமாய் இருந்தே பேதமாகின்ற பேதா பேதம் என்ற நிலையைக் காண முடிகின்றது. இவ்வாறு அபேதம், பேதம், பேதாபேதம் என்ற மூன்றுக்கும் பொது வான நிலையை மெய்கண்டார் 'அவையே தானாய்'[2] என்ற ஒரு சிறுதொடரால் மின்கை விளக்கொளியைக் காட்டுவார். இதனை நன்குணர்ந்த தாயுமான அடிகள்,

*"பொய்கண்டார் காணாப் புனிதமெனும் அத்துவித*
*மெய்கண்ட நாதன்அருள் மேவுநாள் எந்நாளோ!"*
**— எந்நாட். குருமரபின் வணக்கம் 4**

என்று விளக்கிக் கூறியிருத்தலால் மேலும் தெளியலாம்.

அபேதவாதம் கூறுவோர் தம் கொள்கை நிலை பெறு தற்கு 'பிரம்மம், கேவலம், அத்துவிதம்' என, 'அத்துவிதம் என்பதனோடு 'கேவலம்'[3] என்ற ஒரு சொல்லைச் சேர்த்துப் பொருள் கொள்வர்; இதனால் அவரது கொள்கை 'கேவலாத்து விதம்' என வழங்கப் பெறுகின்றது. பேதாபேதவாதிகள் தம் கொள்கை நிலை பெறுதற்கு 'பிரம்மம் விசிட்டத்தினால் அத்து விதம்' என 'அத்துவிதம்' என்பதனோடு "விசிட்டம்"[4] என்ற ஒரு சொல்லைச் சேர்த்துப் பொருள் கொள்வர்; இதனால் அவரது கொள்கை "விசிட்டாத்துவிதம்" என வழங்கப்பெறு கின்றது. மெய்கண்டார் தம் கொள்கையின் பொருட்டு 'அத்து விதம்' என்பதனோடு யாதொரு சொல்லையும் சேர்க்காமல் அப்படியே வைத்துப் பொருள்கொள்வதனால் அவரது கொள்கை 'சுத்தாத்துவிதம்' எனப் பகரப் பெறுகின்றது. அடி கள் இச்சொல்லை 'புனிதம் எனும் அத்துவிதம்' என்று கூறு வார். 'சுத்தம்' என்பதைப் 'புனிதம்' என்ற சொல்லால் விளக்குதல் காணத்தக்கது.

மெய்கண்டாரின் கொள்கையை அவர்தம் மாணாக்கர்கள் விரித்து விளக்கியுள்ளனர். அருணந்தி சிவாச்சாரியார் "உல

2. சி.ஞா.போ.சூத்திரம் - 2
3. 'கேவலம்' என்ற சொல் 'தனிமை' எனப் பொருள்படுவது.
4. விசிஷ்டபஸ்ய - உயிர்ப் பொருள், உயிரல் பொருள்களைச் சரீரமாகவுடைய பொருள்.

கெலாமாகி வேறாய் உடனுமாய''[5] என விளக்குவார். உமா பதி சிவமோ ''பொற்பணிபோல் அபேதப் பிறப்பிலதாய் இருள் ஒளிபோல் பேதமும் சொற்பொருள்போல் பேதா தேமும் இன்றி .... உடல் - உயிர், கண் - அருக்கன், அறிவு - ஒளிபோல் பிரிவரும் அத்துவிதமாகும் சிறப்பினதாய்''[6] எனப் பிற மதங்களையும் எடுத்துக் காட்டி மறுத்தும், சித்தாந் தத்தை உவமை முகத்தால் இனிது விளக்குவார். இவர்களுள் அருணந்தி வாக்கினால் மெய்கண்டாரது ''அவையே தானே யாய்'' என்ற தொடர், ''அவையேயாய், தானேயாய், அவையே தானேயாய்'' என இரட்டுற மொழிதலால் நின்று ''முதல்வன் கலப்பினால் உலகத்தோடு ஒன்றேயாயும், பொருள் தன்மை யால் வேறேயாயும் உயிருக்கு உயிராதல் தன்மையால் உலகத் தோடு உடனாயும் நிற்பன்'' என்ற பேரொளியைப் பெற்று விளக்கம் அடைகிறது. உமாபதி சிவத்தின் வாக்கினால், ''முதல் வன் உலகத்தோடு பொன்னும் பணியும்போல் (ஆபரணம்) அபேதமும் ஆகாமல், இருளும் ஒளியும் போல் பேதமும் ஆகாமல், சொல்லும் பொருளும்போல் பேதாபேதமும் ஆகா மல், கலப்பினால் உடலின் உயிர்போல ஒன்றாயும், பொருள் தன்மையால் கண்ணில் அருக்கன் (சூரியன்) போல் வேறாயும் உயிருக்கு உயிராதல் தன்மையால் கண்ணொளியும் ஆன்ம போதமும்போல உடனாயும் நிற்பன்'' என்று விளக்கம் பெறு கின்றது. இவ்வாறு அபேதம், பேதம், பேதாபேதம் என மூன்றற்கும் பொதுவாய் நிற்கும் நிலையே அத்துவிதமாகும் என்பது தெளியப்படும்.

தாயுமான அடிகளும் தமக்கே உரிய உவமைகள் வாயி லாக 'அத்துவித நிலையை' தெளிவாக விளக்குவார். சிலவற் றைக் காண்போம்.

*''செங்கதிரின் முன்மதியம் தேசடங்கி நின்றிடல்போல்*
*அங்கணார் தாளில் அடங்கும்நாள் எந்நாளோ!''*

— எந்நாட். நிற்கும்நிலை 4

5. சித்தியார் - 2.1 6.

இதில் பகலவன் ஒளியின்முன் மதியின் ஒளி அடங்கி நிற்றல் போல் பரமான்மாவின் முன்னர் ஆன்மா அடங்கி யிருத்தல் காட்டப் பெறுகின்றது.

*"வானூ டடங்கும் வளிபோல் இன்புருவாம்*
*கோனூட் டடங்கும் குறிப்பறிவ தெந்நாளோ?"*

— மேலது 5

இதில் அகல்வானத்தில் காற்று கலந்திருத்தலைக் காட்டுவார்.

*"செப்பரிய தன்கருணைச் சிற்சுகனார் பூரணத்தில்*
*அப்பினிடை உப்பாய் அணையும்நாள் எந்நாளோ!"*

— மேலது 6

தண்ணீரும் உப்பும் கலந்த நிலையில் தண்ணீரும் உப்பும் ஒன்றாய், வேறாய், உடனாய் இருத்தல் இதில் காட்டப் பெறுகின்றது.

*"தூயஅறி வான சுகரூப சோதிதன்பால்*
*தீயின்இரும் பென்னத் திகழும்நாள் எந்நாளோ!"*

— மேலது 7

பழுக்கக் காய்ச்சப்பெற்ற இரும்பில் தீயும் இரும்பும்போல் உள்ள நிலை இதில் காட்டப் பெறுகின்றது.

*"ஆராரும் காணாத அற்புதனார் பொற்படிக்கீழ்*
*நீரார் நிழல்போல நிலவும்நாள் எந்நாளோ!"*

— மேலது 9

இதில் நீரின்கண் நிழல் காட்டப் பெறுகின்றது. இன்னும் பட்டப்பகல் போலவும் (கண்ணி - 10) உச்சிக் கதிரவனுக்கு எதிர்ப்பட்ட படிகம் போலவும் இறைவன் திருவடி நீழலில் அடங்குதலும் அத்துவித நிலை என்று விளக்குகின்றார் அடிகள்.

அத்துவிதக் கலப்புக்குத் தமிழில் தாள், தலை என்ற இரண்டு சொற்களின் புணர்ச்சியை எடுத்துக்காட்டாகக் கொள்வது மரபு. தலை ஆன்மாவையும் தாள் இறைவனையும் குறிப்பனவாகக் கொள்ளல் வேண்டும். அஃதாவது

இறைவனது திருவடிகளில் ஆன்மா பொருந்துகின்றது என்பதே இதன் கருத்து. தாளும் தலையும் தமிழ் இலக்கண விதிப்படிப் புணரும்போது 'தாடலை' ஆகும். 'தாள்' என்பதிலுள்ள 'ளகரம்'(ள்) மறைய, 'தலை' என்பதிலுள்ள 'தகரம்'(த) 'டகரமாக'(ட) மாறித் 'தாடலை' ஆகின்றது. இதனை இரு சொற்கள் எனவும் கொள்ள முடியாது; ஒரு சொல் எனக் கருதுவதும் இயலாது. ஒருவிதத்தில் இஃது ஒரு சொல்; இன்னொரு விதத்தில் இருசொல். இதைப் போன்றதே இறைவனோடு ஆன்மா ஐக்கியப்படும் விதமும் என்பதே சித்தாந்தத்தின் முடிவாகும்.

> *"தாடலைபோல் கூடியவை தானிகழா வேற்றின்பக்*
> *கூடநீ யோக மெனக் கொள்"*[7]

என்ற உமாபதிசிவத்தின் அருள்வாக்கையும் காண்க. இவ்வாறு கூறியது உயிரினது தாழ்வும் இறைவனது உயர்வும் காட்டுதற்காகும். தாயுமான அடிகளும்,

> *"ஆடலையே காட்டிஎனது அடல்ஒழித்து ஆண்டான்பொன்*
> *தாள்தலைபோல் சூடித் தழைக்குநாள் எந்நாளோ!"*
>
> — எந்நாட். நிற்கும் நிலை 22

என்ற கண்ணியில் இதனைக் காட்டுவர்.

இறைவனும் உலகமும் பொருட்டன்மையால் வேறாயினும் கலப்பால் வேற்றுமை தோன்றாதவாறு இறைவன் உலகத்தோடு கலந்துள்ளான் என்று அறிவுறுத்தற்கெனத் தெரிந்து அத்துவித பாவனை செய்வதே ஞானநெறி என்பது அடிகளின் கருத்து.

> *"அத்துவிதம் என்ற அந்நியச்சொற் கண்டுஉணர்ந்து*
> *சுத்த சிவத்தைத் தொடருநாள் எந்நாளோ!"*
>
> — எந்நாட். நிலைபிரிந்தோர் 4

> *"ஒன்றிரண்டும் இல்லதுவாய், ஒன்றிரண்டும் உள்ளதுவாய்*
> *நின்ற சமத்துநிலை நேர்பெறுவ தெந்நாளோ!"*
>
> — எந்நாட். நிற்கும் நிலை 15

7. திருவருட்பயன் - 8.4

என்ற கண்ணிகளில் இதனைக் காணலாம். 'நாம் பிரமம்' என்று பாவனை செய்தால் 'நாம்' என்ற உணர்ச்சி ஆங்காரத்தை உண்டாக்கும் என்று கருதி அப்பாவனையை மறுத்துரைப்பர் அடிகள். (மேலது நிலை பிரிந்தோர் - 7)

சிவத்தோடு இரண்டறக் கலக்கும் நிலையில் நிற்பார்க்குச் சிவத்தைக் காண்கின்ற தானும் காணும் பொருளும் வெவ்வேறாகத் தோன்றுதல் கூடாது. அகண்டாகாரமான சிவத்தின் தோற்றமொன்றே நிகழ்தற்குரியது.

*"காண்பானும் காட்டுவதும் காட்சியுமாய் நின்றஅந்த*
*வீண்பாவம் போயதுவாய் மேவுநாள் எந்நாளோ"*

— **எந்நாட். நிற்கும்நிலை 20**

என்பதில் இக்கருத்தைக் காணலாம். இக்கருத்து,

*"காண்பானும் காட்டுவதும் காண்பதுவும் நீத்துண்மை*
*காண்பார்கள் நன்முத்தி காணார்கள் - காண்பானும்*
*காட்டுவதும் காண்பதுவும் தன்கடந்தைச் சம்பந்தன்*
*வாட்டுநெறி வாரா தவர்"*[8]

என்ற மறைஞான சம்பந்தரின் கருத்தையொட்டியது. மெய்கண்டாருக்கு முன்பிருந்த ஞானசம்பந்தப் பெருமானும், தமது திருவீழிமிழலைப் பதிகத்தில்,

*"ஈறாய்முதல் ஒன்றாய்இரு*
*பெண்ஆண்குணம் மூன்றாய்*
*மாறாமறை நான்காய்வரு*
*பூதம்மவை ஐந்தாய்*
*ஆறாய்சுவை ஏழோசையொடு*
*எட்டுத்திசை தானாய்*
*வேறாய்உடன் ஆனான்இடம்*
*வீழிம்மிழ லையே"*[9]

8. வினாவெண்பா-11 9. சம்ப.தேவாரம்-1.11:2

என்ற திருப்பாடலில் இக்கருத்தைப் புலப்படுத்தியிருத்த லைக் கண்டு தெளியலாம்.

காண்பானும் காணும் பொருளுமாய்ப் பிரித்து நோக்குங் கால் காணும் பொருளை முன்னிலையாகச் சுட்டியுணர்தல் நேரும். இது சுட்டிறந்த ஞானத்திற்கு இடையூறாக முடியும். எனவே அடிகள்,

*"முன்னிலை ஒழிந்திட அகண்டிதா காரமாய்*
*மூதறிவு மேல்உதிப்ப*
*முன்பினொடு கீழ்மேல் நடுப்பக்கம் என்னாமல்*
*முற்றும்ஆ னந்தநிறைவே*

*என்னிலைமை யாய்நிற்க இயல்புகூர் அருள்வடிவம்*
*எந்நாளும் வாழிவாழி."*
*— எங்கும் நிறைகின்ற பொருள் - 11*

என்றும்,

*"முன்னிலைச் சுட்டொழி நெஞ்சே!நின்*
*போதம் முளைக்கில்ஐயோ*
*பின்னிலை சன்பம் பிறக்கும்;கண்*
*டாய்...."* *— பாயப்புலி - 23*

என்றும் கூறுவார். இங்ஙனமே 'அது' என்று பரம்பொருளைக் குறித்து நினைத்தாலும், 'அது' என்ற சொல் சுட்டுணர்வினை எழுப்பி அதீத பாவனைக்கு இடையூறாகி விடும் என்று கருதிய அடிகள்,

*"அதுஎன் றுன்னும் அதுவும் அறநின்ற*
*முதிய ஞானிகள் மோனப் பொருளது*
*எதுஎன் றெண்ணி இறைஞ்சுவன் ஏழையேன்;*
*மதியுள் நின்றின்ப வாரி வழங்குமே."*
*— பொன்னைமாதரை - 29*

என்று இயம்புவார்.

மோனம் அல்லது பேசாநிலை: எச்சொல்லாலும் இறைவ னைச் சுட்டாதுணரும் நிலை 'பேசாநிலை' என வழங்கப்பெ

றும். இதுவே 'மோனம்' என்றும் மொழியப் பெறும். 'மோனம் என்பது ஞான வரம்பு' [10] என்பது ஔவைப் பாட்டியின் அருள்வாக்கு. செயலற்றுப் பேச்சுமற்று இருக்கும் நிலையே 'சும்மா இருக்கின்ற நிலை' என வழங்கப்படும். அத்துவித நிலை, மோன நிலை, சுமாவிருக்கும் நிலை - இவை மூன்றும் ஒரு நிலையையே குறிக்கும். மிகச் சுருங்கிய சொல்லால் பெரிய பொருளைத் தெரிவிப்பவை. ஒரு பாடலின் (ஆகாரபுவனம் - 22) இறுதியில்,

*"அதுவானால் அதுவாவர்;*
*அதுவே சொல்லும்"*

என்கின்றார். இதில் முதல் 'அது' அத்துவித பாவனையையும், இரண்டாவது 'அது' சிவம் என்பதையும் மூன்றாவது 'அது' சிவானுபவத்தையும் குறிக்கும். இதற்கு அடுத்த பாடலில் (ஆ.பு.23) அத்துவித ஞானமாகிய மோனத்தைத் தவிர வீட்டின்பம் அடைவதற்கு வேறு வழியில்லை என்பதை அடிகள் தெளிவுறுத்துகின்றார். "அது என்றால் எது? என்ற ஆசங்கை உண்டாகும். ஆதலால் அது என்ற கருத்தையும் அறவேயொழித்து மதுவுண்ட வண்டுபோல் சனகாதி மன்னர்களும் சுகர் முதலிய முனிபுங்கவர்களும் பேரின்ப நுகர்ச்சியால் அசைவின்றி வாழ்ந்தனர்" என்கின்றார். இதே கருத்தை வேறு பல இடங்களிலும் வற்புறுத்துவர்.

*"முடிவிலா வீட்டின் வாழ்க்கைவேண் டினர்க்குன்*
*மோனமல் லால்வழி, உண்டோ?"*

— ஆரணம் 10

*"செகங்கள் எங்கும் திரிந்துநல் மோனத்தை*
*உகந்த பேர்உனை ஒன்றுவர் ஐயனே!"*

— பொன்னைமாதரை - 44

*"அத்துவிதமான ஐக்கிய அநுபவமே*
*சுத்தநிலை"*

— பராபரம் 293

10. கொன்றைவேந்தன் - 80

*"........... மெய்ஞ்ஞானத்*
*தாணுவினோ டத்துவிதம் சாரும்நாள் எந்நாளோ!"*

***— எந்நாட் நிற்கும் நிலை 28***

என்பவற்றில் இதனைக் காணலாம்.

பேசா நிலையாகிய மௌனத்தை முடிந்த நிலையாக இறைவன் வைத்ததற்குக் காரணம் என்ன? இந்த வினாவை எழுப்பிக் கொண்டு அடிகள் இதற்குக் கூறும் விடை நயமாக அமைந்துள்ளது. "இவன் வஞ்சமுடையவன்; இவனோடு வாய் பேசுதல் தவறு என இறைவன் கருதினமையை இதற்குக் காரணம்" என்கின்றார்.

*"நலமேதும் அறியாத என்னைச் - சத்த*
*நாதாந்த மோனமாம் நாட்டம் தந்தே"*

***— ஆனந்தக் களிப்பு - 17***

என்பதிலும் ஓராற்றால் இக்கருத்து அமைந்திருத்தல் காணலாம்.

'மௌனம், மௌனம்' என்று வாயினாற் பேசாமலும், கையை அடைக்காமலும் இருப்பதாலும் பயனில்லை. இராப் பகல் அற்ற உணர்ச்சியோடு இறைவனை அறிவினால் நாடியிருத்தலே உண்மையான மௌனம் ஆகும்.

*"வாய்க்கும் கைக்கும் மௌன மௌனமென்று*
*ஏய்க்கும் சொற்கொண்டு இராப்பகல் அற்றிடா*
*நாய்க்கும் இன்ப முண்டோ?"*

***— பொன்னைமாதரை 42***

என்ற பாடலில் இக்கருத்தைக் காணலாம். பிறிதோர் இடத்தில்,

*"இருவினைக ளற்றிரவு பகலென்ப தறியாத*
*ஏகாந்த மோனஞான*
*இன்பநிட் டையர்கோடி"*

***— மௌனகுருவணக்கம் - 8***

என்பர். இதை விளக்குவோம். ஞானிகட்கு உடல் உணர்வு

இல்லை. ஆதலால் உடலைச் சார்ந்துள்ள இருவினைப் பயன்கள் இல்லை; இருவினைகளால் விளையும் இன்ப துன்பமும் இல்லை. 'ஞானிக்கில்லை இன்பமும் துன்பமும்'[11] என்பது அதிவீர ராமபாண்டியரின் அருள்வாக்கு. ஞானிகள் வினைப் பயனைக் கடந்திருப்பதுபோல் காலத்தையும் கடந்துள்ளனர். இவர்கள் காலத்தால் ஒருபொழுதும் கட்டுண்டு இருப்பதில்லை. காலம் மனநிலையைப் பொறுத்தது. மனம் செயற்படும் பொழுது காலத்தைப் பற்றிய உணர்வு வருகின்றது; அது செயலற்ற நிலையில் காலத்தைப் பற்றிய எண்ணமே எழுவதில்லை. மனம் அடங்கப் பெற்ற ஞானியர்க்கு கணப்பொழுதும் கற்ப காலமும் ஒன்றேயாகும். இவர்கட்கு இரவுபற்றிய உணர்வும் பகலைப் பற்றிய சிந்தனையும் இல்லை. சீவபோதம் அற்று சிவபோதம் ஒன்றே நிலைத்துள்ளது. அவர்தம் உடல் எங்கு, எந்நிலையில் இருப்பினும் அவர்கள் தனிமையில் இருப்பவர்களாகின்றனர். இதனால் பேச்சுக்கும் இடம் இல்லாது போகின்றது. இவர்கள் பரமான்மா சொரூபத்தில் திளைத்திருப்பதால் இவர்கள் மோன நிலையில் உள்ளவர்களாகக் கருதலாம். கல்லுக்கும் நிர்விகல்ப சமாதியில் ஊறியிருக்கும் ஞானியர்கட்கும் அதிக வேற்றுமை இல்லை. 'கல்' என்ற உயிர் ஆன்ம பரிபாகத்தில் தொடக்க நிலையில் உள்ளது. ஞானியோ ஆன்ம பரிபாகத்தில் நிறைவடைந்த நிலையில் இருக்கின்றார். இத்தகைய ஞானிகள் எண்ணிக்கையில் அடங்காத பேர்கள் இறைவன் முன் மோன நிலையில் - பேரின்பத்தை நுகர்ந்த நிலையில் - இருக்கின்றனர். இக்கருத்துகள் யாவும் இவண் குறிப்பிட்ட பாடற் பகுதியில் அடங்கியுள்ளன.

மோன நிலையைப் பற்றி வேறொரு சந்தர்ப்பத்தில் அடிகள் குறிப்பிடுவதையும் காண்போம்.

> *"சைவமுத லாம்அளவில் சமயமும் வகுத்துமேற்*
> *சமயம் கடந்தமோன*
> *சமரசம் வகுத்தநீ"*

> **— சின்மையானந்த குரு - 4**

11. வெற்றிவேற்கை - 43

என்ற பாடற் பகுதியில் இதனைக் காணலாம். மானிட வாழ்க்கையின் முடிவான குறிக்கோள் உணவைத் தேடுவதும், எதிரியை விரட்டுவதும், தன் இனத்தைப் பெருக்குவதும் அல்ல. அதற்கு மேலான குறிக்கோள் ஒன்று உண்டு என்பதை அறிந்த சான்றோர்கள் அதை அடைவதற்கான நெறி சமய அநுட்டானம் என்பதாகக் கண்டனர். இங்ஙனம் ஆன்றோர்களால் நிறுவப் பெற்ற சமயங்கள் பல. அவற்றை எண்ணிக்கையுள் அடக்க முடியாது.[12] ஏனென்றால் வாழ்க்கை முறையில் ஒரு மனிதன் முற்றிலும் மற்றொரு மனிதனை ஒத்திருப்பதில்லை. ஒவ்வொரு மனிதனும் தன் இயல்புக்கு ஏற்றபடி சமய அநுட்டானத்தைக் கடைப்பிடித்து வருகின்றான். இதனைத்தான் அடிகள் 'சைவம் முதல் அளவு இல் சமயமும் வகுத்து' என்கின்றார். சமயங்கள் பல இருப்பதனால்தான் அவரவர் மனத்திற்குகந்த சமயம் ஒன்றை அநுட்டிக்க முடிகின்றது.

சமயங்கள் எல்லாம் நெறிகள் ஆகின்றன. அவை யாவும் ஆன்மசாதகர்களை ஒரே இடத்திற்கு இட்டுச் செல்கின்றன. புறப்படும் இடங்கள் வேறுபட்டாலும் சென்றடைய வேண்டிய இடம் ஒன்றேயாகும். மலை உச்சிக்குப் போக முற்படுபவர்கள் மலையைச் சுற்றிலும் நின்று கொண்டு மேல்நோக்கி நடப்பதுபோல் பல சமயங்களை அநுட்டிக்கும் ஒவ்வொரு மனிதனும் ஒவ்வோர் இடத்தில் நிற்கின்றான். இடபேதத்தை முன்னிட்டுப் புறப்படும் இடங்கள் பலவாக இருப்பினும், அடைய வேண்டிய இடம் மலை உச்சியே. அங்ஙனமே, அநுட்டிக்கும் சமயங்கள் பலவாக இருப்பினும் அடைய வேண்டிய குறி ஒன்றே. இந்தக் குறி பிரபஞ்ச வாழ்க்கைக்கு அப்பாற்பட்டது. இதனோடு அதனைச் சீர்தூக்க முடியாது. ஒப்பிடுவதற்கு ஆங்கு ஒன்றும் இல்லை. ஆதலால் அதை 'மனம் மொழி கடந்த மோன நிலை' என்று மேலோர் மொழிந்தனர். இந்த மோன நிலையில் வேற்றுமைக்கு இடம் இல்லை.

12. மிக அண்மையில் தோன்றிய பகவான் இராமகிருஷ்ணர் சமயங்களைப் பற்றித் தமது கருத்தை வெளியிட்டுள்ளார். உலகில் எத்தனை மனிதர்கள் உள்ளனரோ அத்தனை வித சமயங்கள் உள்ளன என்பது அப்பெருமானின் கருத்து.

ஓராற்றால் நம்முடைய ஆழ்ந்த உறக்கத்துடன் இதனை ஒப்பிடலாம். ஆழ்ந்து உறக்கம் கொள்ளுகிறவர்களுக் கிடையில் விழிப்பில் உள்ள வேற்றுமை இல்லை. வேற்றுமையைக் கடந்த மோன ஒற்றுமை நிலை இது. ஆனால், இது அஞ்ஞானத்தில் மறைந்து கிடக்கின்ற நிலை. சமயம் காட்டுகின்ற குறியோ ஞானத்தில் தெளிந்து திரண்டு கிடக்கும் பேரறிவு மோனநிலை. இந்த நிலையில் உயிர்கள் அனைத்தும் பேரறிவுப் பெருநிலையில் ஒன்றுபட்டு விடுகின்றன. ஆதலால் இங்கு உண்மையான சமரசம் திகழ்கின்றது. இலட்சியத்தில் ஒன்றுபட்ட நிலைதான் சமரச நிலை. இதைத்தான் அடிகள் மேல்சமயம் கடந்த மோன ரசம் வகுத்தநீ' என்று இறைவனைக் குறிப்பிடுகின்றார்.

மோனநிலையை நாடித் திரிந்த அடிகள் பல இடங்களில் அதைப் பன்னி உரைக்கின்றார்.

> *"சொல்லாடா ஊமையரைப்போல் சொல்லிறந்து நீயாகின்*
> *அல்லால் எனக்குமுத்தி ஆமோ? பராபரமே!"*
>
> — *பராபரம் 76*

என்றும்,

> *"பேச்சாகா மோனம் பிறவா முளைத்ததென்றற்கு*
> *ஆச்சாச்சு; மேற்பயனுண் டாமோ? பராபரமே!"*
>
> — மேலது *77*

என்றும்,

> *"வாய்பேசா ஊமையென வைக்கஎன்றோ நீமௌனத்*
> *தாயாக வந்தருளைத் தந்தாய் பராபரமே!"*
>
> — மேலது *126*

என்றும் இங்ஙனம் பலவாறாகவும் பகர்கின்றார்.

மோனநிலை எய்திய பின் அடிகள் இந்நிலையைப் பற்றற்று விதந்தோதுதல் அவர்தம் தனிச்சிறப்பு.

> *"ஆனந்த மோனகுரு வாம்எனவே என்அறிவின்*
> *மோனந் தனக்கிசைய முற்றியதால் - தேனுந்து*

*சொல்லெல்லாம் மோனம்; தொழிலா தியும்மோனம்;*
*எல்லாம்நன் மோனவடி வே''*

— *உடல்பொய்யுறவு - 73*

என்ற பாடலில், 'எல்லாம் மோனமே' என்கின்றார். ''எல்லா வற்றையும் மோன நிலையில் அடைந்துவிடலாம்; இதை நன்கறிந்தே நல்லார்கள் மோனநிலையை நாடினார்கள். 'நான்' என்ற பொல்லாத ஒன்றை நடுவே முளைக்கவிட்டு ஏன் அலைந்தேன்?'' என்று கழிவிரக்கம் கொண்டு தம் குருவை நோக்கிப் பேசுகின்றார் (மேலது 74) 'மோனமே எல்லாம்' என்ற தமது அநுபவத்தை,

*''மோன குருஅளித்த மோனமே ஆனந்தம்;*
*ஞான அருளும்அது; நானும்அது; - வானாதி*
*நின்ற நிலையும்அது; நெஞ்சப் பிறப்பும்அது*
*என்றறிந்தேன் ஆனந்த மே''*

— *மேலது 75*

என்ற பாடலில் நெஞ்சம் நெக்குருகிப் பேசுகின்றார். இன்னும் ஒரு பாடலில் 'மோனமே கதி' என்று அறுதியிடுகின்றார்.

*''இனிய கருப்புவட்டை என்நாவில் இட்டால்*
*நளியிரதம் மாறாது; நானும் - தனியிருக்கப்*
*பெற்றிலேன் மோனம்; பிறந்தஅன்றே மோனம்அல்லாற்*
*கற்றிலேன் ஏதும் கதி''* — *மேலது 78*

என்ற பாடலில் இக்கருத்தைக் கண்டு தெளியலாம். மோனநிலையிலும் அமைதி பெறாத நிலையை,

*''வாயினால் பேசா மௌனத்தை வைத்திருந்தும்*
*தாயிலார் போல்நான் தளர்ந்தேன்; பராபரமே''*

— *பராபரம் 56*

என்ற கண்ணியில் ஏசற்றுப் பேசுகின்றார்.

ஞானநிட்டை: இக்காரணங்களால் மௌனம் என்பது சுட்டிறந்த முதல்வனை உணரும் ஞானநிட்டை என்பது தெளிவாகின்றது.

*"கற்றதும்கேட் டதுந்தானே ஏதுக் காகக்?*
*கடம்படம்என்று உருட்டுதற்கோ? கல்லால் எம்மான்*
*குற்றமறக் கைகாட்டும் கருத்தைக் கண்டு*
*குணங்குறிஅற் றின்பநிட்டை கூடஅன்றோ?"*

— நின்றநிலை 3

*"நேச நிருவிகற்ப நிட்டையல்லால் உன்னடிமைக்கு*
*ஆசை யுண்டோ? நீயறியாதன்றே பராபரமே!"*

— பராபரம் 51

என்ற பாடல்களில் நிட்டையைத் தெளிவாக்கியுள்ளமை அறியப்படும்.

ஞானநிட்டையின் இயல்பு பிறிதோரிடத்தில் சுருக்கமாக உரைக்கின்றார்.

*"ஆடாமல் ஓய்ந்திட்ட பம்பரம் போல்விசை*
*அடங்கிமனம் வீழ,நேரே*
*அறியாமை யாகின்ற இருள்அகல இருள்ஒளியும்*
*அல்லா திருந்தவெளிபோல்*

*கோடா தெனைக்கண்டு எனக்குள்நிறை சாந்தவெளி*
*கூடியின் பாதீதமும்*
*கூடனேனோ?"*

— தேசோமயானந்தம் 4

என்ற பாடற்பகுதியில் இதனைக் காணலாம். 'ஆடாமல் நின்றுவிட்ட பம்பரம்போல் மனம் விசையொடுங்கி வீழவும், அறியாமையாகிய இருள் நீங்கவும், இருளொளி இரண்டுமல்லாத அருள்வெளியோடு அத்துவிதமான என்னைக் கண்டு என்னுள்ளே இருக்கும் சாந்தவெளியாகிய பரம்பொருளைக் கூடி, அதீமான இன்பநிலையை நான் கூடினேன் அல்லனே" என்று தமது ஞான பெருவிருப்பத்தைக் குறித்தமை இதில் காணலாம்.

இந்த ஞானநிட்டையின் இயல்பு இன்னொரு பாடலில் விரித்தோதப் பெறுகின்றது.

*''கூடுத லுடன்பிரித லற்று,நிர்த் தொந்தமாய்க்*
*குவிதலுடன் விரிதலற்றுக்*
*குணம்அற்று வரவினொடு போக்கற்று, நிலையான*
*குறியற்று, மலமும்அற்று,*

*நாடுதலும், அற்று,மேல் கீழ்நடுப் பக்கமென*
*நண்ணுதலும் அற்று,விந்து*
*நாதம்அற் றைவகைப் பூதபே தமும்அற்று,*
*ஞாதுருவின் ஞானம்அற்று*

*வாடுதலும் அற்று,மேல் ஒன்றற் றிரண்டற்று,*
*வாக்கற்று மனமும்அற்று,*
*மன்னுபரி பூரணச் சுகவாரி தன்னிலே*
*வாய்மடுத் துண்டு,அவசமாய்த்*

*தேடுதலும் அற்றஇடம் நிலை...''*

— **சின்மையானந்தகுரு 8**

என்ற பாடலில் இதனைக் காணலாம்.

இத்திருப்பாடலில் ஆழங்கால் படுவோம். படைப்பு ஏணியில் மனிதன் மிக உயர்நிலையில் இருப்பவன். அவனுக்குச் சிந்திக்கும் திறன் உண்டு. சென்றதைப்பற்றியும் நிகழ்வதைப் பற்றியும் எண்ணிப் பார்க்கும் திறன் மனிதனுக்கு உண்டு. இத்திறனைச் சிறந்த முறையில் வளர்த்துக் கொண்டவர்கள் நிறை ஞானிகள் எனப்படுபவர்கள். தாங்கள் எப்பொருளினின்றும் தோன்றினவர்கள், அந்த மூலப் பொருளுக்கும் தங்களுக்கும் உள்ள தொடர்பு யாது? அந்த மூலப் பொருளைத் திரும்பவும் அடைதல் எங்ஙனம்? என்பன போன்ற வினாக்கள் ஞானநெறியில் செல்லுபவர்களிடம் எழுகின்றன. இந்த அடிப்படையான உண்மைகளைத் தெரிந்து கொள்கின்றவர்கள் நிறைஞானிகளாகின்றனர். இந்த நிறை நிலை உண்டாயிருக்கும் கணக்கற்ற ஆன்றோர்களுள் தாயுமானவரும் ஒருவர். இவர் தாம் பெற்ற பேற்றினைச் சொல்லால் சித்திரிக்க முயலுகின்றார். இந்த முயற்சியையே இத்திருப்பாடலில் நாம் காண்கின்றோம்.

தெய்விகம் என்னும் பெரும் பேறு மனிதனுக்கு அன்னியமானதன்று; அஃது அவனிடம் இயல்பாகவே உள்ளது. சக்கிமுக்கிக் கல்லில் தீ இருப்பது போன்று தெய்விகம் மனிதனிடம் உள்ளது. சக்கிமுக்கிக் கல்லைத் தட்டித் தீயை வெளிப்படுத்துதல் போல் மனிதனிடம் மறைந்து கிடக்கும் தெய்விக நிலையைத் தோற்றத்திற்குக் கொண்டு வருவது முயற்சியின் விளைவு. இக்கோட்பாடுதான் 'கூடுதலுடன் பிரிதலற்று' என்று இயம்பப்படுகின்றது. இரும்பு தீமயமாய்த் திகழ்கின்ற பொழுது அதைத் தீ என்று உபசாரத்திற்குச் சொன்னாலும் உண்மையில் தீ வேறு, இரும்பு வேறுதான். ஆதலால் இரும்பும் தீயும் தொந்தமானவை. ஒன்று மற்றொன்று அல்ல என்பது இதன் பொருள். ஆனால், சக்கி முக்கிக் கல்லும் அதனுள் புதைந்து கிடக்கும் தீயும் இரண்டு அல்ல. சக்கிமுக்கிக் கல் கல்லே; தீ தீயே. இங்ஙனமே மனிதன் வேறு, கடவுள் வேறு அல்ல. கடவுள் தன்மை மறைந்திருக்கின்ற பொழுது மனிதன் என்று பெயர் பெறுகின்றான். கடவுள் தன்மை மிளிரும்பொழுது 'மெய்ப்பொருள்' என்னும் பெயர் வந்தமைகின்றது. ஆகவே, மனிதனுக்கும் கடவுளுக்கும் உள்ள தொடர்பு 'நிர்தொந்தமாய்' வேறுபடாமல் உள்ளது என்று அடிகள் இயம்புகின்றார்.[13]

ஒளியும் வெப்பமும் பகலவனிடம் குவிந்து கிடக்கின்றன. அவை நாலா பக்கமும் வியாபகம் ஆகின்றபொழுது, அவை விரிவடைகின்றன. இங்ஙனமே மனிதனிடத்திலிருந்து எண்ணங்கள் ஓயாமல் கிளம்பி வந்து கொண்டிருக்கின்றன. இந்த எண்ணங்கள் உறங்கும் நிலையில் அவனிடம் குவிந்து கிடக்கின்றன. அவன் விழித்த நிலையில் உலக விவகாரங்களில் ஈடுபடுகின்ற பொழுது இந்த எண்ணங்கள் விரிவடைகின்றன. எண்ணத்தின் விரிவே வாழ்வு ஆகின்றது. ஆனால், மனிதன் தன்னுடைய உண்மையான சொரூபத்தை சுவாநு

13. இந்தப் பாடலில் அத்வைதம் (ஏகான்மவாதம்) விளக்கப் பெறுவதுபோல் தோன்றுகின்றது. தாயுமான அடிகள் சைவத்தில் நின்று கொண்டு அத்வைதப் பார்வையைச் செலுத்துகின்றார். சிலசமயம் சமயம் கடந்த நிலையும் இப்பெருமானிடம் காண முடிகின்றது.

பூதியில் உள்ளபடி அறிந்து கொள்ளுகின்றபொழுது அவன் தன் ஆன்ம சொரூபத்திற்கு 'குவிதலுடன் விரிதலற்று' இருக்கும் நிலை யாண்டும் சொந்தமானது என்பதை அறிந்து கொள்ள முடிகின்றது.

இயற்கை சத்துவம், இராசசம், தாமசம் என்ற முக்குண மயமானது இக்குணங்களின் தாரதம்மியத்தால் இயற்கை தோற்றத்துக்கு வந்துள்ளது.[14] நிறமில்லாத பகலவன் ஒளி முப்படைக் கண்ணாடிப் படிகத்தினுள் புகும்பொழுது ஏழு நிறங்களாகப் பிரிகின்றது. நிறமற்ற ஒளி நிறமுள்ளதாக மாறி அமையும்பொழுது இயற்கைத் தோற்றம் உண்டாகின்றது. இதே முறையில் குணபேதம் மாறி அமையும்பொழுது இயற்கை தென்படுகின்றது. ஏழு நிறங்களும் மீண்டும் ஒன்று பட்டால் நிறமற்ற ஒளியாய்விடும். முக்குணங்களும் ஒன்று படும்பொழுது இயற்கை என்னும் பெயர் போய் மெய்ப்பொருள் என்னும் பெயர் வந்தமைகின்றது. முக்குணத்தில் மனிதன் கட்டுண்டு கிடக்கின்றபொழுது அவன் இயற்கை சொரூபம்; அப்பொழுது அவன் 'சீவான்மா' என்ற பெயர் பெறுகின்றான். முக்குணங்கள் அவனிடத்து ஒடுங்கி மறைந்த நிலையை எய்துங்கால் ஆவன். மெய்ப்பொருள் சொரூபமாய் விடுகின்றான். இந்த நிலையைத்தான் அடிகள் 'குணமற்று' என்று குறிப்பிடுவது.

ஒரு பொருள் இருக்கும் இடத்தைவிட்டு அகன்றால் அது 'போக்கு' என்றும், இல்லாத இடத்தில் தோன்றுங்கால் அது 'வரவு' என்றும் கூறப்பெறும். மனிதன் தன்னைச் சீவனாகக் கருதிக் கொண்டிருக்கும்பொழுது வெவ்வேறு உலகங்கட்குப் போகின்றதாகவும், வருகிறதாகவும் கருதுகின்றான்; இஃது ஒருவித மயக்கம். அவன் தன்னை முற்றிலும் பக்குவப்படுத்திக் கொண்டபிறகு அந்த மயக்கம் மறைந்துவிடுகின்றது. காரணம், இடம் அல்லது பேதம் என்பதே கற்பனை. நெடுந்

14. இந்த மூன்று குணங்களும் சமமான நிலைக்கு வரும்பொழுது பிரளயம் ஏற்படும். இந்தக் குணங்கள் ஏற்றத் தாழ்வை அடையும்பொழுது படைப்பு நடைபெறுகின்றது. ஏற்றத் தாழ்வு மாறிக் கொண்டே போகும் நிலைதான் பரிணாமம் என்பது.

தொலைவிலுள்ள அண்டங்கள் என்பவை யாவும் மனத்தின் கற்பனை. மனம் ஒடுங்குமிடத்து இடமும் ஒடுங்கி விடுகின்றது. மனிதனின் சுழுத்தி அவத்தையே இதற்குச் சான்றாகும். இந்த அவத்தையின்போது மனிதனுக்குப் போக்கும் இல்லை; வரவும் இல்லை. தெளிந்த ஞானநிலையும் இத்தகையதே. இக்கோட்பாட்டை அடிகள் 'வரவினொடு போக்கற்று' என்று குறிப்பிடுகின்றார்.

துருவ நட்சத்திரம் ஒரே இடத்தில் நிலைத்திருப்பது. அதனைக் குறியாகக் கொண்டே ஏனைய நட்சத்திரங்கள் இயங்கி வருகின்றன. துருவ நட்சத்திரம் போன்றவர் கடவுள். மக்களாகிய நாம் ஏனைய நட்சத்திரங்கள் போன்றவர்கள். துருவம் என்பதே இறைவனுக்கும் பெயர். 'துருவம்' என்ற சொல் நிலையாயிருத்தல் என்று பொருள் படுகின்றது. நிலைத்த பொருளைக் குறியாகக் கொண்டு அதை அடைதற்குப் பல நெறிகளைக் கையாளுகின்றோம். அதை அடைந்த பிறகு அது சென்றடையாப் பொருள் என்னும் உண்மை தெளிவாகின்றது. அது முற்றிலும் தன்மயமாய் விடுகின்ற பொழுது அது தனக்குத்தானே குறியாய் இருப்பதில்லை. இக்கருத்தே பாடலில் 'நிலையான குறியற்று' என்று வருகின்றது.

உயிர்களைச் 'சீவர்கள்' என்கின்றோம். மலத்துடன் கூடியிருப்பதால் இவர்கள் சீவர்களாக இயங்குகின்றனர். மலம் - அழுக்கு. இயற்கையில் மலம் என்பது ஒன்று இல்லை. நிலைமாறி இருக்கும் பொழுது நிர்மலப் பொருளை மலம் என்கின்றோம். ஒருகாட்சியில் மலமாகத் தோன்றுவது பிறிதொரு காட்சியில் தூயதாகத் தென்படுகின்றது. பசுவின் சாணம் அதற்கு மலம்; நமக்கு அது தூயது. இப்படி இயற்கை முழுவதையும் ஆய்ந்து நோக்கினால் ஒரு நிலையில் மலமாக இருப்பது பிறிதொரு நிலையில் மலமற்றதாகத் தென்படுவதைக் காண முடிகின்றது. ஆணவத்தை மலம் என்கின்றோம். சிற்றுயிர் பேருயிராகப் பரிணமிப்பதற்கு ஆணவம் தேவைப் படுகின்றது. பேருயிர் பரம்பொருளாகப் பரிணமிப்பதற்கு அந்த ஆணவம் அகல வேண்டும். ஆன்மா நிறைநிலை

அடைகின்றபொழுது மலம் என்பது அதற்கு இல்லை. இதுவே பாடலில் 'மலமுமற்று' என்று வருகின்றது.

நமக்கு அயலதாய் இருக்கும் பொருள் ஒன்றை நாம் நாடுகின்றோம். இறைவன் நமக்கு அயலானவர் என்று எண்ணும்பொழுது, இறைவன் நாட்டம் நமக்கு உண்டாகின்றது. நாம் தேடித் திரிகின்ற தெய்வம்தான் நம் மனத்தகத்து நம் சொரூபமாகத் திகழ்ந்து கொண்டுள்ளார் என்னும் உண்மை நமக்குத் தட்டுப்படுகின்ற பொழுது நாம் அதை நாடுவதற்குப் பதிலாக நம்மை அதன் மயமாக்கி அதனிடம் கொடுத்து விடுகின்றோம். இச்செயல் 'நாடுதலுமற்று' என்று செய்யுளில் குறிப்பிடப் பெறுகின்றது. பூமிக்கு மேல் இருக்கும் உலகத்தைச் சுவர்க்கம் என்றும், அதற்குக் கீழ் இருக்கும் உலகத்தை (பாதாளம்) நரகம் என்றும் எண்ணுகின்றோம். பகல் பன்னிரண்டு மணிக்கு ஒரு விமானமும் இரவு பன்னிரண்டு மணிக்கு ஒரு விமானமும் மேல் நோக்கிப் போவதாக இருந்தால் நாம் இரண்டையும் ஒரே திசையில் மேல்நோக்கிப் போவதாக எண்ணுகின்றோம். ஆனால், விமானங்கள் இரண்டும் எதிர்த் திசையில் செல்பவையாகின்றன. உறங்கும்பொழுது நாம் எங்கெங்கோ சென்று வந்தவர்களாக எண்ணுகின்றோம். ஆனால், உண்மையில் நாம் எவ்விடத்தை நோக்கியும் செல்லவில்லை. இக்கருத்துகளை 'மேல் கீழ்நடுபக்கமென நண்ணுதலுமற்று' என்ற தொடரில் அடிகள் குறிப்பிடுகின்றார்.

பிரபஞ்ச முழுவதற்கும் விந்து அல்லது வித்தாக இருப்பது நாதம். இது நாதப்பிரம்மம் என்றும் வழங்கப்படும். ஓசை, ஒலிமயமாய் இருப்பது நாதம். ஓசையினின்று உலகனைத்தும் வந்துள்ளன. எனவே, ஓசையைக் காரணம் என்றும், உலகைக் காரியம் என்றும் சொல்லலாம். ஒலியின் புறத்தோற்றமே பிரபஞ்சம். காரணம் அற்றவிடத்துக் காரியமும் இல்லாது போய்விடும். இப்பிரபஞ்சத்திற்கு ஒப்பான மெய்ப்பொருள் ஒன்றுமில்லை என்று நாம் எண்ணி வருவது தவறு. நாதம் ஒடுங்குமிடத்து இந்தப் பிரபஞ்சமும் இருக்குமிடம் தெரியாது மறைந்துவிடும். இப்பிரபஞ்சத்துக்கு அப்பால் உள்ள ஒரு பெருநிலைக்கு நாம் போக முடியும். நம்மைப் பக்குவப்படுத்

திக் கொண்டால் அது கிட்டுவது உறுதி. இக்கருத்து 'விந்துநாத மற்று' என்ற தொடரில் அடங்கியுள்ளது.

ஓசையினின்று உலகம் எப்படி உண்டாகின்றது என்று வினவலாம். தாமசாகங்காரம் தந்மாத்திரைகள்[15] மூலம் பூதங்களை உண்டாக்குகின்றது. சத்த தந்மாத்திரை - ஆகாயம்; ஸ்பர்சதந்மாத்திரை - வாயு; ரூபதந்மாத்திரை - தேசு; இரத தந்மாத்திரை - நீர்; மண தந்மாத்திரை - பூமி. இந்த முறையில் ஐம்பூதங்கள் உண்டாகின்றன. இவை தோன்றி வந்த முறையிலேயே ஒடுங்கிவிடவும் கூடும். ஒடுங்கிய நிலையில் இந்த ஐந்து பூதங்களையும் பாகு படுத்த முடியாது. ஒரே அபேத நிலையில் அவை மறைந்து விடுகின்றன. இந்த மாற்றம் 'ஐவகை பூதபேதமுமற்று' என்ற தொடரில் அடங்கியுள்ளது.

இந்த அகிலம் தோற்றத்திற்கு வருகின்றபொழுது அது சேதநப் பொருளாகவும் அசேதநப் பொருளாகவும் காட்சி தருகின்றது. ஒரு நிலையில் அது சேதநப் பொருளாகத் தென்படுகின்றது. மற்றொரு நிலையில் அஃது அசேதநப் (சடப்) பொருளாகத் தன்னைக் காட்டுகின்றது. சேதநம், சடம் என்கின்ற இரண்டு நிலைகளையும் தெளிவாகப் பிரித்து அறிதல் கூடும். காணும் தன்மை சேதநனுக்கு உண்டு. காணப் பெறும் தன்மை சடத்துக்கு உண்டு. மக்களாகிய நமது அமைப்பிலே இந்த இரண்டு கூறுகளையும் காணலாம். இந்த உடல் என்னுடையது எனக் கருதி மனிதன் தன் உடலை ஓர்கின்றான். ஓர்கின்ற மனிதனை ஞாதுரு என்று வடமொழியில் சொல்வர். காண்போன், அறிவன் என்று தமிழில் சொல்லலாம். உடலைக் காண்டல் அல்லது பொருள்படுத்தி உணர்தல் அந்தக் காண்போனிடத்து நிகழ்கின்றது. காணுதல்

15. தந்மாத்திரை என்பது முந்திய நிலை முழுதும் கழியாமலும் பிந்திய நிலை முழுதும் வராமலும் இருக்க நடுவிலுள்ள நிலை. இந்த நிலை பாலின் தன்மை முழுதும் நீங்காமலும் தயிரின் தன்மை முழுதும் வராமலும் இருக்கும் நிலைமை போன்றது. எ-டு: ஸ்பர்சதந்மாத்திரை என்பது ஆகாயத்தின் நிலைமை முழுதும் நீங்காமலும் வாயுவின் நிலைமை முழுதும் வராமலுமுள்ள ஒரு நிலையிலுள்ள திரவியம்

என்ற செயலை ஞானம் என்று பகர்கின்றோம். நமது உடலையே காண்கின்ற நாம் காணுதல் என்னும் செயலற்ற நிலைக்கு அயர்ந்து தூங்குகின்றபொழுது அங்கே சென்று விடுகின்றோம். ஆதலால் காணப்படும் பொருளும் (ஞேயம்) இல்லாது போய் விடுகின்றது. சுழுத்தியில் உண்டாகின்ற இந்த அபேத நிலை நம்மிடத்து மறைந்து கிடக்கின்றது. இது சமாதியில் வருகின்றபொழுது முற்றிலும் தெளிந்த நிலையாகி விடுகின்து. இந்நிலையைத்தான் அடிகள் 'ஞாதுருவின் ஞான மற்று' என்று குறிப்பிடுகின்றார்.

உலகம் தோற்றத்திற்கு வந்திருக்கும் நிலையில் நாம் சீவர்களாக இருந்து அவ்வுலகத்தோடு தொடர்பு கொள்ளுகின்றோம்; சுவைக்கின்றோம். இந்தத் தொடர்பு 'வியவகாரம்' என்று வழங்கும். நாம் ஏதாவது ஒன்றை அடைய விரும்பினால் அதற்குப் பெருமுயற்சி எடுத்துக் கொள்ளுகின்றோம். இவ்வாறு முயலுகின்ற பொழுது நாடிய பொருள் கிடைக்காவிடில் நாம் வாட்டமுறுகின்றோம். இன்பத்தை நாடுபவனுக்கும் அது போதிய அளவு கிடைக்காத நிலையில் வாடுகின்றான். இறைவனை நாடுகின்றவனும் அவனை நேராகக் காண முடியவில்லையே என்று வாடுகின்றான். ஆகவே, இந்த உலகில் வியவகாரம் இருக்கும்வரை ஏதேனும் ஒன்றைக் குறித்து வாட்டமுறுதல் நம்மிடத்து நிகழ்கின்றது. வியவகார நிலை கடந்து அதீத நிலைக்குப் போகின்ற பொழுது எல்லாம் ஏகமாய் - ஒன்றாய் - விடுகின்றது. இந்நிலையில் வாட்டமுறுதலுக்கு அவசியம் இல்லை. இக்கருத்தைத்தான் அடிகள் 'வாடுதலுற்று' என்று குறிப்பிடுகின்றார்.

இந்த அதீத நிலையை ஏகமாய் என்று சொல்லுகின்றபொழுது ஒன்று எனப் பொருள்படுகின்றது. ஒன்று என்று கூறுகின்றபொழுதே அதற்கு மேற்பட்ட இரண்டோடு சீர்தூக்கும் நிலை தோன்றுகின்றது. ஆனால், உண்மையில் சீர்தூக்குதலுக்கே ஆங்கு இடம் இல்லை. ஒப்பிடுதல் என்ற செயலுக்கே இடம் இல்லாது போய்விடுவதால் அப்பெருநிலையை 'ஒன்றற்று இரண்டற்று' என்று கூறுகின்றார் அடிகள்.

சொற்களால் ஒன்றை விளக்குங்கால் நாம் அப்பொரு ளுக்கு எல்லை கட்டி விடுகின்றோம். விளக்கம் பெறும் போது, பொருள் இன்ன தன்மையுடையது, இன்ன தன்மை அற்றது என்று பாகுபடுத்தப் பெறுங்கால் அஃது எல்லைக்கு உட்பட்டு விடுகின்றது. ஒற்றுமை வேற்றுமைகளைக் காட் டும்போது அது மற்ற பொருள்களோடு சீர்தூக்கப்படுகின் றது. உலகிலுள்ள பொருள்கள் யாவும் இங்ஙனம் விளக்கம் அடையுங்கால் அவை தாமாக எல்லைக்குள் அடங்கி விடு கின்றன. ஆனால், பரம்பொருள் எதனோடும் வைத்து சீர்தூக் கப்படுவதன்று; அது தனக்கு உவமை இல்லாதது; சொல்லுக் கடங்காதது[16]. பல கொள்கைகளும் கோட்பாடுகளும் மனத் திற்கு எட்டுகின்றன; மனத்தால் கிரகிக்கப்படும் பொருள்கள் இவ்வுலகில் உள்ளன. மனத்தால் உன்னப்படும் பொருள் களை சொற்களாலும் விளக்க முடியும். மனத்திற்கு எட்டாத தைச் சொற்களால் சொல்ல முடியாது. அது "மனமாதிக்கெட் டாத பேரின்ப மயமானது". இக்கோட்பாட்டைத்தான் அடி கள் 'வாக்கற்று மனமுமற்று' என்று குறிப்பிடுகின்றார்.

'பூரணம்' என்ற சொல் எல்லையில் அடங்காததைக் குறிக்கின்றது. இயற்கையில் உள்ள பொருள்கள் யாவும் எல்லைக்குட்பட்டவையாதலால் அவை பூரணப் பொருளி டத்து அடக்கம். இந்தப் பூரணம் பரிபூரணம் ஆகும்போது குறையொன்றுமில்லாத நிறை நிலையாக ஆய்விடுகின்றது. இந்தப் பரிபூரணப் பொருள் ஆராய்ச்சிக்கு அப்பாற்பட்டது; அதில் அடங்காதது. வெட்டவெளி எங்ஙனம் அண்டங்கள் அனைத்தையும் தன்னகத்து அடக்கி வைத்துக் கொண்டு அந்த அண்டங்கட்கும் அப்பாலும் இருப்பதுபோல், பரிபூர ணத்தில் யாவும் நிலைத்துள்ளன. அதற்குப் போக்கும் இல்லை; வரவும் இல்லை. அது யாண்டும் இருக்கின்றபடியே இருந்து விடுகின்றது. இந்த நிலைபேறுதான் 'மன்னுதல்' என்ற சொல் குறிப்பது. சொல்லுக்குள் அடங்காத பொரு ளுக்கு 'மன்னுபரிபூரணம்' என்னும் சொற்றொடர் ஓரளவு பொருத்தமாக அமைந்து விடுகின்றது.

16. இப்பொருள் விளக்கத்திற்கு அடங்காத பொருளாக இருப்பதால் இஃது ஒன்றுதான் மனிதனுடைய நாவினால் எச்சில் படாதது என்று விளக்குவர்.

உயிர்கள் நிலைபெற்றிருப்பதற்கு நீர் முற்றிலும் இன்றியமையாதது. "நீர் இன்றி அமையாது உலகம்"[17] என்பது வள்ளுவர் வாய்மொழி. 'வாரி' என்ற சொல் நீரைக் குறிக்கின்றது. நீருடன் ஒப்பிட்டுப் பரம்பொருள் 'சுகவாரி' என்று வழங்கப் பெறுகின்றது.[18] இன்பமனைத்துக்கும் அதுவே இருப்பிடமாதலால் இச்சொல் அதற்கு மிகவும் பொருத்தமானது. நீரை வாயால் அருந்துகின்றோம். 'அருந்துதல்' என்ற செயலை வைத்துக் கொண்டு பரம்பொருளினிடத்து நாம் பெறுகின்ற பேரானந்தத்தை அறியலாம். இதை அடிகள் 'சுகவாரி தன்னிலே வாய்மடுத்து உண்டு' என்று இயம்புகின்றார்.

நாம் அன்றாடம் உண்ணும் உணவும் பருகும்நீரும் நம்மிடத்துச் சீவபோதத்தை வளர்க்கின்றன. உடல் அபிமானத்தைக் காக்கவே நாம் இவற்றை ஏற்கின்றோம். இந்த உணவு நம் உடலைப் பேணுவது போன்று பரிபூரணத்தைப் பற்றிய உணர்வு பரிபூர்ணத்தின்கண் நம்மை எடுத்துச் செல்லுகின்றது. தன்னிடத்துள்ள குறைகளை நீக்குவதற்கென்றே சீவன் பல பிறவிகளை எடுக்கின்றான். குறைகளை அகற்றுகின்ற அளவு புதிய குறைகளும் தோன்றிக் கொண்டே வருகின்றன. கடலில் அலைகட்குப் பிறகு அலைகள் வருவன போன்று மனிதன் வாழ்ந்திருக்கும்வரை குறைகளும் தோன்றிக் கொண்டே வருகின்றன. உடலுக்கு வேண்டிய உணவை உண்டு கொண்டிருப்பதற்கிடையில் பசி மீண்டும் மீண்டும் வந்து கொண்டிருப்பது போன்று குறைபாடுகளும் தோன்றிக் கொண்டே உள்ளன. 'பரிபூரணம்' என்னும் பாரமார்த்திக நீரை அருந்தியவுடன் அது பேரானந்தத்தில் மனிதனைக் கொண்டு சேர்க்கின்றது. ஆதலால்தான் அது 'சுகவாரி' எனப்படுகின்றது. அதனை அருந்தியவுடன் மனிதன் தன் வசம் இழந்து பரவசம் அடைகின்றான். பேறு அனைத்தும் அதில் அடங்கி விடுகின்றது. சுகவாரி தன்னிலே வாய்மடுத்து உண்டு 'அவசமாய்' என்று இந்நிலையை அடிகள் விளக்குகின்றார்.

17. குறள் - 20
18. நீருக்கும் எம்பெருமானுக்கும் பல ஒற்றுமைகள் உள்ளதை இந்த ஆசிரியர் எழுதியுள்ள **வைணவ உரைவளம்** (சை.சி.நூ.ப. கழகம், 154, டி.டி.கே.சாலை, சென்னை - 600 028 என்ற நூலில் (பாசுரம் 104) பக்கம் 223-228 காண்க.

இந்தப் பரிபூரணப் பேரானந்த நிலை புறவுலகில் தேடிக் கண்டுபிடிக்கப்படுவதன்று. இதுகாறும் சீவனிடம் நிலைபெற்றிருந்த சிற்றுணர்வு பரவசம் அடைந்த பிறகு பேருணர்வாக விரிவடைந்து விடுகின்றது. தன்னில் தானாய் உள்ள நிலை அது. 'அது தேடுதலுமற்ற இடம் நிலை' என்று அடிகள் அதனைக் காட்டுவார். இந்த மேலான நிலையே 'ஞான நிட்டை' என்ற பேரானந்த நிலை. இந்த ஞான நிட்டையையே அடிகள் 'சகசநிட்டை' என்றும் குறிப்பிடுவர். 'சகசம்' என்ற சொல்லுக்குக் 'கூடப்பிறந்தது' என்பது பொருள்.

*"இரப்பானங் கொருவனவன் வேண்டுவகேட்*
*டருள்செய்என, ஏசற் றேதான்*
*புரப்பான்றன் அருள்நாடி இருப்பதுபோல்*
*எங்கும்நிறை பொருளே! கேளாய்!*
*மரப்பான்மை நெஞ்சினன்யான் வேண்டுவகேட்*
*டிரங்கெனவே மௌனத் தோடந்*
*தரப்பான்மை அருள்நிறைவில் இருப்பதுவோ?*
*பராபரமே! சகச நிட்டை!"* — **ஆசையெனும் - 2**

என்று அடிகள் கூறுவது காண்க.

சும்மா இருத்தல்: இந்த நிலையில் இருப்பதே 'சும்மாவிருத்தல்' என்று அடிகள் கருதும் நிலை. எனவே, இச்சொல் அடிக்கடி அடிகளின் திருவாக்கில் தலை காட்டுகின்றது. சும்மா இருப்பதற்கு ஓர் உபாயம் அருளுதல் கூடாதா? என்று வினவும் போக்கில்,

*"எம்மால் அறிவதற எம்பெருமான்! யாதும் இன்றிச்*
*சும்மா இருக்கஒரு சூத்திரம்தான் இல்லையோ!"*
— **இல்லையோவென் கண்ணி - 3**

என்று கூறுவதைக் காணலாம். சும்மா இருக்கும் விருப்பம் அடிகளிடம் மிகுதியாக இருந்தது என்பதை,

*"சொல்லும் பொருளுமற்றுச் சும்மா இருப்பதற்கே*
*அல்லும் பகலுமெனக்(கு) ஆசை பராபரமே!"*
— ***பராபரம் 50***

என்ற கண்ணியால் தெளியலாம். ஆனால், இந் நிலையை அடைதல் எளிதன்று என்பதை,

*"சும்மா இருப்பதுவே சுட்டற்ற பூரணமென்(று)*
*எம்மால் அறிதற் கெளிதோ? பராபரமே!"*

— மேலது 70

என்ற கண்ணியில் புலப்படுத்துகின்றார்.

*"சும்மா இருக்கச்*
*சுகம்உதய மாகுமே"*

— உடல் பொய்யுறவு - 52

*"சும்மா இருக்கச் சுகம்சுகம்*
*என்று சுருதி எல்லாம்*
*அம்மா; நிரந்தரம் சொல்லவும்"* — பாயப்புலி - 36

*"நானெனவும் நீஎனவும் இருதன்மை*
*நாடாமல் நடுவே சும்மா*
*தானமரும் நிலைஇதுவே சத்தியம்சத்*
*தியம்எனநீ தமிய னேற்கு*
*மோனகுரு வாகியும்கை காட்டினையே"*

— ஆசையெனும் - 32

என வருவனவெல்லாம் சும்மா இருக்க வேண்டும் என்ற இவர்தம் விருப்பத்தைத் தெளிவாகப் புலப்படுத்துகின்றன.

'சும்மாவிருத்தல்' என்பதையே அடிகள் 'தூங்காமல் தூங்குதல்' என்றும் குறிப்பிடுவர்.

*"தூங்காமல் தூங்கிச் சுகப்பெருமான் நின்னிறைவில்*
*நீங்காமல் நிற்கும் நிலைபெறவும் காண்பேனோ!"*

— காண்பேனோவென் கண்ணி - 10

*"தூங்கிவிழித் தென்னைபலன்? தூங்காமல் தூங்கிநிற்கும்*
*பாங்குகண்டா லன்றோ? பலன்காண்பேன் பைங்கிளியே!"*

— பைங்கிளிக் கண்ணி 30

என்ற பாடல்களில் இதனைக் காணலாம்.

சும்மா - ஒருசொல்: 'சும்மா' என்பதை ஒரு மொழி (ஒரு சொல்) என்று அடிகள் சிறப்பிப்பது வழக்கமாக இருப்பதை அவர் பாடல்களிலிருந்து தெளியலாம்.

*''பாரீர்! ஒருசொற் படியே அநுபவத்தைச்*
*சேரீர் அதுவே திறம்!''*

— உடல் பொய்யுறவு 10

என்பது காண்க. மேலும்,

*''சொன்னவொரு சொல்லால் சுகமா யிருமனமே!*
*இன்ன மயக்கம் உனக்கேன்?''* — மேலது 70

*'' சொன்னஒரு*
*சொல்லை மறவாமல் தோய்ந்தால்நெஞ் சே!உன்னால்*
*இல்லை பிறப்பதெனக் கே''* — மேலது 71

என்ற பாடல்களிலும் 'ஒரு சொல்லைக்' குறிப்பிடுதல் காணலாம்.

ஒரு பாடலில் ஒரு மொழியின் பெருமையை விரித்து ரைக்கின்றார்.

*''ஒருமொழியே பலமொழிக்கும் இடம்கொடுக்கும்; அந்த*
*ஒருமொழியே மலம்ஒழிக்கும் ஒழிக்கும் எனமொழிந்த*
*குருமொழியே மலைஇலக்கு; மற்றைமொழி எல்லாம்*
*கோடின்றி வட்டாடல் கொள்வதொக்கும் கண்டாய்''*[19]

— நினைவொன்று - 2

இதில் ''ஒரு சொல்லே பொருள் விரிக்கும்பொழுது பல சொல்லாலாகிய மெய்ந்நூற்கு இடம் கொடுக்கும்; அந்த ஒரு மொழியே பாசத்தை நீக்கும்; குரு மொழிந்த ஒரு மொழியே மலைபோன்ற எல்லையாகத் திகழ்கின்றது. இந்த ஒரு மொழியை விட்டு மற்ற மொழிகளைக் கையாள்வது கோடுவரையாமல் வட்டாடல் போன்றது'' என்கின்றார்.

19. பாரதியார் சுயசரிதையில் ஒரு பாடல் (63) இப்படித் தொடங்குகின்றது.

இந்த ஒரு மொழிதான் எது? என்ற வினா எழுகின்றது. இதனை ஓங்காரம் எனவும் 'சும்மா இரு' எனவும் திரு ஐந் தெழுத்து எனவும் கொள்ள இடந்தருகின்றது.

*''ஓங்கார மாம்ஐந் தெழுத்தால்*
*புவனத்தை உண்டுபண்ணிப்*
*பாங்கா நடத்தும் பொருளே!''* — **பாயப்புலி 9**

என்ற இடத்தில் ஓங்காரம் ஐந்தெழுத்தாக விரிவதைக் காண லாம். ஓங்காரத்தை ஒலிக்கும்போது நாதமும், எழுதும்போது விந்துவும் உகர அகர மகரங்களாகப் பிரியும்போது மூவெ ழுத்தும் ஆகப் பிரிவதால் அது ஐந்தெழுத்து என்பது தெளிவு படுகின்றது.

*''அஞ்செழுத்தின் உண்மை அதுவான அப்பொருளை*
*நெஞ்சமுத்தி ஒன்றாகி நிற்குநாள் எந்நாளோ?''*
— **எந்நாட். கண்ணி நிலைபிரிந்தோர் 13**

'சும்மா' என்னும் சொல் 'சும்ம' என்பதன் விரிவு. இச்சொல்லில் உ,ம்,அ என்ற மூன்றறெழுத்துகள் உள்ளன. இவை ஓங்காரத்தின் உறுப்புகள். சகரம் மகரத்தோடு சேர்ந்து அம்ச மந்திரமாகிய அசபையைக் குறிக்கும் என்பர்.

*''சும்மா இருசொல் லறஎன் றலுமே*
*அம்மா பொருளொன் றுமறிந் திலனே''* [20]

என்ற அருணகிரிநாதரின் அருள் மொழியை மிகவும் ஆர்வத்து டன் அடிகள் போற்றுவர்.

*''ஐயா; அருணகிரி அப்பா; வுனைப்போல*
*மெய்யாக ஓர்சொல் விளம்பினர்யார்?''*
— **உடல் பொய்யுறவு 26**

என்ற பாடலால் இதனையறியலாம். பிறிதோர் இடத்தில்,

20. கந்தரநுபூதி - 12

*"கந்தரநு பூதிபெற்றுக் கந்தரநு பூதிசொன்ன*
*எந்தைஅருள் நாடி இருக்குநாள் எந்நாளோ!"*
— எந்நாட். அடியார் வணக்கம் - 8

என்று கூறினதும் காண்க.

திருவருள் நாட்டம்: சும்மா இருந்து ஞான நிட்டை கூடு தற்கு திருவருட்டுணையை நாடி நிற்றல் வேண்டும் என்பது அடிகளின் கருத்து. திருவருட் கணணாலேயே அனைத்தையும் நோக்க வேண்டும் என்பார்.

*"அருளால் எவையும் பார்என்றான் - அத்தை*
*அறியாதே சுட்டிஎன் அறிவாலே பார்த்தேன்;*
*இருளான பொருள்கண்ட தல்லால் - கண்ட*
*என்னையும் கண்டிலன் என்னேடி? தோழி!"*
— ஆனந்தக்களிப்பு 13

என்று தன் அநுபவத்தைப் புலப்படுத்துவர்.

*"அப்படியும் அந்நிறமும் அவ்வண் ணமும்*
*அவனருளே கண்ணாகக் காணின் அல்லால்*
*இப்படியன் இந்நிறத்தன் இவ்வண் ணத்தன்*
*இவன்இறைவன் என்றெழுதிக் காட்டொ ணாதே"* [21]

என்று வாகீசரின் வாய்மொழியும் ஈண்டு சிந்தித்தல் தகும்.

இதனால் நிலையற்ற உலகப் பொருள்களை ஆணவம் கலந்த பார்வையால் நோக்குமிடத்துப் பொருள்களின் உண் மைத் தன்மை புலனாகாமற் போவதல்லாமல் அந்தப் பொருள் வயமாய் நிற்கும் தன்னையும் அறிதற்கிடமில்லை என்று தெரிவித்தருளினமையைக் காணலாம். ஞானம் உதித் தற் பொருட்டு ஆசையின்மை இயற்கையாக அமைந்தால் அது தானே கனிந்த கனியாதலும் உண்டு என்றும் பிரா ணனை யோகத்தால் வசப்படுத்தி மனஒருக்கம் கொண்டு பற்றுதல் கனிவிக்க வந்த கனி என்றும் தெரிவித்தருளுவார் அடிகள்.

21. அப்பர் தேவா.6.97:10 (தாண்டகம்)

*"பற்றுவன அற்றிடு நிராசைஎன் றொருபூமி*
*பற்றிப்பிடிக்கும் யோகப்*
*பாங்கிற் பிராணலயம் என்னும்ஒரு பூமிஇவை*
*பற்றின்மனம் அறும்என்னவே*

*கற்றையஞ் சடைமௌனி தானே கனிந்தகனி*
*கனிவிக்கவந் கனிபோல்*
*கண்டதிந் நெறிஎனத் திருவுளக் கனிவினொடு*
*கனிவாய்திறந்தும் ஒன்றைப்*

*பெற்றவனும் அல்லேன்; பெறாதவனும் அல்லேன்"*
**— சுகவாரி 6**

என்ற பாடற்பகுதியில் இக்கருத்து அமைந்திருத்தல் காண லாம்.

ஞானமில்லாமல் முக்தி கூடுதல் முடியாதென்பது அடிக ளின் கருத்து. வேள்வி, தானம், பிற கருமங்கள், செபம், தீக்கை முதலிய எவையாயினும் அவையெல்லாம் ஞானத் தைத் தந்து, பிறகு அதன் மூலமே முக்தி கிட்டும் என்பது சித்தாந்த உண்மை. ஞானம் மும்மலங்களையும் அகற்றி உயிரைத் தூய்மைப்படுத்தும். பின்னர் இயல்பாகவே தூயவ னும் இன்ப வடிவினனுமாய இறைவனை அடைவிக்கும்; துன்பமற்ற - எல்லையில்லாத - அவனது பேரின்பத்தில் திளைத்திருக்கச் செய்யும். சரியை, கிரியை, யோகம் என்பன ஞானத்தின் வளர்ச்சி நிலைகளே என்பதை,

*"விரும்பும் சரியைமுதல் மெய்ஞ்ஞானம் நான்கும்*
*அரும்புமலர் காய்கனிபோல் அன்றோ பராபரமே!"*
**— பராபரம் 157**

என்ற அடிகளின் வாய்மொழியாலும் அறியலாம். ஆகவே, ஞானமின்றி முக்திக்கு வழி இல்லை என்பது தெளிவு. இதனை,

*"பக்திநெறி நிலைநின்றும், நவகண்ட பூமிப்*
*பரப்பைவல மாகவந்தும்*
*பரவையிடை மூழ்கியும் நதிகளிடை மூழ்கியும்*
*பசிதாக மின்றியெழுநா*

*மத்தியிடை நின்றும்உதிர் சருகுபுனல் வாயுவினை*
*வன்பசி தனக்கடைத்து*
*மௌனத் திருந்தும்உயர் மலைநுழை தனில்புக்கும்*
*மன்னுதச நாடிமுற்றும்*

*சுத்திசெய் தும்மூலப் பிராணனோ டங்கியைச்*
*சோமவட் டத்தடைத்தும்*
*சொல்லரிய அமுதுண்டும், அற்பவுடல் கற்பங்கள்*
*தோறும்நிலை நிற்கவீறு*

*சித்திசெய் தும்ஞான மலதுகதி கூடுமோ?"*
**— சின்மையானந்த குரு 11**

என்ற பாடலால் தெளிவுறுத்துகின்றார். பக்தி நெறி நிற்றல், திவ்விய தேசயாத்திரையை மேற்கொள்ளல் புண்ணிய தீர்த் தங்களில் நீராடல், பசியைப் பொருட்படுத்தாது, அதுவந்தவி டத்து உதிர்ந்த சருகு நீர் காற்று இவற்றை ஏற்று அதனைப் போக்குதல் சித்திகளை மேற்கொண்டு உடலைப் பல்லூழிக் காலம் நிலைபெறும்படிச் செய்தல் ஆகியவை 'ஞானம் பெறா தவிடத்து உயர்கதி அடைதல் கூடுமோ?' என்று கூறுதல் காண்க.

இங்ஙனம் மோனநிலை பெற்றவர்களே உயர்கதியை அடைவார்கள் என்பதை அடிகள் பிறிதொரு பாட்டில் கூறு வர்.

*மத்தமத கரிமுகில் குலமென்ன நின்றிலகு*
*வாயிலுடன் மதிஅகடுதோய்*
*மாட கூடச்சிகர மொய்த்தசந் திரகாந்த*
*மணிமேடை உச்சிமீது*

*முத்தமிழ் முழக்கமுடன் முத்தநகை யார்களொடு*
*முத்துமுத் தாய்க்குலாவி*
*மோகத் திருந்தும்என்? யோகத்தின் நிலைநின்று*
*மூச்சைப் பிடித்தடைத்துக்*

*கைத்தலம் நகப்படை விரித்தபுலி சிங்கமொடு*
*கரடிநுழை நூழைகொண்ட*
*கானம்மலை உச்சியிற் குகையூ டிருந்தும்என்?*
*கரதலா மலகமென்னச்*

*சந்தமற மோனநிலை பெற்றவர்கள் உய்வர்காண்*
*சனகாதி துணிவிதன்றோ?''*

**— சச்சிதானந்த சிவம் 6**

''மிக்கமதங்கொண்ட யானைகள் மேகக் கூட்டங்களபோல் விளங்குகின்ற வெளிமுற்றமும் திங்கள் மண்டிலத்தின் நடுவைத் தொடுவதுபோல் விண்ணை முட்டும் முடிகளையுடைய மாடங்களும் கூடங்களும் உடைய மாளிகையின் கண், சந்திரகாந்தக் கல்லினால் சமைத்த மணியிருக்கையின் உச்சியில் வீற்றிருந்து முத்தமிழ் முழக்கத்தோடு முத்தன்ன பற்களையுடைய மங்கைமார்களுடன் காதல் கொப்புளிக்க விளையாடி மோக நிலையிலிருந்தென்ன? பேயாக நிலை நின்று மூச்சினைப் பிடித்தடைத்துக் கொண்டும் கையகத்து நகமாகிய ஆயுதங்களை விரித்துக் கொண்டுலாவும் புலி சிங்கம் கரடி முதலிய கொடிய விலங்குகள் புகுந்துலாவும் உட்பகுதிகளுள்ள அடர்ந்த காட்டிலும் மலையுச்சியிலுமுள்ள குகைக்குள் இருந்தாலும் என்ன பயன்? அங்கை நெல்லியென ஆரவாரமற்ற மோன நிலையைப் பெற்றவர்களே பிறவியின் நீங்கிப் பிழைத்தவராவர். இது சனகாதி முனிவர்களுடைய முடிவும் அன்றோ?'' என்பது இப்பாடலின் விளக்கம்.

மௌனத்தின் பெருமையை வேறு ஒருவிதமாகவும் விளக்கலாம். குழந்தையொன்றுக்கு எம்மொழியைப் பேசத் தெரியாதிருப்பினும் எல்லா நாட்டவரும் அதனுடன் இணக்கம் கொள்ள விரும்புகின்றனர். பாரதியார் குழந்தையைப் 'பிள்ளைக்கனியமுது, பேசும் பொற்சித்திரம், ஆடிவருந்தேன் என்றெல்லாம் மதிப்பிடுகின்றார்.

*''சொல்லும் மழலையிலே - கண்ணம்மா!*
*தன்பங்கள் தீர்த்திடுவாய்;*

*முல்லைச் சிரிப்பாலே - எனது*
*மூர்க்கந் தவிர்த்திடுவாய்''* [22]

என்றும் எடைபோடுகின்றார். இங்ஙனமே ஞானி ஒருவர் மொழிகளையெல்லாம் கடந்த மௌனத்தில் வீற்றிருப்பதால் விண்ணவரும் மண்ணவரும் அவரைக் கொண்டாடத் தொடங்குகின்றனர்.

வலிவு படைத்ததே வாழ்வுக்குரியது. கானகத்துக்குரிய இந்த நியதி உண்மையில் எல்லா உலகிற்கும் உரியதாகின் றது. உடல் வலிவு மட்டிலும் வலிவு என்று கூறத்தக்கதல்ல. அறிவின் வலிவு அதைவிடச் சிறந்தது. இனி, தவமும் ஞான மும் உடையவர் வலியே ஒப்புயர்வற்றது. கானில் திரியும் விலங்குகளும் அந்த ஞானக்கருணைக் கடலுக்கு வசப்பட்டு விடுகின்றன. மக்கள், தேவர், யோகியர், ஞானியர் ஆகிய அனைவருமே அந்த அந்தத் தவராசருக்கு உரியவர் ஆகின்ற னர். எனவே, இறைவனுடைய படைப்பில் ஞானத்திற்கு நிகரான வாழ்க்கைத் திறன் வேறு எதனிடத்திலும் இல்லை என்பது தெளிவாகின்றது. இந்த ஞானநிலையைப் பெறுவ தற்கு மோனப் பொருளை இறைஞ்சுகின்றார் அடிகள்.

*''அதுஎன் றுன்னும் அதுவும் அறநின்ற*
*முதிய ஞானிகள் மோனப் பொருளது,*
*எதுஎன் றெண்ணி இறைஞ்சுவன் ஏழையேன்;*
*மதியுள் நின்றின்ப வாரி வழங்குமே!''*

— **பொன்னைமாதரை - 29**

என்ற பாடலில் இதனைக் காணலாம்.

ஞானநெறி: அஞ்ஞானம் இருள் போன்றது. ஞானம் ஒளி போன்றது. ஒளி வந்தாலன்றி இருள் நீங்கா தன்றோ? அது போல ஞானம் வந்தாலன்றி அஞ்ஞானம் நீங்காது.

*''ஞானத்தால் வீடென்றே நான்மறைகள் புராணம்*
*நல்லஆ கமம் சொல்ல''* [23]

22. பாரதி - கண்ணம்மா என் குழந்தை - 8
23. சித்தியார் 8.22

என்ற சித்தியார் கூறுகிறபடியும் ஞானமே முத்திக்கு நேரான வழியமைக்கும் என்பது அறிதற்பாலது. அறிவு யாவும் ஞான மேயாயினும் மெய்ப் பொருளாகிய இறைவனை அறியும் அறிவே ஞானம் என்பதை உளங்கொள்ளல் வேண்டும். மெய்யுணர்வு என்று அறநூல்களில் கூறப்படுவதும், சிவஞா னம், பதிஞானம் என்று சைவ நூல்கள் கூறுவதும் இதுவேயா கும்.

ஞானநெறி என்பது கேட்டல், சிந்தித்தல், தெளிதல், நிட்டைகூடல் என்று நான்கு நிலையில் நடைபெறும் பாங்கு டையது. இதனை அடிகள்,

> *"கேட்டல்முதல் நான்காலே கேடிலா நாற்பதமும்*
> *வாட்டமற எமக்கு வாய்க்குநாள் எந்நாளோ!"*
>
> **— எந்நாட். நிலைப் பிரிந்தோர் 5**

என்பதால் தெரிவிக்கின்றனர். ஞானம் முற்றிலும் கைவரப் பெறாவிடின் சரியை, கிரியை, யோகம் என்ற மூன்றிற்குரிய பதமுத்திரைகளுள் [24] ஒன்றாவது தமக்குக் கிடைக்கப் பெற வேண்டும் என்பது அடிகளாரின் விழைவு. இதனை அடிகள்,

> *"ஞானநெறி தானே நழுவிடினும் முப்பதத்துள்*
> *ஆனமுத்தி நல்குமென அன்புறுவ தெந்நாளோ!"*
>
> **— எந்நாட். நிலைபிரிந்தோர் 2**

என்பர். இவண் 'முப்பதம்' எனக் குறிப்பிட்டது சாலோகம், சாமீபம், சாரூபம் என்ற மூன்று என்பது தெளியப்படும்.

ஆன்மா சீவபோதம் மறைந்து இறைவனுடன் இரண்ட றக் கலந்த பரிபூர்ண நிலையில் அடிகள் கூறும் அத்துவிதம் தெளிவாகப் புலனாகின்றது.

24. சைவ சமயக் கொள்கைப்படி **'சித்தாந்த முத்தி'** அல்லது பதிமுத்தியே வீடு பேறு என்பது. இதுவே முடிந்த முத்தியாகும். **'சாயுச்சியம்'** என்பதும், இதுவேயாகும். ஏனைய மூன்றும் சாலோகம், சாமீபம், சாரூபம் என்பன. இவை பற்றிய விவரங்களை இவ்வாசிரியர் எழுதியுள்ள **சைவ சித்தாந்தம் - ஓர் அறிமுகம்** (கழக வெளியீடு) என்ற நூலில் காண்க.

*"யானெனல் காணேன் பூரண நிறைவில்;*
*யாதினும் இருந்த பேரொளிநீ*
*தானென, நிற்கும் சமத்துற என்னைத்*
*தன்னவ னாக்கவும் தகுங்காண்;*
*வானென வயங்கி ஒன்றிரண் டென்னா*
*மார்க்கமாம் நெறிதந்து, மாறாத்*
*தேனென ருசித்துள் அன்பரைக் கலந்த*
*செல்வமே சிறப்பர சிவமே!"*

— சிவன்செயல் 10

என்ற பாசுரத்தில் இக் கருத்துவிளக்கம் அமைகின்றது.

# 11. சித்தர் பெருமக்கள்

தாயுமானர் விராலிமலையில் தங்கியிருந்தபோது சித்தர் ஒருவர் இவர் மனநிலையைக் கண்டு சித்தர்கள் தங்கியிருந்த ஓர் இடத்திற்கு அழைத்துச் சென்றார். அடிகள் சித்தர்களுடன் அளவளாவியிருந்தார். இக்காலத்தில் தான் 'சித்தர் கணம்' என்ற பதிகம் பாடப்பெற்றதாகக் கருதலாம்.

சித்தி பெற்றவர் சித்தர். முத்தி பெறும் வரை உடல் வேண்டப் பெறுவது. ஆகவே, பல பிறவிகள் எடுப்பதற்குப் பதிலாக ஒரு பிறவியிலேயே 'காயசித்தி' பெற்று முத்திக்குரிய வராதல் சிறந்ததாகும் என்பது அடிகளாரின் கருத்து.

> *''தேகம்யா தேனும்ஒரு சித்திபெற சீவன்முத்தி*
> *ஆகும்நெறி நல்லநெறி ஐயா பராபரமே!''* — பராபரம் 357

என்பது காண்க. சித்திகள் மூவகை - உருவசித்தி, அருவ சித்தி, அருவுருவ சித்தி என்பன.

> *''முத்தியிலும் தேகமிசை மூவிதமாம் சித்திபெற்றோர்*
> *எத்தனைபேர் என்றுஉரைப்பது எந்தாய் பராபரமே''*
> — மேலது 209

என்பது காண்க. தம்பிரான் தோழர் உருவசித்தி பெற்றவர் என்றும், ஞானசம்பந்தப் பெருமானும் அப்பரடிகளும் அருவுருவ சித்தி பெற்றவர்கள் என்றும், மணிவாசகப் பெருமான் அருவ சித்தி பெற்றவர் என்றும் ஆன்றோர் கருதுவர்.

அகண்டாகார சிவத்தின் பேரருள் பதியப்பெற்ற அன்பரது திருமேனி கற்பூரதீபம்போல் பொலிந்து திகழும்.

> *''சித்த நிருவிகற்பம் சேர்ந்தார் உடல்தீபம்*
> *வைத்தகர்ப் பூரம்போல் வயங்கும் பராபரமே''*
> — மேலது 245

என்ற கண்ணி இதனை விளக்குகின்றது.

சித்தி பெற்றவர்களின் உடம்பு தூயதாயும் மயக்கம் பயவாத அறிவு மயமாயும் இருக்கும் என்பது அறிந்து தெளியப்படும்.

*"வெளியாய் அருளில் விரவும்அன்பர் தேகம்*
*ஒளியாய்ப் பிறங்கியதும் உண்டோ பராபரமே"*

— *பராபரம் 190*

என்ற கண்ணி இதற்கு அரணாக அமையும். பட்டினத்தடிகள் திருமேனி சீவன் மூத்தர் திருமேனிபோல் இலிங்கமாயிற்று என்பதை நாம் அறிவோம். இக்கருத்து,

*"சத்தாகி நின்றோர் சடங்கள் இலிங்கம்என*
*வைத்தாரும் உண்டே என்வாழ்வே பராபரமே"*

— மேலது 244

என்ற கண்ணியினால் தெளிவுறுத்தப் பெறுகின்றது.

முத்தி அடைவதற்கு உடல் வேண்டும். ஆதலால் காய சித்தி முத்தியின் பொருட்டு என்றாகின்றது. எனவே, முத்தியடையும்வரை உடலின் இன்றியமையாமையை

*"அறிவில் அறியாமைஅற்று அறிவாய் நின்று,*
*பிறிவுஅறஆ னந்தமயம் பெற்றுக் - குறிஅவிழ்ந்தால்*
*அன்றைக்கு உடல்வேண்டேன்; ஐயா!இவ் ஆக்கையையே*
*என்றைக்கும் வேண்டுவனே யான்"*

— உடல் பொய்யுறவு 33

என்ற பாடலில் வற்புறுத்துவர். "உலகப் பொருள்களை அறியும் அறிவும் அறியாமையும் ஒழிந்து, அருளில் நிலை பெற்று அறிவாய் நின்று சிவானுபவம் பெற்றுத் தற்போதம் ஒழிந்த அந்த நாளில் உடல் வேண்டேன். அதுவரை இந்த உடம்பினை எப்போதும் வேண்டி நிற்பேன்" என்பதை உணர்ந்து தெளிக. இதனையே,

*"சட்டையொத்த இவ்வுடலைத் தள்ளுமுன்னே நான்சகச*
*நிட்டையைப் பெற்றுஐயா நிருவிகற்பம் காண்பேனோ"*

— *காண்பேனோ கண்ணி 32*

என்ற கண்ணியிலும் மொழிவர். முடிந்த முடிபாக அடிகள் உடற்சித்தியை வேண்டிற்றிலர் என்பதை,

*"கற்றாலும் கேட்டாலும் காயம்அழி யாதசித்தி*
*பெற்றாலும் இன்பம் உண்டோ பேசாய் பராபரமே"*

**— பராபரம் 285**

என்ற கண்ணியால் இனிது விளக்கமடைவதைக் காணலாம். உடல் உள்ளபோதே சீவன் முக்தி அடையாமல் உடல் நீத்தபின் உயிர் முத்தியில் சேர்தல் என்பது பொருந்தாது என்பது அடிகளாரின் கருத்து.

*"உலகநெறி போல்சடலம் ஓய உயிர்முத்தி*
*இலகும்எனல் பந்தஇயல்போ பராபரமே"*

**— பராபரம் 358**

என்றதில் இதனைக் காணலாம்.

தமக்கு மேற்பிறவி உண்டெனில் யோகநெறி நின்று காயசித்தி பெற்று முத்தி நாடும்படி உதவவேண்டும். பிறவி இல்லையெனில் அருட்சக்தி துணை கொண்டு உயிர் முக்தி எய்தவும் உடல் கர்ப்பூர தீபம்போல் வயங்கவும் இறைவன் அருள் புரிய வேண்டும். சச்சிதானந்தசிவம் என்னும் பதிகத்தின் ஒரு பாடலில் "இன்னமும் பிறப்பதற்கு இடம் உண்டென்றால் இந்த உடம்பு இறவாதிருக்கும்படி மூலாதாரத்தில் உண்டாகின்ற அனலானது அமுதத்தை ஊற்றும் மதி மண்டலத்தில் பொருந்தும்படி என் தாயாகிய குண்டலினி சக்தியினிடத்தாலே மாறுபாடு யாதுமில்லாது குழந்தைபோல் என்னை வளர்த்திடும்படி பேயேனை ஒப்புவித்தல் வேண்டும். பிறவாத நெறி எனக்கு இருக்குமாயின் இப்பிறவியிலேயே கர்ப்பூர ஒளிபோல மின்னும்படி எங்கும் நிறைந்த அருட்சக்தியாகிய பராசக்தியினிடம் வினையேனை ஒப்புவித்துவிட்டு நெறி அடைவித்தல் மிகவும் நன்று. இந்த இரண்டு வழியும் இல்லாது உலக நெறிதான் எனக்கு உண்டெனின் தன்னந்தனியனாக இருக்கும் சிறியேன் அதனைத் தாங்கிக் கொள்ள மாட்டேன்" (சச்சி. சிவம் 9) என்று சொல்வதனைக் காண்க.

அடிகள் சித்தர்கள்பால் வேண்டுவன: ''இந்த அகன்ற பூ உலகில் அடியேன் இருக்கும்பொழுதே திருவருளாகிய வான மண்டலத்தினின்றே நிலைத்த வரமாக இன்ப மழையைப் பொழிகின்ற மேகத்தோடு சேர்ந்து அறிவு பரவசப்படும்படி செய்வது நன்று; அத்தகைய நிலையில் உறுதி உறும்வரை இந்த உடம்பின் கூத்து கலையாமல் குண்டலினி சக்தி என்னும் அன்னையின் அருளினாலே ஆகாயத்திலுள்ள மதியின் அமுதமானது இடையறாது பொழியப் பெறுமாறு அடியேன் வேண்டுவேன்'' (சித்.கணம் - 4) என்கின்றார்.

சித்தர்களின் இயல்பு: சித்தர்கள் அட்டாங்க யோகம் வாய்ந்தவர்கள்.

*''மெய்திகழும் அட்டாங்க யோகபூ மிக்குள்வளர்*
*வேந்தரே!''* — **சித்.கண 5**

என்றும்,

*''என்றைக்கும் அழியாத சிவராஜ யோகமாய்''*
— **சித்.கண. 6**

என்றும் வரும் அடிகளின் வாக்குகளால் அறியலாம்.

யோகம்: நுண்ணிய உடம்பிலுள்ள சுழுமுனை என்னும் நாடியின் வாயிலாகப் பிராணவாயுவின் உதவியால் மூலாதாரத்துக்கு மேலுள்ள அனலைச் சிரசின் நடுவிலுள்ள மதிமண்டலத்தில் சேர்த்து அதன்கண் நின்று ஒழுகும் அமுதத்தினை உடலெங்கும் பரவச் செய்து நெடுநாள் உயிரோடு இருத்தலாகிய காய சித்தியைக் கொண்டு இறைவனை வழிபடும் முறையாகும் இது.

*''மூலப் பிராணனோடு அங்கியைச்*
*சோமவட் டத்தடைத்தும்*
*சொல்லரிய அமுதுஉண்டும் அற்பஉடல்*
*கற்பங்கள்தோறும் நிலைநிற்க ஈறு*
*சித்தி செய்தும்''*

என்ற பாடல் பகுதியில் யோகத்தின் இயல்பு குறிக்கப் பெற்றி

ருப்பதைக் காணலாம். யோகத்தில் ஆறு ஆதாரமும் மூன்று மண்டலமும் இன்றையமையாதவை.

*''கெடிகொண்ட தலம்ஆறும் மும்மண்ட லத்திலும்*
*கிள்ளாக்குச் செல்ல'' — சித்.கண. 6*

*(கிள்ளாக்குச் செல்ல - அதிகாரம் செலுத்த)*

என்ற அடியில் இதனைக் காணலாம்.

விளக்கம்: இடைகலை, பிங்கலை, சுழுமுனை என்ற மூன்று நாடிகளும் ஆறு ஆதாரங்களையும் மூன்று மண்டலத்தையும் ஊடுருவிச் செல்லுவன. சுழுமுனை என்பது உடம்பின் நடுவாக உள்ளது. இடைகலை என்பது இடது நாசியினால் உள்ளே வாங்கும் மூச்சாகும். பிங்கலை என்பது வலது நாசியின் வழியாக உள்ளே செல்லும் மூச்சாகும். சுழுமுனை என்பது இரண்டு பெருவிரல் வரையும் இரு பிரிவாகவும் மூலாதாரத்தினின்றும் ஒரு பிரிவாகவும் உள்ளது மூலாதாரம் என்பது குறிக்கும் குதத்திற்கும் (Buttocks) நடுவே வட்டவடிவாக உள்ளது. அதன் நடுவே மின்னல் ஒளியுடைய முக்கோணம் ஒன்று உள்ளது. அம்முக்கோணத்திற்கு நடுவே நாலிதழ்ப்பூ ஒன்று உள்ளது. அந்தப் பூவிற்கு நடுவில் ஓங்கார எழுத்து நிற்கும். அந்த ஓங்காரத்திற்கு நடுவில் கணபதியும் அவருடைய பச்சை நிறமான சக்தியும் எழுந்தருளி இருப்பர். ஓங்காரத்திற்கு அணித்தாக உள்ளது குண்டலிணி சக்தி. அது மூன்றரை வளையம் உள்ள பாம்புபோல் மூலாதாரத்திலுள்ள சுழுமுனையின் வாயை அடைத்துக் கொண்டுள்ளது.

மூலாதாரத்திற்குமேல் இரண்டங்குலத்தில் சுவாதிட்டானம் என்னும் ஆதாரம் உள்ளது. அது நாற்கோணமுடையது. அதன் நடுவில் ஆறிதழ்ப்பூ ஒன்று உள்ளது. அதன் நடுவில் நகர எழுத்து உள்ளது. அதன்கண் அயனார் தமது சக்தியோடு இருப்பார். இந்த இடம் பொன்னிறமானது. இது முதற்கலையின் கூறு.

உந்திக்கமலமே மணிபூரகம் எனப்படும். இஃது ஏழாம் பிறைபோல் இருக்கும். இதன் நடுவே பத்து இதழையுடைய

மலர் வட்டமாக இருக்கும். இதன் நடுவில் மகர எழுத்து உள்ளது. அதன்கண் திருமால் தனது சக்தியோடு இருப்பர். இது பளிங்கு நிறமுள்ளது. இஃது இரண்டாம் கலையின் கூறு.

இதயகமலம் அனாகதம் எனப்படுவது. இதன்கண் ஒரு முக்கோணமும் அதன் நடுவில் பன்னிரண்டு இதழுடைய ஒரு பூவும் உள்ளன. அந்தப்பூவின் நடுவில் சிகார எழுத்துள்ளது. அதன் நடுவில் உருத்திர மூர்த்தி தமது சக்தியோடு வீற்றிருப்பார். இது மூன்றாம் கலையின் கூறு.

கழுத்திலே விசுத்தி என்னும் ஆதாரம் உள்ளது. இஃது அறு கோணமாயிருக்கும். அதன் நடுவில் பதினாறு இதழ்ப் பூவொன்று உள்ளது. அதன் நடுவே வகார எழுத்திருக்கும். அதன் நடுவில் மகேசுவரர் தமது சக்தியோடு எழுந்தருளியிருப்பார். இது நான்காம் கலையின் கூறு. இது மேகநிறமுள்ளது.

ஆஞ்ஞை என்னும் ஆதாரம் இரண்டு புருவங்களுக்கும் இடையே உள்ளது. இது மூவிதழ்ப் பூவொன்றின் நடுவில் யகாரத்தில் சதாசிவமூர்த்தி மனோன்மணியுடன் எழுந்தருளியிருப்பார். இது படிக நிறமாய் ஐந்தாங் கலையின் கூறாக உள்ளது.

இந்த ஆறு ஆதாரங்களிலும் உள்ள பூக்களின் இதழ் நுனிகள் கிரந்த எழுத்திலுள்ள ஐம்பத்தொரு எழுத்துப் போலிருப்பதால் ஐம்பத்தொரு எழுத்துகளும் அவற்றில் உள்ளன என்று கூறுதல் மரபு.[1]

கிரந்த எழுத்து தமிழ் எழுத்திலிருந்து (வடமொழி ஒலித் துணையுடன்?) வந்தவை. க்ஷகரம் ஐம்பத்தொரு எழுத்தில் தனி எழுத்தன்று.

இந்த ஆதாரங்கட்கு உயிரான மந்திரங்கள் பிரணவமும் (ஓங்காரமும்) ஐந்தெழுத்தும் (சிவாயநம:) ஆம்.

1. மூலாதாரம் 4; முதற்கலை 6; இரண்டாம் கலை 10; மூன்றாம் கலை 12; நான்காம் கலை 16; ஐந்தாம் கலை 3; ஆக 4 + 6 + 10 + 12 + 16 + 3 = 51 எழுத்துக்கள்.

*"ஓங்காரம் ஆம்ஐந்து எழுத்தால்*
*புவனத்தை உண்டுபண்ணிப்,*
*பாங்காய் நடத்தும் பொருளே;*
*அகண்ட பரசிவமே!"* — *பாயப்புலி 9*

என்ற பாடற்பகுதியையும் காண்க.

க்ஷகாரமானது ககரமும் சகரமும் சேர்ந்தது. ஆதலால் அதைத் தவிர்த்து எழுத்துகள் ஐம்பதாகின்றன.

*"ஐம்பதெழுத்தே அனைத்தும் வேதங்களும்*
*ஐம்பதெழுத்தே அனைத்துஆ கமங்களும்*
*ஐம்பதெழுத்தின் அறிவை அறிந்தபின்*
*ஐம்பதெழுத்தும்போய் ஐந்தெழுத் தாமே"*[2]

என்ற திருமூலர் வாக்கால் இஃது அறியப்பெறும்.

மும்மண்டலங்கள்: இவை நெருப்பு மண்டலம், ஞாயிற்று மண்டலம், திங்கள் மண்டலம் என்பனவாகும். மூலாதாரத் திற்கு இருவிரற்கிடைக்கு மேலிருப்பது நெருப்பு மண்டலம். இது முதற்பூதமும் இரண்டாம் பூதமும் கூடினவிடத்தில் நாற்கோணமாய் நடுவேயொரு முக்கோணமுடையதாய் நாலி தழ்ப்பூப் போலிருக்கும். ஞாயிற்று மண்டலம் உந்திக்கு நாலு விரலுக்கு மேலே இதயகமலத்துக்கு அருகாக அறுகோண மாய் எட்டிதழ்ப்பூப் போன்று இருக்கும். திங்கள் மண்டலம் தலைநடுவில் மிகுந்த ஒளியோடு அமுதகலை உள்ளதாய் விளங்கும். சிலர் நெருப்பு மண்டலம் முதல் உந்தி வரையி லும் ஞாயிற்று மண்டலம் உந்தி முதல் கண்டம் வரையிலும், திங்கள் மண்டலம் கழுத்து முதல் புருவம் வரையிலும் வியாபித்து இருப்பதாகக் கருதுவர்.

அசபை என்பது மூச்சினை இழுக்குங்காலும் வெளிவிடுங் காலும் ஏற்படும் நுண்ணொலியாகிய மந்திரம். அதை அம்சம் எனவும் சோகம் எனவும் வழங்குவர்; ஊமை மந்திரம் எனவும் உரைப்பர். திங்கள் மண்டலம் கீழ்நோக்கிப் பொழியும்

2. திருமந்.நாலா.தந்.திருவம்பலச் சக்கரம் - 52

அமுதத்தை நாபியின் மேலுள்ள கதிரவ மண்டலம் விழுங்கி விடுகின்றதென்றும், அதனால் நரைதிரை உண்டாகின்றதென்றும் யோக நூல் உரைக்கும்.

சிவராஜயோகம்: இது யோகத்தைக் கருவியாகக் கொண்டு சிவத்தியானம், சமாதி என்பவற்றை முயன்று அடைதலாகும். புருவ நடுவிலிருந்து ஆறு விரற்கிடைக் கப்பால், தலை நடுவில் (பிரம்மரந்திரத்தில்) இருக்கிற ஆயிர இதழ்த் தாமரையைச் சிவசூரியனால் விரியச் செய்து, அத்தாமரைப் பூந்தாதுவிலுள்ள திங்கள் மண்டலத்தை மூலநெருப்பினால் இளக்கி அதன் அமுதத்தை எல்லா நாடிகளிலும் பரவச் செய்வதே செய்யும் முறை என்று செப்புவர். யோகத்திற்கு முத்திரை, காணம், பந்தம் முதலிய பல உபாயங்களிலும் கடவுள் தியானம் சிறந்ததாகலின், யோகத்துடன் கூடிய சிவத்தியானத்தைச் சிவராஜ யோகம் என்பர். வெறும் யோகத்திலும் சிவயோகமே சிறந்தது. ஆதலின்,

*''என்றைக்கும் அழியாத சிவராய யோகமாய்''*

*— சித்.கணம். 6*

என்று குறிப்பிட்டனர் அடிகள்.

இந்த யோகத்தின் இயல்பினை அடிகள் சிற்சுகோதய விலாசம் 6ஆம் பாடலிலும் பாயப்புலி 28ஆம் பாடலிலும் விளக்கியுள்ளார். அவற்றை நோக்கித் தெளிவு பெறலாம்.

சுழுமுனை வழியாகப் பிராண வாயு முதலியன செல்லுங்காலை பலவகையான இசையொலிகள் செவிமடுக்கப் பெறும். அவற்றைத் திருமூலர்,

*''மணிகடல் யானை வளர்குழல் மேகம்*
*மணிவண்டு தும்பி வளைபே ரிகையாழ்*
*தணிந்தெழும் நாதங்கள் தாமிவை பத்தும்*
*பணிந்தவர்க் கல்லது பார்க்க வொண்ணாதே''*[3]

என்ற ஒரு செய்யுளில் அடக்கி, நமக்குத் தந்துள்ளார். இவற்றை,

3. திருமந்.மூன்.தந்.தியானம் - 9

*"தெசவிதமது ஆய்நின்ற நாதங்கள் ஒலி"*

**— சித்த.கண.6**

என்ற தொடரால் அடிகளும் குறிப்பிடுவர்.

யோகிகளுக்குத் திங்கள் மண்டலம் விரிந்து அமுதம் பொழிதலின் அதனை அரசர்களது கொற்ற வெண் குடைக்கு அடிகள் உவமையாக்கி மகிழ்வர்.

*"பூரண மதிக்குடை திகழ்ந்திட"* **— மேலது 6**

என்பது காண்க.

அட்டாங்க யோகம்: இதனைப் பசஞ்சலி முனிவர் தமது யோக சூத்திரத்தில் விரிவாக விளக்குவர். அவற்றின் பகுதி களை ஈண்டுக் காட்டிச் சிறிது விளக்குவோம். அவை இமயம், நியமம், ஆசனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி என்பனவாகும்.

இயமம் என்பது கொல்லாமை, களவின்மை, பொறியடக் கம், உண்மை, பொறுமை, நடுவுநிலைமை, தயை, தூய்மை, கள்ளுண்ணாமை, தூய உணவை அளவாகக் கோடல் என் பன.

நியமம் ஆவது, தவம், செபம், மனநிறைவு, கடவுள் நம்பிக்கை, ஈகை, மெய்ந்நூற்கேள்வி, விரதம் நன்மையில் விருப்பம், பாவத்தில் வெறுப்பு என்பன.

ஆசனம் என்பது முக்கியமாக எட்டு இருக்கைகளைக் குறிக்கும். அவற்றுள் சிறப்பாக நுவலப் பெறுவது பதுமாச னம். அஃதாவது இரு தொடை மேலும் இரண்டு உள்ளங்கால் களையும் மாறித் தோன்ற வைத்தல். இடத் தொடையில் வலக்கால் பரட்டையும் வலத் தொடையில் இடக்கால் பரட் டையும் வைத்திருத்தல் எனலாம். ஆசன வகைகளை யோக நூல்களில் கண்டு தெளியலாம். சுகாசனம் என்பது உடம்பின் வசதிக்குத் தகுந்தபடி இருந்து கொள்ளுதல். அஃது எல்லார்க் கும் இயல்வதே.

பிராணாயாமம் என்பது மூச்சை இழுத்து, நிறுத்தி, வெளி விடுவது. அஃதாவது இடது நாசி வழியாகப் பதினாறு மாத்திரைக் கால அளவிலே காற்றை இழுத்து அறுபத்தி நாலு மாத்திரை அளவு உள்ளே நிறுத்தி முப்பத்திரண்டு மாத்திரை யாகும் வரை வலது நாசியால் வெளிவிடுதலாம். மூச்சினை இழுத்தல் பூரகம் எனவும், நிறுத்துதல் கும்பம் எனவும், வெளிவிடுதல் ரேசகம் எனவும் கூறப்பெறும்.

பிரத்தியாகாரம் என்பது, புறப்பொருள்களில் நின்று மனத்தை இழுத்து உள்ளே நோக்குதல்.

தாரணை என்பது, உள்ளே இருக்கும் ஆதாரங்கள் ஏதாவ தொன்றில் மனத்தை நிறுத்துதல்.

தியானம் என்பது, ஐம்புலன்களையும் அடக்கி இறை வனை இடைவிடாது நினைத்தல்.

சமாதி என்பது, மனம் ஒடுங்கி நினைத்த தியானப் பொருளோடு இரண்டறக் கலந்து நிற்றல்.

எட்டு அங்கங்களையும் எட்டு மலைகளாகக் கூறுவதும் உண்டு. சுழுமுனையின் உச்சியை மேரு என்பர். குண்டலினி சக்தியை யோக முயற்சியால் எழுப்பிய காலை அஃது ஒரு நேரான கோல்போல் நிமிர்ந்தலால் அதனை யோக தண்டக் கோல் எனக் கூறுவதும் உண்டு. மதிமண்டலத்திலுள்ள அமுத கலைகளை மேகங்களுக்கு உவமை கூறுதலும் உண்டு.

*"மைதிகழும் முகிலினம் குடைநிழற் றிடஅட்ட*
*வரையினொடு செம்பொன் மேரு*
*மால்வரையின் முதுகூடும் யோகதண் டக்கோல்*
*வரைந்துசய விருதுகாட்டி"*

— ***சித்த.கண.5***

என்பது காண்க.

யோகியர்க்குப் பிராண ஒடுக்கம் வாயிலாக மன ஒடுக்கம் அமைதலால் மனோலயம் ஆனபின், ஞானத்தைப் பற்றுதல் எளிதாகலின், யோகியர்க்கே ஞானம் ஒழுங்காக அமையும்.

*"யோகியர்க்கே ஞானம் ஒழுங்குஆம்பே ரன்புஆன*
*தாகியரும் யோகம்முன்னே சார்ந்தோர் பராபரமே"*

*— பராபரம் 90*

என்பது குறிப்பிட்டனர் அடிகள்.

**சித்தர்கள் இயற்றும் அற்புதச் செயல்கள்:** இவற்றை அடிகள் சித்தர்கணம் முதல் மூன்று பாடல்களில் விளக்குகின்றார்.

"மனவேகம் போன்ற வேகத்துடன் விரைந்து சென்று ஓடி ஆடி வரக்கூடியவர்கள். மேருவின் உச்சியில் விளங்கும் துருவத்தின் வரையிலும் சென்று ஆழிப்படையை ஏந்திய திருமால்போல் வல்லமை படைத்தவர்கள். ஏழு கடல்களை யும் உள்ளங்கை அளவாக அடக்கிப் பருக வல்லவர்கள். விண்ணவர் உலகத்தையும் இந்திரனது வெள்ளை யானை யையும் கைக்கு எளிய பந்தாக உருட்டி விளையாட வல்ல வர்கள். வான மண்டலங்களையெல்லாம் கடுகுக்குள் புகுத்தி எட்டுப் பெருமலைகளையும் காட்ட வல்லவர்கள். இவை போன்ற வேறுவேறு மேலான சித்திகளையெல்லாம் விளை விக்க வல்லவர்கள்" (பாடல் 1)

"இசைப் பாட்டையுடைய வண்டுகள் நெருங்கி வளர் கின்ற கற்பகமரத்து நிழலையும் இப்புவிக்குக் கொண்டுவரும் ஆற்றல் படைத்தவர்கள். சங்கநிதி பதுமநிதி என்ற இரண்டை யும் பணிகொள்ள வல்லவர்கள். இரந்து பிழைப்போரையும் பேரரசராக்கும் ஆற்றல் படைத்தவர்கள். ஊழிமுடிவில் உண் டாகும் பெருவெள்ளத்தையும் ஒரு கிணற்றில் அடக்கி வைக் கும் வல்லமை மிக்கவர்கள். உடைந்த ஓட்டினை எடுத்து ஒளிவீசும் ஆயிரத்தெட்டு மாற்றுள்ள பொன்னாக மாற்ற வல்லவர்கள். ஆதிசேடனும் இளைப்பாறும்படி யோக தண் டத்திலே உலகினைச் சுமக்கும் ஆற்றல் மிக்கவர்கள்" (பாடல் 2).

"ஐம்பூதங்களும் ஒடுங்கிய காலத்துப் பரவெளியில் தங்கியிருக்கவல்லவர்கள். யுக முடிவில் பிரளய வெள்ளத்தில் மிதந்து நீர்மேல் உறையும் வண்டுபோலச் சுழன்று சிவயோ கத்தில் இருக்கும் வல்லமை படைத்தவர்கள். ஏழு மேகங்க

ளும் ஒன்றுகூடி மழை பொழியும் காலத்திலும் மதி மண்டலத்தில் தங்கி விளங்க வல்லவர்கள். அயன் அரிமுதலியோர் முடிவெய்தும் காலத்திலும் சிவபிரான் அருளால் உலகத்தில் உற்சாகமாக உலவும் உரம் படைத்தவர்கள். உலகங்கள் எல்லாம் கீழ் மேலாகப் புரளும்படிப் பெருங்காற்று வீசுங்காலத்திலும் தாரண யோகத்தினால் மாமேருபோல் அசையாமல் நிற்க வல்லவர்கள்'' (பாடல் 3).

அட்டமா சித்திகள்: *சிறந்த சித்திகள் எண் வகைப்படும்.* அணிமா என்பது அணுவிலும் மிக நுண்ணிய வடிவு பெற்று நிற்றல். இவ்வடிவுடன் எத்திசையிலும் ஏகுதல் எளிது. மகிமா என்பது, மேருவிலும் மிகப் பெரிய வடிவுற்றிருத்தல். இச் சித்தி கைவந்தவர் மேருவின் முடிவிலுள்ள ஒளி வட்டமாகிய துருவ மண்டலத்தினை அடைதல் அரிதன்று.[4] கரிமா என்பது உலகப் பொருள்களை நுகர்ந்தும் அவற்றால் கட்டுப்பட்டு மயக்கம் உறாமை. இஃது உயர்ந்த முத்திக்குத் தகுதி கொடுக்கும். இலகிமா என்பது காற்றினும் மெல்லிய வடிவத்தோடு நிற்றல். இதனால் பிரளய காலத்திலும் நீர்மேல் உலாவும் வண்டுபோல உலாவலாம். பிராப்தி (*பிராத்தி*) என்பது மனத்தால் எண்ணியதை எண்ணியவாறு பெறுதல். இதனால் கற்பக நிழலும் சங்கநிதி, பதுமநிதி முதலியனவும், விரும்பியவாறு பெறுதல் கூடும். இரப்பவரை மன்னராக்குதலும் ஓட்டைச் செம்பொன் ஆக்குதலும் கூடும். பிராகாமியம் என்பது மனத்தினால் ஆயிரம் மகளிரைப் படைத்து ஆயிரம் வடிவாயிருந்து அவர்களோடு விளையாடுதல். இதனால் எவ்வுலக போகங்களையும் எளிதில் பெறலாம். ஈசத்துவம் என்பது அயன் முதலியோரிடத்தும் தன் ஆணை செலுத்துதல். இதனால் அயன் பதவிக்கு மேலான பதவியேற்றலின், அத்தேவர்கள் முடிவு காலத்திற்குப் பின்னும் இறைவனருளால் நிலைபெற்றிருத்தல் கூடும். வசித்துவம் என்பது, அகிலம் முழுவதையும் தன் வசமாக்குதலும், அகிலத்தைப் படைத்தலுமாம். குறுமுனிவர்போல் ஏழு கடலையும் உளுந்தளவாக்கி

4. மேருவின் உச்சியிலுள்ள ஒளி வட்டத்தினை தவம் செய்து துருவன் என்பவன் அடைந்தானாதலின் அதற்குத் 'துருவ மண்டலம்' எனப் பெயர் வழங்கலாயிற்று.

அருந்துதலும், பிரளய வெள்ளத்தைக் கிணற்றிலடக்குதலுமாகிய பலவகை அற்புதங்களை இயற்றுதலும் அகிலத்தை யோக தண்டத்தால் பிணித்தலும் இதனுள் அடங்கும்.

இன்னும் சங்கற்பசித்தர் என்பவரைப் பற்றியும் அடிகள் (கருணாகரக் கடவுள் 10ஆம் பாட்டில்) சிறப்பாகப் பேசுவர். அவர்கள் எக்காலத்திலும் பிறர்க்கு உதவுவார்கள். இன்சொல்லையன்றிக் கடுஞ்சொல் என்றும் பகரார். குற்றமாகிய பொய்யினைச் சொல்லார். இரக்கம் அவர்தம் உயிர்நாடி. கொலை செய்ய ஒருப்படார். அவர் நினைத்ததை நினைத்தபடியே நடைபெற இறைவன் அருள்புரிவானாதலின், அவர் உள்ளத்தில் உறைகின்ற கற்பகமரம் ஆவர். பிரம்மரந்திரமாகிய தலை நடுவிற்குப் பன்னிரண்டு அங்குலத்திற்கு அப்பாலுள்ள பெருவெளியிலே பரம்பொருளாகிய சிவபெருமானைக் கண்டு களிக்கும் பெரும் பேறு பெற்றவர்களே சிறந்த யோகியர் என்று கூறுவதை,

*''ஒன்றுஇரண்டாய் விவகரிக்கும் விவகாரம்*
*கடந்து,ஏழாம் யோக பூமி*
*நின்று,தெளிந் தவர்பேசா மௌனநியா*
*யத்தை''*

— *மண்டலத்தின் 2*

என்றும்,

***''உன்ம ணிக்குள் ஒளிர்பரம் சோதியாம்''***

— ***பொன்னைமாதரை 38***

என்றும் இதனை அடிகள் குறிப்பிட்டுள்ளதை அறிந்து மகிழலாம்.

ஏழு யோக பூமி என்பது, ஆறு ஆதாரத்தையும் பிரம்மரந்திரத்தையுமேயாகும். அவற்றைக் கடந்தவர் துவாதசாந்தப் பெருவெளியில் முதல்வனைக் காண்பவர். 'நிலமேழும்' என்று குமரகுருபர அடிகளும் குறிப்பிடுவர். 'அஞ்ஞானபூமி' ஏழு என்று அடிகள் குறித்தனர்.

*"பொல்லாத வாதனை எனும்சப்த பூமியிடை*
*போந்துதலைச் சுற்றியாடும்"*
*— எங்கும் நிறைகின்ற பொருள் - 4*

என்பது காண்க. அவை உபாதிகளையாதல் ஆணவ காரியங்களையாதல் குறிக்கும் என்பது உணரப் பெறும்.

இதனுள் 'சப்தபூமி' என்பதற்கு ஒலிவடிவாய நூலறிவு என்று கூறுவாரும் உளர். 'ஆன்மா அவத்தைகளில் மொத்துண்ணும் அவசரம்' (மெய்கண்டவிருத்தியுரை பூவை கலியாண சுந்தரனார்). ஆணவத்தின் காரியம் ஏழென சிவஞான முனிவர் தம் சிவஞான பாடியத்தில் கூறிப் போந்தனர். அவை மோகம், மதம், அராகம், கவலை, தாபம், வாட்டம், விசித்திரம் என்பன. அவை முறையே பயன்கோடலும், தான் பெற்றதை மயக்கத்தால் பெரிதாக மதித்தலும், ஆசை மிகுதலும், பிரிவாற்றாமையால் கவலுதலும், கிடையாததைப் பெற விரும்புதலும், அதற்கு முயன்று வாடுதலும், பெற்ற சிற்றின்பத்தில் மனநிறைவு பெற்று, பேரின்பத்தை அவாவாமை என்பனவாம். முத்தியில் விருப்பம், நற்கேள்வி, சத்திலே மனநாட்டம், சத்துற்பத்தி, சித்தி, வெறுப்பு, பரநாட்டமின்மை விழியா நிலை என்பன இவற்றிற்கு எதிரிடையாய ஞான பூமிகளாம்.

பூதம் ஐந்தினையும் மாயையையும் சகுண மூர்த்தங்களையும் உயிருக்கு அன்னியமான ஏழு தத்துவங்கள் என்று கூறி இவற்றைத் தான் எனக் கருதுதல் அஞ்ஞானம் என்பர் ஏகான்மவாதிகள். தேகம், இந்திரியம், பிராணன், மனம், புத்தி, அகங்காரம், சித்தம் என்னும் ஏழினையும் உபாதியாகக் கொண்டு இவற்றைச் சப்தபூமி என்பாரும் உளர்.

இனி யோக பூமிகளை யோக வாசகத்திற் கூறியபடி கொள்ளுதல் ஏகான்மவாதக் கொள்கை. சித்தர்களுள் திருமூலர் மரபினையும், நவநாதசித்தர்களையும் அடிகள் விதந்து ஓதுகின்றார். அகத்தியர், மூலர், போகர் என்னும் மூவர் பரம்பரைகளையே சிறந்தவை எனக் கூறுப. நவநாத சித்தர் என்ற தொடர் மௌனகுரு 7ஆம் பாடலில்,

*"நவநாத சித்தர்களும்உன் நட்பினை விரும்புவார்"*

என்ற அடியிலும், கருணாகரக் கடவுள் 7ஆம் பாடலில்,

*"எண்ணரிய கணநாதர் நவநாத சித்தர்கள்"*

என்ற அடியிலும் வந்துள்ளமை காணத்தகும்.

நவநாத சித்தர்கள் என்போர் யோகத்தினால் சுழு முனையில் உண்டாகும் நாதத்தில் மனத்தை வைத்துச் சமாதியடைந்தவர்கள் என்றும், அதனால் மரணத்தை வென்று பிரம்மாண்டவெளியில் உலாவுகின்றவர்கள் என்றும் அறிகின்றோம். நவநாத சித்தர் என்போர் ஆதிநாதர், சத்தியநாதர், சதோகநாதர், வகுளி நாதர், மதங்க நாதர், மச்சேந்திர நாதர், கடேந்திர நாதர், அநாதி நாதர், கோரக்க நாதர் என்பவர்கள் ஆவர்.

சித்தர்களைக் கூறும் முகத்தான் யோகத்தின் இயல்பினை அடிகள் அறிவுறுத்தினர். ஏனைச் சரியை, கிரியைகளையும் அடிகள் தழுவியுரைத்தவற்றை பிறிதோரிடத்தில் காட்டுவோம்.

# 12. ஆசாரியனின் அருமை

**சை**வ சமயத்தில் 'குருலிங்க சங்கம் வழிபாடு' சிறந்தது; உயிராயது. குரு - ஆசாரியர்; இலிங்கம் - திருக்கோயிலில் இருக்கும் திருமேனிகள்; சங்கமம் சிவனடியார்கள். இந்த மூன்றையும் அடிகள்,

*"மூர்த்திஎல்லாம் வாழி;எங்கள் மோனகுரு வாழி;அருள்*
*வார்த்தைஎன்றும் வாழிஅன்பர் வாழி பராபரமே"*

— *பராபரம் 229*

என்ற கண்ணியில் வழுத்துகின்றார்.

*"குருலிங்க சங்கமமாக் கொண்ட திருமேனி,*
*கருவொன்று மேனிநம்பாற் காட்டாது; - அருள்என்று*
*கண்டவர்க்கே ஆனந்தம் கண்டகொள லாம்;அலது*
*கொண்டவர்க்கிங் கென்ன கிடைக் கும்?"*

— *உடல்பொய்யுறவு 23*

என்ற பிறிதொரு பாடலில் இவ்வழிபாட்டின் பெருமை உணர்த்தப்பெறுகின்றது. இலிங்கம்பற்றிய பெருமையை அடிகளின் கருத்தில் 'இறைவன்' என்ற தலைப்பிலும், சங்கமத்தின் பெருமையை அடியார்களின் பெருமை என்ற தலைப்பிலும் விளக்கப் பெற்றுள்ளன. குருவின் பெருமையை மௌன குரு வணக்கம், சின்மையானந்த குரு என்ற பதிகங்களிலும் வேறு பல பாடல்களிலும் விளக்கியுள்ளதை ஈண்டுக் காண்போம்.

தாயுமான அடிகட்குத் தென்முகக் கடவுளே - தட்சிணா மூர்த்தியே - முதற்குரு. இதனை,

*"அந்தணர் நால்வர் காண*
*அருட்குரு வாகி வந்த*
*எந்தையே! எல்லாம் தானென்*
*றியம்பினன்; எமைப்ப டைத்த*

*தந்தைநீ; எம்மைக் காக்கும்*
*தலைவனே நுந்தை யன்றோ?''*

— தேன் முகம் 10

என்ற பாடலால் அறிகின்றோம். இந்தக் கடவுள் எங்கிருக்கின்றார்? அண்டங்கள் அனைத்துமே அவர் வீற்றிருக்கும் இடமாக அமைகின்றது. உலக வாழ்க்கையில் அரசர்கள் மேலான இடமான சிம்மாதனத்தில் வீற்றிருப்பதை நாம் அறிவோம். ஆனால், வீற்றிருப்பதற்குரிய ஆசனங்களில் பிரபஞ்சத்திற்கு நிகரானது வேறொன்றுமில்லை. எண்ணிறந்த சந்திர சூரியர்கள் விண்மீன்கள் இழைக்கப் பெற்றுள்ள இயற்கையென்னும் சிம்மாதனம் அது. பிரகாசம் பொருந்திய இக்கோளங்களுள் பன்னிறங்கள் அமையப் பெற்றுள்ளவைகள் உள்ளன. நம் கண்ணுக்குத் தென்படுபவைகள் வெண்ணிறங்களுடன் ஒளிர்கின்றன. வெளிப்புற அண்டங்களில் பச்சை சிவப்பு, மஞ்சள், நீலம், ஊதா போன்ற விதவிதமான நிறங்களுடைய கோளங்கள் உள்ளன. இவற்றைக் 'குருமணி' என்று இயம்புகின்றனர் அடிகள். வெவ்வேறு நிறமுடைய இரத்தினங்கள் என்பது அதன் பொருள். இத்தகைய குருமணி இழைத்திட்ட சிம்மானத்தில் வீற்றிருக்கின்றார் தட்சிணாமூர்த்தி; தாயுமானவரின் பரம குருநாதர். 'குருமணி' இழைத்திட்ட சிங்காசனத்தின் மிசை கொலுவீற்றிருக்கும் நின்னை'[1] என்று இந்நிலையைக் குறிப்பிடுகின்றார் அடிகள்.

ஈண்டு அடிகள் தட்சிணாமூர்த்திக்கும் தம்மை ஆட்கொண்ட மௌனகுருவிற்கும் ஒருவித வேற்றுமையும் காணாத பாங்கில் பகர்கின்றார். ஆன்மசாதகர்கள் ஒவ்வொருவருக்கும் இத்தகைய கருத்து முற்றிலும் மிகமிக அவசியமாகின்றது. தன்னை ஆட்கொள்ளும் குருநாதரை சாதாரண மானிடனாக - கல்லூரி பள்ளிகளில் பணியாற்றும் பேராசிரியர் ஆசிரியர்களைப்போல் - காண்பவருக்கு ஆன்மசாதனத்தில் ஒருவித முன்னேற்றத்தையும் பார்க்க முடியாது. குருவை பரம்பொருள் சொரூபமாகவே கருதி வழிபடுகின்றவர்கட்கு

1. மௌனகுரு வணக்கம் - 8

எல்லா விதமான முன்னேற்றமும் உண்டு. குருபக்தியில் முதிர்ந்த நிலையில் இருக்கும் அடிகள் தம்மை ஆட்கொண்ட குருவையும் தட்சிணாமூர்த்தியையும் ஒன்றாகக் கருதியது முற்றிலும் பொருத்தமானது.

சீடன் ஒருவன் குரு இடத்தில் எத்தகைய பக்தி கொள்ள வேண்டும்? 'நின்னைக் கும்பிட்டு அனந்த முறை தெண்டனிட்டு' என்ற அடிகளின் பாடல் தொடர் இதனைச் செவ்விதின் விளக்குகின்றது. வீழ்ந்து வணங்குவதன்மூலம் சீடன் ஒருவன் தனது சீவபோதம் முழுவதையும் குருவிடம் ஒப்படைத்து விடுகின்றான். தீயினிடம் ஒப்படைக்கப்பெற்ற விறகுத் துண்டுகள் தாம் முற்றிலும் தீயாக மாறுவதுபோல பரிபூரண நிலை எய்தியுள்ள குரு ஒருவரிடம் தன்னை முற்றிலும் ஒப் படைக்கின்ற சீடன் ஒருவன் தானும் பரிபூரண நிலைக்குத் தகுதியுடையவனாகின்றான்.

ஆண்கள் அட்டாங்கமாகவும் பெண்கள் பஞ்சாங்கமாகவும் கும்பிடலாம். தலை, கையிரண்டு, செவியிரண்டு, மோவாய், புயங்களிரண்டு என்னும் எட்டவயமும் நிலத்திலே பொருந்தும்படி வணங்குதல் அட்டாங்க நமஸ்காரம் ஆகும். பூமியிலே தலையை வைத்து, மார்பு பூமியிலே படும்படி வலக்கையை முன்னும் இடக்கையைப் பின்னும் நேரே நீட்டி, பின் அம்முறையே மடக்கி, வலப்புயமும் இடப்புயமும் மண்ணிலே பொருந்தும்படி கைகளை அரையை நோக்க நீட்டி, வலக் காதை முன்னும் இடக்காதைப் பின்னும் மண்ணிலே பொருந்தச் செய்தல் இம்முறையில் கும்பிடுதல் ஆகும். தலை, கையிரண்டு, முழந்தாளிரண்டு என்னும் ஐந்தவயமும் நிலத்திலே பொருந்தும்படி வணங்குதல் பஞ்சாங்க நமஸ்காரம் என்பது. இந்த நமஸ்காரங்களை மூன்று தரமாயினும், ஐந்து தரமாயினும், ஏழு தரமாயினும், ஒன்பது தரமாயினும், பன்னிரண்டு தரமாயினும் பண்ணல் வேண்டும். ஒருதரம், இரு தரம் பண்ணல் குற்றம். இந்நிலையில்,

*"வாயொன்றும் பேசாமௌனியாய் வந்தாண்ட*
*தேயொன்றும் போதாதோ? இன்பம் பராபரமே"*

— *பராபரம் 131*

என்று பேசுகின்றார்.

'என் மனக்குறையெல்லாம் தீரும் வண்ணம்' வணங்க வேண்டும் என்கின்றார். ஆன்மசாதகனுக்கு இருக்கின்ற மனக் குறைதான் என்ன? உலகத்தவர்கட்குப் பலதரப்பட்ட மனக் குறைகள் உள்ளன. பொருள் இல்லையென்றும், போகம் இல்லையென்றும், பதவி இல்லையென்றும், பேர்புகழ் இல் லையென்றும் இப்படி எத்தனையோ குறைகள்; நன்னெறி யில் செல்லுகின்ற சாதகன் ஒருவனுக்கு இத்தகைய குறைகள் ஒன்றும் இல்லை. இவற்றை அவன் கனவிலும் கருதுவதில் லைதான். இறைவனுடைய அருளுக்குப் பாத்திரமாக வில் லையே என்கின்ற மனக்குறை ஒன்றுதான் ஆன்ம சாதகனை அல்லும் பகலும் வாட்டுகின்ற குறை. அடிகளிடம் இக்குறை இருந்து கொண்டிருந்தது இயல்பே யாகும்.

குருவின் இணையடிகளை அன்றலர்ந்த நறுமணம் மிக்க மலர்களால் அருச்சிக்க விழைகின்றார். மணம் நிறைந்த பூ 'மருமலர்' எனப்படுகின்றது. பூவினிடத்து மணமும் அழகும் தூய்மையும் நிறைந்துள்ளன. மனம் எத்தகைய பரிபாகம் அடைய வேண்டும் என்பதற்கு மலர் சிறந்ததோர் எடுத்துக் காட்டு. மண்ணைப் பயன் படுத்தி செடி வளர்ந்து மலராகப் பரிணமிக்கின்றது. மண்ணுலக வாழ்வைப் பயன்படுத்தி மனத்தை மலருக்கு நிகராகத் திருத்தியமைப்பது ஆன்மசாதக ரின் குறிக்கோள். மருமலர் தூவி தெய்வத்தை வணங்குவது போன்று தூய்மையான மனத்தால் தெய்வத்தையும் - தெய் வத்தையொத்த குருநாதரையும் வணங்குகின்றவனே இறை வனை அடையத் தகுதியுடையவனாகின்றான். தாயுமானவர் இத்தகுதி படைத்தவர் என்பதை நாம் அறிகின்றோம்.

குருலிங்க சங்கமம்: சைவ சமயத்தில் இந்த வழிபாடு சிறந்தது. இந்த மூன்றையும் அடிகள்,

*''மூர்த்திஎல்லாம் வாழி;எங்கள் மோனகுரு வாழி;அருள்*
*வார்த்தைஎன்றும் வாழிஅன்பர் வாழி பராபரமே''*

*— பராபரம் 229*

என்ற கண்ணியில் வழுத்துகின்றார். இலிங்கம்பற்றிய பெருமை இறைவனைப் பற்றிய தலைப்பில் விளக்கியுள்ளோம். அடியார்கள் (சங்கமம்) பற்றிய செய்திகள் பிறிதோரிடத்தில்[2] விளக்கப் பெற்றுள்ளன.

குருவின் பெருமையை தமது "மௌனகுரு வணக்கத்தில்" செவ்விதின் விளக்குகின்றார். இதன் முதற்பாடலில் "மூலன் மரபில் வரும் மௌனகுருவே, நீ என்னை அறிவு மதங் கொண்ட யானையாக வளர்த்தனை. எவ்வாறெனில், ஆசையாக விலங்கினைப் பொடிபடும்படி உதறி ஆங்காரமாகிய முளையைப் பிடுங்கியெறிந்து இரண்டன்மை (அத்துவிதம்) விழைதல் என்னும் மதங்கொண்டு ஆறு சமயமும் ஆறுபோலத் துதிக்கை பொழி நீராக அமைய, பாசமாகிய இருளைத் தன்னிழல் என்று கருதிச் சினந்து ஆரவாரஞ் செய்து, மேலே பார்த்த பெருமித நோக்குடன், பரந்து செல்லும் மனத்தைப் பெரியதோர் கவளமாக நிரம்பவுண்டு, முகத்திற் போர்த்த துணி போன்ற மாயையைக் கிழித்தெறிந்து அறிவாகிய ஒளியோடு கூடிய உனது செவ்விய கையிற் பிடித்த சின்முத்திரையாகிய தோட்டி வசமாய் அடக்கிப் பேரறிவானந்தப் பெருவெள்ளத்தில் திளைத்து நின் திருவருளின் நிறைவாகிய நன்னிய வாசத்தில் உலவும் செய்தனை" என்று போற்றுகின்றார்.

மௌனகுருவின் உயர்நிலையை இதன் 7ஆம் பாடலில் மிக அழாககத் தெரிவிப்பார். "குருநாயகனே, கண்ணால் காணும்போது கானகத்திலுள்ள புலி பசுவுடன் இணக்கமாய் உடன் திரியும்; மதங்கொண்ட யானை நீ கையினால் குறிப்புக் காட்டியவுடன் நெருப்பிலிடுவதற்குப் பெரிய கட்டைகளை ஏந்திவரும். காமதேனுவாகிய விண்ணவர் பசு உன் பொன்னடியைத் தொழுது, உணவு ஆயத்தமாயிருக்கிறதென்று உங்கட்குத் தெரிவிக்கும். உலகிலுள்ள புரவலரும்

2. இந்நூல் - பக்

பாவலரும் தவவேந்தன்[3] என்று உன்னை வழுத்தி 'வெற்றி யோடு காக்க' என வாழ்த்துக் கூறுவர். அறிவும் அருளும் நிரம்பப் பெற்ற உனது திருமுக மண்டலத்தைப் பார்த்த அளவில் நவநாத சித்தர்களும்[4] உன் நட்பினை விரும்புவர். சுகர், வாமதேவர் முதலிய ஞானிகளும்[5] உன்னை மதித்துப் புகழ்வர். விண்ணவரும் மன்னவரும் எதிர்வணங்கித் தொழு தற்குரிய நின் பெருமையை எடுத்துக் கூற எளிதாகுமோ?'' என்கின்றார்.

*''துறந்தார் பெருமை துணைக்கூறின் வையத்து*
*இறந்தாரை எண்ணிக்கொண் டற்று''* *(குறள் 22)*

என்ற பொய்யாமொழியும் ஈண்டுச் சிந்திக்கத்தக்கது.

3. மக்களை முறையாக ஆளும் திறமை வாய்க்கப் பெற்றவர்கள் அரசர்கள். இவர்கட்கு அடுத்தபடி இருப்பவர்கள் கவிஞர்கள். இவர்கள் சிறந்த மொழியில் உயர் கருத்துகளை மக்களுக்கிடையில் வழங்குபவர்கள். ஒருவிதத்தில் இவர்க ளையும் அரசர்கள் என்பது பொருந்தும். இவர்கள் நாட்டின் பெருமக்கள். இந்தப் புவிராசர், கவிராசர் என்ற இருவரும் போற்றுகின்ற அரசர் **தவராசர்**. தவத்தில் உயர்ந்த நிலைக்கு வந்துள்ள ஒருவர் புவியரசரையும், கவியரசரையும்விட மேலானவர் ஆகின்றார். **தாயுமானவரின்** குரு தவராசராயிருப்பது முற்றிலும் பொருத்தமானது. ஒருவிதத்தில் தாயுமானவரே இந்த மூன்றுவிதமான அடை மொழிகட்கும் தகுதியுடையவர் என்று சொல்லலாம்.
4. **நவநாத சித்தர்கள்** என்பவர் ஒரு கூட்டத்தார். தமிழ்நாட்டில் பதினெட்டு சித்தர்கள் ஒரு காலத்தில் திகழ்ந்திருந்ததைப் போன்று இந்த நவநாத சித்தர்க ளும் முன்பு ஒரு காலத்தில் இருந்தனர். இந்த ஒன்பது பேருக்கும் ஒன்பது விதமான நாதர்கள் என்ற பெயர்கள் வழங்கின. இவர்கள் தாயுமானவரின் குருவுக்கு நெடுநாட்களுக்கு முன்னர் வாழ்ந்திருந்தவர்கள் என்றாலும் திரும்ப வும் உடல் எடுக்கும் வாய்ப்பு அவர்கட்குக் கிட்டினால் நெடுநாட்களுக்குப் பின்பு தோன்றிய இந்த நிறைஞானியுடன் நட்புக் கொள்ள அவர்கள் முன்வரு வர் என்பது கருத்து.
5. நிறைஞானி என்பவர் முற்றிலும் பரம்பொருள் சொரூபமானவர். இத்தகைய ஞானிகள் ஏதோ சிற்சில காலங்களில் உலகில் தோன்றியுள்ளனர். எண்ணிக்கை யில் அவர்கள் மிகச் சிலர் எனினும் உலகில் மக்களுக்கிடையில் பெருநன் மையை விளைவிக்க வல்லவர்கள். பண்டைக் காலத்தில் தோன்றிய ஞானியர்க ளுள் **சுகப்பிரம்மத்தையும் வாமதேவரையும்** முக்கியமானவர்களாகக் குறிப்பிட லாம்.

மௌனகுரு எட்டாம் பாடலிலும் தம் குருநாதரின் பெருமைகளைப் பேசுகின்றார் அடிகள். "உடலைப் பேண வைத்திருப்பதற்குக் காரணம் பரமனை வழுத்துதற் பொருட்டேயாகும். சருகுகளையும் நீரையுமே உணவாகக் கொண்டு தவமியற்றுவார் கோடிக்கணக்கான கூட்டத்தினர் உளர். நிலவொளியை உணவாகக் கொண்டு வாழும் சகோரபட்சிகள்[6] போல, மதிமண்டல அமுதினால் அழியாத்தன்மையடைந்த பல கோடி யோகியர்களும்[7] உள்ளனர். இருவினையொப்புற்றுக்[8]

6. **சகோரபட்சிகள்:** இவை நிலஒளியினின்றும் தமது வாழ்க்கைக்கு ஏதுவான பிராணனைப் பெறுகின்றன. அமாவாசையன்றும் அதற்கு இரண்டு நிட்கள் முன்னரும் பின்னரும் நிலவொளியைப் பூமி பெறாததால், மற்ற இருபத்தைந்து நாட்களில் சந்திர காந்தியினின்றே அவை உயிர் வாழ்க்கைக்கு ஏதுவான ஆற்றலைப் பெறுகின்றன. முழு மதியத்தன்று அவைகட்குப் பெருவிருந்து இயற்கையால் வழங்கப் பெறுகின்றது. (இவற்றைச் **செம்போத்துகள்** என்பர்)

7. இப்பறவைகட்கு ஒப்பானவர்கள் **யோகியர்கள்.** இவர்களின் தொகை பலகோடி. இவர்கள் உலகில் கிடைக்கும் உணவை அதிகமாகப் பொருட்படுத்துவதில்லை. மூலாதாரத்தில் உள்ள குண்டலினி சக்தியை இந்த யோகியர் தங்கள் தலையுச்சியிலுள்ள **சஹஸ்ராரத்தைச்** சென்று தாக்கும்படி ஏவுவர். அப்படிச் செய்வதால் கபாலத்தில் இருக்கும் **ஏழாவது** ஞானபூமியினின்று அமிர்த தாரை சொட்டுகின்றது. அதை அமிர்தம் என்றே சொல்ல வேண்டும். தைல தாரை போன்று நாவுக்கு அது வந்து எட்டுவதால், அஃது அமிர்த் தாரை என்று சொல்லப்படுகின்றது. பசியையும் தாகத்தையும் அகற்றிவிட்டுப் பரமானந்தத்தை அஃது உண்டு பண்ணுகின்றது. புறத்திலிருந்து உணவைப் புசித்துப் பசியைப் போக்கிப் பரம திருப்தி அடைவதைவிட இது மேலானது. புறத்திலிருந்து ஏற்கப்படும் உணவு வகைகளுள் சில உடலுக்குப் பொருந்தியவகைளாக இருக்கலாம்; சில் பொருந்தாத வகைகளாகவும் போய்விடலாம். பொருந்தாத உணவு துன்பத்தை விளைவிக்கின்றது. ஆனால், உள்ளிருந்து வடியும் அமிர்த தாரையோ உடலையும் உயிரையும் நன்கு பேணுகின்றது. இங்கு செரிமானம் செய்தல் என்பதற்கு இடமே இல்லை. இதனால் உடல் யாண்டும் ஓய்வு பெற்றுள்ளது. உறக்கத்துக்கும் அவசியம் இல்லாத ஓர் உயர்ந்த நிலையைப் பெறுகின்றது உடல். இதனால் உடல் வாழ்வு நிலைத்திருக்கின்றது. அமிர்த பானம் செய்ததாகக் கருதப் பெருகின்றது. இதனால் யோகியர்கள் பரம்பொருளை ஓயாது தியானம் செய்கின்றனர்.

8. இருவினையொப்பு - ஒருவன்தான் செய்த நல்வினைப் பயனாகிய இன்பத்திலும் தீவினைப் பயனாகிய துன்பத்திலும் உள்ளம் வேறுபடாத நிலை. அஃதாவது இன்பத்தில் விருப்பும் துன்பத்தில் வெறுப்பும் கொள்ளாது இரண்டையும், சமமாக நுகரும் நிலை. அடிகள் 'ஓடும் இருநிதியும் ஒன்றாகக் கண்டார்கள்' (பராபரம் - 16) என்று குறிப்பிடுவர்.

காலம் கடந்த ஒருமைப்பாடுடைய பேசாத பேரின்ப நிட்டையுடையார் எண்ணிறந்தவர்கள் உள்ளனர். இரசகுளிகை மருந்து முதலியவற்றால் எண்வகை சித்தி எய்தினோர் பல்லோர் உள்ளனர். இவர்கள் யாவரும் சூழ்ந்திருக்க அவர்கள் நடுவே செவ்விய நிறம் மிக்க மணிகளால் இழைத்த ஏற்றிருக்கையில் கொலுவீற்றிருக்கும் நின்னைக் கையால் கும்பிட்டுப் பன்முறை வீழ்ந்து பணிந்து என் மனக்குறையெல்லாம் தீரும் வண்ணம் மணம் மிக்க மலர் தூவி உன் திருவடிகளைப் போற்றும் பொருட்டு நீ என்னை 'வா' என்று அழைப்பதெக் காலம்?'' என்று பேசுவர்.

சின்மையானந்த குரு ஒரு பாடலில் தம் குருநாதரின் அருமைப் பாட்டை மெச்சுவதைக் காணலாம்.

*''காரிட்ட ஆணவக் கருவறையில் அறிவற்ற*
*கண்ணிலாக் குழவியைப்போல்*
*கட்டுண்டு இருந்தமை வெளியில்விட்டு, அல்லலாம்*
*காப்பிட்டு அதற்கிசைந்த*

*பேரிட்டு, மெய்என்று பேசுபாழ்ப் பொய்யுடல்*
*பெலக்கவிளை அமுதம் ஊட்டிப்*
*பெரியபுவ னத்தினிடை போக்குவரவு உறுகின்ற*
*பெரியவிளை யாட்டமைத்திட்(டு)*

*ஏரிட்ட தன்சுருதி மொழிதப்பில் நமனைவிட்(டு)*
*இடர்உறஉறுக்கி இடர்தீர்த்(து)*
*இரவுபகல் இல்லாத பேரின்ப வீட்டினில்*
*இசைந்துதுயில் கொள்மின் என்று*

*சீரிட்ட உலகன்னை வடிவான எந்தையே...''*

— **சின்மயானந்த - 6**

என்று தந்தை நிலையில் வைத்து குருவை விளிக்கின்றார். தம் குருநாதரும் தட்சிணாமூர்த்தி வடிவில் உள்ள இறைவனும் இவருக்கு ஒருவரே. இறைவனைத் தாயாகவும் தந்தையாகவும் கருதுவது சான்றோர் வழக்கு. இறைவன் விஷயத்தில் இது சாத்தியமாகின்றது. ஆதலால்தான் அவன் அர்த்த

நாரி, தையல்பாகன், அம்மை அப்பன் என்றெல்லாம் வணங்கப் பெறுகின்றான்.

அஞ்ஞானத்தில் உழன்று கொண்டிருக்கின்ற மனிதனுடைய வாழ்வும் மரம் செடி கொடி வாழ்வும் ஒப்புடையதாய் அமைகின்றன. மரமாக விரிந்து பெருகக் கூடிய ஆற்றல் எல்லாம் வித்து ஒன்றில் அடங்கி ஒடுங்கிக் கிடக்கின்றது. கம்பன் வாக்கில் சொன்னால் 'ஆலமர்வித்தின் அருங்குறள்'[9] என்று. அன்னையின் கருப்பத்தில் வாசம் செய்யும் சிசு ஒன்றின் நிலையும் இத்தகையதே.

விதையுள் அடைபட்டுக் கிடக்கும் மரம் ஒன்று காற்றையோ ஒளியையோ பயன்படுத்திக் கொள்வதில்லை. தாயின் கரு அறையில் கிடக்கும் சிசுவின் நிலையும் இதைப் போன்றதேயாகும். அச்சிசு கண்ணால் காண்பதில்லை; காதால் கேட்பதில்லை. மூளையைப் பயன்படுத்தி எண்ணுவதில்லை. அறிவு அதனிடத்து ஒடுங்கிக் கிடக்கின்றது. முன்பு பல பிறப்புகளில் பெற்றுள்ள அநுபவங்களின் விளைவாக அச்சிசு அறிவுற்றதாக இருப்பினும், அஃது அறிவற்றதாகவே இப்போது அன்னையின் அகப்பையில் கிடக்கின்றது. அவ்விடத்தைவிட்டுப் புறத்தே செல்ல அதற்குச் சுதந்திரம் இல்லை. ஒரு குறிப்பிட்ட காலம் வரையில் அது கருவிலேயே கட்டுண்டு ஒடுங்கிக் கிடந்தாக வேண்டும்.

கருவறையில் உள்ள சிசுவுக்கு எத்தனைவிதத் தடைகளும் குறைகளும் உள்ளனவோ, அவையனைத்தும் ஆணவம் படைத்துள்ள மனிதனுக்கு உலக வாழ்வில் உள்ளன. கருவறை வாழ்வு சிசுவுக்குக் கார் இருள்மயமானது. அங்ஙனமே ஆணவத்தால் கட்டுண்டு கிடக்கும் மனிதனை அஞ்ஞானம் என்னும் கார் இருள் மூடிக் கொண்டுள்ளது. விதை ஒன்றின் குறுகிய நிலை போன்றது கருவறையிலுள்ள சிசுவின் நிலையும். இந்தச் சிசுவின் குறைபட்ட நிலையில்தான் ஆணவம் படைத்துள்ள மனிதனும் இருக்கின்றான். இந்தக் கோட்பாட்டை 'காரிட்ட ஆணவக் கருவறையில் அறிவற்ற

9. கம்பரா. பாலகாண்.வேள்விப்-2

கண்ணிலாக் குழவியைப்போல் கட்டுண்டிருந்த எமை' என்று அடிகள் தம்மையே குறிப்பிட்டு உரைப்பதைக் காணலாம். உண்மையில் அவர் ஆணவத்தில் அடைபட்டவர் அல்லர் என்பதை அவர் வாழ்க்கையை அறிந்த நாம் அறிவோம். ஞானநிலையில் பரிபாகம் அடைகின்றவர்கள் தங்களிடத்துள்ள சிறு குறைகளையும் பெருங்குறைகளாகக் கருதுவர். அப்படிக் கருதுதல் ஒன்றே அந்தச் சிறிய குறையையும் களைவதற்கு உபாயமாகும். எனவே தம்மைக் குறைபாடுடையவராகக் கருதிக் கொள்ளுதல் அவருடைய சால்புக்குக் கட்டளைக் கல்லாகவும் அமைகின்றது.[10]

இனி உருவாக இருக்கும் மரம் 'ஆலமரவித்தின் அருங்குறள்' போல் விதையினுள் மறைந்து கிடக்கின்றது. பருவ காலத்தில் மழை பெய்தால் விதை முளைத்து பூமியினின்று வெளி வருகின்றது. அன்னையின் கருவறையிலிருக்கும் சிசு அதனுள் வளர்ச்சி உறுகின்றது. அது கருவில் அடைய வேண்டிய வளர்ச்சியையும் முதிர்ச்சியையும் பெற்ற பிறகு தாயின் வயிற்றிலிருந்து வெளிவிடப் பெறுகிறது. அதனை வெளிவிட்டேயாக வேண்டும். இல்லாவிடில் தாய்க்கும் சேய்க்கும் உயிர்ச் சேதம் உண்டாகும். ஆணவத்தில் தோன்றி ஆணவத்துடன் வளர்ந்துவரும் மனிதன் உலக வாழ்க்கை என்னும் வெளியில் விடப்படுபவன் ஆகின்றான். இந்த நிலையை அடிகள் 'வெளியில் விட்டு' என்று இயம்புகின்றார்.

முளைத்து வந்த செடி காற்றில் அசைகின்றது. இங்ஙனம் அசைதல் அதற்கு உண்டாகும் அல்லல். ஆனால் அது காற்றில் அசையாவிடின் செடி உறுதி பெறாது. அல்லல் படுவது போன்று அதன் வாழ்க்கை காணப்பெறினும் அசைதல் என்னும் துன்பம் மறைமுகமாக அதற்கு உதவி செய்கின்றது. அந்தச் செடிக்கு வேலி என்னும் காப்பு இடப்படுகின்றது. அதன் கிளைகள் படர்ந்து வளர்வதற்கு வேலி ஒரு சிறிது இடைஞ்சலாக இருக்கலாம். ஆயினும் ஆடுமாடுகள் மிதித்து

10 வைணவத்தில் நம்மாழ்வார் போன்ற ஞானச் செல்வர்கள் இவ்வாறு தம்மைக் குறைபடக் கூறுவதை **'நைச்சியாநுசந்தானம்'** என்று கூறுவது மரபு. நைச்சியம் - குறைவு; அநுசந்தானம் - பாவித்தல்.

அதனைச் சிதைத்து விடாதபடியும், அவை அதனைத் தின்று விடாதபடியும் அதற்கு இடப்பெற்ற வேலி நல்ல காப்பாக அமைகின்றது. அன்னையின் உதரத்தினின்றும் பிறந்துள்ள சிசு பசிப் பிணியால் அல்லல் உறுகின்றது. நோயினால் தாக்கப்பெறும் பொழுதும் அல்லல் படுகின்றது. அல்லல்படும் பொழுதெல்லாம் குழந்தை அழத் தொடங்குகின்றது. அழுகின்ற குழந்தைக்குப் பால் கிட்டுகின்றது. அன்னையின் அரவணைப்பும் ஏனைய பாதுகாப்புகளும் கிட்டுகின்றன. எனவே, அழுதல் என்பது இயற்கையினால் - இறைவனால் - சிசுவுக்கு இடப்பெற்ற காப்பு ஆகின்றது.

இங்ஙனமே வெளியில் வந்துள்ள செடியைப் போன்றும், வெளியில்விடப்பெற்றுள்ள சிசுவைப் போன்றும் ஆணவத்தில் ஊறிக் கிடக்கும் மனிதனுக்கும் துன்பங்கள் - தொல்லைகள் - அல்லல்கள் - தொடர்ந்து வருகின்றன. துன்பமில்லாத வாழ்வு எவ்வித உயிர்க்கும் இல்லை. உடல் எடுத்துள்ள உயிர்கள் எல்லாம் ஏதேனும் ஒரு வகையில் அல்லல் பட்டே ஆகவேண்டும். அந்த அல்லலினின்று தங்களை விடுவித்துக் கொள்ள உயிர்கள் ஓயாது முயன்று வருகின்றன. அந்த முயற்சியினால் வாழ்வில் முன்னேற்றம் உண்டாகிறது. ஆக, உயிர்கள் அனைத்துக்கும் விதவிதமான அல்லல்கள் அமைந்திருப்பதே அவற்றின் வளர்ச்சிக்கு ஏதுவாகின்றது. இக்கோட்பாட்டை 'அல்லல் ஆம் காப்புஇட்டு' என்று அடிகள் கூறுகின்றார்.

உலக வாழ்வில் மனிதன் வெவ்வேறு சூழ்நிலைகளில் வைக்கப் பெற்றிருப்பதற்கு ஏற்ப அவனுக்குப் பல பெயர்கள் வந்தமைகின்றன.

(1) பருவநிலைக்கேற்ப பாலன், சிறுவன், இளைஞன், யுவன், காளை, பழுத்த கிழவன் என்றும் பெயர்கள் மாறி மாறி அமைகின்றன.

(2) கல்வி நிலைக்கேற்ப மாணாக்கன், கற்றவன், கலையில் வல்லவன் என்று பெயர்கள் மாறிமாறி வந்தமைகின்றன.

(3) செல்வ நிலைக்கேற்ப பணக்காரன், வறிஞன், குறை செல்வம் படைத்தவன், நிறை செல்வம் படைத்தவன் என்றும்,

(4) பொருளைக் கையாளும் முறைக்கேற்பக் கொடையாளி, வள்ளல், பிசுநாறி என்றும் பெயர்கள் அமைகின்றன.

(5) உடல்நிலையை முன்னிட்டு நோயாளி, உடல் திட்பம் படைத்தவன், மெலிந்தவன், தடித்தவன் என்று பெயர்கள் மாறி விடுகின்றன.

(6) மகன், மணமகன், குடும்பி, தந்தை, பாட்டன் என்ற பெயர்கள் குடும்ப வளர்ச்சியை முன்னிட்டு மாறி விடுகின்றன.

இப்படியெல்லாம் இன்னும் பலவிதமாகவும் ஒரே மனிதனுக்குப் பல பெயர்கள் வாய்க்கின்றன. இவற்றையெல்லாம் கருதிய அடிகள் 'அதற்கு இசைந்த பெயரிட்டு' என்று இயம்புகின்றார்.

மனிதன் அல்லல் படுவதற்கு உடல் வாழ்க்கையே காரணமாகின்றது. பிறந்தது முதல் மரிக்கும் வரை மனிதன் உடலைப் பேணுதலில் கவலை மிக எடுத்துக் கொள்ளுகின்றான். இந்த உடல் வியப்புக்குரியதாகின்றது. ஒன்றைக் கருதுவோம். வெட்ட வெளியில் திடீரென்று மேகம் கூடுகின்றது. காட்சியில் இல்லாதது ஒன்று காட்சிக்கு வருகிறது. அதன் வடிவம் ஓயாது மாறி அமைந்து கொண்டே உள்ளது. மழையாகப் பொழிந்தோ காற்றினால் சிதறிக் கலைந்தோ அந்த மேகம் தனது வடிவத்தை இழந்து விடுகிறது. முன்பு இல்லாதது, பின்பும் இல்லாதது, இடையில் இருப்பது போன்று தென்பட்டுக் கொண்டு இருக்குமாகில், இருப்பது போல் தோன்றுவது பொய்யானது.

மேகம் போன்றது மனிதனது மேனி; உடல். பல ஆண்டுகட்கு முன் அஃது இருந்ததில்லை; பல ஆண்டுகட்குப் பின்பும் அஃது இருப்பதில்லை. இயற்கையில் பல பொருள்

கள் கூடி அஃது உருவாகியுள்ளது. அது உருவெடுக்க அமைந்த பொருள்களாகி, இரத்தம், தசை, எலும்பு, கொழுப்பு முதலிய பொருள்கள் உருமாறி அமையும் தன்மையுடையவை; எளிதில் அழிந்துபட்டுப் போகக் கூடியவை. இத்தகைய நிலையற்ற பொருள்களைக் கொண்டு அமைந்த உடலைப் பொய்யானது என்று சொல்லுதலே முறை. இதனைத் தெரிந்து தெளிந்திருந்தும் உடலைப் பொய்யானது என்று நாம் வழங்காமல் மெய்யானது என்றே கூறி வருகின்றோம். சிலசமயம் உடலை மறந்திருக்கின்ற நிலையை மெய்மறந்த நிலை என்கின்றோம். ஆழ்ந்து நோக்கின் இது மெய்யல்ல என்பது புலனாகும். அழிந்து போகின்றவை அனைத்தும் 'பாழானவை' என்று பகரப் பெறுகின்றன. இக்கருத்தை அடிகள் 'மெய் என்று பேசும் பாழ்ப் பொய்யுடல்' என்று இயம்புகின்றார்.

இத்தகைய உடலைப் பேணி வளர்ப்பதில் மனிதன் கண்ணும் கருத்துமாய் இருக்கின்றான். இல்லம் அமைத்துக் கொள்ளல், ஆடைகளை அணிந்து கொள்ளல், பூமியில் விளையும் தானியங்களை உணவாக்க முயலுதல், உணவை விதவிதமாகச் சமைத்தல் - என்பன போன்ற எத்தனை செயல்கள்! உணவுக்கு 'அமுது' என்ற ஒரு பெயரும் உண்டு. இறப்புக்கு இடம் தராத பொருள் அமிர்தம் - அமுது. உணவின் மூலம் மனிதன் மரணத்தை ஒத்திப் போட்டுக் கொண்டிருக்கின்றான். அதை உண்டு செரிப்பதால் உடல் வளர்கிறது; பெலக்கவும் செய்கிறது. உணவில் வைத்த ஆசை உடல் வாழ்க்கையில் வைத்த ஆசையின் விளைவு ஆகும். உணவைப் பெருமகிழ்ச்சியுடன் ஏற்கின்றான். உடல் வாழ்க்கையில் வைத்த ஆசையே அம்மகிழ்ச்சிக்குக் காரணமாகின்றது. இக்கோட்பாட்டை அடிகள் உடல் 'பெலக்க அமுதம் ஊட்டி' என்று ஓதுகின்றார்.

'புவனம்' என்னும் சொல் பூமியைக் குறிக்கின்றது. பகலவனிடத்திலிருந்து சிதறி விழுந்த சிறு துண்டே பூமி என்பது அறிவியல். கதிரவனோடு ஒப்பிட்டு நோக்கும்போது பூமி

ஒரு சிறு துளி. ஆனால் அதனுள் வாழும் நம்மோடு ஒப்பிட்டு சீர்தூக்கி நோக்கும்போது, அது மிகப் பெரிய புவனம். இந்தப் பரந்த மண்ணுலகில் ஒரு மனிதன் அளவில் ஒரு சிறு தூசிக்குச் சமமாக மாட்டான். எனவே, தன்னிலும் தான் வதியும் தரணி மிகமிகப் பெரியது என்று பொருள் படுத்துவது முற்றிலும் பொருந்தும். இந்தப் புவனத்தில் வாழ்வதற்கு மனிதன் தோன்றுகின்றான். சிறிது காலம் கடந்த பிறகு அவன் ஓய்வு கொள்வது இன்றியமையாததாகின்றது. இந்த ஓய்வு தான் மரணம் என்பது. மரணத்தின் வாயிலாக அவன் மறைந்து போகின்றான். இங்ஙனம் மண்ணுலகைவிட்டுப் போவதும் அதற்கே திரும்பி வருவதும் ஓயாமல் நிகழ்ந்து கொண்டுள்ளன. இந்த வாழ்க்கையைப் பல்வேறு பாங்கால் படம் பிடித்துப் பார்க்கும் பெரியார்கள் உள்ளனர். பாருலக வாழ்க்கை ஓய்வில்லாத போராட்டம் என்று பகர்வது உண்டு. அது முடிவற்ற ஒரு விளையாட்டு என்று கருதுகின்றவர்களும் உள்ளனர். இங்ஙனம் கருதுவதில் ஓர் இனிமையும் உள்ளது. விளையாடத் தெரியாதவர்கள் விளையாட்டிலேயே கலகம் விளைவித்துக் கொள்வதுமுண்டு. அது வெறும் விளையாட்டு என்று எண்ணுபவர்கள் அதில் உண்டாகும் வெற்றி தோல்வியைக் குறித்து மனமாற்றம் அடைவதில்லை. இரண்டையும் ஒன்றுபோல் கருதுகின்றவனே சிறந்த விளையாட்டு வீரனாகின்றான். வாழ்க்கையை ஒரு விளையாட்டாகக் கருதிப் பழகுவதற்கே மக்கள் இயங்கிவருகின்றனர். இது பலர்க்குப் புலனாவதில்லை. எனினும் இதனை ஒரு விளையாட்டாகக் கொள்வதுதான் வாழ்க்கையின் குறிக்கோள். இந்த அரிய கோட்பாட்டை 'பெரிய புவனத்திடை போக்கு வரவு உறுகின்ற பெரிய விளையாட்டு அமைத்திட்டு' என்று அடிகள் கூறுகின்றனர்.

சாஸ்திரம் என்பதுபற்றி ஒரு சொல். எது சாஸன மிடுகிறதோ அது சாஸ்திரம். அஃதாவது எதனிடமிருந்து ஆணை பிறக்கின்றதோ அது சாத்திரமாகிறது. ஆணை இரண்டுவிதமாக வடிவெடுக்கிறது. 'இன்னதைச் செய்' என்பதுபோல

வடிவெடுத்து வருவது உடன்பாட்டு ஆணை ஆகிறது. ‘இன்னதைச் செய்யாதே’ என்பதுபோல் வருவது எதிர்மறை ஆணை. சாத்திரங்களுக்கெல்லாம் முதல் நூலாய் இருப்பதற் குச் ‘சுருதி’ என்று பெயர். வேதாந்தத்திற்குச் ‘சுருதி’ என்பது மற்றொரு பெயர். காதால் கேட்கப் பெறுவது ‘சுருதி’. ‘வேதம் எழுதாக் கிளவியாக’ இருந்து குரு சீடர்களுக்கிடையில் ஓதுதல் மூலம் பாதுகாத்து வைக்கப் பெற்றிருந்தது.

பரம்பொருளிடத்திலிருந்து தோன்றியவர் பிரமன். இந் தப் பிரமன் சொல்ல அதனை மற்ற தக்க அதிகாரிகள் கேட்டுக் காப்பாற்றி வந்ததனால் வேதாந்தத்திற்குச் ‘சுருதி’ (கேட்கப் பட்டது) என்ற பெயர் ஏற்பட்டது. பரம் பொருளைப் பற்றிய பேருண்மைகள் அடங்கிய நூலே வேதாந்தம். அது பரம்பொருளினிடத்திலிருந்தே வந்திருப்பதால் அது அப்பரம புருடனுக்கே உரியது என்று இயம்புவதால், தவறு ஒன்றும் இல்லை. இறைவனும், இறைவனுடைய திருநாமமும், இறை வன் ஆணையும் இணை பிரியாதவை. இறைவனே கோட்பா டுகளின் மூலம் தம்மை விளக்கிக் கொள்கின்றார். வேதாந்தம் என்னும் கோட்பாடுகளில் அழகும் நன்மையும் பொலிந்துள் ளன. ‘ஏர்’ என்ற சொல் அழகையும் நன்மையையும் குறிக்கின் றது. வேதக் கோட்பாடுகளுக்கு ஒப்ப வாழ்கின்ற வாழ்வே அழகு பொருந்திய வாழ்வு ஆகிறது. வேதக் கோட்பாடுக ளைக் கடைப்பிடிக்கின்ற பொழுதே நலன்கள் அனைத்தும் வந்து சேர்கின்றன. அவற்றைப் புறக்கணிக்கின்ற பொழுது அழகும் நலனும் அழிந்து பட்டுப் போகின்றன. இக்கருத்து களை எல்லாம் ‘ஏரிட்ட சுருதி மொழிதப்பில்’ என்ற அடிகள் தம் அமுதவாக்கில் அடக்கி வைத்துள்ளார்.

பொது நன்மைக்கென்றும் அமைந்துள்ள சட்டதிட்டங் கட்கு இடர் அல்லது துன்பம் நேரிடுகின்றது. பொது நன் மைக்கென ஏற்பட்ட சாலைவிதிகளை மீறுகின்றவர்கள் படும் துன்பங்களை அன்றாட நாளிதழ்களில் காண்கின்றோம். இவ் விதிகளைக் கடைப்பிடித்து வருவதைக் கவனிக்கக் காவல் அதிகாரிகள் உள்ளனர். மீறுகிறவர்களுக்குத் தண்டனை

விபத்துகளால் கிடைத்த விடுகின்றது. இந்தச் சட்டத்திட்டங்கள் பொது நன்மையின் பொருட்டு மக்களால் ஏற்படுத்தப் பெற்றவை.

இதற்குமேல் வாழ்க்கை நலனை முன்னிட்டு இறைவனால் அல்லது இறைவன் அருள் பெற்ற ஞானிகளால் நியமிக்கப் பெற்றுள்ள கோட்பாடுகளின் தொகுப்பே 'சுருதி' அல்லது 'வேதாந்தம்' எனப்படுகின்றது. சுருதி மொழி தப்பி நடக்கின்றவர்கட்கு தண்டனை வழங்குவதற்கும் ஏற்பாடு உள்ளது. நெறியில் ஒழுங்காகச் செல்லுகின்றவர்கட்கு நலன் தரவும், நெறியில் வழுவுகின்றவர்கட்கு இடர் உறுத்துதற்கும் 'நமன்' அல்லது 'யமன்' என்ற தெய்வம் உள்ளது. நெறியை நேராகக் காத்து வருகின்ற இயற்கைச் சக்தியே நமன் என்று வழங்கப் பெறுகிறது.

அன்றாட வாழ்க்கையில் காவலர்களிடமிருந்து மறைந்திருந்து சட்டத்தைமீறி நடந்து தண்டனை பெறாது தப்பித்துக் கொள்ளலாம். ஆனால், இயற்கையின் நியதியை மறைமுகமாக மீறி நடந்தாலும் அதற்குரிய தண்டனை அல்லது இடர் கிட்டி விடுவது உறுதி. மறைந்திருந்து தீயில் கை வைத்தாலும் தீ கையைச் சுட்டிவிடுவது உறுதியல்லவா? மக்கள் இயற்கையிலுள்ள நெறியிலிருந்து வழுவுகின்றபொழுதெல்லாம் அவர்களுக்கு நமன் தண்டனை வழங்கி விடுகின்றான். இடர்ப்படும் பொழுது துன்பம் வருகின்றது. துன்பப்படும்பொழுது திரும்பவும் தீச்செயலைச் செய்வதில்லை என்ற தீர்மானம் வருகிறது. ஆனால், அது 'மயான வைராக்கியம்' 'பிரசவ வைராக்கியம்' போல் ஆகிவிடுகின்றது. இங்ஙனம் தண்டனைக்குமேல் தண்டனையைக் கொடுத்து மக்களைத் தீயச் செயல்களினிடமிருந்து விலக்குவது நமன் கடமையாகின்றது. அதனால் அவன் 'தருமராஜா' என்று வழங்கப் பெறுகின்றான். பாண்டவர்களில் மூத்தவனாகிய தருமன், 'நமன் அம்சம்' என்ற வரலாற்றையும் நினைவுகூரலாம். பல தடவை தண்டனை பெற்ற அநுபவம் மக்களை நன்னெறியில் நிலைத்திருக்கச் செய்து விடுகின்றது. இதனால் அவர்களிடம் இடர் தலைகாட்

டுவதே இல்லை. இக்கோட்பாடுகளையெல்லாம் சிந்தித்த அடிகள் அவற்றை 'நமனை விட்டு இடர்உற உறுக்கி இடர் தீர்த்து' என்னும் பகுதியில் அடக்கிக் காட்டுகின்றார்.

இடரினின்று விலகிக் கொள்ளுதலுடன் வாழ்க்கை முடிந்து விடுகின்றதா? என்ற கேள்வி எழுகின்றது. பசி என்பது ஒருவித இடர். அதனினின்று விலகிக் கொள்ள உயிர்கள் முயலுகின்றன. அதற்காக உணவைத் தேடி அலைகின்றன. உணவு கிடைத்தவுடன் அதனை உண்பதால் பசி நீங்குகின்றது. பசி இருக்கும்வரை உணவை மனிதன் சுவைத்து உண்பதில்லை. 'பசி ருசி அறியாது' என்பது பழமொழி. பசி அடங்கினபடி உணவை உள்ளபடி சுவைக்கும் இயல்பு மனிதனுக்கும் உயிர்கட்கும் வந்துவிடுகின்றது. அறுசுவையோடு கூடிய உணவைச் சுவைத்து உண்பது மனிதனுக்கென்று அமைந்துள்ள வாய்ப்பு. விதவிதமான உணவுப் பண்டங்களைத் தயாரிக்கும் மனிதனுடைய மூளை வியத்தற்குரியது. அவற்றைச் சுவைத்து உண்ணுங்கால் இன்பம் மேலிடுகிறது. அந்நிலையில் தீநெறியினின்று விலகி நன்னெறிக்கு வருகின்ற மனிதனுக்கு இரண்டுவித நிலைகள் அமைகின்றன. இடர் தீர்த்திருப்பது உடனே கிடைக்கும் வாய்ப்பு; இஃது பசிப் பிணியை அகற்றுதற்கு ஒப்பானது. இது முதல் நிலை. அடுத்த நிலை பேரின்பம் எய்துவது. இதுவே மனிதனது உண்மையான நிலை. அஃது அவனுக்கே உரிய இடமாதலால் அது வீடுபேறு என்று வழங்கி வருகிறது. அப்பேரின்ப வீடு பாருலகிலுள்ள வீடு போன்றதன்று. இவ்வீடு அழியும் தன்மையுடையது. எனவே, இது காலத்துக்கு உட்பட்டது. ஆகவே, இங்குப் பகல் உண்டு; இரவும் உண்டு. பேரின்ப வீடோ உலக வாழ்க்கைக்கு அப்பாற்பட்டது. காலம் நடைபோடாதது. காலத்தின் ஆதிக்கம் அங்கு இல்லை. ஆதலால் அஃது இரவு பகல் அற்ற இடம். துன்பமாக மாறி அமையும் சிற்றின்பத்திற்கு இடம் இல்லை. ஒப்பற்ற பேரின்பமே ஆங்கு உள்ளது. நன்னெறியில் செல்லுகின்ற ஆன்மசாதகன் ஒருவனுக்கு அத்தகைய பெரும் பேறு - வீடு பேறு -

கிட்டுகின்றது. இக்கோட்பாட்டை அடிகள் ''இரவு பகல் இல்லாத பேரின்ப வீட்டினில் இசைந்து துயில் கொள்மின்'' என்ற தொடரில் அடக்கி நமக்குக் காட்டுகின்றார்.

துயில் கொள்ளுதல் என்பது தூங்குதல். தூக்கத்தில் அனைத்தும் மறைந்துவிடுகின்றன.[11] இத்தகைய தூக்கத்தை நாடுவது முறையோ என்ற கேள்வி பிறக்கவும் இடம் உண்டு. இங்குத் 'தூக்கம்' என்பது 'செயலற்ற நிலை'யைக் குறிப்பது. எங்கங்கெல்லாம் குறைபாடு உள்ளதோ அங்கங்கெல்லாம் செயல் நிகழ்கிறது. குறையை நிறைவு செய்யவே இயற்கையில் ஒவ்வொரு செயலும் நிகழ்ந்த வண்ணம் உள்ளது. ஆனால், பேரின்ப வீட்டில் குறைவு ஒன்றும் இல்லை. நிறைவு ஒன்றே ஆங்குத் திகழ்கின்றது. அமைதி ஆங்கு நிகழ்வதால் துயிலுறுதலோடு ஒப்பிட்டு அஃது இயம்பப் பெறுகின்றது.

இந்த நிலையைத் தருபவன் ஆண்டவன். அவனை அடிகள் சித்தாந்த முத்தி முதல் என்கின்றார். அவரே திரிசிரபுரத்தில் தட்சிணாமூர்த்தி வடிவில் திகழ்கின்றார். அவரே அடிகட்கு குருவாக வந்து இந்நிலையை அருளுவதால் அவரை அடிகள் பக்தியுடன் நினைந்து போற்றுகின்றார். 'சின்மயானந்த குரு' என்ற தலைப்பிலுள்ள பத்துப் பாடல்களும் இந்நிலையையே சுட்டுகின்றன. ஆசாரியனின் பெருமையையே போற்றுகின்றன.

11. அனைத்தையும் அறிந்த வண்ணம் துயில் கொள்ளுதல் - அறி துயில் கொள்ளுதல் - ஆண்டவன் ஒருவனுக்கே உண்டு.

# 13. வழிபாட்டு முறைகள்

1. இறை வழிபாடு: இறைவழிபாடு என்பது எல்லா சமயங்களுக்கும் உரியது. வள்ளுவப் பெருந்தகையும் 'வால றிவன் நற்றாள் தொழுதலைப்' பற்றிக் குறிப்பிட்டுள்ளதை நினைவு கூரலாம். தாயுமானவர் பாடல்களனைத்தும் ஏதோ ஒரு வகையில் இறைவனைச் சுட்டியிருப்பதால் இறைவழி பாட்டுப் பாடல்களேயாகும். ஈண்டு ஒரு பாடலைக் காண் போம்.

*''அங்கையொடு மலர்தூவி அங்கமது புளகிருப்ப*
*அன்பினால் உருகிவிழிநீர்*
*ஆறாக வாராத முத்தியினது ஆவேச*
*ஆசைக் கடற்குள்மூழ்கிச்*

*சங்கர சுயம்புவே! சம்புவே! எனவும்மொழி*
*தழுதழுத திடவணங்கும்*
*சன்மார்க்க நெறி''*

*— சின்மயானந்த - 1*

என்ற பாடற் பகுதி வழிபாட்டு நெறியை அற்புதமாகக் காட்டுவது.

நற்செயல்களைச் செய்து கொண்டிருக்கும் கை அழகிய கை. ஆண்டவனை ஆராதிப்பது நற்செயல்களிலெல்லாம் சிறந்தது. அத்தகைய கையால் இறைவன்மீது மலர் தூவ வேண்டும். மலர் நமது இதயத் தாமரைக்குக் குறியீடு. அஃதா வது இதயக் கமலத்தையே ஆண்டவனிடம் சமர்ப்பிபது என்பதாகின்றது. இந்நிலையில் உடல் ஆனந்தத்தால் புளகிக் கின்றது. உள்ளமும் அன்பினால் உருகுகின்றது. கண்ணீர் ஆறாகப் பெருகுகின்றது. முக்தியின்மீது ஆசை உண்டாகின் றது. அஃது ஆவேசமாக மாறுகிறது. பேசும் மொழியும் இந்நிலையில் தழுதழுத்திருக்கின்றது. இந்நிலையில் இறை வன் திருப்பெயர்களாகிய 'சங்கரசுயம்புவே, சம்புவே' என்று வாயிலிருந்து வெளி வருகின்றன.

இறைவனும் இறைவனுடைய திருப்பெயரும் இணை பிரியாதவை. பெயரைச் சொன்னாலே இறைவன் வந்து விடுகின்றான். பெயர் இறைவனைவிட ஆற்றல்மிக்கது. 'கோ விந்தா' என்று சேலையை உருவி மானபங்கப் படுத்திய போது, திரௌபதி கூவியவுடன் கண்ணன் வரவில்லை; புடவை சுரந்து வளர்ந்தது என்பது பாரதம் உணர்த்தும் உண்மை.

இவ்வாறு பெயர் கூறி இறைவனை வணங்கும் நெறி சன்மார்க்க நெறி என்று அடிகளால் குறிப்பிடப் பெறுகின்றது. பிறிதோரிடத்தில் மலரிலும் இறைவன் இருப்பதால் அதை எடுக்க மனமும் ஒருப்படவில்லை என்கின்றார்.

*"பண்ணேன் உனக்கான பூசைஒரு வடிவிலே*
*பாவித்து இறைஞ்ச, ஆங்கே*
*பார்க்கன்ற மலரூடு நீயே இருத்தி,அப்*
*பனிமலர் எடுக்கமனமும்*

*நண்ணேன்"* — *கருணாகரக் - 6*

என்பது காண்க.

இறையடியார்கள் இறைவனை ஏத்திப் புகழும் முறையை ஒரு பாடலில் காட்டுகின்றார்.

*"உடல்குழைய என்புஎலாம் நெக்குருக, விழிநீர்கள்*
*ஊற்றுஎன வெதும்பி ஊற்ற,*
*ஊசிகாந் தத்தினைக் கண்டுஅணுகல் போலவே*
*ஓர்உறவும் உன்னிஉன்னிப்*

*படபடென நெஞ்சம் பதைத்துஉள் நடுக்குறப்*
*பாடிஆ டிக்குதித்துப்,*
*பனிமதி முகத்தாலே நிலவுஅனைய புன்னகை*
*பரப்பி, ஆர்த்து ஆர்த்து எழுந்து,*

*மடல்அவிழும் மலர்அனைய கைவிரித் துக்கூப்பி,*
*வானேஅவ் வானில்இன்ப*
*மழையே மழைத்தாரை வெள்ளமே நீடூழி*
*வாழிஎன வாழ்த்தி ஏத்தும்*

*கடல்மடை திறந்தனைய அன்பர்அன் புக்குளியை''*
*— கருணாகரக் - 9*

இவ்வாறு நெஞ்சு நெக்குருக இறைவனை ஏத்தும் அன்பர்க்கு இறைவன் எளியவன். 'அழுதால் உன்னைப் பெறலாமே'[1] என்றார் மணிவாசகப் பெருமான். அன்பு ஆழியானை அணுகும் என்னும்'[2] என்றார் பொய்கை ஆழ்வார். வள்ளுவர் பெருமானும் அன்புக்கும் உண்டோ அடைக்குந்தாள்?[3] என்றார். அன்புக்கு எல்லை கண்டவர் கண்ணப்ப நாயனார் என்பதாகக் கருதுவர் சைவப் பெருமக்கள். அடிகள் ஆண்டவவைன,

*''அன்பருக்கு அன்புஆன மெய்யன்''*
*— ஆனந்தக்களிப்பு 10*

என்று அன்பு ஆகவே குறிப்பர்.

(2) உருவ வழிபாடு: வழிபாட்டுக்கு உருவம் தேவைப்படுவதால், அடிகள் தடத்தநிலை இறைவனையே அதிகமாக் குறிப்பிடுவதாகக் கருதலாம்.

*''மூர்த்திதலம் தீர்த்தம் முறையால் தொடங்கினர்க்குஓர்*
*வார்த்தைசொலச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே''*
*— பராபரம் 156*

என்பதனால் சிவபெருமானை வடிவத்திலே வழிபடுவதும், சிறந்த திருப்பதிகட்குச் செல்வதும், புனித தீர்த்தத்தில் நீராடுவதும் தவம் என்று அடிகள் கருதுவதாகக் கொள்ளலாம்.

சைவத்தில் சிவாகமத்தின் வழியமைந்த நெறி நான்கு. இவை சரியை, கிரியை, யோகம், ஞானம் என்று வழங்கப் பெறுவதை நாம் அறிவோம். உருவத்திரு மேனிகளைத் தாண்டி வழிபடுதலும், திருமேனிகளின் வழிபாட்டிற்குத் தேவையானவற்றை அகல நின்று செய்தலும் சரியை. சிவபெருமானின் அருவுருவத் திருமேனியாகிய இலிங்க மூர்த்தியை அணுகியிருந்து அதன்கண் அப்பெருமானை மந்திரம், கிரியை, பாவனை என்ற மூன்றினாலும், அகத்திலும் புறத்திலும் பல

1. திருவா.திருச்சதகம் - 90          2. முதல் திருவந்.72
3. குறள் - 71 (அன்புடைமை)

வகை உபசாரங்களையும் முறைப்படி செய்து வழிபடுதல் கிரியை. உலகப் பொருள்களோடு ஒன்றியே பழகிவிட்ட மனம் முதலிய அந்தக்கரணங்களை அவற்றின்மீது செல்லாத வாறு அடக்கி அகத்தே நிறுத்தி சிவபெருமானைத் தியானித்த லும் அவனிடத்து அழுந்துதலுமே யோகம் என்பது.

சரியை முதலிய மூன்றும் ஞானத்தை அடைவிக்கும் படிகளாகும். முத்தியாகிய பெரும் பயனுக்கு ஞானம் ஒன்றே வாயிலாகும். ஏனைய பலவும் ஞானத்தை அடைவதற்கு வழிகளே.[4]

*''விரும்பும் சரியைமுதல் மெய்ஞ்ஞானம் நான்கும்*
*அரும்புமலர் காய்கனிபோல் அன்றோ பராபரமே''*

— *பராபரம் 157*

என்றமையால் நான்கு நெறிகளும் ஒன்றுக்கொன்று தொடர்பு டையன என்பது தெளிவாகும்.

சரியைத் தொண்டுகளுள் பாமாலையும் பூமாலையும் சாத்துதல் சிறந்தது.

*''நாவழுத்தும் செயல்மலரோ நாள்உதிக்கும் பொன்மலரோ*
*தேவைஉனக்கு இன்னதென்று செப்பாய் பராபரமே''*

— மேலது *247*

என்பதில் அடிகள் இறைவனை நோக்கி 'உனக்குப் பாமாலை வேண்டுமா? அல்லது அன்றலர்ந்த பூக்களால் தொடுக்கப் பெற்ற பூமாலை வேண்டுமா?'' என்று வினவுவதைக் காண லாம்.

சிவலிங்கப் பெருமானைப் பூசனை புரிவோர் தற்சுத்தி, இடச்சுத்தி, பொருட்சுத்தி, மந்திரச்சுத்தி, வடிவச்சுத்தி என் னும் ஐவகைச் சுத்திகள் செய்து வழிபடவேண்டும்.

4. வைணவத்தில் கருமயோகம், ஞானயோகம் என்பவை பக்தி யோகத்தை விளைவிப்பதுபோல எனலாம்.

*"பஞ்சசுத்தி [5] செய்துநின்னைப் பாவித்துப் பூசைசெய்தால்*
*விஞ்சிய ஞானம் விளங்கும் பராபரமே"*

— மேலது 154

என்பது காண்க.

அகப்பூசை செய்தல் இறைவனுக்கு மிகவும் உகந்தது.

*"நெங்சகமே கோயில் நினைவே சுகந்தம்அன்பே*
*மஞ்சனநீர் பூசைகொள்ள வாராய் பராபரமே"*

— மேலது 151

என்பதால் இது தெளியப்பெறும். இதனுள் மனம் கோயிலாக வும், சிந்தனை பரிமளப் பொருளாகவும், அன்பு திருமஞ்சன மாகவும் செப்பியுள்ளமை காண்க.

இறைவனது திருவருள் வேண்டுவார் நான்கு நெறிகளில் ஏதாவது ஒன்றில் நிற்க வேண்டும் என்பதைத் தம் மேல் வைத்துக் கூறியுள்ளமை,

*"எல்லாம் உதவும் உனை,ஒன்றில்*
*பாவனை யேனும்செய்து*
*புல்ஆ யினும்ஒரு பச்சிலை*
*ஆயினும் போட்டுஇறைஞ்சி*
*நில்லேன்;நல் யோக நெறியும்செ*
*யேன்;அருள் நீதிஒன்றும்*
*கல்லேன்;எவ் வாறு பரமே*
*பரகதி காண்பதுவே?"*

— பாயப்புலி 31

என்ற பாடலில் காணலாம். இதனுள் வடிவ வழிபாடு குறிப் பிட்டுள்ளமையால் சரியையும் கிரியையும் கூறப் பெற்றுள் ளன என்பது தெளிவு. 'அருள்நீதி' என்றது ஞான நெறியை. யோகநெறி நின்று அருந்தவம் கிடப்பாரது இயல்பைப்பற்றிப் பிறிதோர் இடத்தில் அடிகள் விரிவாக உரைத்துள்ளனர். அது வருமாறு:

5. பஞ்ச சுத்தி - பூத சுத்தி, உடல் சுத்தி, திரவிய சுத்தி, ஆன்ம சுத்தி, மந்திர சுத்தி என்பன. விஞ்சிய ஞானம் - பரஞானம்.

''அறிவுமிக்க பெரியோர் உதிர்ந்த காயையும், இலையையும், கனியையும், சருகையும் மிகுந்த பசி வந்தபோது அதை நீக்கப் பயன்படுத்துவர். பெரிய மலைக் குகையில் கருங்கல் போல் அசையாது கண்மூடி (மௌனியாய்) நெடுங்காலம் இருந்து வருவர். ஐந்தீ நடுவே நின்றும் புனித நீரில் மூழ்கியும் உடம்பு எலும்பெலும்பாய்த் தெரியாதபடியாகத் தவநிலையில் நின்று இருப்பர். குருவிகள் தமது தலை மயிரிடைக் கூடுவைத்து அலைக்கும்படி வெயிலிலிருந்தும், பிராணவாயுவை அடக்கியும், மனத்தினை ஒடுக்கியும், பேசா நிலையிலிருந்தும், சூடு தணியும்படி அம்புலி மண்டலத்திலுள்ள அமுதத்தை உண்டு காட்டில் தங்கியும் ஆய்ந்து மறைமுடிவான திருவருளை விரும்பித் தேடினர். அங்ஙனமிருக்க அடியேன் உலக வாழ்வை விரும்புதல் முறையாமோ'' என்பது.

சரியை, கிரியை, யோகத்திலும் ஞானத்தையே சிறந்ததாகக் கருதினர் அடிகள்.

உலகப் பொருள்களை அறியும் அறிவும் அறியாமையும் நீங்கிச் சிவபெருமான் கொடுக்கும்படி கட்டுக் கடங்காத பேரறிவால் இறைவனை அறிவதே ஞானம் என்பது அடிகளின் கருத்து.

*''அறிவோடு அறியாமை அற்றுஅறிவி னூடே*
*குறியில் அறிவுவந்து கூடுநாள் எந்நாளோ''*

— ***எந்நாள். நிற்கும்நிலை - 2***

என்பதில் இதனைக் காணலாம்.

ஞானம் வரும்போது உயிரின் சிற்றறிவு மறைந்து பேரறிவு உதிக்கும். ஆதலின்,

*''சிற்றறிவு மெள்ளச் சிதைந்துஎம்மான் பேரறிவை*
*உற்றுஅறியா வண்ணம்அறிந்து ஓங்குநாள் எந்நாளோ''*

— ***மேலது 17***

என்று பகர்ந்திருப்பது காண்க.

தந்திர மந்திரங்கள் வாயிலாக வழிபாடு நடத்தினால் அறிவு அவற்றைச் சார்ந்து நிற்குமாதலின் அவை யாவும் சடமாகிய தத்துவங்களின் அளவாக அமையும். ஆதலின் ஞானமே இறைவனது திருவுருவாகக் கருதி அவனை வழிபட வேண்டும் என்பர் அடிகள்.

*"தந்திரத்தை மந்திரத்தைச் சாரின்நவை ஆம்அறிவுஎன்று*
*எந்தைஉணர் வேவடிவாய் எய்துநாள் எந்நாளோ"*

*— எந்நாள் நிற்.நிலை 18*

என்பது காண்க.

சுட்டிறந்து இறைவனை அறியுங்காலத்து அகண்டமாகிய உலகத்தை அவனது திருமேனியாகக் கருதுவார்க்கு இவ்வுலகமும் விண்ணுலகமும் ஆகிய எல்லாம் ஞானப் பெருவெளியாகத் தோன்றுமாதலின் அத் தகைய யோகமே சிறந்த யோகம் என்பார்.

*"தாங்கியபார் விண்ஆதி தானேஞா னாக்கினியாய்*
*ஓங்கும் யோகஉணர்வு உற்றிடுநாள் எந்நாளோ"*

*— எந்நாள். நிலைபிரிந்தோர் 11*

என்பது காண்க. 'ஆகாரபுவனம்' என்பதிலுள்ள பலபாடல்கள் இந்நிலையையே காட்டுவன.

(3) அருளாளர்கள் அருளிச் செயல்கள்: அருளாளர்களின் அருளிச் செயல்களில் ஆழங்கால்பட்டு அநுபவித்தலும் ஒரு வித வழிபாடேயாகும். ஞானசம்பந்தர், அப்பர், சுந்தரமூர்த்தி, மணிவாசகர், திருமூலர், பட்டினத்தார், பத்திரிகிரியார், அருணகிரி நாதர் ஆகியோர்களின் பாடல்களை அநுபவித்து மகிழ்ந்தனர் என்பதற்கு அகச்சான்றுகள் உள்ளன.

சமய குரவர் நால்வர் பெருமையையும் பாராட்டு முகத்தால் ஒரு பாடல்:

*"அன்றுஅந்த நால்வருக்கும் அற்புதமாய் நீஉரைத்தது*
*ஒன்றுஅந்த வார்த்தைஎனக்கு உண்டோ பராபரமே"*

*— பராபரம் 281*

என்பது. இனி தனித்தனியாகப் பாராட்டுதல்களைக் காண்போம்.

(அ) சம்பந்தர்:

*''வெம்பந்தம் தீர்த்துஉலகுஆள் வேந்தன் திருஞான சம்பந்தன்''*

— **எந்நாள். அடியார் வண.1**

என்று சம்பந்தப் பெருமானைப் பாராட்டும் அடிகள் 'துன்று மனக்கல்லை கெட நாயேனைத் தொழும்பு கொளச் சீகாழித் துரையே... வருக'' என்று மேலும் பாராட்டி மகிழ்வார்.

சம்பந்தப் பெருமானின் பாடல்களின் உணர்வும் தொடர்களும் அடிகளாரின் பாடல்களில் வரும் இடங்களைக் காண்போம்.

திருவலஞ்சுழி என்பது சோழ நாட்டுத் திருப்பதி களுள் ஒன்று. சம்பந்தப் பெருமான் 'என்னை புண்ணியம் செய்தனை' (2.106) என்ற பாடலில் 'அத்திருத்தலத்தில் கோயில் கொண்டுள்ள பெருமானை வாயாரப் புகழ்ந்து ஆர்வத்தோடு விரும்பி இசையோடு பாடவல்ல நெஞ்சம் உறுதியாகப் புண்ணியம் செய்திருக்க வேண்டும்' என்று கூறுவார். இப்பாடலின் கருத்தையும் தொடரையும் தம் நெஞ்சகத்தில் தேக்கி வைத்திருந்த அடிகளார்,

*''திருந்து சீர்அடித் தாமரைக்கு*
*அன்புதான் செய்யப்*
*பொருந்து நாள்,நல்ல புண்ணியம்*
*செய்யும் நாள்''*

— **எனக்கென் செயல் 14**

என்று பேசுகின்றார்.

அடுத்து இப்பெருமான் திருவாரூர்ப் பதிகம் ஒன்றில் (2:79) 'என்பினார் சுழிநிரைத் திறைச்சி' (8) என்று உடலின் இழிநிலையைப் பற்றிக் குறிப்பிடும் பாடலில்,

*ஒன்பது வாய்தலார் குரம்பை*

என்ற அடியில் கண்ட படிமத்தை அப்படியே மனத்தில் கொண்டு,

> *"சாலேகம் ஒன்பது*
> *குலாவுநடை மனையை"*
>
> — **சச்சிதாநந்த சிவம் 2**

என்று அதே கருத்தைக் குறிப்பிடுவர். அருளாசிரியர்கள் அனைவருமே (சைவம், வைணவ ஆசிரியர்கள்) உடலைக் குறிப்பிடும்போது, 'ஒன்பது வாசல்' உடையது என்று குறிப்பிடுதல் சர்வ சாதாரணம்.

'மெய்' என்று பெயர் கொண்ட உடல் முதுமையில் சோர்வில் புலன் கெட்டு, பொறி குழம்பி, நெறி தடுமாறி உயிர் வருந்தும் நிலையில் உடனிருந்து காப்பவன் இறைவனே. இக்கருத்தினைச் சம்பந்தப் பெருமான் ஐயாற்றுப் பதிகத்தில் (1.130)

> *"புலன்ஐந்தும் பொறிகலங்கி நெறிமயங்கி*
> *அறிவழிந்திட்டு ஐமேல்உந்தி*
> *அலமந்த, போதாக அஞ்சேல்என்று*
> *அருள்செய்வான் அமருங் கோயில்" (1)*

என்று ஐயாற்றினைப் போற்றுவார். இதனை அப்படியே,

> *"புலனைந்தும் தானே பொர, மயங்கிச், சிந்தை*
> *அலமந்து உழலும் அடிமை"*
>
> — **உடல்பொய்யுறவு 46**

என்ற அடிகளில் அமைத்துக் காட்டுவர்.

(ஆ) நாவுக்கரசர்: நாவுக்கரசரின் கைத்தொண்டும் மெய்த்தொண்டும் அடிகளாரின் கவனத்தை ஈர்த்துள்ளன. அப்பெருமானின் உழவாரத் தொண்டும் தேவாரப் பாடல்களும் அடிகளாரின் அகத்தில் அகலாத இடம் பெற்றுள்ளன.

> *"ஏரின் சிவபோகம் இங்குஇவற்கே என்னஉழ*
> *வாரங்கொள் செங்கையர்"*
>
> — **எந்நா. அடியார் வண.2**

என்று அப்பெருமானால் குறிப்பிடப் பெற்றுள்ளார். அப்பர் பெருமானின் திருப்பாடலடிகள் கருத்துகள், உவமை உருவக நலன்கள் அடிகளாரின் பாடல்களில் கொப்புளித்து நிற்கின்றன; அவற்றை மெருகூட்டிப் பொலிவு பெறச் செய்கின்றன. "சிற்றம்பலவனுக்கு எல்லையற்ற அன்பு பூண்ட அடியேனை,

*"அல்லல் என்செயும் அருவினை என்செயும்*
*தொல்லை வல்வினைத் தொந்தந்தான் என்செயும்"*
*(5.1:4)*

என்ற கருத்தை அப்படியே ஏற்றுக் கொண்ட அடிகள்,

*"கன்மம் ஏது? சுடுநரகு ஏது?மேல்*
*சென்மம் ஏது?எனைத் தீண்டக் கடவதோ?*
*என்ம னோரதம் எய்தும்ப டிக்குஅருள்*
*நன்மை கூர்முக்கண் நாதன் இருக்கவே"*
— பொன்னைமாதரை 49

என்று தம் பாடலில் ஏத்திப் போற்றுவர். இரண்டிலும் யாப்பு கூட ஒத்திருத்தல் கண்டு இன்புறத்தக்கது.

திருவாரூர்த் திருத்தாண்டகத்தில் புற்றிடங் கொண்ட பெருமனை வாகீசர்,

*"நிலைபெறுமாறு எண்ணுதிரேல் நெஞ்சே நீவா*
*நித்தலும்எம் பிரானுடைய கோயில் புக்குப்*
*புலர்வதன்முன் அலகிட்டு மெழுக்கும் இட்டுப்*
*பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்து பாடித்*
*தலையினால் கும்பிட்டுக் கூத்தும் ஆடிச்*
*சங்கரா! சயபோற்றி! போற்றி என்றும்*
*அலைபுலைசேர் செஞ்சடைமேல் ஆதி! என்றும்*
*ஆரூரா! என்றென்றே அலறா நில்லே" (6.31:3)*

என்று போற்றித் துதிப்பர். இந்நெறியை அப்படியே பின்பற்றி அடிகளார்,

*"அங்கையொடு மலர்தூவி, அங்கமது புளகிப்ப,*
*அன்பினால் உருகிவிழிநீர்*
*ஆறாக, ஆராத முத்தியினது ஆவேச*
*ஆசைக் கடற்குள்மூழ்கிச்;*

*சங்கர சுயம்புவே! சுயம்புவே! எனவும்மொழி*
*தழுதழுத் திடவணங்கும்*
*சன்மார்க்க நெறி..."*

— *சின்மையானந்தகுரு - 1*

என்று அப்பர் பெருமானின் அடிமை நெறியைப் பின்பற்றி சன்மார்க்க வழியாக (நன்னெறியாகப்) போற்றிப் புகழ்வதைக் காணலாம்.

அடிகளார் அப்பர் பெருமானை,

*"இருநிலனாய் தீஆகி" என்றதிருப் பாட்டின்*
*பெருநிலையைக் கண்டுஅணைந்து பேச்சறுவது எந்நாளோ?*

— *எந்நாள். அறிஞர் உரை 1*

என்று குறிப்பிடுவர். இறைவனது கலந்த நிலையையும் கடந்த நிலையையும் காட்டும் அப்பாடல்:

*"இருநிலனாய்த் தீஆகி நீரும் ஆகி,*
*இயமான னாய்எறியும் காற்றும் ஆகி.*
*அருநிலையத் திங்களாய் ஞாயிறு ஆகி,*
*ஆகாச மாய்அட்ட மூர்த்தி ஆகிப்*
*பெருநலமும் குற்றமும் பெண்ணும் ஆணும்*
*பிறர்உருவும் தம்உருவும் தாமே ஆகி,*
*நெருநலைஆய் இன்றுஆய் நாளை ஆகி*
*நிமிர்புன் சடைஅடிகள் நின்ற ஆறே. (6.94:1)*

என்பது. இப்பாடலின் கருத்தையொட்டி அடிகளார்,

*"தெருளாகி, மருளாகி, உழலுமனம் ஆய்,மனம்*
*சேர்ந்துவளர சித்தாகி,அச்*
*சித்துஎலாம் சூழ்ந்தசிவ சித்துஆய், விசித்தரமாய்த்,*
*திரம்ஆகி, நானாவிதப்*

*பொருளாகி, அப்பொருளை அறிபொறியும் ஆகி,ஐம்*
*புலனும்ஆய், ஐம்பூதமும்ஆய்ப்*
*புறமும்ஆய் அகமும்ஆய்த் தூரம் சமீபம்ஆய்ப்*
*போக்கொடு வாத்தும்ஆகி,*

*இருளாகி, ஒளியாகி, நன்மைதீ மையும்கி,*
*இன்றுஆகி, நாளைஆகி,*
*என்றும்ஆய், ஒன்றும்ஆய்ப், பலவும்ஆய், யாவும்ஆய்,*
*இவைஅல்ல ஆய்நின்னை*

*அருள்ஆகி நின்றவர்கள் அறிவதுஅல் லால்,ஒருவர்*
*அறிவதற்கு எளிதுஆகுமோ?''*

**— ஆனந்தமானபரம் - 2**

என்ற பாடலில் போற்றி உரைப்பர்.

நாவுக்கரசர் 'தலையே நீ வணங்காய்' (4.9) என்ற பதிகப் பாடல் ஒன்றில் (10),

*''உற்றார்ஆர் உளரோ - உயிர்கொண்டு போம்பொழுது*
*குற்றா லத்துறை கூத்தன்அல்லால் நமக்கு உற்றார்ருஉளரோ?''*

என்ற திருப்பாடலில் வரும் வாழ்க்கை உண்மை மிகச் சுருக்கமாக,

*''இருண்டயமன் வரும்வேளை*
*ஏதுதுணை பழிகாரமனமே''*

என்ற அடிகளின் பாடற்பகுதியில் அமைந்துள்ளது.

அப்பர் பெருமான் திருத்தாண்டகம் ஒன்றில் (6.95:3) கூறும்,

*''ஆட்டுவித்தால் ஆரொருவர் ஆடாதாரே''*

என்று கூறும் கருத்து அடிகளார் பாடல் ஒன்றில்,

*"அவன் அன்றி ஓர்அணுவும் அசையாது"*
— *எங்கும் நிறைகின்ற - 1*

என்று இடம் பெற்றுள்ளதைக் கண்டு மகிழலாம்.

வாகீசப் பெருமான் மானச பூசையைப் பற்றி தனித் திருநேரிசைப் பதிகம் ஒன்றில் (4.76),

*"காயமே கோயிலாகக் கடிமனம் அடிமையாக*
*வாய்மையே தூய்மையாக மனம்மணி இலிங்கமாக*
*நேயமே நெய்யும்பாலா நிறையநீர் அமைய ஆட்டிப்*
*பூசனை ஈசனார்க்குப் போற்றவிக் காட்டி னோமே (4)*

என்ற பாடலில் குறிப்பிடுகின்றார். இக்கருத்தை அப்படியே அடிகளார்,

*"நெஞ்சகமே கோயில், நினைவே சுகந்தம்அன்பே*
*மஞ்சனநீர் பூசைகொள்ள வாராய் பராபரமே"*
— *பராபரம் 151*

என்ற பராபரக் கண்ணியொன்றில் தோசையைத் திருப்பிப் போட்டமாதிரி ஓசையின்றிப் போடுவதைக் கண்டு மகிழ லாம். இதே கருத்து,

*"துள்ளும்அறி யாமனது பலிகொடுத் தேன்கர்ம*
*துட்டதே வதைகள்இல்லை*
*துரியநிறை சாந்ததே வதையாம் உனக்கே*
*தொழும்பன்அன்பு அபிடேகநீர்*

*உள்உறையின் என்ஆவி நைவேத்தி யம்ப்ராணன்*
*ஓங்குமதி தூபதீபம்*
*ஒருகாலம் அன்றுஇது சதாகாலம் பூசை"*
— *கருணாகர - 8*

என்ற பாடலிலும் அமைந்திருப்பது கண்டு மகிழத்தக்கது. இவற்றால் தாயுமானவர் அப்பர் பெருமானிடம் கொண்டிருந்த ஈடுபாடும் அவர்தம் பாடல்களில் நெஞ்சு நெகிழ்ந்து தோய் வும் காண முடிகின்றது.

(இ) சுந்தரமூர்த்தி அடிகள்: இவரை அடிகள்,

*"பித்தர்இறை என்றறிந்து பேதைபால் தூதனுப்பும்*
*வித்த தமிழ்ச் சமர்த்தர்"* — **எந்நாள். அடியார் வண.3**

(பேதை - பரவைநாச்சியார்)

என்று குறிப்பிட்டு மகிழ்வர். மேலும்,

*"தான்என்னை முன்படைத்தான் என்ற தகவுரையை*
*நான்என்னா உண்மைபெற்று தாம்உணர்வது எந்நாளோ*

என்றும்,

*"என்னுடைய தோழனுமாய் என்ற திருப்பாட்டின்*
*நன்னெறியைக் கண்டுரிமை நாம்செய்வ தெந்நாளோ"*
— **எந்நாள். அறிஞர் உரை 3,4**

என்றும் போற்றி மகிழ்வர்.

*"நல்லிசை ஞானசம் பந்தனும் நாவினுக்*
*கரையனும் பாடிய நற்றமிழ் மாலை (7.67:5)*

என்று சுந்தரமூர்த்தி பாடியது போலவே தாயுமான அடிகளும்,

*"பன்மாலைத் திரள்இருக்கத் தமைஉ ணர்ந்தோர்*
*பாமாலைக் கேநீதான் பட்சம்என்று*
*நன்மாலை யாஎடுத்துச் சொன்னார் நல்லோர்;*
*நலமறிந்து கல்லாத நானும் சொன்னேன்;"*
— **பன்மாலை - 1**

என்று பாடுவார். தம்பிரான் தோழர்,

*"வாழ்வாவது மாயம்இது*
*மண்ணாவது திண்ணம் (7.78:1)*

என்று மொழிவதுபோலவே,

*"வாழ்வனைத்தும் மயக்கமெனத் தேர்ந்தேன்"*
— **பன்மாலை - 4**

என்று கூறுவார்.

(ஈ) மாணிக்கவாசகர்: இப்பெருமானை அடிகள் பல இடங்களில் குறிப்பிட்டு மகிழ்கின்றார்.

*“போதவூர் நாடுஅறியப் புத்தர்தமை வாதில்வென்ற*
*வாதவூர் ஐயன்அன்பை வாஞ்சிப்பது எந்நாளோ”*
— **எந்நாள். அடியார் வண.4**

என்பது ஒன்று. இவர்தம் பாடல்களின் தாக்கம் அடிகளார் பாடல்களில் அதிகமாகப் பிரதிபலிப்பதைக் காண முடிகின்றது. மணிவாசகப் பெருமான் கையாண்ட பாமர மக்கள் பாடிய பாவடிவுகளைத் தும்பியார், உத்தியார், அம்மானை, தெள்ளேணம் முதலிய பகுதிகளில் கண்டு அநுபவித்து மகிழ்ந்த அடிகள் வண்ணம், கண்ணிகள் போன்ற இடங்களிலும் வேறு பல இடங்களிலும் அமைத்துப் பாடியுள்ளதைக் காண முடிகின்றது.

இறைவன் எல்லாமாகி உயிருக்கு உயிராய் நிறைந்து நிற்பான் என்ற கருத்தை,

*“வானாகி மண்ணாகி வளியாகி, ஒளியாகி*
*ஊனாகி உயிராகி உண்மையுமாய் இன்மையுமாய்க்*
*கோனாகி யான்எனதென்று அவரவரைக் கூத்தாட்டு*
*வானாகி நின்றாயை என்சொல்லி வாழ்த்துவனே.”*[6]

என்பது மணிவாசகப் பெருமானின் மணிமொழி. இதில் ஆழங் கால்பட்டு அநுபவித்த பாங்கு,

*“வானாதி பூதமாய், அகிலாண்ட கோடியாய்,*
*மலைஆகி, வளைகடலுமாய்,*
*மதியாகி, இரவியாய், மற்றுஉள எலாமாகி*
*வான்கருணை வெள்ளம்ஆகி*

*நான்ஆகி நின்றவனும்....”*
— **ஆனந்தமானபரம் - 7**

என்ற பாடலாக ஒலிக்கின்றது என்று கருதலாம். வாசகனார்

6. திருவா.திருச்சதகம்-15

வாக்கில் 'வான் என்று நின்றவன்' என்று வரும் இறைவன் அடிகளாரின் வரிகளிலும் அதேபோக்கில் வெளிவருவது கண்டு மகிழத்தக்கது.

'மாலறியா நான்முகனும் காணா'[7] என்ற பரமசிவத்தின் தனித்தலைமையை மணிவாசகப் பெருமான் நெறியில் நின்று தாயுமான அடிகளார்,

*"கண்டன அல்ல என்றே*
*கழித்திடும் இறுதிக் கண்ணே*
*கொண்டது பரமா னந்தக்*
*கோதுஇலா முக்தி, அத்தால்*
*பண்டையின் படைப்பும் காப்பும்*
*பறந்தன மாயை யோடே,*
*வெண்டலை விழிகை காலில்*
*விளங்கிட நின்றான் யாவன்?"*

**— தேன்முகம் - 3**

என்ற பாடலில் நிலை நாட்டுவர்.

பஞ்ச பூதங்கள் ஒன்றனுள் ஒன்று ஒடுங்குவதை,

*"உழிதரு காலும் கனலும்*
*புனலொடு மண்ணும் விண்ணும்*
*இழிதரு காலம்"*[8]

என்று மணிவாசகப் பெருமான் கூறியுள்ளதை அடியொற்,

*"பாரொடுநல் நீர்ஆதி ஒன்றோடொன்று ஆகவே*
*பற்றிலயம் ஆம்போதினில்"*

**— சித்தர்கணம் 3**

என்று பேசுவார்.

அடிகளார் சிவபிரான்பால் கொண்ட பக்தியின் காரண மாக வெளிப்படும் தொடர்கள் வாசகனாரை நினைவுறுத்து கின்றது.

7. மேலது திருவெம்.5 8. மேலது - திருச்சதகம்-8

'**செல்லல் என்னும் அல்லலில் பிழைத்தும்**' (போற்றித் திரு அகவல் - 39) என்னும் வாதவூரடிகளின் தொடர் '**செல்வம் மிக அல்லல்**' (சிற்சுகோதய விலாசம் 7) என்று அடிகளாரின் பாடலில் அமைந்து அழகு செய்கின்றது.

*"தொழுவனோ பிறரை? துதிப்பனோ எனக்குஓர்*
*துணைஎன நினைப்பனோ சொல்லாய்"*[9]

*என்ற வாசகனார் வாக்கு,*

*"ஐய னேஉனை அன்றி ஒருதெய்வம்*
*கையி னால்தொழ வும்கரு தேன்கண்டாய்"*
**— பொன்னை மாதரை 45**

என்ற அடிகளின் பாடலில் பிரதிபலிக்கின்றது.

*"அன்றே என்தன் ஆவியும்*
*உடலும் உடைமை எல்லாமும*
*குன்றே அனையாய் என்னைஆட்கொண்ட*
*போதே கொண்டிலையோ"*[10]

என்ற வாசகனார் பாடல் அடிகளாரின் நெஞ்சில் ஆழப் பதிந்துள்ளது எனலாம்.

'மாயப் பிறப்பு அறுக்கும் மன்னன்'[11] என்ற வாசகனாரின் தொடர்,

*"மாயப் பிறப்பறுப்பான்*
*வந்துஉன் அடிக்கே கரம்கூப்பி"*
**— சொல்லற்கரிய - 6**

என்ற அடிகளாரின் வாக்காக வெளிவருகின்றது.

'பால் நினைந்தூட்டும் தாயினும்'[12] என்று அரசகனார் காட்டும் சிவபெருமானின் அன்புநிலை,

9. மேலது - வாழாப்பத்து-10
10. மேலது - குழைத்தபத்து - 7
11. திருவா.சிவபுராணம் - 20
12. மேலது - பிடித்தப்பத்து - 4

*"தாயினும் இனிய நின்னை"*

*— கற்புறு சிந்தை 7*

என்று அடிகளாரின் வாக்காக வெளிப்படுகின்றது.

*"போற்றிஓ நமச்சி வாய*
*புயங்களே மயங்கு கின்றேன்"*[13]

என்ற திருச்சதகத் தொடர்,

*"பொய்ய னேற்குப் புகலிடம் எங்ஙனே"*

*— பொன்னைமாதரை 31*

என்ற பாடலில் அமைந்து அழகு செய்கின்றது.

*"தந்ததுஉன் தன்னைக் கொண்டதுஎன் தன்னை"*[14]

என்ற வாசகனார் பாடலின் குரல்,

*"தன்னைத்தந்து என்னைத் தடுத்தாண்ட நின்கருணைக்கு*
*என்னைக்கொண்டு என்னபலன் எந்தாய் பராபரமே"*

*— பராபரம் 127*

என்ற பராபரத்தில் பாங்குடன் மிளிர்கின்றது.

மணிவாசகனாரின் 'அடைக்கலப் பத்து' என்னும் பதிகத்தில் அடிகளார் மிகவும் ஆழங்கால் பட்டவர். அதிலுள்ள,

*"செழுக்க மலத்திர ளனநின்*
*சேவடி சேர்ந்தமைந்த*
*பழுத்த மனத்தடி யருடன்*
*போயினர்யான் பாவியேன்*
*புழுக்க ணுடைப்புன் குரம்பைப்பொல்*
*லாக்கல்வி ஞானமிலா*
*அழுக்கு மலத்தடி யேன்உடை*
*யாயுன் அடைக்கலமே"*[15]

என்ற திருப்பாடலின் உணர்வு அடிகளாரின்,

13. மேலது - திருச்சதகம் - 62
14. மேலது - கோயில் திருப்பதிகம்-10
15. மேலது - அடைக்கலப்பத்து - 1

''நன்னெஞ்சத்து அன்பர்எலாம்
நாதரைச்சேர்ந்து இன்பு அணைந்தார்
வன்னெஞ்சத் தாலேநான்
வாழ்வுஇழந்தேன் பைங்கிளியே''

— பைங்கிளி 32

என்ற பைங்களிக் கணணியில் தட்டுப்படுகின்றதைக் காண லாம்.

இதே பத்தில் வரும்

''பொழிகின்ற துன்பப் புயல்வெள்
ளத்தினின் கழற்புணைகொணடு
இழிகின்ற அன்பர்கள் ஏறினர்
வான்யான் இடர்க்கடல்வாய்ச்
சுழிசென்று மாதர்த் திரைபொரக்
காமச் சுறலெறிய
அழிகின்ற னன்உடை யாய்அடி
யேன்உன் அடைக்கலமே'' (5)

என்ற பாடலின் பிம்பம்,

''பாடி, ஆடி,நின்று இரங்கிநின்
பதமலர் முடிமேல்
ஆடி வாழ்ந்தனர் அமல!நின்
அடியர்;யான் தொழும்பன்
நாடி யேஇந்த உலகத்தை
மெய்என நம்பித்
தேடி னேன்வெறும் தீமையே,
என்இனிச் செய்வேன்?''

— எனக்கெனச்செயல் 18

என்ற அடிகளாரின் திருப்பாடலில் பிரதிபலிக்கின்றது.

வாசகர் பெருமான் திருச்சதகத்தி வரும்

''தனியனேன் பெரும்பிறவிப் பௌவத் தெவ்வத்
தடந்திரையால் எற்றுண்டு பற்றொற்றின்றிக்

*கனியைநேர் துவர்வாயார் என்னும் காலால்*
*கலக்குண்டு காமவான் சுறவின் வாய்பட்டு*
*இனிஎன்னே உய்யும்ஆறு என்றுஎன்று எண்ணி*
*அஞ்செழுத்தின் புணைபிடித்துக் கிடக்கின் றேனை*
*முனைவனே முதல்அந்தம் இல்லா மல்லற்*
*கரைகாட்டி ஆட்கொண்டாய் மூர்க்க னேற்கே''*[16]

என்ற அற்புதப் பாடலின் படிவம் அடிகளாரின் தேசோமயா னந்தம் பதிகத்திலுள்ள,

*''இப்பிறவி என்னும்ஓர் இருட்கடலில் மூழ்கிநான்*
*என்னும்ஒரு மகரவாய்ப்பட்டு,*
*இருவினை எனும்திரையின் எற்றுண்டு புற்புதம்*
*எனக்கொங்கை வரிசைகாட்டும்*

*துப்புஇதழ் மடந்தையர் மயல்சண்ட மாருதச்*
*சுயல்வந்து வந்துஅடிப்பச்*
*சேராத ஆசையாம் கான்ஆறு வான்நதி*
*சுரந்துஎன மேலும் ஆர்ப்பக்*

*கைப்பரிசு காரர்போல் அறிவான வங்கமும்*
*கைவிட்டு மதிமயங்கிக்*
*கள்ளவங் கக்காலர் வருவர்என்று அஞ்சியே*
*கண்அருவி காட்டும்எளியேன*

*செப்பரிய முக்தியாம் கரைசேர வுங்கருணை*
*செய்வையோ?....''*

— **தேசோமயானந்தம் 2**

என்ற பாடலில் தென்படுவதைக் கண்டு மகிழலாம்.

அடிகளாரின் திருப்பாடல்களை ஆழ்ந்து கற்கும்போது அப்பெருமான் மணிவாசகரை மூன்று நிலைகளில் அநுபவித் ததாகத் தெரிகின்றது. (1) அல்லலுற்று ஆண்டவனைக் காணாது அரற்றியபோது 'தேவர் தொழும் வாதவூர்த் தேவே' (ஆகாரபுவனம் 11), 'புத்தர்தரை வாதில் வென்ற வாதவூர்

16. திருவா.திருச்சதகம் - 27

ஐயன்' (எந்நாள் அடியார் வணக்கம் 4), 'வாதவூர் ஆளி தனை வான் கருணையால் விழுங்கும்' (காண்பேனோ என் கண்ணி - 11) என்பனபோல் அழைத்தது ஒரு நிலை; (2) திருவாசகத்தின் உணர்வில் தோய்ந்து தம்மை மறந்து வாசக னார் வாய்மொழித் தொடர்களையும், வாசகங்களையும், அநு பவங்களையும் தம்முடையனவாகக் கொண்டு பாடிப் பரவி யது மற்றொரு நிலை. (3) திருவாசகம் முழுதும் கற்று நோக்கும்போது அப்பெருமான் தமக்கும் உலகுக்கும் வழங் கும் செய்தி இதுதான் என்று சுட்டுவது பிறிதோர் நிலை. இம்மூன்று நிலைகளையும் அநுபவித்து மகிழலாம் அடிகளா ரின் திருப்பாடல்களில்.

(உ) திருமூலர்: அடிகள் திருமூலரை எந்நாட்கண்ணியில் குறிப்பிடுகின்றார்.

*"சக்கர வர்த்தி தவராச யோகிஎனும்*
*மிக்கதிரு மூலன்அருள் மேவுநாள் எந்நாளோ"*

— *எந்நாள் - அடியார் வணக்கம் 7*

திருமந்திரத்தை அடிகளார் தெளிவுபெறக் கற்றவர். திரு மந்திரப் பாடல்கள் ஐந்தெழுத்து மந்திரம்போல் அவர்தம் சிந்தையில் நிலைபெற்றிருப்பதால் அவை அடிகளாரின் திருப் பாடல்களில் சிறப்பாக முகம் காட்டுகின்றன. உலகநன்மைக் காக வாழ்ந்தவர் திருமூலர்.

*"நான்பெற்ற இன்பம் பெறுகஇவ் வையகம்*
*வான்பற்றி நின்ற மறைப்பொருள் சொல்லிடில்*
*ஊன்பற்றி நின்ற உணர்வுறு மந்திவந்*
*தான்பற்றப் பற்றத் தலைப்படும் தானே"*[17]

என்ற பாடலால் இதனை அறிவதற்கு அகச்சான்று. இதனை உள்ளத்தில் அமைத்துக் கொண்ட அடிகளாரின் திருவாக்காக,

*"எல்லாரும் இன்புற்று இருக்க நினைப்பதுவே*
*அல்லாமல் வேறொன்று அறியேன் பராபரமே."*

— *பராபரம் 221*

17. திருமந். - 85

என்ற கண்ணி பிறந்து விடுகின்றது. [18] இதற்கு விளைநிலம் மேலே குறிப்பிட்ட திருமந்திரப் பாடலே.

இன்னும் அடிகளார் தம் ஆன்மநேய அநுபவச் சாரமாகத் திகழ்வன **'காடும் கரையும்'** என்ற தலைப்பிலுள்ள மூன்று திருவிருத்தங்கள். இவற்றுள்ள மூன்றாவது பாடல்,

*''காகம் உறவு கலந்துண்ணக்*
*கண்டீர் அகண்டா காரசிவ*
*போகம் எனும்பேர் இன்பவெள்ளம்*
*பொங்கித் ததும்பிப் பூரணமாய்*
*ஏக வுருவாய்க் கடக்குதையோ!*
*இன்புற் றிடநாம் இனிஎடுத்த*
*தேகம் விழுமுன் புசிப்பதற்குச்*
*சேர வாரும் செகத்தீரே!(3)*

என்பது மிக உயர்ந்த பாடல். தாம் பெற்ற இன்பத்தைத் தரணி எல்லாம் பெற்று உய்ய அடிகளார் உலகரை நெஞ்சுருகக் கூவியழைக்கின்றதை இங்குக் காண்கின்றோம்.

இறைவன் தந்தது உடல். அதனைப் போற்றிக் காத்து அவனது அருளைப் பெற அதனைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். அவன் அருளிய இந்த அற்புதக் கருவியை அலட்சியப்படுத்தி அழித்துக் கொள்ளலாகாது. திருமூலர் கூறுவார்:

*''உடம்பார் அழியில் உயிரார் அழிவர்*
*திடம்பட மெய்ஞ்ஞானம் சேரவு மாட்டார்*
*உடம்பை வளர்க்கும் உபயாம் அறிந்தே''* [19]

18. நான் திருச்சியில் கல்லூரியில் பயின்றபோது (1934-39) - வயது (18-23). தாயுமானவர் பாடலில் ஆழங்கால் பட்டேன். தங்கியிருந்த இடம் மலைவாசல் அருகே. வாரம் ஒருநாள் தாயுமானவர் சந்நிதிக்கும் உச்சிப் பிள்ளையார் சந்நிதிக்கும் போய் வருவது உண்டு. அக்காலத்தில் இக்கண்ணியும் 'அன்பர் பணிசெய' (155), 'கொல்லா விரதம் ஒன்று' (192), 'கொல்லா விரதம் குலவயம் எல்லாம் ஓங்க' (54), 'எல்லோரும் இன்புற்று இருக்க' (221) என்ற கண்ணிகளும் என் உள்ளம் கவர்ந்தவை.
19. திருமந்.மூன்.தந்.காயசித்தி உபாயம் - 1

இதனைத் தாயுமானவரும்,

*"உடலைப் பழித்திங்கு உணவும் கொடாமல்*
*விடவிடவே நாடுவரோ மெய்மை"*
— உடல்பொய்யுறவு 34

என்பதில் எழுப்பும் வினாவில் இந்த உண்மையை உணரலாம். இந்த உண்மைத் தெளிவு இன்னும் ஆழமாக, அழுத்தமாகத் திருமந்திரத்தில் உரைக்கப் பெறுகிறது.

*"உடம்பினை முன்னம் இழுக்கென்று இருந்தேன்*
*உடம்பினுக் குள்ளே உறுபொருள் கண்டேன்*
*உடம்பிலே உத்தமன் கோயில் கொண்டான்என்று*
*உடம்பினை யான்இருந் தோம்புகின் றேனே"*[20]

என்ற பாடலில் இதனைக் காணலாம். இதனையொட்டியே அடிகளாரும்,

*"அறிவில் அறியாமை அற்று அறிவாய்நின்று*
*பிறிவுஅற ஆனந்தமயம் பெற்றுக் - குறிஅவிழ்ந்தால்*
*அன்றைக்கு உடல்வேண்டேன்; ஐயாஇவ் ஆக்கையையே*
*என்றைக்கு வேண்டுவனே யான்"*
— உடல்பொய்யுறவு 33

என்று உடலை வேண்டுவர்.

'அம்பலமாவது அகில சராசரம்'[21] என்பர் திருமூலர். இதற்கு இயைய அடிகளாரின் அநுபவம் 'ஆகாரபுவனம் இன்பாகாரம் ஆக' என்று காண்கிறது. (ஆகா.புவ.1)

*"திரையற்ற நீர்போலச் சிந்தைதெளி வார்க்குப்*
*புரையற் றிருந்தான் புரிசடை யோனே"*[22]

*என்பர் திருமூலர். இதனையே,*

20. மேலது-2
21. மேலது ஒன்பதாம் தந்.அற்புதக் கூத்து - 54
22.

*''திரையற்ற நீர்போல் தெளியஎனத் தேர்ந்த*
*உரைபற்றி உற்றங்கு ஒடுங்குநாள் எந்நாளோ''*
*— எந்நாள், அறிஞர் உரை - 11*

என்று பகர்வார் அடிகள். இங்ஙனம் பல திருமூலர் அநுபவங் களை அடிகளின் அநுபவங்களாகக் காணலாம்.

அன்புபற்றி திருமூலரில் பல பாடல்கள். அன்பையே சிவமாகக் கண்டவர் இப்பெருமானார்.

*''அன்பு சிவம்இரண் டென்பர் அறிவிலார்*
*அன்பே சிவமாவது ஆரும் அறிகிலார்*
*அன்பே சிவமாவது ஆரும் அறிந்தபின்*
*அன்பே சிவமாய் அமர்ந்திருந் தாரே''* [23]

என்பது அவற்றுள் ஒன்று இது.

*''அன்பின்உள் ளான்புறத் தான்உட லாயுளான்*
*முன்பின்உள் ளான்முன் வர்க்கும் பிரானவன்*
*அன்பின்உள் ளாகிஅமரும் அரும்பொருள்*
*அன்பின்உள் ளார்க்கே அணைதுணை யாமே''* [24]

*''அன்பின் உருகுவன் ஆளும் பணிசெய்வன்*
.......... .............. ............
*என்பினுட் சோதி இலங்குகின் றானே''* [25]

இங்ஙனம் திருமூலரில் எண்ணற்ற திருப்பாடல்கள்.

தாயுமானவர் பாடல்களில் இத்தகைய பாடல்கள் சிலவற் றைதான் காண முடிகின்றது.

*''அன்பால் கரைந்து கண்ணீர் ஆறுகண்ட புண்ணியருக்கு*
*உன்பால் வரவழிதான் உண்டோ பராபரமே''*
*— பராபரம் 95*

23. திருமந்.முதல் தந்.அன்புடைமை - 1
இதே கருத்தில் 'அன்பு சிவம் என' என்று தொடங்கும் ஒரு பாடல் 'மிகைப் பாடல்களில்' ஒரு பாடல் உள்ளது.
24. திருமந்.முதல் தந்.அன்புடைமை - 10
25. மேலது.ஐந்.தந்.கடுஞ்சுத்த சைவம் - 6

*"அன்பைப் பெருக்கிஎனது ஆருயிரைக் காக்கவந்த*
*இன்பப் பெருக்கே இறையே பராபரமே"*

— மேலது 14

அன்பினால்தான் ஆண்டவனைக் காண வேண்டும் என்ற கருத்து இவற்றில் மிளிர்வதைக் காணலாம். அன்பாகிய சிவத்தைக் காண்பதற்கு அன்பைத் தவிர வேறு வழி எங்ஙனம் இருக்க முடியம்? இக்கருத்தை ஒரு முறையில் வலியுறுத்தும் பாங்கில்,

*"அன்பருக்கு அன்புஆன மெய்யன் - ஐயன்*
*ஆனந்த மோனன் அருள்குரு நாதன்*
*தன்பாதம் சென்னியில் வைத்தான் - என்னைத்*
*தானறிந் தேன்மனம் தான்இறந் தேனே"*

— ஆனந்தக்களிப்பு - 10

என்ற பாடல் அமைகின்றது.

(ஊ) அருணகிரிநாதர்: தாயுமானவர் கண்ட நெறி மோன நெறி; மோன சமரச சன்மார்க்க நெறி. மௌனகுரு மூலம் பெற்ற தீட்சையால் பெற்ற பேறு இது. இந்த மோன நிலையை அருணகிரியாரின் ஆன்மிகப் பாடல் வழிப் பெற்றுத் துய்த்தவர் தாயுமான அடிகள்.

*"ஆசா நிகளம் துகளா கியபின்*
*பேசா அநுபூ திபிறந் ததுவே"* [26]

என்ற பாடலில் 'பேசா அநுபூதி' என்ற மோனநிலையைக் குறிப்பிடுகின்றார் அருணகிரியார். இதிலும் இதுபோன்ற பலவற்றிலும் ஆழங்கால்பட்ட அடிகள்,

*".... சும் மாஇருந்துன் அருளைச் சாரப்*
*பூஉலகில் வளர்அருண கிரியே மற்றைப"*

— ஆகாரபுவனம் 31

26. கந்தரநுபூதி - 43

*"கந்தர்அநு பூதிபெற்றுக் கந்தர்அநு பூதிசொன்ன*
*எந்தை அருள்நாடி இருக்குநாள் எந்நாளோ"*

— எந்நா.அடியார் வணக்.8

என்று குறிப்பிட்டதுடன் அமையவில்லை. 'ஐயா! அருண கிரி அப்பா!' என்றெல்லாம் அழைத்தழைத்துத் தன் ஆவிக்கு அருமருந்தாக அப்பெருமகனாரின் மோன நெறியை நினைந்து உருகியதை,

*"ஐயா; அருணகிரி அப்பா உனைப்போல்*
*மெய்ஆக ஓர்சொல் விளம்பினர் யார்? - வையகத்தோர்*
*சாற்றரிதுஎன்று ஏசற்றார்; தன்அணையாய் முக்கண்எந்தை*
*நாற்றிசைக்கும் கைகாட்டி னான்"* — உடல்பொய்யுறவு 26

என்ற பாடலில் கண்டு மகிழலாம்.

(எ) பட்டினத்தார்: காவிரிப் பூம்பட்டினத்தில் வாழ்ந்தவரா தலால் ஊர்ப் பெயரையொட்டி இவர் பெயர் வழங்க லாயிற்று.[27] கடலனைய செல்வச் செழிப்பில் திகழ்ந்தவர் முற்றும் துறந்து கோவணத்துடன் வீட்டை நோக்கி வெளியே றியவரை தாயுமான அடிகள் 'செல்வப் பட்டினத்தார்' எனப் போற்றுவர். வெளியேறியவர் துறவறம் மேற்கொண்டு பிச் சையேற்று, சித்தமலமற்று சிவனடிக்கே ஆளாகி வீடு பேற்றை நோக்கியிருந்தவர். இத்தகையவரை அடிகள்,

*"பார்அனைத்தும் பொய்யெனவே*
*படினத்துப் பிள்ளையைப்போல்*
*ஆகும் துறக்கை அரிதுஅரிது..."*

— உடல் பொய்யுறவு 57

என்று வியந்து போற்றுவர். இவர்தம் பாடல்களால் ஆட் கொள்ளப் பெற்றவர் அடிகள்.

27. இவர் வழி வந்தவர்கள் கடல்கோளுக்கு அஞ்சி இப்போது பசும்பொன் மாவட்டத்தைச் சேர்ந்த செட்டிநாட்டுப் பகுதியில் 'நகரத்தார்' என்ற பெயரு டன் வாழ்ந்து வருகின்றனர். 'பட்டினத்தார் என்ற பொதுப் பெயர் 'பட்டினத் தார்' என்ற துறவியின் பெயராகி விட்டதால், அப்பொதுப் பெயரை வைத்துக் கொள்ளாமல் 'நகரத்தார்' என்று வைத்துக் கொண்டனர் என்றும் கருதலாம்.

மெய்யுணர்வு அடைந்தவர்கள் அனைவருமே எல்லாம் இறைவன் செயல் - அவன் எண்ணம் ஈடேறட்டும். தாம் அவன் அடிமை; அவனது உடைமை; கருவி, கைப்பாவை - என உணரப் பெற்றவர்கள். அத்தகையவர் பட்டினத்தார்.

*"என்செயல் ஆவது யாதுஒன்றும்*
*இல்லை இனித்தெய்வமே*
*உன்செய லேஎன்று உணரப் பெற்றேன்"* [28]

என்பர் பட்டினத்தார். இதில் உள்ளத்தைப் பறிகொடுத்த அடிகள்,

*"எனக்குஎ னச்செயல் வேறுஇல்லை;*
*யாவும்இங்கு ஒருநின்*
*தனக்குஎ னத்தகும்; உடல்பொருள்*
*ஆவியும் தந்தேன்;*
*மனத்த கத்துஉள் அழுக்குஎலாம்*
*மாற்றிஎம் பிரான்நீ*
*நினைத்தது எப்படி, அப்படி*
*அருளுதல் நீதம்."*

— எனக்கு எனச் செயல் - 1

என்ற தம் பாடலால் தன்னையும் தன் உடைமை அனைத்தையும் ஒருங்கே ஒப்படைப்பர்.

*"எத்தனைஊர் எத்தனைவீடு*
*எத்தனைதாய் பெற்றவர்கள்*
*எத்தனைபேர் இட்டழைக்க*
*ஏன்என்றேன்...."* [29]

என்று உயிர் உறும் பிறவி பலவற்றை உருக்கத்தோடு எடுத்துரைப்பர் பட்டினத்தார். இதனைக் கருத்தில் கொண்ட அடிகள்,

28. பட்டினத்தார் பாடல்கள் - பொது - 22
29. திரு ஏகம்பம் பற்றிய பாடல்

*ஊர்அனந் தம்;பெற்ற பேர்அனந் தம்;சுற்றும்*
*உறவுஅனந் தம்;வினையினால்*
*உடல்அனந் தம்;செய்யும் வினைஅனந் தம்கருத்*
*தோஅனந்தம் ....''*

**— பரசிவ வணக்கம் 2**

என்று தத்துவமாக்கி வெளியிடுவர். இங்ஙனம் பல்வேறு ஒப்புமைப் பகுதிகளை - ஒப்புணர்வுள்ள கருத்துகளை - எடுத்துக் காட்டி அநுபவித்து மகிழலாம்.

(ஏ) பத்திரிகிரியார்: பட்டினத்தாரிடம் ஒட்டி உறவு கொண்டு வாழ்ந்தவர் இவர்.

*''என்னை அறிந்துகொண்டேன் எங்கோமா னோடுஇருக்கும்*
*தன்மையறிந்து சமைந்திருப்பது எக்காலம்...''*

என்னும் பத்திரிகிரியாரின் பாடற் பாங்கு அடிகளாரின்,

*''தன்னை அறிந்தால் தலைவன்மேல் பற்றுஅலது*
*பின்னைஒரு பற்றுஉண்டோ பேசாய் பராபரமே''*

**— பராபரம் 94**

என்ற பராபரக் கண்ணியின் கருத்தாக வெளிவந்திருப்பதைக் காணலாம்.

இந்த இருவரையும் ஒன்று சேர்த்து தாயுமான அடிகள்

*''ஒட்டுடன் பற்றுஇன்றி உலகைத் துறந்தசெல்வப்*
*பட்டினத்தார் பத்திரகிரி பண்புஉணர்வது எந்நாளோ''*

**— எந்நாள். அடியார் வணக்.5**

என்ற கண்ணியில் வழிபடும் பாங்கில் பாராட்டி மகிழ்கின்றார்.

**(ஐ) இராமலிங்க சுவாமிகள்:** சுத்தசிவ சமரச சன்மார்க்கத் தத்துவத்திற்கு ஓர் இயக்க வடிவு அளித்தவர் அருட்பிரகாச வள்ளலார் என்னும் இராமலிங்க சுவாமிகள். அவர்தம் கருத்துக்கு முன்னோடியாகத் திகழ்வன அடிகளாரின் திருப்பாடல்கள். வேதாந்தமாகிய கேவலாத்வைதத்திற்கும் புனிதாத்வைதத்திற்கும் இடையே அமைந்துள்ள சமரசப் பண்பை

உணர்ந்து "வேதாந்த சித்தாந்த சமரச தன்னிலை பெற்ற வித்தகச் சித்தர் கணமே" (சித்தர் கணப் பாடல்களில் இறுதி அடியாக அமைந்திருப்பது) அடிகள் பாடுகின்றார். இந்த சமரச மனப்பாங்கு வள்ளலார் நெஞ்சத்தில் ஆழ்ந்து அகன்று வேரோடியிருப்பதைக் காண முடிகின்றது.

*"சிற்சபையில் நடிக்கின்ற நாயகனார் தமக்குச்*
*சேர்ந்தபுறச் சமயப்பேர் பொருந்துவதோ என்றாப்*
*பிற்சமயத் தார்பெயரும் அவர்பெயரே கண்டாய்*
*பித்தர்என்றே பெயர்படைத்தார்க் கெப்பெயர்ஒவ் வாதோ*
*அச்சமயத் தேவர்மட்டோ நின்பெயர்என் பெயரும்*
*அவர்பெயரே எவ்வுயிரின் பெயரும்அவர் பெயரே*
*சிற்சபையில் என்கணவர் செய்யும்ஒரு ஞானத்*
*திருக்கூத்துக் கடளவே தெளியும்இது தோழி"* [30]

இஃது அகப்பொருள் துறையில் தலைவி கூற்றாக அமைத்துள்ளார் வள்ளலார். இத்தகைய பாடல்களால் வள்ளலாரின் கருத்து உலக சமய சமரச சன்மார்க்கமாகத் தழைத்துப் பூத்துக் காய்த்துக் கனிந்துள்ளது. அடிகளாரின் பாடல்களின் தாக்கம் வள்ளலாரின் பல பாடல்களில் கண்டு மகிழலாம்.

*"எவ்வுயிரும் என்உயிர்போல் எண்ணி இரங்கவும்நின்*
*தெய்வ அருள்கருணை செய்யாய் பராபரமே"*

**— பராபரம் 65**

என்பது அடிகளின் அருள்வாக்கு. இதனை உளத்துள் கொண்ட வள்ளலாரின்,

*"எவ்வுயிர்த் திரளும் என்னுயிர் எனவே,*
*எண்ணிநல் இன்புறச் செயவும்*
*அவ்வுயிர் களுக்கு வரும்இடை யூற்றை*
*அகற்றியே அச்சநீக் கிடவும்*
*செவ்வையுற் றுனது திருப்பதம் பாடிச்*
*சிவசிவ என்றுகூத் தாடி*

30. திருவருட்பா ஆறாம் திருமுறை, அநுபவமாலை 89

*ஒவ்வுறு களிப்பால் அழிவுறா திங்கே*
*ஓங்கவும் இச்சைகாண் எந்தாய்'' [31]*

என்ற பாடல் அவ்வாக்கிற் கிணைந்து செல்கின்றது.

அடிகளாரின் மலைவளர் காதலியில் முதற்பாடல்:

*''பதிஉண்டு, நிதிஉண்டு, புத்திரர்கள் மித்திரர்கள்*
*பக்கம்உண்டு எக்காலமும்*
*பவிசுஉண்டு, தவிசுஉண்டு, திட்டாந்த மாகயம*
*படரெனும் திமிரம் அணுகாக்*
*கதிஉண்டு, ஞானம்ஆம் கதிர்உண்டு, சதிர்உண்டு*
*காயசித் திகளும்உண்டு*
*கறைஉண்ட கண்டர்பால் அம்மைநின் தாளில்*
*கருத்துஒன்றும் உண்டாகுமேல்''*

**— தா.பா. மலைவளர் காதலி 1**

என்று நடைபெறுகின்றது. இதன் போக்கும் நோக்கும் இராமலிங்கரின்,

*''............ .............*
*ஊர்உண்டு பேர்உண்டு மணிஉண்டு பணிஉண்டு*
*உடைஉண்டு கொடையும்உண்டு*
*உண்டுண்டு மகிழவே உணவுண்டு சாந்தம்உறும்*
*உளம்உண்டு வளமும்உண்டு*

*தேர்உண்டு கரிஉண்டு பரிஉண்டு மற்றுள்ள*
*செல்வங்கள் யாவும்உண்டு*
*தேள்உண்டு வண்டுறு கடம்பணியும் நின்பதம்*
*தியானம்உண்டு ஆயில் அரசே'' [32]*

என்ற பாடலுடன், இயைந்து செல்வத்தைக் கண்டு மகிழலாம்.

இறைவனை அருளாகக் கண்டவர் அடிகள்.

31. திருவருட்பா ஆறாம் திருமுறை பிள்ளைச் சிறு விண்ணப்பம் 18
32. திருவருட்பா. முதல் திருமுறை. தெய்வ மணிமாலை 28

*"ஆதிஅந்தம் காட்டாமல் அம்பரம்போ லேநிறைந்த*
*தீதுஇல் அருள்கடலைச் சேருநாள் எந்நாளோ"*

— **எந்நாள். அருள் இயல்பு 3**

*"வெந்துவெடிக் கின்றசிந்தை வெப்புஅகலத் தண்அருளாய்*
*வந்துபொழிகின்ற மழை காண்பது எந்நாளோ"*

— **மேலது 6**

*"கன்றுமன வெப்பக் கலக்கம்எலாம் தீரஅருள்*
*தென்றல்வந்து வீசவொளி சேருநாள் எந்நாளோ"*

— **மேலது 8**

*"எக்கணுஆம் துன்ப இருட்கடலை விட்டு அருள்ஆம்*
*மிக்ககரை ஏறி வெளிப்படுவது எந்நாளோ"*

— **மேலது 18**

இவற்றில் இறைவனது அருளைக் கடலாகவும், மழையாக வும், தென்றலாகவும், கடற்கரையாகவும் காண்கின்றனர். இஃது ஒருவகையில் அருளை உருவகங்களாகக் காணும் பாங்கு. இங்ஙனமே வள்ளல்பெருமான் தன் 'அருள் விளக்க மாலையில்' வேறுபல உருவகங்களாகக் கண்டு மகிழ்கின்றார்.

*"கரைந்துவிடா தென்னுடைய நாவகத்தே இருந்து*
*கனந்தசுவை தருகின்ற கற்கண்டே கனிவாய்*
*விரைந்துவந்தென் துன்பமெலாம் தவிர்த்தஅருள் அமுதே*
*மெய்அருளே மெய்யாகி விளங்குகின்ற விளக்கே (7)*

*உருவெளியே உருவெளிக்குள் உற்றவெளி உருவே*
*உருநடுவும் வெளிநடுவும் ஒன்றான ஒன்றே*
*பெருவெளியே பெருவெளியில் பெருஞ்சோதி மயமே*
*பெருஞ்சோதி மயநடுவே பிறங்குதனிப் பொருளே*
*(20)*

*பார்த்தாலும் நினைத்தாலும் படித்தாலும் படிக்கப்*
*பக்கம்நின்று கேட்டாலும் படித்துள் உணர்ந்தாலும்*
*ஈர்த்தாலும் பிடித்தாலும் கட்டிஅணைத் தாலும்*
*இத்தனைக்கும் தித்திக்கும் இனித்தசுவைக் கரும்பே*
*(26)*

என்பன போன்ற பாடல்களில் இதனைக் கண்ணுற்றுக் களிக் கலாம்.

'ஆகார புவனத்தில்' அடிகளின் பாடல் இது:

*''அருள்பழுத்த பழச்சுவையே கரும்பே தேனே*
*ஆரமிர்தே என்கண்ணே அரிய ஆன*
*பொருள்அனைத்தும் தரும்பொருளே கருணை நீங்காப்*
*பூரணமாய் நின்றஒன்றே புனித வாழ்வே*
*கருதரிய கருத்ததனுள் கருத்தாய் மேவிக்*
*காலமும்தே சமும்வகுத்துக் கருவி ஆகி*
*விரிவினையும் கூட்டிஉயிர்த் திரளை ஆட்டும்*
*விழுப்பொருளே........ (7)*

இந்தப் பாடலை அடியொட்டியும் இதனை மீறியும் எடுப்பாக இராமலிங்கரின் பாடல்கள்:

*''கோடையிலே இளைப்பாற்றிக் கொள்ளும் வகை கிடைத்த*
*குளிர்தருவே தருநிழலே நிழல்கனிந்த கனியே*
*ஓடையிலே ஊறுகின்ற தீஞ்சுவைத்தண் ணீரே*
*உகந்ததண்ணீர் இடைமலர்ந்த சுகந்தமண மலரே*
*மேடையிலே வீசுகின்ற மெல்லியபூங் காற்றே*
*மென்காற்றில் விளைசுகமே சுகத்தில்உறும் பயனே(2)*

*தனித்தனிமுக் கனிபிழிந்து வடித்தொன்றாக் கூட்டிச்*
*சர்க்கரையும் கற்கண்டின் பொடியுமிகக் கலந்தே*
*தனித்தநறும் தேன்பெய்து பசும்பாலும் தேங்கின்*
*தனிப்பாலும் சேர்த்தொருதீம் பருப்பிடியும் விரவி*
*இனித்தநறு நெய்அளைந்தே இளஞ்சூட்டின் இறக்கி*
*எடுத்தசுவைக் கட்டியினும் இனித்திடும் தெள்*
*அமுதே...(17)*

இவையிரண்டும் அருள் விளக்க மாலையுள் உள்ளவை.

தாயுமானவரின் பாடல் தொடக்கம் முதல் 'சிற் சுகோதய விலாசம்' வரையிலும் அடுத்து ஆகார புவனத்தின் பாடல்க

ளின் வரையிலும் நடை கம்பீரமானது! இராமலிங்கரின் பெரும்பாலான பாடல்கள் அனைத்தும் கம்பீரமான நடையில் அமைந்திருப்பதைக் கண்டு மகிழலாம். இரண்டு பெரியார்களின் பாடல்களைப் படித்து - பாடி - அநுபவித்தால் தான் இவ்வுண்மை தட்டுப்படும். இருவரும் பாடல்களிலேயே சொற்பெருக்காற்றுவதைக் கண்டு மகிழலாம். இரண்டு பெரியார்களின் பாடல்களிலும் உருவகங்கள் பொதிந்து நிற்பதையும் கண்டு தெளியலாம்.

(ஒ) பாரதியார்: தேசிய கவி பாரதியாரின் 'தேசிய கீதம்'

*''வந்தே மாதரம் என்போம் - எங்கள்*
*மாநிலத் தாயை வணங்குதும் என்போம்''*

என்ற முதற் பாடலுக்கு 'தாயுமானவர் ஆனந்தக் களிப்பு மெட்டு' என்றும் பதினான்காம் பாடலாய் அமைந்துள்ள,

*''தாயின் மணிக்கொடி பாரீர் - அதைத்*
*தாழ்ந்து பணிந்து புகழ்ந்திட வாரீர்!''*

என்ற பாடலுக்கு 'தாயுமானவர் ஆனந்தக் களிப்பு வர்ண மெட்டு' என்றும், தமிழ்த்தாய் வாழ்த்தாய் வருகின்ற,

*''ஆதிச்சிவன் பெற்றுவிட்டான் - என்னை*
*ஆரியமைந்தன் அகத்தியன் என்றோர்*
*வேதியன் கண்டு மகிழ்ந்தே - நிறை*
*மேவும் இலக்கணம் செய்து கொடுத்தான்''* [33]

என்ற பாடலுக்கு 'தாயுமானவர் ஆனந்தக் களிப்பு சந்தம்' என்றும் பாரதியாரே குறித்துள்ளமை அடிகளின் பாடலின் செல்வாக்கைப் புலப்படுத்துவதாய் அமைந்துள்ளது.

அன்றியும், 'சுதந்திரப் போர்' என்ற பாடலில் அமைந்து விளங்கும்,

33. பா.பா: தே.கீ. தாயின் மணிக்கொடி பாரீர் (14ஆம் பாடல்)

*“எண்ணமெலாம் நெய்யாக எம்முயிரின் உள்வளர்ந்த*
*வண்ண விளக்கிது மடியிற் திருவுளமே”*

என வரும் கண்ணிகள் அடிகளாரது பராபரக் கண்ணியின் பண்பையும் பாவின் பாங்கையும்,

*“நாடிழந்து மக்களையும் நல்லாளை யும்பிரிந்து*
*வீடிழந்திங் குற்றேன் விதியினை சொல்கேனே”*

என வரும் கண்ணிகள் அடிகளாரின் பைங்கிளிக் கண்ணியின் உணர்வையும் உயிர்ப்பையும் பெற்று விளங்குவதை அறிந்து மகிழலாம்.

இவ்வாறு வாழையடி வாழையென வந்த திருக்கூட்ட மரபுபோல அடிகளின் சமய தத்துவ இலக்கியச் சுவட்டில் வடலூர் வள்ளல், அமரகவி பாரதியார் முதலியோர் பெய்கின்ற திறம் கண்டு மகிழலாம். மற்றும் ‘முன்னோர் மொழிப் பொருளை பொன்னேபோல் போற்றும் மரபையும், காத்து வருதலையும் கண்டு களிக்கலாம்.

# பின்னிணைப்பு

## பயன்பட்ட நூல்கள்


| | |
|---|---|
| ஆழ்வார்கள் | ***நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம்*** (மார்ரே கம்பெனி வெளியிடு) |
| | ***நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம்*** (பூதூர் வேங்கடசாசமி ரெட்டியார் பதிப்பு) |
| கம்பர் | ***கம்பராமாயணம் - பாலகாண்டம், யுத்த காண்டம் முதல் பகுதி*** (வை.மு.கோ. பதிப்பு) |
| சுவாமி சித்பவாநந்தர் | ***தாயுமானவரின்*** பாசிவ வணக்கம், பொருள் வணக்கம், கருணாகரக் கடவுள், சின்மயானந்த குரு, பரிபூரணானந்தம், மௌனகுரு வணக்கம், விரிவுரைகள், (தபோவனப் பிரசுராலயம் திருப்பராய்த்துறை, திருச்சி மாவட்டம்) |
| சுப்பிரமணிய பிள்ளை .கா. | ***தாயுமான சுவாமிகள்*** (வரலாறும் நூலாராய்ச்சியும்) (ஆசிரியர் நூற்பதிப்புக் கழகம், 53-56; பவழக்காரத் தெரு, சென்னை-1). |
| சுப்பு ரெட்டியார் .ந | ***வைணவ உரை வளம்*** (வேங்கடம் வெளியீடு, கழகத்தில் கிடைக்கும்) |
| | ***சைவ சமய விளக்கு*** (வேங்கடம் வெளியீடு - கைவசம் இல்லை) |
| | ***தந்தை பெரியார் சிந்தனைகள்*** (ஐந்திணைப் பதிப்பகம், திருவல்லிக் கேணி, சென்னை-5) |

| | |
|---|---|
| | *சைவமும் தமிழும் - சைவ இலக்கியங்கள்*<br>(கழக வெளியீடு) |
| சேக்கிழார் | *பெரிய புராணம்*<br>(திருப்பனந்தாள் காசி மடத்து வெளியீடு) |
| திருமூலர் | *திருமந்திரம்*<br>(திருப்பனந்தாள் காசி மடத்து வெளியீடு) |
| திருவள்ளுவர் | *திருக்குறள்*<br>(பரிமேலழகர் உரை - கழக வெளியீடு) |
| பட்டினத்தார் | *தினோராந் திருமுறை*<br>திருப்பனந்தாள் காசி மடத்து வளியீடு)<br><br>*ட்டினத்துப் பிள்ளையார் பிரபந்தத் ிரட்டு*<br>மணிவாசகர் பதிப்பகம், சென்னை-108) |
| பாரதியார் | *மகாகவி பாரதியார் கவிதைகள்*<br>(எஸ்.ஆர்.சுப்பிரமணிய பிள்ளை, திருநெல்வேலி டவுன்) |
| மாணிக்கவாசகர் | திருவாசகம்<br>(தருமபுர ஆதீன வெளியீடு) |
| மூவர் - சம்பந்தர், அப்பர், சுந்தரர் | *தேவாரம் அடங்கன் முறை*<br>(மயிலைக் கிழார், இளவழகனார் பதிப்பு - 1953, திருவருளகம் கோவிந்த நாயக்கன் தெரு, சென்னை). |

## பேராசிரியர்
# டாக்டர் ந.சுப்பு ரெட்டியாரின் நூல்கள்

**ஆசிரியம் (5)**

1. தமிழ் பயிற்றும் முறை
2. அறிவியல் பயிற்றும் முறை
3. கவிதை பயிற்றும் முறை
4. கல்வி உளவியல் கோட்பாடுகள்
5. யுனெஸ்கோ: அறிவியல் பயிற்றும் மூல முதல் நூல்

**இலக்கியம் (15)**

6. கவிஞன் உள்ளம்
7. காலமும் கவிஞர்களும்
8. காதல் ஓவியங்கள்
9. அறிவுக்கு விருந்து
10. அறிவியல் தமிழ்
11. திருக்குறள் கருத்தரங்கு மலர் - 1974 பதிப்பு
12. கம்பனில் மக்கள் குரல்
13. முத்தொள்ளாயிர விளக்கம் (பதிப்பு)
14. காந்தியடிகள் நெஞ்சுவிடு தூது (பதிப்பு)
15. திருவேங்கடமும் தமிழ் இலக்கியமும்
16. தமிழ் இலக்கியங்கள் - அறம், நீதி, முறை
17. புதுவை(மை)க் கவிஞர் - சுப்பிரமணிய பாரதியார்: ஒரு கண்ணோட்டம்
18. பாவேந்தர் பாரதிதாசன்: ஒரு கண்ணோட்டம்
19. திருக்குறள் தெளிவு
20. வாய்மொழியும் வாசகமும்

**சமயம், தத்துவம்**

**(அ) விளக்க நூல்கள் (29)**

21. முத்திநெறி (தமிழக அரசு பரிசு பெற்றது)
22. சைவ சமய விளக்கு
23. சைவ சித்தாந்தம் - ஓர் அறிமுகம்
24. சைவமும் தமிழும்
25. வைணவமும் தமிழும்
26. ஆன்மிகமும் அறிவியலும்
27. வைணவ உரைவளம் (ஐதிகம், இதிகாசம், சம்வாதம்)
28. கலியன் குரல்
29. கீதைக் குறள் (பதிப்பு)
30. கண்ணன் எழில்காட்டும் கவிதைப் பொழில் (பதிப்பு)
31. ஆண்டாள் பாவையும் அழகு தமிழும் (பதிப்பு)
32. கண்ணன் துதி (பதிப்பு)
33. இராமர் தோத்திரம் (பதிப்பு)
34. முருகன் துதியமுது (பதிப்பு)
35. திருப்பாவை விளக்கம்

36. நவவிதசம்பந்தம்
37. அர்த்த பஞ்சகம்
38. அர்ச்சிராதி
39. ஐந்து இரகசியங்கள்

**(ஆ) திருத்தலப் பயண நூல்கள்**

40. மலைநாட்டுத் திருப்பதிகள்
41. தொண்டைநாட்டுத் திருப்பதிகள்
42. பாண்டிநாட்டுத் திருப்பதிகள்
43. வடநாட்டுத் திருப்பதிகள்
44. சோழநாட்டுத் திருப்பதிகள் - முதற் பகுதி (தமிழ்நாடு அரசு பரிசு பெற்றது)
45. சோழநாட்டுத் திருப்பதிகள் - இரண்டாம் பகுதி (தமிழ்நாடு அரசு பரிசு பெற்றது)
46. தம்பிரான் தோழா
47. நாவுக்கரசர்
48. ஞானசம்பந்தர்
49. மாணிக்கவாசகர்

**திறனாய்வு (24)**

50. பாட்டுத்திறன்
51. தொல்காப்பியம் காட்டும் வாழ்க்கை
52. கம்பன் படைத்த சிறு பாத்திரங்கள்
53. அகத்திணைக் கொள்கைகள்
54. கவிதையநுபவம்
55. அண்ணல் அநுமன்
56. புதுக்கவிதை போக்கும் நோக்கும்
57. கண்ணன் பாட்டுத் திறன்
58. பாஞ்சாலி சபதம் - ஒரு நோக்கு
59. பாரதீயம் (தமிழ்நாடு அரசு பரிசு பெற்றது)
60. குயில் பாட்டு: ஒரு மதிப்பீடு
61. உயிர்தந்த உத்தமன் (பதிப்பு)
62. ஆழ்வார்கள் ஆவி அமுது
63. விட்டு சித்தன் விரித்த தமிழ்
64. சடகோபன் செந்தமிழ்
65. பரகாலன் பைந்தமிழ்
66. பாவேந்தர் பாட்டுத் திறன்
67. பாண்டியன் பரிசு - ஒரு மதிப்பீடு
68. கவிஞர் வாலியின் அவதார புருஷன் - ஒரு மதிப்பீடு
69. கவிஞர் வாலியின் பாண்டவர் பூமி - ஒரு மதிப்பீடு
70. வாழும் கவிஞர்கள்
71. அறிவியல் நோக்கில் - இலக்கியம், சமயம், தத்துவம்
72. தந்தை பெரியார் சிந்தனைகள்
73. பண்பாட்டு நோக்கில் கம்பன் காவியம்
74. இலக்கிய வகையின் வளர்ச்சியும் இக்கால இலக்கியங்களும்

**வரலாறு, தன் வரலாறு (15)**

75. நினைவுக் குமிழிகள் - முதற்பகுதி
76. நினைவுக் குமிழிகள் - இரண்டாம் பகுதி
77. நினைவுக் குமிழிகள் - மூன்றாம் பகுதி
78. நினைவுக் குமிழிகள் - நான்காம் பகுதி
79. நினைவுக் குமிழிகள் - ஐந்தாம் பகுதி
80. மலரும் நினைவுகள்
81. நீங்காத நினைவுகள்
82. வேமனர்
83. குரஜாட
84. சி.ஆர்.ரெட்டி
85. தாயுமானவர்
86. பட்டினத்தடிகள்
87. வள்ளல் இராமலிங்கர்
88. இராமாநுசர்
89. பிரதிவாதி பயங்கரம் அண்ணங்க ராசாரிய சுவாமிகள்
90. தமிழ்க்கடல் ராய.சொ.
91. முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ.விசுவநாதம்


**அறிவியல் (15)**

92. மானிட உடல்
93. அணுவின் ஆக்கம்
94. இளைஞர் வானொலி
95. இளைஞர் தொலைக்காட்சி
96. அதிசய மின்னணு
97. நமது உடல் (தமிழக அரசு பரிசு பெற்றது)
98. அம்புலிப்பயணம்
99. தொலை உலகச் செலவு
100. அணுக்கரு பௌதிகம் (செ.ப.க. பரிசு பெற்றது)
101. இல்லற நெறி
102. வாழையடி வாழை
103. அறிவியல் விருந்து (தமிழ் வளர்ச்சிக் கழகப் பரிசு பெற்றது)
104. தமிழில் அறிவியல் - அன்றும் இன்றும்
105. விண்வெளிப் பயணம் (தமிழக அரசு பரிசு பெற்றது)
106. இராக்கெட்டுகள் (தமிழக அரசு பரிசு பெற்றது)
107. தமிழில் அறிவியல் செல்வம்

**ஆராய்ச்சி (7)**

108. கலிங்கத்துப்பரணி ஆராய்ச்சி
109. வைணவச் செல்வம் - முதற் பகுதி (தமிழ்ப் பல்கலைக் கழக வெளியீடு)
110. வைணவச் செல்வம் - இரண்டாம் பகுதி (தமிழ்ப் பல்கலைக் கழக வெளியீடு)
111. வட வேங்கடமும் திருவேங்கடமும்
112. Religion and Philosophy of Nalayiram with Special reference to Nammalvar
113. Studies in Arts and Science (61st Birth day commoration volume)
114. Collected papers

## இந்நூலாசிரியர் பற்றி



86 அகவையைக் கடந்தவர்

பணிகள் :

1. 9 ஆண்டு உயர்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர் (1941–50)
2. 10 ஆண்டுகள் ஆசிரியப் பயிற்சிக் கல்லூரி – தமிழ்ப் பேராசிரியர் துறைத் தலைவர் (1950 – 60)
3. திருவேங்கடப் பல்கலைக் கழகத் தமிழ்த் தலைவர் (1960–70)

ஒய்வுக்குப் பின்னர் பணிகள்:

1. 15 திங்கள் தமிழ்க் கலைக் களஞ்சிய முதன்மைப் பதிப்பாசிரியர்
2. 18 திங்கள் தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகம் – காஞ்சித் தத்துவ மையம் பதிப்பியல் பேராசிரியர்.
3. சென்னைப் பல்கலைக் கழகம் – தமிழ் இலக்கியத் துறை வாழ்நாள் மதிப்பியல் பேராசிரியர்.
4. மதிப்பியல் இயக்குநர் மரபியல் பண்பாட்டு நிறுவனம் (சென்னைப் பல்கலைக் கழகம்)

பிறபணிகள்:

திருப்பதி, மதுரை, பெங்களூர், மைசூர், திருவனந்தபுரம், சென்னைப் பல்கலைக்கழகங்களில் பல்வேறு பணிகள் – பொறுப்புகள்

பெற்ற பரிசுகள் : 14 நூல்கள் பரிசு பெற்றவை

பெற்ற விருதுகள்: பத்துக்கு மேல் – பல்வேறு நிறுவனங்களின் மூலம்.

000164

மலர் பிரிண்டர்ஸ் 044-8224803